
# இரட்டைக்கொலை



பிரேமா

பிரசுரம்

பயங்கர நாவல்

3530
172
328

# இரட்டைக்கொலே

**ஜெகசிற்பியன்**

எழுதிய துப்பறியும் நாவல்

காமராசர் பல்கலை
அவ்வை
தி.க. சண்முகம் நூலக
தமிழியல் துறை.

**பயங்கர நாவல்**

**பிரேமா பிரசுரம்**

ஆற்காடு ரோடு, : : சென்னே - 24

பதிப்புரிமை வாய்ந்தது

விலே ரூ. 1—4—0

பிரேமா பிரசுரம் - 4

முதற்பதிப்பு: ஆகஸ்ட், 1953

சகல உரிமைகளும் பெற்றது

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 511
நன்கொடை எண்: 511

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

111, பவழக்காரத் தெரு, சென்னை-1.

# இரட்டைக் கொலை

இதிலே சம்பந்தப்பட்ட முக்கிய நபர்கள்—

**ஆசிரியர் ராமகாந்தன்**

இரும்பு உள்ளமும், நெருப்புச் செய்கையும், சிவந்த கண்களும், கறுத்த உதடுகளும் கொண்டவன். நளினியின் கணவன். 'அபாய அறிவிப்பு' பத்திரிகையின் ஆசிரியன். சொந்த வீட்டில் அவன் படுகொலை செய்யப்பட்டதே ஒரு புதிர்!

**நளினி**

மயக்கும் அழகும், மனோரம்யமான மென்மையும், பயந்த சுபாவமும், கருத்தடர்ந்த கருவிழிகளும், பதுமைபோன்ற அடக்கமும் கொண்டவள் ஆசிரியர் ராமகாந்தனின் மனைவி. பூத்துக் குலுங்கும் இளமையில் விதவையானவள் அவளுடைய உள்ளமே ஒரு புதிர்!

**மாணிக்கம்**

இளமையின் கட்டுடலும், இலட்சிய உள்ளமும், அபாயத்தை வரவேற்கும் நெஞ்சுத் துணிவும், நேத்திரானந்தமான உருவமும் கொண்டவன். 'அபாய அறிவிப்பு' பத்திரிகையின் வேவுக்காரர்களில் ஒருவன். வாஸந்தியின் காதலன். புற்றீசல்போல் புடைசூழும் புதிர்களின் மத்தியிலே அவன் புரண்டு புறப்படுவதே ஒரு புதிர்!

**வாஸந்தி**

பருவ வயசும், பாலாடை போன்ற அழகும், வெகுளிக் குணமும், ...த்துச் சிரிப்பும் சோக முகமும் கொண்டவள். விபரீதமான ...நிலையில் பிறந்தவள்; காதலித்தவள்; வாழ்ந்தவள். மாணிக்கத்...ன் மனத்தைக் கொள்ளைகொண்டவள். புயலின் நடுவே நாணற்...ர்போல் வளைந்தும் நிமிர்ந்தும் கொடுக்கும் இவள் வாழ்க்கையே ...ரு புதிர்!

**ராகவன்**

மங்கையரை மயக்கும் மாய அழகும், ஊதாரித்தனமான நாகரிகமும், உல்லாசமான போக்கும், ஆழ்ந்த உள்ளமும் கொண்டவன். ஆசிரியர் ராமகாந்தனுக்கு அந்தரங்க உதவி ஆசிரியன். ஆரம்பத்திலேயே தலை மறைந்து, ஆனால் இறுதிவரை மர்மமாகச் சுழன்று கொண்டிருப்பவன். லேடி டைப்பிஸ்ட் லில்லியால் காதலிக்கப்பட்டவன். கல்லினுள் தேரைபோல் இவன் தலைமறைவாக இயங்குவதே ஒரு புதிர்!

**டைப்பிஸ்ட் லில்லி**

நெஞ்சைப் போதையில் ஆழ்த்தும் அழகும், ஆடவரை பம்பரமாகச் சுழற்றும் சாகஸமும், சாவையும் அணைக்கத் துணியும் சரஸமும் கொண்டவள். பத்திரிகாலயத்தில் லேடி டைப்பிஸ்டாக இருந்தவள். ராகவனைக் காதலித்தவள். இவளுடைய காதலே ஒரு புதிர் !

**அசோக்லால் சேட்**

கொலை, கொள்ளை, குமரிகள் ஆசை, பெரிய மனிதர் வேஷம் ஆகியவற்றை கலையாகக் கைக்கொண்டவன். 'அபாய அறிவிப்பு' பத்திரிகையின் ஜன்ம விரோதி. அவனது கொடிய உள்ளத்தின் முடிவே ஒரு புதிர் !

**சிங்காரம்**

பக்கா ரௌடி. ஸ்திரீ லோலன். கொடிய கொலைகளைக் கூசாமல் செய்பவன். அசோக்லால் சேட்டிடம் இவன் பிரதம கையாளாக அமர்ந்திருப்பதே ஒரு புதிர்!

**மற்றும்**

வாழ்விழந்த அன்னபூரணியம்மாள், லட்சிய வெறிகொண்ட விநாயகம், விரியன் பாம்புக்குட்டி போன்ற பொன்னன் ஆகியோருடைய ஒவ்வொரு செயலும் ஒரு பயங்கர மர்மப் புதிர் !

**இத்தனைப் புதிர்களும் தீர்ந்தால்.........!**

---

**'இரட்டைக்கொலை'யின் மர்மம், விளங்குமா ?**



1

# தலைமறைந்தவன்!

சூன்யமான விடியற்காலத்துக் கருக்கல் நேரம்.

தெருவழியே நடந்துகொண்டிருந்தான் மாணிக்கம். காலைக் காற்றில், அவனது அழகிய கிராப் கலைந்து மயிரிழைகள் சுருள் சுருளாக அவன் சிவந்த முகத்தில் வந்து விழுந்தன. அவன், பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே தெருவில் வேகமாக நடந்து சென்றான்.

இரவெல்லாம் அந்த ஊருக்கு மேலங்கியாகக் கவிந்துகொண்டிருந்த பனிப்படலம் கொஞ்சங் கொஞ்சமாக நைந்து மறைய ஆரம்பித்தது. விடியற்காலச் சாமமானதால், அந்த நீண்டு பரந்த தெரு வெறிச்சென்றிருந்தது. தெருவின் இரு ஓரங்களிலுமிருந்த 'பங்க்' கடைகளில், வேலைக்குச் செல்லும் இரண்டொரு ஏழைத் தொழிலாளர்களும், இரவெல்லாம் கண்விழித்திருந்த ரிக்ஷாகாரர்களும் 'ஸ்ட்ராங் சாயா' பருகிக் கொண்டிருந்தனர். அவர்கள் வாயிலிருந்து 'குப் குப்'பென வெளியேறிக் கொண்டிருந்த பீடி, சுருட்டுப் புகை, சுருள் சுருளாக மேலெழும்பி பனிப் புகையுடன் கலந்துகொண்டிருந்தது.

மாணிக்கம் நடந்து கொண்டிருந்த அந்த முனியம்மன் கோவில் தெருவில், பல பயங்கரக் கொலைகளும், பக்காக்கொள்ளைகளும் பன்முறை நடந்திருக்கின்றன. ரௌடிகளும் பழைய கேடிகளும் நிறைந்த தெரு அது. இரவு நேரங்களிலோ அல்லது ஜன நடமாட்டமற்ற பகல் வேளைகளிலோகூட அந்தத் தெருவில் யாரும் தனியே போகப் பயப்படுவார்கள். இரண்டு மூன்று பேராய்ச் சேர்ந்து போனாலும் அவர்களின் கால்கள், அடுத்தத் தெருவை எட்டிப் பிடிக்கும் வரை கிடுகிடுவென நடுங்கும்!

அப்பேர்ப்பட்ட அந்தப் பயங்கரத் தெருவில், விடியற் சாமத்துக் கருக்கல் நேரத்தில், மாணிக்கம் தன்னந்தனியாக நடந்து

கொண்டிருந்தான். வாலிபக் களைச் சொட்டும் அவன் முகம் ஏதோ தவிர்க்க முடியாத ஒரு பீதியால் வெளிறி விட்டிருந்தது. ஐந்து நிமிஷத்துக்கொருதரம் பின்னல் பரபரப்புடன் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே நடந்து கொண்டிருந்தான். அவனுடைய இரு கைகளும் இரு கோட் பாக்கெட்டினுள்ளும் புதுந்து முடங்கிக் கொண்டிருந்தன. விடியற் சாமத்து வாடைக் காற்றுல் வெட வெடத்துக் கொண்டிருந்த அவன் உதடுகள் ‘ வாஸந்தி...வாஸந்தி ’ என்று யாரோ ஒரு பெண்ணின் பெயரை முணுமுணுத்துக்கொண் டிருந்தன!

திடீரெனத் தெருவில் ஒரு சுழல் காற்று கிளம்பி வேகமாக வீசியது. அந்தச் சூறைக் காற்றின் சுழற்சியிலே, தூங்குமூஞ்சி மரங்களிலிருந்து உதிர்ந்திருந்த இலைச் சருகுகளும், தெருப் புழுதி யும், குப்பைத் தொட்டிகளில் கொட்டப்பட்டிருந்த கந்தைத்துணி, காகிதக் கூளங்களும் பெருத்த அளவுக்கு மேலெழும்பி நாலா பக்க மும் சுற்றிச் சுழன்று பறந்தன. அப்படிப் பறந்த காகிதக் கூளங் களிலிருந்து ஒரு சிறு துண்டுக் காகிதம் ‘ஜிவ்’வெனப் பறந்து வந்து, வேகமாக நடந்து கொண்டிருந்த மாணிக்கத்தின் முகத்தில் அறைந்தாற்போல் அப்பிக்கொண்டது. கோட் பாக்கெட்டுக்குள் முடங்கிக் கொண்டிருந்த வலது கையை வெடுக்கெனத் தூக்கி, முகத்தில் ஒட்டிக் கொண்டிருந்த அந்தக் காகிதத்தை எடுத்துப் பார்த் தான்.

அந்தத் துண்டுக் காகிதம் ஒரு தினசரிப் பத்திரிகையின் கிழிந்த பாகமாயிருந்தது. தவிர்க்க முடியாத ஏதோ ஒருவித பீதியால் குறுகுறுத்துக் கொண்டிருந்த அவன் கண்கள் அந்தத் துண்டுக் காகிதத்தைக்கூடப் பரபரப்புடன் நோக்கின. அதில்,

**பத்திரிகாசிரியர் ராமகாந்தன் படுகொலை!**

**கொலையாளி யாரெனப் போலீஸார்**
**இன்னும் கண்டு பிடிக்கவில்லை!**
**கொலைகாரன் தலைமறைந்து விட்டானும்!**

என்று கொட்டை எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்டிருந்தது.

இந்த வாக்கியங்களைப் படித்தவுடன் மாணிக்கத்தின் முகம் விகாரமாக மாறியது. அவசர அவசரமாக அந்தக் காகிதத்தைச் சுக்குநூருகக் கிழித்தெறிந்துவிட்டு முன்னிலும் அதிவேகமாக நடக்க ஆரம்பித்தான்..........

‘அபாய அறிவிப்பு’ எனும் ஒரு பத்திரிகையின் ஆசிரியரான ராமகாந்தன் என்பவன் ஊரிலுள்ள பலபெரிய மனிதர்களின் இரக

சியங்களை யெல்லாம் தன் பத்திரிகையில் பிரசுரித்து அவர்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டவன். அவனை, மூன்று நாட்களுக்குமுன்னால் யாரோ சுட்டுக்கொன்று விட்டார்கள் என்றசெய்தி அந்நகர மக்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்து விட்டிருந்தது. மூலை முடுக்குகளிலெல்லாம் ஜனங்கள் இதுபற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஆசிரியர் ராமகாந்தன் கொல்லப்பட்டு மூன்று நாட்களாகி விட்டன. எனினும், இன்றுவரை யார் அந்தக் கொலைக்குக் காரணஸ்தர் என்பது மட்டும் மர்மமாகவே இருந்து வந்தது. போலீஸ் இலாகா தன் முழு சக்தியையும் பிரயோகித்து ஆசிரியர் ராமகாந்தனைப் படுகொலை செய்த நபரைத்தேடிக் கண்டு பிடிப்பதில் தீவிரமாக முனைந்திருந்தது. கொலையாளி கண்டு பிடிக்கப்பட்டால், அந்த ஆள் மூலம், பல பெரிய பெரிய மனிதர்களின் சதித்திட்டமெல்லாம் அம்பலமாகிவிடும். அதனால் கொலையாளியைப் போலீசார் கண்டுபிடிக்குமுன், ஆட்களை ஏவி இரகசியமாகக் கொலையாளியைக் கொன்று தீர்த்து விடுவார்களென்றெல்லாம் ஜனங்களிடையே பராபரியான பேச்சு பரவியிருந்தது. கொலையாளி, இரகசியமாகக் கொல்லப்பட்டால், கொலைக்கு உடந்தையாயிருந்த பெரிய மனிதர்கள் தப்பித்துக் கொள்ளலாமல்லவா?...எனினும், இவற்றுக்கெல்லாம் இன்றுவரை எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை!—

இந்தப் பயங்கரமானச் சூழ்நிலையில் நவநாகரிக வாலிபனான மாணிக்கம் கைக்குட்டையால் தன் முகத்தை மூடி மறைத்துக்கொண்டு தெருவில் வேகமாக நடந்து கொண்டிருந்தான். தூங்கு மூஞ்சி மரமொன்றின் அடியில் வெற்றிலைப் பாக்குக்கடையொன்று இருந்தது. மாணிக்கம் அந்தக் கடைக்குச் சென்று சிகரெட்டொன்றை வாங்கினான்.

இந்தச் சமயத்தில்—

அழுக்கேறிய உடையும், பாட்டைத் தலையுமாயிருந்த ஒருவன், மாணிக்கத்தின் அருகில் வந்துநின்றுகொண்டு, "மிஸ்டர்! உம்மை யாரோ ஒருவன் பின்தொடர்ந்து வருகிறானே! அதை நீங்கள் கவனிக்கவில்லையா?" என்றான் சிறிது தணிந்த குரலில்.

மாணிக்கம், அவன் கூறியதைக் காதில் வாங்கிக்கொள்ளாதவன் போல அப்பால் சென்று, ஒரு மூலையில் தென்னைநார்க் கயிற்றில் கனிந்து கொண்டிருந்த நெருப்பை எடுத்து சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான்.

அந்தப் பேர்வழி மீண்டும் மாணிக்கத்தின் அருகில் நெருங்கி "அவன் அதோ தெருக்கோடியில் வந்து கொண்டிருக்கிறான்!" என்றான் அழுத்தமான—ஆனால் தாழ்ந்த தொனியில்.

சிகரெட்டை ஒருமுறை பலமாக உறிஞ்சி ஊதிக்கொண்டே அந்தப் புதுப்பேர்வழியைப் பார்த்து, "நீ என் அறைக்கு வருகிறாயா?" என்றான் மாணிக்கம் நிதானமாக.

இப்படிக் கூறிவிட்டு, அவன் பதிலை எதிர்பாராமல் வேகமாக நடந்தான் மாணிக்கம். எனினும் 'தன்னை யார் பின் தொடர்ந்து வருகிறார்கள்?' என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் கொக்கிபிட்டுச் சுழன்று கொண்டிருந்தது. திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தான் மாணிக்கம்

இரண்டு பர்லாங் தூரம் நடந்திருப்பான். அந்தத் தெருவின் திருப்பத்தில் ஒரு பெரிய கட்டிடம் மேகமண்டலத்தை முட்டும் வண்ணம் நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தது. அது அந்த ஊரிலேயே இருக்கும் மிகப் பிரசித்தமான ஹோட்டல். பெயர் 'ஹிமாலயா'. அந்த ஹோட்டலில்தான் மாணிக்கம் அறை எடுத்துக்கொண்டு தங்கியிருந்தான். அவனிருக்கும் அறை ஆறாவது மாடியிலிருந்தது. படிகளிலேறி நடந்து செல்லுவதென்றால் குறைந்தது ஒன்பது நிமிஷங்களாவது ஆகும். எலெக்ட்ரிக் லிப்ட் மூலமாக ஒரே விநாடியில் ஆறாவது மாடியை அடைந்துவிடலாம்.

மாணிக்கம் ஹோட்டலினுள் நுழைந்து 'லிப்ட்' இருக்கும் பக்கம் திரும்பினான். லிப்டை ஏற்றி இறக்கும் இயந்திரத்தை இயக்க, எப்போதும் அங்கு ஒரு ஆள் இருப்பான். அந்த ஆள் இன்று ஏனோ அங்கு இல்லை. அவனுக்குப் பதிலாகப் புதிதாக ஒரு பையன் அங்கு அமர்ந்திருந்தான். அந்தப் பையனுக்குச் சுமார் இருபத்திரண்டு வயதிருக்கும். முரட்டு முகமும், அம்மைத் தழும்பால் அமுங்கிய மூக்கும், விகாரமான பார்வையும் கொண்டிருந்த அந்தப் பையன், மாணிக்கத்தைப் பார்த்ததும் ஏனோ சற்று மறைந்து நின்று கொண்டான்! மாணிக்கம் அந்தப் பையனை அதிகமாகக் கவனித்துக் கொள்ளவில்லை. லிப்டில் ஏறி நின்று ஆறாவது மாடிக்குப் போய் நேராகத் தன் அறையை அடைந்தான்.

அவனிருக்கும் அந்த அறை ஒழுங்கில்லாமல் அலங்கோலமாக இருந்தது. புத்தகங்களும், அழுக்குத்துணிகளும் மூலைக் கொன்றாய்ச் சிதறிக் கிடந்தன. சுவரோரங்களில் நூலாம்படை அடைந்திருந்தது. மேஜைமீது வைக்கப்பட்டிருந்த 'சைனா ஆஷ்ட்ரே' சிகரெட் துண்டுகளால் நிரப்பப்பட்டு காணக் கண்றாவியாயிருந்தது. மற்றொரு பக்கம் டீ கோப்பை, மண்டிக்குழம்புடன் கவிழ்ந்து கிடந்தது.

மாணிக்கம், தான் போட்டுக் கொண்டிருந்த கம்பளிக்கோட்டைக் கழற்றி, நாற்காலியின் முதுகுச் சட்டத்தில் மாட்டிவிட்டு, பனியால் நனைந்து கனத்துவிட்டிருந்த ஜன்னல் திரையை விலக்கினான். அறையில் விடியற்சாம நேரத்து இளம் வெளிச்சம் சூழ்ந்

தது. இடதுபுறமிருந்த மேஜையின் டிராயரை ஓசைப்படாமல் திறந்து பார்த்தான். அதற்குள் ஒரு அழகிய பெண்ணின் போட்டோ 'பிரேம்' செய்து வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணை மாணிக்கம் தன் உயிருக்குயிராய்க் காதலித்தான். அவள் பெயர் வாஸந்தி. புதுக் குறுத்துப்போலப் பருவத்து வனப்பும், சுருண்ட கேசமும், ரோஜா மொக்குகள் போன்ற கன்னக் கதுப்புகளும், 'மூக்கும் விழியுமாக' அவள் போட்டோவில் எவ்வளவு அழகாயிருக்கிறுள்! அந்த ரம்மியமானப் பெண்ணின் அழகில் மயங்கி, அவளுக்காக எந்தப் பயங்கரமான—மரண ஆபத்தான—காரியங்களிலும் ஈடுபடத் துணிந்திருந்தான் அவன்! அந்தப் பெண் இன்று?......மாணிக்கம் மெதுவாகச் சிரித்துக்கொண்டான்!

மேஜையின்மீது ஒரு தினசரிப் பத்திரிகை கிடந்தது. அது அன்றையப் பத்திரிகையல்ல; இரண்டு மாதத்துக்கு முன்னுல், ஏதோ ஒருநாள் பத்திரிகை. மாணிக்கம் அதை எடுத்து ஆத்திரத்தோடு ஒரு மூலையில் வீசியெறிந்தான். அப்போது கதவைத் திறந்து கொண்டு யாரோ சடாரென்று அறைக்குள் நுழையும் சப்தம் கேட்டது! வெற்றிலைப்பாக்குக் கடையண்டை நின்றுகொண்டிருந்த அந்த முரட்டுப் பேர்வழி—தெருவில் மாணிக்கத்தை, எவனே பின் தொடர்வதாக எச்சரித்த அந்தப் பேர்வழி—அறையினுள் நுழைந்தான்!

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த மாணிக்கம் "யாரது?" என்று அதட்டிக் கேட்டுத் திடுக்கிட்டபடியே திரும்பிப் பார்த்து "ஓ, விநாயகம்தானு? நல்லவேளை!" என்று தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டான்.

"மிஸ்டர் மாணிக்கம்! இன்று அதிகாலைவரை உங்களுக்கு எவ்வித ஆபத்தும் நேராமலிருப்பது குறித்து நான் சந்தோஷமடைகிறேன்!" என்று பத்திரிகை பாஷையில் கூறிக்கொண்டே கவிழ்ந்து கிடந்த ஒரு நாற்காலியை நிமிர்த்திப்போட்டு அதில் உட்கார்ந்துகொண்டான் விநாயகம்.

விநாயகம் கட்டுமஸ்தான திரேகம் உள்ளவன். குத்துச் சண்டை, சிலம்பமாடுதல், பஸ்கி, தண்டால் ஆகியவற்றில் அவனுக்குப் பரிச்சயமுண்டு அவன் முகம் வயதுக்குத் தக்க மென்மையற்றுக் கரடுகட்டிக்கொண்டிருந்தது. கன்னத்திலும் நெற்றியிலும் பல வெட்டுக் காயங்களும் கீறல் தழும்புகளும் அழுந்திக் கிடந்தன. மூக்கின் மத்தியில் எலும்பு உடைந்து முறுக்கலிட்டுக்கொண்டிருந்தது. கண்களுக்குக் கீழுள்ள சதை வீங்கித் தடித்திருந்தது. மொத்தத்தில் விநாயகம் ஒரு விகாரரூப மனிதனுயிருந்தான். அழகே உருவான மாணிக்கத்தின் அருகில் அவனைப் பார்க்கும்போது இனிய லட்சிய உலகத்திற்கும் பைசாச நச்சு உலகத்திற்கும் உள்ள வித்தியாசம்போலிருந்தது!

“மிஸ்டர் மாணிக்கம்! ‘அவர்கள்’ உம்மைப் பிடிப்பதற்கு ரொம்பவும் தீவிர முயற்சிகள் செய்கிறார்கள் போலிருக்கிறதே!” என்றான் விநாயகம் தடித்த குரலில்.

“இருக்கட்டுமே! என்மீது எந்தப் பயலும் கைவைக்க முடியாது!” என்று அலட்சியமாகப் பதில் கூறினான் மாணிக்கம்.

“எதற்கும் உஷாராயிருப்பது நல்லது. உம்மைக் கவ்விப் பிடிக்க ஊரெல்லாம் பல ‘வேட்டை நாய்கள்’ திரிகின்றன!” என்றான் விநாயகம்.

“அது சரி; என்னை நிழல்போல் பின்தொடர்ந்துகொண்டிருப்பவன் யார் என்பது உனக்குத் தெரியுமா?” என்று கேட்டான் மாணிக்கம்.

“அதுதானே எனக்கு இன்னும் தெரியவில்லை!” என்று முணுமுணுத்தான் விநாயகம்.

“அவன் எப்படி இருந்தான்?”

“முரட்டு முகம், சிவந்த மேனி, காவிநிறப் பற்கள், வலது கை விரலில் தங்கமோதிரம்! ஒருவேளை அவன் அசோக்லாலின் கையாட்களில் ஒருவனாயிருப்பான்!”

“சிங்காரமா அவன்?”

“அல்ல! வேறு எவனோ இன்னொரு கையாள்! ஆனால் சிங்காரத்தைப்போல அவ்வளவு கொரேமானவன்தான்!”

“ஒருவேளை அவன் ஸி.ஐ.டி. போலீஸ்காரனாயிருக்குமோ?”

“இருக்கலாம்!”

“அப்படியானால்?”

“மத்தளத்திற்கு இருபுறமும் இடி என்பதுபோல் உங்கள் நிலைமை ஆகிவிட்டது!” என்று விநாயகம் சிரித்தான். ஆனால் அந்தச் சிரிப்பில் ஒரு பயங்காமும் விநயமும் இருந்தது.

“என் நிழலைக் கண்டே பயப்படும் நிலையாகிவிட்டது!” என்றான் மாணிக்கம் தொய்ந்துபோன குரலில்.

“ஒவ்வொரு சந்து முனையிலும் உம்மைக்கொல்ல ஒரு கொலைகாரன் காத்திருக்கிறான் என்பதை மறந்துவிடாதீர்கள்!”

“என்னை யார் கொல்வான்?”

“எவனுந்தான்! பணத்தைக் காட்டினால் எவனும் உங்கள் கழுத்தை வெட்டத் துணிந்துவிடுவான்!”

மாணிக்கம் தன் கால்சட்டைப் பையிலிருந்து மூன்று பத்துரூபாய் நோட்டுக்களை எடுத்து விநாயகத்தின் கிழிந்த கோட்டு ஜேபியில் திணித்துவிட்டு, “விநாயகம்! எனக்காக நீ சிரமப்பட்டு சில முக்கியச் செய்திகளை அறிந்துகொண்டு வரவேண்டும்!” என்றான் கரகரத்த குரலில்.

விநாயகம் மௌனமாகத் தலையசைத்துக்கொண்டே அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"கொலை செய்யக்கூடத் தயங்காத என்போன்ற ஒருவனுக்கு நீ தைரியமாக உதவி செய்வாயா?" என்றான் மாணிக்கம் மீண்டும்.

விநாயகம் தன் இடுக்குப் பற்களை அகலமாகத் திறந்து காட்டிச் சிரித்துக்கொண்டே, "மிஸ்டர் மாணிக்கம்! உங்கள் குணம் எனக்குத் தெரியாது. நீங்கள் இதுவரை யாரையும் அநியாயமாகக் கொலை செய்திருக்க மாட்டீர்கள் என நம்புகிறேன். எந்தச் சதியிலும் கலந்துகொண்டிருக்கவும் மாட்டீர்கள். அப்படி தப்பித் தவறிச் செய்திருந்தாலும் அது நியாயத்தின் நிழலில்தான் நடந்தேறியிருக்கும்!" என்றான் விநாயகம். ரௌடிபோல் பயங்கரத் தோற்றமுள்ள விநாயகம், பேசும்போதுமட்டும் படித்தவனைப்போல பண்பட்ட பாஷையில் பேசியது விசித்திரமாக இருந்தது.

"நான் இன்றைக்கு எப்படியும் அவனைச் சந்தித்தாகவேண்டும்!" என்றான் மாணிக்கம் எங்கோ தன் பார்வையைச் செலுத்திக் கொண்டு.

"எவனை?" என்று அவசரமாகக் கேட்டான் விநாயகம்.

"ராகவனை!"

இதைக் கேட்டதும் விநாயகத்தின் முகம் கடுமையாய் மாறியது. அவன் சிவந்த கண்கள் பிதுங்கி வெளியே வந்து விடுவன போல உருண்டு புரண்டன.

"எதற்காக அவனைச் சந்திக்கவேண்டும்?" என்று தடித்த குரலில் கூவினான் விநாயகம்.

"காரியமாகத்தான்!" என்று சாவதானமாகப் பதில் கூறினான் மாணிக்கம்.

"மிஸ்டர் மாணிக்கம்! ஆசிரியர் ராமகாந்தனைப் படுகொலை செய்த நபரைப் போலீஸார் தேடிக்கொண்டிருக்கிறார்களல்லவா? அவர்கள் சந்தேகப்படும் நபர்களில் இந்த ராகவனும் ஒருவன்! அவனை நீங்கள் சந்திக்காமலிருப்பதே நல்லது!" என்று வன்மையான குரலில் சொன்னான் விநாயகம்.

"எனிப்படிச் சொல்கிறாய் விநாயகம்?" என்று ஒன்றும் புரியாதவனாய்க் கேட்டான் மாணிக்கம்.

"காரணமாகத்தான் கூறுகிறேன். அந்தக் காரணம் என்ன தெரியுமா? ராகவன் தலைமறைவாய் இருக்கிறான் என்பதாலேயே நீங்கள் போலீஸாரிடமிருந்து தப்பித்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆசிரியர் ராமகாந்தன் படுகொலையான அன்றே அவன் இந்த ஊரை விட்டு மாயமாய் மறைந்துவிட்டிருக்கிறான். அதனால் போலீஸாரின் சந்தேகம் ராகவன் மீதுதான் பலமாக விழுந்து விட்டிருக்கிறது.

அவ்வாறில்லையென்ருல் நீங்கள் இந்நேரம் சந்தேகமறக் கொலையாளியாகக் குற்றம்சாட்டப்பட்டுத் தூக்குமேடையில்ஏறி நின்றுவிட்டிருப்பீர்கள்! ராகவன் தலைமறைவாய் இருக்கும்வரை உங்களுக்கு நல்ல காலம் என்று நினைத்துக்கொள்ள வேண்டும்! இந்தச் சமயத்தில், நீங்கள் இப்போது ராகவனைச் சந்தித்தால், நிலைமை எப்படி மாறும் என்பதைக் குறித்து நான் சொல்ல வேண்டியதில்லை!" என்று படபடப்புடன் பொழிந்து தள்ளினுன் விநாயகம்.

"போலீஸார் அவனை ஏன் கொலையாளியென்று சந்தேகிக்கிருர்கள்?"

"அவன் ஆசிரியர் ராமகாந்தனின் பிரதம உதவி ஆசிரியனல்லவா? எவன் எந்தச் சமயத்தில் தன்னைக் குத்திக் கொல்வாஞே என்று ஆசிரியர் ராமகாந்தன் எப்போதும் சர்வ ஜாக்கிரதையாக இருப்பான். உதவி ஆசிரியர் ராகவன் ஒருவனைத்தான் அவன் பரிபூரணமாக நம்பி, பகல் இரவு எந்நேரமும் தன்னருகில் வைத்திருந்தான். அதனுல்........."

மாணிக்கம் இதைக்கேட்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினுன். சிறிது நேரங்கழித்து விநாயகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே, "விநாயகம்! என்ன இருந்தாலும் அவன் என் நீண்ட நாளைய நண்பன் அல்லவா?" என்று புன்முறுவல் செய்துவிட்டு, "ஆசிரியர் ராமகாந்தனிடமிருந்து எந்த இரகசியக கடிதங்களை கிளப்பிக் கொண்டுவர இவ்வளவு பாடுபட்டோமோ அந்தக் கடிதங்களெல்லாம் ராகவனிடந்தான் சிக்கிக்கொண்டிருக்கின்றன. ஆசிரியர் கொலை நடக்குமுன்பே உதவி ஆசிரியர் ராகவன் அந்தக் கடிதங்களைக் கிளப்பிக்கொண்டு போய்விட்டான்! அவை அவன் கையிலிருப்பது ஆபத்து! அதனுல், ராகவன் எங்கே தலைமறைவாய்ப் பதுங்கியிருக்கிருன் என்று இப்போது நாம் கண்டுபிடிப்பது முக்கியம்!" எனத் தணிவான குரலில் சொன்ஞன்.

"இனிமேல் உங்கள் இஷ்டம்! அவனை நீங்கள் தேடியலைந்தால் போலீஸார் நம்மையும் சதிகாரர்களோ என்று சந்தேகிப்பார்கள்! பிறகு நாமும் மாட்டிக்கொள்ள நேரிடும்!" என்று கூறிக்கொண்டே 'விருட்' டென எழுந்து வெளியே புறப்பட ஆயத்தமானுன் விநாயகம்.

"விநாயகம்!" என்று அடித்தொண்டையில் அழைத்தான் மாணிக்கம். அவன் சட்டென நின்று திரும்பிப் பார்த்தான்.

"நீ, வாஸந்தியைப் பார்த்தாயா? அவள் எப்படியிருக்கிருள்?" என்று சிறிது தடுமாற்றத்துடன் கேட்டான் மாணிக்கம்.

"எப்போதும்போல் அவள் அழகாய்த்தான் இருக்கிருள். அங்கிருந்துதான் இப்போது யாருடைய கண்ணிலும் படாமல் பதுங்கிப் பதுங்கி இங்கு வந்திருக்கிறேன்!" என்று கூறி மெதுவாகச்

சிரித்துக்கொண்டான் விநாயகம். அந்தச் சிரிப்பில் ஒரு கடுமையும் உள்ளூரக் கலந்திருந்தது.

"நானும் இப்போது அந்த மொட்டைமாடி வீட்டிற்கு வரலாமா என்று பார்க்கிறேன். என் ஆசை தீர வாஸந்தியை ஒரு முறை கண்ணால் பார்த்தால்தான் எனக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும்!" என்று வெட்கம் நிறைந்த தொனியில் சொன்னான் மாணிக்கம்.

"மிஸ்டர் மாணிக்கம்! நீங்கள் எல்லா விஷயத்திலுமே சிறு பிள்ளைத் தனமாக நடந்துகொள்கிறீர்கள். எதிலும் அவசர புத்தி கூடாது. பொறுமை வேண்டும். நான் வாஸந்தியை எத்தனை பீதியுடன் பாதுகாத்து வருகிறேன் என்பது உமக்குத் தெரியாது. அவளை யாருக்கும் தெரியாமல் அழைத்துவந்து அந்த மொட்டை மாடி வீட்டில் இரகசியமாகப் பதுக்கி வைத்திருக்கிறோம். அவள் நம்மிடம் இருப்பது ஒரு ஈ எறும்புக்குக்கூட தெரியாது. அப்படியிருக்க, அந்த இடத்திற்கு நீங்கள் அடிக்கடி வருவது ஆபத்தானது அல்லவா? நீங்கள் அங்கு வருவதோ அல்லது வாஸந்தி என்னிடம் இருப்பதோ 'அவர்களுக்குத்' தெரிந்து விட்டால், விஷயமே தலை கீழாக மாறிவிடும். அதாவது அவள் உயிருக்கும் உங்கள் உயிருக்கும் ஆபத்து வருவதுமல்லாமல், என் இரகசிய இருப்பிடமும் 'அவர்களுக்'குத் தெரிந்து அதனால் நானும் அகப்பட்டுக்கொள்ள நேரிடும். ஆதலால்........." என்று வாக்கியத்தை முடிக்காமல் நீண்ட மூச்சு விட்டான் விநாயகம்.

"சரி, சரி; உன் இஷ்டப்படியே காரியம் நடக்கட்டும்!......... ஆமாம்; நீ இங்கு வரும்போது எலக்ட்ரிக் லிப்டில் ஏறியா மாடிக்கு வந்தாய்?" என்றான் மாணிக்கம்.

"இல்லை. சாதாரணப் படிகளில்தான் ஏறி வந்தேன்" என்றான் விநாயகம்.

"லிப்ட் அறையில் புதிதாக வேலைக்கு வந்திருக்கும் அந்தப் பையன் பொன்னன் மீது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது!" என்று கம்மிய குரலில் கூறினான் மாணிக்கம்.

"பார்க்கலாம்" எனச் சொல்லிக்கொண்டே சரேலென வெளியேறிப் போய்விட்டான் விநாயகம்.

அன்று முழுதும் மாணிக்கம் வெளியே தலைகாட்டவில்லை. தன் அறையிலேயே சிறைக் கைதியைப்போல அடைந்துகிடந்தான்.

இரவு எட்டு மணியாகிவிட்டது. சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கையில் வந்து படுத்தான். தூக்கம் வரவில்லை. அப்படியும் இப்படியுமாகப் புரண்டு நெளிந்து கொண்டிருந்தான்.

'இன்று அதிகாலையில் தன்னை யார் பின்தொடர்ந்து வந்திருப்பார்கள்' என்று சிந்தித்துப் பார்த்தான். ஒருவேளை அந்தச் சதிக் கூட்டத்தாரில் ஒருவனாயிருக்குமோ? தன்னைக் கொலை செய்ய வந்தவனாயிருப்பானோ? அல்லது போலீஸ் சி. ஐ டி யாராவது கண்காணிக்கிறார்களா?—மாணிக்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை. கடினமானச் சிந்தனையால் அவன் உடலும் உள்ளமும் சோர்ந்தன. அப்படியே தூங்கிப்போய்விட்டான் மாணிக்கம்.

நடுநிசி. இரவு மணி ஒன்றிருக்கும். மாணிக்கம் படுத்திருந்த கட்டிலுக்கடியில் தடாலென ஏதோ ஒரு சப்தம் கேட்டது. கோழித் தூக்கம் தூங்கிக்கொண்டிருந்த மாணிக்கம் திடுக்கிட்டு எழுந்தான். ஏதோ ஒரு மனித உருவம் ஒரு மூலையில் கிடந்த நாற்காலியில் பயங்கரமாக உட்கார்ந்து கொண்டிருந்தது! அதன் கையில் ஒரு புத்தம் புதிய கத்தி பளபளத்துக்கொண்டிருப்பதுபோல் தோன்றியது!

மாணிக்கம் படுக்கையைவிட்டு சரேலெனத் தாவியோடிப்போய் அலமாரியின் பின்புறம் பதுங்கிக்கொண்டு மின்சார விளக்கின் ஸ்விட்சைப் போட்டான். அறையில் வெளிச்சம் கப்பியது.

அங்கே—

விநாயகம், கையிலொரு கத்தியுடன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான்!

## 2
## அபாய அறிவிப்பு



"ஹா! விநாயகமா!" என்று ஆச்சரிய மிகுதியினால் கூவி விட்டான் மாணிக்கம்.

"ஆமாம்; நான்தான். அபாயத்தின் உச்சியிலே உட்கார்ந்து கொண்டிருக்கும் நீங்கள், இப்படித்தானா அறைக் கதவைப் பரக்கத்

திறந்து போட்டுவிட்டுத் தூங்குவது? உங்கள் உயிருக்கு ஆபத்து வரும் என்று நினைத்தே இன்று பூராவும் இந்த ஹோட்டலைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தேன். நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது. கொஞ்ச நேரத்துக்கு முன்னுல் யாரோ இரண்டு பேர் இருட்டில் மறைந்து மறைந்து இங்கு வர முயன்ருர்கள். உடனே அவர்களுக்கு முன்னுல் நான் இவ்வறையில் ஓடி வந்து புகுந்துகொண்டு, இந்தக் கத்தியுடன் உட்கார்ந்திருக்கிறேன்; உள்ளே அவர்கள் வந்தால் அவர்களை மடக்கி யாரென்று தெரிந்து கொள்வதற்காக! நீங்கள் இப்படி அஜாக்கிரதையாக இருக்கலாமா மாணிக்கம்?'' என்று கேட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு மெல்ல எழுந்து நின்ருன் விநாயகம்.

நடுங்கிக்கொண்டிருந்த மாணிக்கத்தின் உடல் இப்போதுதான் சிறிது தணிந்து நின்றது.

''மாணிக்கம்! உங்களுக்கொரு 'அபாய அறிவிப்பு' வந்திருக்கிறதே!'' என்ருன் விநாயகம் ஒரு தினுசாகச் சிரித்துக்கொண்டு.

''என்ன! 'அபாய அறிவிப்பா?' அதுதான் ஆசிரியர் ராமகாந்தன் இறந்தவுடன் நின்றுவிட்டதே!'' என்று படபடத்தான் மாணிக்கம்.

''அந்த 'அபாய அறிவிப்பு' இல்லை; இது உங்களை மிரட்டி வந்திருக்கும் அபாய அறிவிப்பு! இந்தக் கடிதத் துணுக்கை சாயந்திரம் ஒரு பிச்சைக்காரப் பையன் என் மூஞ்சியில் எறிந்து விட்டு ஓடிவிட்டான்!'' என்று கூறிக்கொண்டே ஒரு சிறு துண்டுக் கடிதத்தை மாணிக்கத்திடம் எடுத்து நீட்டினுன் விநாயகம்.

மாணிக்கத்தின் கண்கள் பயத்தால் அகல விரிந்தன. ''இதெல்லாம் அவனுல் வந்தவினை! பாம்புக்குப் பால்வார்த்து வளர்த்த அவனுல் வந்தவினை!'' என்று கூறி தன் நெற்றியை நெருடி விட்டுக்கொண்டே கட்டிலின்மேல் போய் உட்கார்ந்தான்.

அவன் சிந்தனைச் சக்கரம் கரகரவென எங்கோ சுழன்று கொண்டிருந்தது. அவன் உதடுகள் ''அவன்! அவன்!! அவன்!!!'' என்று முணு முணுத்தன.

★

அந்த நகரத்தில் வாழும் மக்களெல்லாம் 'அவன்' ஒருவனின் பெயரைக் கேட்கவே அஞ்சி நடுநடுங்கினர். ஏழை எளியோரும், தொழிலாளர்களும், படிக்காத பாமரர்களும் அவனைப்பற்றி அதிகமாகச் சட்டை செய்யவில்லை. பெரும் பணக்காரர்களும், தொழிலதிபதிகளும், மடாதிபதிகளும், அரசியல் வாதிகளும், பொதுநலச் சேவையிலீடுபட்டிருப்பவர்களும் மட்டும் அவனை ஒரு பயங்கரப் பேயாகவே மதித்து அஞ்சி வாழ்ந்தனர். உண்மையில் பார்க்கப்

போனால், அவன் அப்படியொன்றும் வீராதி வீரனோ, சூராதி சூரனோ அல்ல. சாதாரண மனிதனைவிட அவன் எல்லாவகையிலும் மிகச் சாதாரண மனிதன் என்றே சொல்லி விடலாம்! அறிஞனோ, அழகனோ, பண்புள்ளவனோ, ஒழுக்கமுள்ளவனோகூட அல்ல; எல்லாத் துறையிலும் வழுக்கி விழுந்த வாலிபர்களுள் அவன் தலையாயவனாய் இருந்தான்! இத்தகைய ஒருவனுக்கு அந்நகர மக்கள் அனைவரும் பயந்து கொண்டிருந்ததற்குக் காரணம்? அவன் ஒரு 'மஞ்சள்' பத்திரிகையின் ஆசிரியன்! எதற்கும் அஞ்சாத இரும்பு நெஞ்சம் கொண்டவன்; அவ்வளவுதான்!

நாகரிகத்தின் பெயரால் பல பெரிய மனிதர்கள் நடத்தும், கொள்ளை, கொலை, விபசாரம் ஆகியவற்றை அதிநுட்பமாக விசாரித்து அறிந்து, அப்போதைக்கப்போது தன் பத்திரிகையில் எழுதி அம்பலப்படுத்தி வந்தான் அவன்! அதற்காகத்தான் அவன் எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக இருந்து வந்தான்!

மனித தர்மப்படி பார்த்தால், தனியொரு மனிதனின் குறைபாடுகளை எடுத்துப் பகிரங்கமாகக் கூற எவனுக்கும் உரிமை இல்லை. எனினும், மக்களில் பெரும்பாலோர், மற்றவர்களுடைய குறைகளை அறிவதில்தான் மிகுந்த ஊக்கம் காட்டி வருகிறார்கள்! இந்த பலஹீனத்தை அவன் நன்கு பயன்படுத்திக்கொண்டான்—அவ்வளவுதான்! இதனால் ஜனசமுதாயத்துக்குக் கடுகளவு நன்மையாவது பயக்கத்தான் செய்தது. அதிகார போதையாலும், பணத்திமிரினாலும் பைசாச கருமங்களைச் செய்யத்துணியும் சமூகத்துரோகிகளை, அவன் பத்திரிகை, ஒவ்வொரு விநாடியும் எச்சரித்துக் கொண்டே இருந்தது. அந்தப் பத்திரிகையின் பெயரே 'அபாய அறிவிப்பு' என்றால், அதில் வெளிவரக்கூடிய செய்திகள் எப்படியிருக்கும்? சாதாரண மக்களுக்கு இதனால் என்னென்ன நன்மைகள் எற்பட்டன என்பதைக் கூற முடியாவிட்டாலும், அந்தப் பத்திரிகையை நடத்தி வந்த ஆசிரியர் ராமகாந்தன் மட்டும் மிகக் குறுகிய காலத்தில் பெருஞ் செல்வந்தனானான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகிவிட்டத! இப்படியொரு புதுவழியைக் கண்டுபிடித்து, பிறர் நடுங்க, தான் சுகமாக வாழக் கற்றுக்கொண்டிருந்த ஆசிரியர் ராமகாந்தன், பல பிரபலஸ்தர்களை மிரட்டி அவர்களின் அந்தரங்க நாடகங்களைத் தன் பத்திரிகையில் வெளியிட்டுவிடுவேன் என்று, வெறும் வாய் ஜபர்தஸ்து செய்தே எராளமாகப் பணம் திரட்டி வந்தான்.

இந்தத் துறையில் அவனுக்கு உதவிசெய்ய—அதாவது பல பெரிய மனிதர்களின் அந்தரங்கச் செயல்களை விசாரித்தறிந்து விஷயம் சேகரித்துக் கொடுக்க—பல கல்லூரி மாணவர்களும், வேலை கிடைக்காமல் ஊர் சுற்றிக்கொண்டிருந்த சில பட்டதாரிகளும், ராணுவத்துக்குச் சென்று உடல் ஊனமாகிவிட்ட ஒரு சில வாலி

பர்களும், வாழ்க்கையில் வழுக்கி விழுந்த தாசிப் பெண்கள் சில ரும் முன்வந்தனர்! இவர்களை வைத்துக்கொண்டு, தன் பத்திரி கையை வெற்றிகரமாக நடத்திவந்தான் ராமகாந்தன். ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, ஸ்தாபனங்களுக்கு ஸ்தாபனம் தன் கையாட்களை மாறுவேஷத்தில் அனுப்பி வைத்து, அவர்கள் வாயி லாகக் கிடைக்கும் விஷயங்களைச் சேகரித்து, அப்போதைக் கப் போது தன் 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையில் வெளியிட்டுவந்தான்.

பத்திரிகை விற்பனை வருவாய் அல்லாமல், சதிகளிலும், கொலை களிலும், விபசாரங்களிலும் ஈடுபட்ட பல பெரிய மனிதர்கள், தங் கள் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள இரகசியமாகக் கொடுத்து விட்டுப் போகும் லஞ்சத்தொகையும் நாளுக்குநாள் பத்திரிகாசிரியர் ராமகாந்தனுக்குப் பெருகி வந்தது! இதனால், தன் 'துப்பறியும் இலாகா' வுக்கு நிறையப்பணம் செலவழித்தான் ராமகாந்தன். கைநிறைய காசு கிடைப்பதால், ஒவ்வொரு ஐந்தாம்படைக்கார னும் உற்சாகமாக வேலைசெய்ய ஆரம்பித்தான். இந்த ஐந்தாம் படைக்காரர்களுள் சிலர், உண்மையிலேயே நாட்டுக்கும் மக்களுக் கும் நற்பணி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் உழைத்து வந் தனர். அவர்களுள் குறிப்பாக மாணிக்கத்தையும், விநாயகத்தையும் சொல்லலாம்! பத்திரிகாசிரியர் ராமகாந்தனுக்கு, மாணிக்கம் பிரதம கையாள். மாணிக்கத்துக்கு விநாயகம் அத்தியந்த நண்பன். இவ்விருவாலும் ராமகாந்தனுக்கு நிறைய நன்மை கிடைத்து வந்தது.

மாணிக்கம், ஒரு மாஜி ராணுவஸ்தன். அநீதிகளையும் அக்கிரமங் களையும் அழித்து, நாட்டையும் மக்களையும் சீர்திருத்தவேண்டு மென்ற அடங்கா துடிப்பும் வேட்கையும் இலட்சிய உள்ளமும் உள்ளவன்போல் நடந்துவந்தான். அதனால்தான் அவன் ராமகாந்த னின் கையாளாகப் பணியாற்ற முன்வந்தான்! இப்படி அவன் வந்ததற்கு ஒரு சில காரணங்களும் இருந்தன.

இரண்டாண்டுகளுக்கு முன்னால், சென்ற இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ராணுவத்தில் சேர்ந்து ஐந்தாண்டுகள் வரை பணியாற்றிவிட்டு, சொந்த ஊருக்குத் திரும்பி வந்தான் மாணிக்கம். தாய் தந்தையர், உற்றார் உறவினர் அற்ற அவன், ஓய்வெடுக்க ஊருக்குத் திரும்பி வந்ததும், உத்தியோகமில்லாமல் வாழ்க்கையை நடத்த முடியாத நிலையிலிருந்தான். இந்தச் சமயத்தில்தான் ராம காந்தன் அவனுக்கு அறிமுகமானான். இவர்களின் நட்பு நாளுக்கு நாள் உரம் பெற்றுக்கொண்டு வந்தது. இருவரும் வேலைபற்றவர் களாய் இருந்ததால், வருவாய்க்குரிய ஏதாவதொரு தொழில் நடத்தத் திட்டம் போட்டனர். நீண்டநாள் யோசனைக்குப்பின், அந்தத் திட்டம், 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையை நடத்தும் முடிவில் கொண்டு வந்து நிறுத்தியது. இருவரும் தங்கள் கையிலிருந்த

சொற்பப்பணத்தை மூலதனமாகப் போட்டு பத்திரிகையை ஆரம்பித்தனர். பத்திரிகையின் போக்கு 'புதுமை'யுள்ளதாய் இருந்ததால், அதன் செல்வாக்கு நாளுக்குநாள் வளரத்தொடங்கியது. இதையறிந்த ராமகாந்தன், தன்தொழில் கூட்டாளியான மாணிக்கத்துக்கு முதலிட்ட தொகையைச்சாதுர்யமாகக் கொடுத்து அவனைப் பிரித்துவிட்டு, தான் ஒருவனே அப்பத்திரிகையின் முழு முதலாளியாக ஆகிவிட்டான்! நீண்டநாளைய நட்பை பங்கப் படுத்திக்கொள்ளவும், ஆசிரியர் ராமகாந்தனைப் பகைத்துக் கொள்ளவும் விரும்பாத மாணிக்கம், ராமகாந்தனின் முடிவை மனமார ஏற்றுக்கொண்டான். ஆயினும் முழுசாகத் தன்னை அப்பத்திரிகையிலிருந்து வெட்டிக்கொள்ள அவன் விரும்பவில்லை. காரணம், தன் இலட்சிய சேவைக்கு இந்தப் பத்திரிகையின் தொடர்பு வேண்டுமென அவன் கருதிக்கொண்டிருந்ததால்தான். அதனால், மாதம் இருநூறு ரூபாய்ச் சம்பளத்தில், இரகசிய விஷயங்களைச் சேகரிக்கும் பணியில் தொடர்ந்து இருந்து வந்தான். இவனுக்குத் துணையாக இடைக்காலத்தில், ராகவனும் விநாயகமும் வந்து சேர்ந்தனர்.

விநாயகம், வேலையற்றிருந்த ஒரு பட்டதாரி. முரட்டு சுபாவம் கொண்டவன். மாணிக்கத்தின் பால்ய சினேகிதன். அவனுக்கு மாணிக்கத்துடன் சேர்ந்து எதையும்செய்வதில் ஒரு அலாதிப்பிரியம். அதனால்தான் அவன் மாணிக்கத்துக்கு உதவி செய்ய முன்வந்தான். போலீஸாரால் கண்டுபிடிக்க முடியாத பல கொள்ளை கொலை விவரங்களையெல்லாம் மிகச் சாதுரியமாய் திரட்டி வந்து 'அபாய அறிவிப்பு' பத்திரிகைக்கு விஷயதானமாகக் கொடுப்பார்கள். பெரிய மனிதர்கள் செய்த கொலைகள், செய்யும் சதித்திட்டங்கள் பற்றிய ஆதாரங்களையும் இரகசியமாகக் கிளப்பிக் கொண்டுவந்து ஆசிரியர் ராமகாந்தனிடம் கொடுப்பார்கள். அவற்றையெல்லாம் வாங்கி ஒரு சிகப்புப் 'பைலில்' கட்டி யாருக்கும் தெரியாத ஒரு இரகசிய இடத்தில் அதைப் பத்திரமாக வைத்துக் கொண்டு விடுவான்! அந்த ஆதாரங்களைப் போலீசுக்கு அனுப்பிவிடுவதாகவோ, தன் பத்திரிகையில் பிரசுரித்து விடுவதாகவோ பயமுறுத்தி அந்தப் பெரிய மனிதர்களிடமிருந்து பணத்தைக் கறப்பான். அப்பெரிய மனிதர்களின் ஒழுக்கக் கேடான விஷயங்களை மட்டுந்தான் தன் பத்திரிகையில் பிரசுரிப்பானே தவிர, அவர்களின் சதி கொலைகளைப் பிரசுரிக்கமாட்டான்! ஏனெனில், பெரிய மனிதர்களின் ஒழுக்கக் கேடான விஷயங்களைப் பிரசுரித்தால் அவர்களின் மானம் மட்டும் தான்போகும். அவர்களின் சதிகளையும் கொலைகளையும் பிரசுரித்தால் அவர்கள் தூக்குமேடைக்கோ சிறைக்கோ அல்லவா போய் விடுவார்கள்! அவர்கள் அப்படிப் போய்விட்டால் ஆசிரியர் ராமகாந்தன் அவர்களைப் பயமுறுத்திப் பணம் பறித்துக் கொண்டிருக்க முடியாதே!...இவ்வாறெல்லாம் திட்டமிட்டு காரியங்களைச் செய்து

வந்த ராமகாந்தன் நிமிஷத்துக்கு நிமிஷம் பணத்தை வாரிக் குவித்துக் கொண்டே இருந்தான்!

இதையறிந்த மாணிக்கத்திற்கும் விநாயகத்திற்கும் நாளா வட்டத்தில் பத்திரிகாசிரியர் ராமகாந்தனின் சுயநலப்போக்கும் தவறுன நடத்தையும் வெறுப்பை அளித்து வந்தன. எனினும் அந்த வெறுப்பை அவர்கள் வெளியே காட்டிக்கொள்ளாமல் மனசுக் குள்ளேயே போட்டு புழுங்கிக்கொண்டு வந்தார்கள்.—

ஒருநாள்; பத்திரிகாசிரியர் ராமகாந்தன் யாரோ ஒருவனுல் சுட்டுக் கொல்லப்பட்டான்! பல பெரிய மனிதர்களின் வன்மப் பகை இருப்பதால், என்றைக்காவது ஒருநாள் இப்படி நடக்கு மென்பது ராமகாந்தனைச் சேர்ந்த கூட்டாளிகள் எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயம்தான். எனினும் அவன் இவ்வளவு சீக்கிரம் சுட்டுக் கொல்லப்படுவான் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. ராமகாந்தன் சுடப்படுவதற்கு முன்னுல், அவனிடம் ஏகப்பட்ட— ‘அபாய அறிவிப்பு’ப் பத்திரிகையில் வெளியிடவேண்டிய—இரகசிய தஸ்தாவேஜுகள் இருந்தன. அந்த தஸ்தாவேஜுகளில், பல பெரிய பெரிய ‘புள்ளி’களெல்லாம் அகப்பட்டுக் கொண்டிருந்தன! ஆனுல் பத்திரிகாசிரியர் சுட்டுக்கொல்லப்பட்டதால், இப்போது அந்தப் ‘பைல்’ யாரிடமிருக்கிறது—அது என்ன ஆயிற்று—என்பதே ஒருவருக்கும் தெரியாமல் மர்மமாயிருந்தது!

★

நீண்டநேரச் சிந்தனைக்குப் பின் தலை நிமிர்ந்தான் மாணிக்கம்.

“விநாயகம்! அந்த இரகசியக் கடிதக்கட்டை நாம் எப்படி யாவது உடனடியாகத் தேடிக் கண்டு பிடித்தாகவேண்டும்! அதைக் கண்டு பிடிக்காதவரை எனக்குத் தூக்கம் வராது!” என்று அழுத்த மான குரலில் சொன்னுன் மாணிக்கம்.

“கண்டுபிடிக்க வேண்டியதுதான். ஆனுல் இப்போது இரவு வேளையாயிருக்கிறதே! நாம் எங்கே போவது?” என்று சற்று கவலையுடன் கேட்டான் விநாயகம்.

மாணிக்கம் எதையோ நினைத்துக்கொண்டவனுய், “போக வேண்டிய ஒரு இடம் இருக்கிறது. புறப்படு!” என்று கூறிக் கொண்டே அவசர அவசரமாக வெளியே கிளம்பினுன். விநாய கம் ஒன்றும் புரியாதவனுய் அவனைப் பின் தொடர்ந்தான்.

இருவரும் இருண்டு கிடந்த ஒரு தெருவழியே நடந்து கொண்டிருந்தனர். எந்தச் சந்து முனையில் எவன் குத்துவாளுடன் காத்திருப்பானே வென்று தங்கள் நிழல்கூடத்தெருவில் விழாதபடி வீட்டுச் சுவர்களின் இருள் படலத்தில் மறைந்தவாறே போய்க் கொண்டிருந்தனர்.

# 3

# பயங்கரக் காதல்!



மூன்றும் ஜாமம் முடிவடையப் போகும் நேரம். 'ஜில்' லென்ற இரவின் பனிக்காற்று சிலு சிலுவென வீசிக்கொண்டிருந்தது. இன்னுங் கொஞ்ச நேரத்தில் மடியப்போகும் இருள் திரை கனமாகக் கவிந்து கொண்டிருந்தது. இந்தப் பயங்கர இருள் சூழ்நிலையில் இரண்டு மனித உருவங்கள் தலையில் முக்காடிட்டுக்கொண்டு, திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தன.

அந்த உருவங்கள் நடந்து கொண்டிருந்த அந்தப் பாதை ஒரு கூனிக் குறுகிய சந்தாயிருந்தது. ஏழைத் தொழிலாளர்களும் நடுத்தர வர்க்கத்தினர் சிலரும் கூட்டுக்கலவையிட்டு வசிக்கும் இடம் அது. தெருவின் இருபுறமுள்ள சிறிய வீடுகள் இருளடைந்து கிடந்தன. அவ்வீடுகளின் மேற்குப் புறத்தில் கலகலத்து விட்டிருந்த மொட்டைமாடி வீடொன்று மட்டும் தனித்து நின்று கொண்டிருந்தது. அந்த வீட்டின் இடப்புறமிருந்த சிறிய ஜன்னலொன்றின் வழியே மங்கலான விளக்கு வெளிச்சம் வெளியிருளை ஊடுருவிக் கொண்டிருந்தது.

வேகநடை போட்டுவந்த அவ்விரு மனித உருவங்களும் அந்த வீட்டு வாசற்படியின்மேல் ஏறி நின்று, சாத்தியிருந்த தெருக்கதவை மெதுவாக மூன்று முறை தட்டின. வீட்டினுள்ளே நிசப்தம் நிலவியது. கதவு திறக்கப்படவில்லை. மறுபடியும் மெல்ல கதவு தட்டப்பட்டது. மறுகணம் ஒரு அழகிய இளம் பெண் தன் கனவுக் கண்களைக் கசக்கிக்கொண்டே ஓடிவந்து கதவைத் திறந்துவிட்டாள். அவ்விரண்டு முரட்டு உருவங்களும் யாரென அந்தப் பெண் கவனிக்குமுன்பே, கதவு திறக்கப்பட்ட அதேவேகத்துடன், சரேலென உள்ளே பாய்ந்து, திறந்திருந்த கதவைப் படீரெனச் சாத்தித் தாழிட்டுக் கொண்டன!

"ஆ......! நீங்களா!" என ஆச்சரியத்துடனும் கலவரத்துடனும் கேட்டாள், கதவை வந்து திறந்த இளம் பெண்.

"ஆமாம்; நாங்களேதான், வாஸந்தி!" என்று கூறி, தலையிலிருந்த முக்காட்டை எடுத்துக்கொண்டே மெல்லச் சிரித்தான் மாணிக்கம். அவனுக்குப் பின்னால், குளிரால் வெடவெடத்துக் கொண்டு நின்றிருந்தான் விநாயகம்.

வியப்பாலும் லேசான பயத்தாலும் மலைத்து நின்று கொண்டிருந்த வாஸந்தி, திடீரென எதையோ நினைத்துக் கொண்டவளாய்ச் சமையல்கட்டை நோக்கி விர்ரெனப் பாய்ந்து ஓடினாள். மாணிக்கமும் அவளை விடாமல் பின்தொடர்ந்து ஓடினான்.

நெருப்பு கனிந்து கொண்டிருந்த அடுப்பு மேட்டின்மேல் ஒரு சிறு கடிதம் மடித்து வைக்கப்பட்டிருந்தது. வாஸந்தி அதை 'வெடுக்'கென எடுத்துக் கிழித்து, கனிந்து கொண்டிருந்த அடுப்பினுள் கசக்கிப்போட்டாள்!

"அது என்ன கடிதம் வாஸந்தி?" என்று துடிப்புடன் கேட்டான் மாணிக்கம்.

வாஸந்தி மாயப் புன்னகை யொன்றை தன் மலர் வதனத்தில் தவழ விட்டுக்கொண்டே, "அது ஒரு சாதாரணக் கடிதம்! உங்கள் நன்மைக்காகவும் என் நன்மைக்காகவும் எழுதப்பட்ட கடிதம். அது இப்போது தேவையில்லையென நினைத்தேன். கிழித்தெறிந்து விட்டேன்!" என்றாள் இனிமைக் குரலில்.

"அந்தக் கடிதத்திலுள்ள விஷயத்தையாவது என்னிடம் சொல்லக்கூடாதா?" என்றான் மாணிக்கம் சந்தேகமும் நம்பிக்கையற்றதுமான குரலில்.

"என் இப்படிச் சந்தேகப்பட்டுக் கேட்கிறீர்கள்? என்னை நீங்கள் நம்பவில்லையா?" என்று கொஞ்சலாகக் கேட்டு அவன் கன்னத்தை ஆசை பொங்கத் தட்டினாள் வாஸந்தி.

மாணிக்கத்தின் முகத்திலிருந்த சந்தேகச் சாயல் இன்னும் மறையவில்லை. அவளைப் பட்டும் படாததுமாகப் பார்த்துக் கொண்டே கூடத்தறையை நோக்கி நடந்து சென்று, அங்கு கிடந்த ஓர் ஒட்டை நாற்காலியை இழுத்துப்போட்டு அதில் உற்சாகமில்லாமல் உட்கார்ந்தான். அவனுடைய வலது கை சுண்டு விரலிலிருந்த ஒரு அழகிய சங்கு மோதிரத்தைத் தன் இடது கை விரல்களால் உருட்டிப் புரட்டி அதையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

முந்தானையைப் பிடித்து முறுக்கிக் கொண்டே அவன் பின்னால் வந்து நின்ற வாஸந்தி, மாணிக்கம் அவன் கையிலுள்ள சங்கு மோதிரத்தையே அசையாமல் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு

"எவளுடைய எண்ணம் இப்போது உங்களுக்கு வந்து விட்டிருக்கிறது?—அந்தச் சங்கு மோதிரத்தை அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"இந்த மோதிரத்தைப் பார்த்ததும் எனக்கு நல்லவள் ஒருத்தியின் நினைவு வந்துவிட்டது!" என்றான் மாணிக்கம் நிதானமாக.

ஆமாம்; அந்த மோதிரத்தைப் பார்த்ததும் மாணிக்கத்துக்கு அன்றொருநாள் நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது......

நாட்டின் பல பாகங்களிலும் நடக்கும் அக்கிரம அநியாயங்கள் அவ்வப்போது அதிக அளவில் 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையில் வெளிவந்துகொண்டிருந்த சமயம். இந்தப் பத்திரிகைக்கு அடுத்தடுத்து இலக்காகி வந்தவன் அசோக்லால் சேட் என்ற ஒருவனும். அவன் வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வந்து வட்டித்தொழிலை ஆரம்பித்து, சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. அவனுக்கு இப்போது வயது ஏறக்குறைய நாற்பத்தெட்டாகிவிட்டிருந்தது. ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின் பேரில் ஆயிரக்கணக்காக ரூபாய்களை வட்டிக்கு விட்டுக் கொழுத்த லாபம் சம்பாதித்து வந்தான். அவனிடம் கடன் வாங்காத பெரிய மனிதர்களே இந்த ஊரில் இல்லையெனச் சொல்லிவிடலாம். இத்தனைக்கும் அவன் திருமணம் ஆகாதவன். இவ்வளவு காலம் கட்டைப் பிரம்மசாரியாகவே இருந்து காலத்தைக் கடத்திவிட்டவன். பேருக்குத்தான் பிரம்மசாரியே தவிர, உண்மையில் பக்கா காமாந்தகாரனாய் இருந்தான் அசோக்லால். அவனுடைய இந்த வெறிச் செயலுக்கு பிரம்மசரியம் ஒரு அனுசரணையாக இருந்தது—அவ்வளவுதான்! அவனால் பல குடும்பங்கள் சிதைந்திருக்கின்றன; பல பெண்களின் வாழ்க்கை சூறையாடப்பட்டிருக்கின்றன. கிராமாந்திரங்களிலிருந்து எத்தனையோ குடும்பப் பெண்கள் இரவோடு இரவாகக் கொண்டுவரப்பட்டு அவன் மாளிகையிலே மானபங்கம் செய்யப்பட்டனர். சொத்தை அபகரிக்க எத்தனையோ பேர் அவனால் கொலைசெய்யப்பட்டனர். சதியாலோசனைகளெல்லாம் அவன் மாளிகையில் நடக்கும். எவனையும் கொலை செய்துவிடக்கூடிய ஒரு பெரிய ரௌடிகளின் கும்பலே அவன் கைவசம் இருந்தது. சிங்காரம் அவனது பிரதமக் கையாள். இத்தனை அநியாயச் செயல்களையும் அவன் தன் பணபலத்தைக் கொண்டும், அரசியல்வாதிகள் சிலரின் நட்புத்துணை கொண்டும் மறைத்து, கௌரவமாக உலவி வந்தான். இறுதியில் 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகை அவனின் அந்த அட்டகாச வாழ்க்கைக்கு ஒரு எமனாய் வந்து நின்றது! மாணிக்கத்தின் சலியாத உழைப்பால் அசோக்லால் சேட்டின் மானம் விநாடிக்கு விநாடி பத்திரிகையின் மூலம் கப்பலேறிக்கொண்டு வந்தது. இதை அவன் எத்தனை நாட்களுக்குப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? பத்திரிகாசிரியர் ராமகாந்தனுக்கும், மாணிக்கத்துக்கும் எதிர் சக்தி

யாக, தன் முழு செல்வாக்கையும் திருப்பிவிட்டான் அவன். எனினும் பத்திரிகையாளர்களின் கையே ஓங்கி வந்தது. இதற்கு ஒரு முக்கிய காரணமும் இருந்தது.

இளம் வயதிலேயே விதவையாகிவிட்ட அன்னபூரணி என்ற ஒரு பெண்ணை, தன் பண ஒலியைக் காட்டி ஏமாற்றி அவள் கற்பைச் சூறையாடிவிட்டான் அசோக்லால். அந்த அபலைப் பெண் கர்ப்பவதியாகி ஒரு பெண் குழந்தையையும் ஈன்றெடுத்தாள். அவள் இளமை அழகுடன் இருந்த காலம்வரை அவளுடன் தொடர்பு வைத்துக்கொண்டு அவளையும் அவள் மகளையும் காப்பாற்றிவந்த அசோக்லால், அன்னபூரணி அழகு வற்றி முதுமை எல்லையை அடைந்ததும் அவளை நிராதரவாக நடுத்தெருவில் விட்டுவிட்டுப் போய்விட்டான். அன்னபூரணி, தனக்கில்லாவிட்டாலும் அவனுக்குப் பிறந்த அவள் மகளுக்காவது ஏதாவதொரு வழிசெய்யும்படி அவனிடம் விடாமல் போராடி வந்தாள். இந்த நச்சரிப்பால் அவமானமும் கோபமும் அடைந்த அசோக்லால், ஒருநாள், தன் கையாளான சிங்காரம் என்பவனை ஏவிவிட்டு அன்னபூரணியைக் கொலைசெய்துவிட்டான்! அன்னபூரணி சாகும்போது அவள் மகளுக்கு வயது பதினறு. அசோக்லால் செய்த இந்தத் துணிகரக் கொலையைப்போலீஸ்வரைக்கும் எட்டவிடாமல் தன் பணபலத்தைக் கொண்டு மறைத்து மெழுகிவிட்டான். ஆனல் 'அபாய அறிவிப்'ப் பத்திரிகையாளர்கள் இதை எப்படியோ மோப்பம் பிடித்துவிட்டனர்! விநாயகத்தின் இடைவிடாத முயற்சியினல், அசோக்லால் அன்னபூரணியைக் கொல்லும்படி சிங்காரத்துக்கு எழுதிய கடிதம் ஒன்றும், அன்னபூரணி அசோக்லாலிடம் பணம் கேட்டு எழுதிய கடிதம் ஒன்றும் ஆசிரியர் ராமகாந்தனிடம் சிக்கிக்கொண்டன. இந்தக் கடிதங்களை 'அபாய அறிவிப்'பில் பிரசுரித்தால் உடனே அசோக்லால் கைதாகி மரண தண்டனைப் பெறுவான் என்பது நிச்சயம். ஆனல், ராமகாந்தன் அப்படிச் செய்யவில்லை. அந்தக் கடிதங்களை ஒரு ஆயுதமாக வைத்துக்கொண்டு, அசோக்லாலின் பணப் பெட்டியைச் சூறையாடத் திட்டம் போட்டான்—அதாவது அக் கடிதங்கள் மூலம் அசோக்லாலை பயமுறுத்திப் பணம் பறிக்க எண்ணியிருந்தான்! இதை யறிந்த மாணிக்கத்துக்கும் விநாயகத்துக்கும் தணிக்க முடியாத வயிற்றெரிச்சலாகிவிட்டது. எனினும் ராமகாந்தனை நேரிடையாகப் பகைத்துக்கொள்ள அவர்களால் முடியவில்லை. மனம் குமுறிக்கொண்டு மௌனமாக இருந்துவிட்டனர்.

இப்படி இருந்துகொண்டிருக்கையில் ஒரு நாள்—

அசோக்லால் யாரோ ஒரு இளம்பெண்ணைத் தூக்கிக்கொண்டு வந்து தன் பங்களாவில் பூட்டி வைத்திருப்பதாகவும், இன்றிரவு அவள் பெண்மையைச் சூறையாடப் போவதாகவும், ஆசிரியர் ராமகாந்தனின் துப்பறியும் இலாகாவின் மூலம் அறிந்து, அதனைத்

தானே நேரில் சென்று பார்த்து விஷயங்களைச் சேகரித்து வரக் கிளம்பினான் மாணிக்கம்.

அப்போது இரவு மணி பதினொன்று இருக்கும். அசோக்லால் சேட்டின் வீட்டுக் கொல்லைப்புறச் சுவரின்மேல் ஏறிக்குதித்து, பின் புறத் தாழ்வாரத்தை அடைந்தான் மாணிக்கம். கூடத்தில், அசோக்லாலும், அவனுடைய பெரிய இடத்து நண்பர்கள் சிலரும் குடிபோதையில் தள்ளாடியவண்ணம் உளறிக் கொட்டிக்கொண்டிருந்தனர். அவர்களின் காலடியில் மதுப் புட்டிகள் உடைந்தும், விஸ்கி தரையில் சிந்தியும் கிடந்தன. அவர்களெல்லாம், சிறுமி முதல் கிழவிவரை பல பெண்களின் அழகுகளையும், மன்மதக்கலை அறுபத்து நான்கினையும் பற்றி மோக வெறியோடு உளறிக்கொண்டிருந்தனர். இரண்டொரு தாசிப்பெண்களுக்கு பலவந்தமாகச் சாராயம் புகட்டப் பட்டு, அவர்கள் ஆடவர்களின் கையருகில் சுருண்டு கிடந்தனர். அசோக்லாலின் பிரதமக் கையாள் சிங்காரம் தன் பெரிய விழிகளை உருட்டி விழித்துக்கொண்டே ஒரு கையில் கூர்மையான பிச்சுவாக் கத்தியையும் இன்னொருகையில் சாராயப் புட்டியையும் தூக்கியவண்ணம் தள்ளாடினான். படுக்கையறைப் பக்கமாக ஒரு 'வென்ட்லேட்' ஜன்னல் இருந்தது. மிகுந்த சிரமத்துடன் அந்த ஜன்னல் மீது ஏறி உட்கார்ந்துகொண்டான் மாணிக்கம். இப்போது அந்த பங்களாவின் பலபாகங்களிலும் நடக்கும் காரியங்களை அவன் நன்கு பார்த்தறியக்கூடிய சௌகரியமேற்பட்டது. ஊதாநிற பெட்ரூம் விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. தன் கண்களை மிக்க தீட்சண்யமாக்கிக்கொண்டு மாணிக்கம் அந்தப் படுக்கை அறையை உற்றுக் கவனித்தான். அறையின் இடதுபுறத்தில் ஒரு அழகிய கட்டில் போடப்பட்டிருந்தது. அந்தக் கட்டிலின் மீது, பருவ எழில் பூத்துக் குலுங்கும் ஓர் இளம் பெண் குப்புறப் படுத்துத் தேம்பித் தேம்பிப் பொருமிக்கொண்டிருந்தாள்! அவளுடைய ஆடை யணிகள் அலங்கோலமாகச் சரிந்து கலைந்து கிடந்தன! கூந்தல் அவிழ்ந்து தொங்கி, அதிலிருந்த மல்லிகைப்பூ கீழே விழுந்து கிடந்தது.

மாணிக்கத்துக்கு விஷயம் விளங்கிவிட்டது. இந்தப் பெண் தான் இன்று அசோக்லாலுக்குப் பலியாகப் போகிறாள் என்பதை ஊகித்தறிந்துகொண்டான்.

அந்தப் பெண் விடாமல் அழுதுகொண்டிருந்தாள். அவளுடைய அவல நிலையைக் காண மாணிக்கத்தால் இயலவில்லை. மாணிக்கம், இயற்கையிலேயே இரக்க குணம் படைத்தவன். இந்த இரக்க குணத்தால், அவன் பல சமயங்களில் பல கோழைத்தனமானச் செயல்களைச் செய்துவிட்டு, பெரிய பெரிய ஆபத்துக்களில் சிக்கிக்கொண்டிருந்திருக்கிறான். எனினும் அந்தக் குணத்தை அவனால் எளிதில் போக்கிக்கொள்ள முடியவில்லை.

பஞ்சணையில் பசலைக் கொடிபோல் புரண்டு துவளும் அந்தப் பெண், பருவமடைந்து சில மாதங்கள்கூட ஆகியிராது. பருவக் கொப்பில் பூத்திருக்கும் புத்தம் புதுமலர் அவள். உலகமே தெரியாத வெகுளிப் பெண். கைகளில் இரண்டு கண்ணாடி வளையல்கள். காதுகளில் பித்தளை ஜிமிக்கி. சாதாரணமான ஒரு நூல் புடவை. மிரள மிரள விழிக்கும் கண்கள். உடலெங்கும் பருவத்தின் மினுமினுப்பு; ஒரு பூரிப்பு. மெல்லிய உடல்; சிவந்த முகம்......

அவள் ஒரு கணம் அழுகையை நிறுத்தி, சாத்திப் பூட்டப்பட்டிருந்த முன்புறக் கதவைப் பரிதாபமாகப் பார்த்தாள். அறையைச் சுற்றிலும் தொங்கும் காதலர்களின் மோக லீலைப் படங்களையெல்லாம் அவள் உற்றுப் பார்த்து மிரள மிரள விழித்தாள். அங்கிருந்த பெரிய நிலைக் கண்ணாடியில் அவளது அழகான உருவம் மங்கலாகத் தெரிந்தது. அதைப் பார்த்ததும் என்ன நினைத்துக் கொண்டாளோ, அவள் தன் முகத்தைப் பொத்திக் கொண்டு 'ஓ'வென அழ ஆரம்பித்துவிட்டாள். உலகம் தெரியாத ஒரு இளம் பெண்ணை, தனியாக ஒரு அறையில் போட்டுப் பூட்டி வைத்து, அவளை இஷ்டம்போல் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாமென்று குடிவெறியனொருவன் மோகக் கிறக்கத்தோடு வரும்போது, திக்கற்ற அந்த நிலையில் அவள் எப்படித் தவிப்பாள்? அதைப்போல் அவள் மிரள மிரள விழித்துப் பொருமிப் பொருமி அழுதாள்.

கோபத்தாலும் அனுதாபத்தாலும் உடல் நடுங்க அந்தப் பெண்ணையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் மாணிக்கம். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இப்போது அவன் எதையும் செய்வதற்கு இங்கு வரவில்லை. என்ன நடக்கிறதென்பதைப் பார்த்துக்கொண்டும், முடியுமானால், நடக்கும் நிகழ்ச்சிகளைத் தன் கையிலிருக்கும் 'பிளாஷ்லைட் கேமரா' மூலம் படம்பிடித்துக் கொண்டு போகவுமேதான் வந்திருக்கிறான். அவனுக்கு வேண்டியது அவ்வளவுதான்.

நியாயத்துக்காகப் போராட அவன் அங்கு வரவில்லை; அநியாயச் செயல்களை அறிந்து போகவேதான் வந்திருக்கிறான். எனினும் அவன் மனம் ஏனோ இப்போது அதை மறந்துவிட்டது. தன்னால் இயன்ற உதவியை அந்தப் பெண்ணுக்குச் செய்ய வேண்டுமென அவன் எண்ணினான்.

இதுவரை எந்தப் பெண்ணையும் கண்டு மயங்காத மாணிக்கம் அந்தப்பெண்ணின் ஒருவித சோகம் படர்ந்த முகத்தைக் கண்டு தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டான். இன்னும் சில நிமிஷங்கள் சென்றால்?... மலரின் மென்மை தெரியாத ஒருவனால் அவள் எவ்வளவு அவஸ்தைப்படுவாள் என்று கற்பனைசெய்து பார்த்தான். அவன் உள்ளம் பதறியது.

உலகத்தில் அநியாயங்களும் அக்கிரமங்களும் பெருகி வளர்வதற்குக் காரணம், அவற்றைக் கண்டும் காணாதவர்களாய், கேட்டும் கேளாதவர்களாய் மக்கள் இருப்பதுதான் என மாணிக்கம் கருதிக் கொண்டான். அக்கிரமம் நடக்கா முன்பே அதற்கு அணைபோட்டு விட்டால், அது நடைபெறுவது எங்ஙனம்? 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகை அக்கிரமச் செயல்களைத் துப்பறிந்து வெளியிடுவதைவிட அவை நடவாமலிருக்கப் பாடுபட்டால் எவ்வளவு நன்மை பயக்கும்!

கலிங்கப்போர் முனையில் அசோகனுக்கு ஏற்பட்ட ஞானோதயத்தைப் போல, மாணிக்கத்துக்கு இத்தகைய எண்ணங்கள் அவன் மனநிலத்தில் கொடிவீசிப் படர்ந்தன. அவனுக்கும் அவளுக்கும் ஏதோ ஒரு ஜன்மாந்திரத் தொடர்பு இருப்பதுபோலத் தோன்றியது உயிரைக் கொடுத்தாவது அந்தப் பெண்ணின் கற்பைக் காப்பாற்றுவதென்று மாணிக்கம் தீர்மானித்துக்கொண்டான்.

ஜன்னல் மேலிருந்து மெள்ளக் கீழே இறங்கினான் மாணிக்கம். கூடத்தறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தவர்கள் ஒவ்வொருவராக எழுந்து வெளியே போய்க் கொண்டிருந்தனர். இப்போது அசோக்லால் மட்டுமே அங்கு அமர்ந்திருந்தான். மதுப் புட்டியிலிருந்த கடைசித் துளி மதுவையும் ஊற்றிக் குடித்தான். அடிக்கொருதரம் அவன் பார்வை இந்தப் படுக்கையறைப் பக்கமே பாய்ந்து வந்து கொண்டிருந்தது. அவனுடைய சிவப்பேறிய விழிகளில் ஒரு கோரவெறி தாண்டவமாடியது. அந்தப் பெண்ணுக்கு ஆபத்து நேரம் நெருங்குகிறது என்பதை மாணிக்கம் நன்கு தெரிந்துகொண்டான்.

இன்னும் சில விநாடிகள் சென்றால் அசோக்லால் மேலும் நன்றாகக் குடித்துவிட்டு கதவின்பூட்டைத் திறந்துகொண்டு மோகக் கிறக்கத்தோடு அறைக்குள் நுழைவான். இவள் அடிபட்ட புழுப் போல் கொஞ்ச நேரம் அவன் கைப்பிடிக்குச் சிக்காமல் மருகித் துடிப்பாள். கடைசியில் அவன் குடிபோதையில் தள்ளாடிக் கொண்டே தன் யானைப் பசிக்கு இந்த மெல்லிய பெண்ணை இரையாக்கிக்கொள்ள நெருங்கி வருவான். இவள், அறையின் நான்கு மூலைகளிலும் ஓடிப் பதுங்க முயல்வாள். அவன் தாவி விழுந்து அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொள்வான். ஆசை வெறியோடு அவள் கன்னக் கதுப்பில் கிள்ளுவான். மறுகணம் அறையில் விளக்கு அணைந்துவிடும். இருட்டில் 'வீல்' என்று ஒரு முறை கத்துவாள். பிறகு ஒரு சப்தமும் இராது. மறுபடி அறையில் விளக்கைப் போடும்போது இந்த மெல்லிய பெண் பஞ்சணையில் மூர்ச்சித்து கிடப்பாள், அல்லது அழகுக்கூட உடலில் சக்தியற்று சுருண்டு கிடப்பாள், அல்லது செத்துக்கிடப்பாள்!......

இவ்வளவும் மாணிக்கத்தின் கற்பனையில் ஓடி மறைந்தது. அவனது லட்சிய உள்ளம் வீறுகொண்டெழுந்தது. அடிமேல் அடி

எடுத்து வைத்து படுக்கையறையின் பின்புறக் கதவருகில் வந்து நின்றான்.

"உஸ், பெண்ணே! இங்கிருந்து நீ தப்பிப்போக எண்ணினால் உடனே இந்தப் பின்புறக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்துவிடு!" என்று அழுத்தமான—ஆனால் தணிந்த—குரலில் கூறினான் மாணிக்கம்.

கட்டிலில் குப்புறப்படுத்துக் கிடந்த அந்தப் பெண் சடக்கெனத் துள்ளியெழுந்து குரல் வந்த திக்கை நோக்கினாள். இருண்டு கிடக்கும் வராந்தாவில் ஒரு வாலிப உருவம் நின்று கொண்டிருப்பதை ஜன்னல்வழியே ஊடுருவிப் பார்த்துத் தெரிந்துகொண்டாள். மறு கணம் அவளின் வெளிறிய முகம் பயத்தால் விகாரமாகக் கறுத்தது. உடல் லேசாக நடுங்க ஆரம்பித்தது.

"யார் அங்கே?" என்று மிகவும் மெல்லிய குரலில்—ஆனால் அதிகாரமான தொனியில்—கேட்டாள் அந்தப் பெண்.

"ஆபத்து நெருங்கப்போகும் சமயத்தில் நான் யாரென்று அறிந்துகொள்வது அத்தனை முக்கியமானதல்ல! நம்பிக்கையுடன் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்துவிடு. அப்போதுதான் அந்த நமனிடமிருந்து உன்னால் தப்பிக்க முடியும்!" என்று படபடத்தான் மாணிக்கம்.

அவள் சிறிது நேரம் சிந்திப்பதுபோல ஸ்தம்பித்து நின்றாள். பிறகு என்ன முடிவுக்கு வந்தாளோ! சரேலென நடந்து வந்து பின்புறக் கதவை மெல்லத் திறந்து இருள் மண்டிக் கிடந்த வராந்தாவை அடைந்தாள். அடுத்தகணம் அவளை, மாணிக்கம் அப்படியே அலாக்காகத் தூக்கிக்கொண்டு, சுவரேறிக் குதித்து வெளியே ஓட ஆரம்பித்தான்!.........

குடல் தெறித்துப் போகும் வண்ணம் ஓடிவந்து தன் அறையில் புகுந்தான் மாணிக்கம். அவன் தோள்மீது, பிரக்ஞையற்றவள் போல துவண்டு வீழ்ந்து கிடந்த அந்த மெல்லிய பெண்ணை இறக்கி ஒரு பாய்மீது படுக்க வைத்தான். கூஜாவிலிருந்து கொஞ்சம் தண்ணீரை வாரிக்கொண்டு வந்து அவள் முகத்தில் தெளித்தான்.

சிறிது நேரங்கழித்து அந்தப் பெண் மெல்லக் கண்திறந்தாள். எதிரே, வெலவெலத்து நின்றுகொண்டிருந்த மாணிக்கத்தை மிரள மிரளப் பார்த்தாள். அவன் தன் முகத்தையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவள் முகம் வெட்கத்தாலும், பயத்தாலும் கன்றிச் சிவந்தது.

"என்னை என் இங்கு தூக்கிக்கொண்டு வந்தாய்?" என்று ஈனஸ்வரத்தில் கேட்டாள் அவள்.

"இதற்குப் பதில் உனக்கே தெரிந்திருக்குமே!" என்று நிதானமாகச் சொல்லிக்கொண்டே அருகில் இருந்த நாற்காலியொன்றில் போய் அமர்ந்தான் மாணிக்கம்.

சரிந்துகிடந்த கூந்தலையும் ஆடைகளையும் சரிசெய்துகொண்டே மெல்ல எழுந்து சுவரோரம்போய் சாய்ந்து நின்று கொண்டாள். அவளின் அந்தத் தோற்றம் சுவரில் ஒரு அப்சரவின் ஓவியம் தொங்குவது போல் அழகாயிருந்தது.

மாணிக்கம் அவளருகில் எழுந்துசென்று ஒரு குங்குமச் சிமிழை நீட்டி, "உன் நெற்றியில் குங்குமம் அழிந்திருக்கிறது! இதிலிருந்து எடுத்து வைத்துக்கொள்! அழிந்திருக்கும் எதைப் பார்த்தாலும் எனக்கு என்னவோ போலிருக்கும்!" என்றான்.

அவள் வேண்டாம் என்பதுபோல் தலையை ஆட்டினாள்.

"ஏன், நீயும் ஒரு விதவையா?" என்று சிறிது கோபமாகவே மாணிக்கம் கேட்டான்.

அவளின் முகத்தில் ஏதோ ஒரு கலவரம் படர்ந்தது. அவள் அவனது களைபொருந்திய முகத்தையும் பலமான புஜங்களையும் ஏறிட்டுப் பார்த்தாள்.

"என்ன, நீயும் ஒரு விதவைதானா...?" என்று மீண்டும் கேட்டான் மாணிக்கம்.

அவள் லேசாகச் சிரித்துக்கொண்டே, "உன்னைப்போல ஒரு புருஷன் வாய்த்தால் நான் என்றும் விதவையாக மாட்டேன்!" என்றாள். வெகுளிபோல் தெரிந்த அந்தப் பெண் இவ்வளவு கருத்தோடு பேசுகிறாளே என்று மாணிக்கம் சிறிது திகைத்தான்.

அவள் அவனை வெகுநேரம் உற்றுப் பார்த்தாள். அவள் பார்வையில் ஒரு பரிதாபம் ததும்பி நின்றது. என்ன நினைத்துக் கொண்டாளோ, அவள் திடீரென்று விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள்.

"ஏன் அழுகிறாய்......?" என்று ஒன்றும் புரியாதவனாய்க் கேட்டான் மாணிக்கம்.

"ஒரு கன்னிப் பெண்ணை இப்படி அநியாயமாகத் தூக்கிக் கொண்டு வருவது உனக்கு பாவமாகப் படவில்லையா?" என்று சினமும் அழுகையும் குமுறக் கேட்டாள் அவள். வெற்றிலைச் சிவப்பைக் கண்டறியாத அவளது பச்சிளம் உதடுகள் துடித்தன.

"நான் இதுவரை செய்த பாவங்களுக்குப் பரிகாரமாகத்தான் உன்னை இங்குத் தூக்கிக்கொண்டு வந்தேன்!" என்று லேசாகச் சிரித்துக்கொண்டே கூறினான் மாணிக்கம்.

"என் தந்தையைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கலாம். இந்த விஷயம் அவருக்குத் தெரிந்தால், அடுத்தகணம் உன் உயிர் உனது உடலில் இருக்காது!" என்று பல்லைக் கடித்துக்கொண்டு கூவினாள் அவள். அப்போது அவள் முகத்தில் அசாதாரணமான ஒரு பீதியும், பரிதாபமும் உண்டாயிற்று.

"தெரிகிறதே, உன் தந்தையின் வீர தீரம்! பெற்ற மகளை, ஒருஅயோக்கியன் தூக்கிக்கொண்டுபோய்ப்பாழ்படுத்த விட்டுவிட்டவனை, தந்தை என்று கூறிக்கொள்ள நீ வெட்கப்படவில்லையா?" என்று ஏளனக் குரலில் நிதானமாகக் கேட்டான் மாணிக்கம்.

"நீ என்ன சொல்கிறாய்? யார் என் தந்தை? யார் என்னைப் பாழ்படுத்தத் தூக்கிக்கொண்டு போனது?" என்று ஒன்றும் புரியாதவளாய் மிரள மிரள விழித்தாள் அவள்.

மாணிக்கம், அவளை ஊடுருவிப் பார்த்துக்கொண்டே கிண்டலாகச் சிரித்தான்.

"உனக்கு இன்னும், சித்தப்பிரமை தெளியவில்லைபோலிருக்கிறது! ஆபத்துக் குழியில் வீழ்ந்து கிடந்த உன்னை, என் கடமையையும் மறந்து காப்பாற்றினதை, இத்தனை சீக்கிரம் மறந்துவிடுவாய் என நான் கருதவே இல்லை! அந்த அயோக்கியன் அசோக்லாலுக்குப் பலியாகிவிட இருந்த உன்னை, நான் சமயத்தில் வந்து அழைக்காமலிருந்தால், இந்நேரம் உன் கற்பின் கதி என்ன ஆகியிருக்கும் தெரியுமா?" என்று கோபங்கலந்த வெறுப்புடன் பொரிந்து தள்ளினான் மாணிக்கம்.

அந்தப் பெண் தன் அழகிய கன்னக் கதுப்புகளில் அதிர்ஷ்டக் குழிகள் விழ மெல்லச் சிரித்தாள்.

"நான் ஆபத்தில் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் நீ நினைப்பதைப்போல அசோக்லால் என் விரோதியல்ல!" என்று கூறி முறுவலித்தாள் அவள். அதைக்கேட்ட மாணிக்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

"நீ என்ன சொல்கிறாய்?" என்று சிறிது கோபத்துடன் கேட்டான் மாணிக்கம்.

"அசோக்லால் என் தந்தை என்று கூறுவதற்குள், ரொம்பவும் கோபம் வருகிறதே!" என்று சொல்லிச் சிரித்தாள் அவள்.

அவள் இப்படிக் கூறியதைக் கேட்ட மாணிக்கத்துக்குத் தூக்கி வாரிப்போட்டுவிட்டது. எண்ணற்றவினாக்குறிகள் முகத்தில் நெளிய அவளை ஏறிட்டு நோக்கினான் அவன். அப்பட்டமான தமிழ்க் குடும்பத்தில் பிறந்த தமிழ்ப் பெண் போலிருந்த அவளை, அசோக்லால் சேட்டின் மகளென எப்படித் தீர்மானிப்பது? அவள் ரொம்பவும் ஆபத்தானப் பெண்போல் அவனுக்குப்பட்டது. முன்பின் யோசி

யாமல், விலைகொடுத்து வேதனையை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறோம் என மாணிக்கம் எண்ணிக்கொண்டான்.

"பெண்ணே! எனக்கும் கொஞ்சம் மூளை இருக்கிறது. 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையைச் சேர்ந்தவர்களில் நானும் ஒருவன் என்பதை நீ அறிந்திருக்கமாட்டாய்! என்னிடம் உன் சாகஸம் எள்ளளவும்பலியாது! அசோக்லாலுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம் உண்டென்பதை உடனே சொல்லிவிடு. இல்லையென்றால்,..........."

"ஓஹோஹ்ஹோ! ஐயா, 'அபாய அறிவிப்பு' ஆசிரியர்களில் ஒருவரா? அதுதான் உன் மூளை, இத்தனைத் தௌிராய் இருக்கிறது! பத்திரிகையின் லட்சணத்துசகு உரைகல்லாக நீ ஒருவனே போதும்! ......ம்......சொல்கிறேன் கேள். நான் அசோக்லால் சேட்டின் மகள்தான்! என் மானத்தைப் பாழ்படுத்த அவர் என்னைக் கொண்டுவரவில்லை. என் உயிரைப் போக்கவே, இன்று திட்டமிட்டு, அவ்வறையில் போட்டுப் பூட்டி வைத்திருந்தார்!......"

"நீ என்ன சொல்கிறாய்?"

"விஷயத்தைக் கூறி முடிக்கும்வரை கொஞ்சம் பொறுமையாய் இருக்கவேண்டும்! சின்ன வயசிலேயே கணவனை இழந்துவிட்ட என் தாய்க்கு ஆசை வார்த்தைக்காட்டி, அவள் வயிற்றில் நான் பிறக்கும்வரை அவளுடைய இளமையைப் பருகிவிட்டு, இறுதியில் என் தாய் முதுமைக் கோலமடைந்ததும் எங்களிருவரையும் அநாதரவாகத் தவிக்கச்செய்து போய்விட்டார் அசோக்லால். இந் அநியாயத்தைத் தாளமுடியாத என் தாய், எனது எதிர்கால வாழ்க்கைக்காக அசோக்லாவிடம் கொஞ்சம் பணம் கேட்டாள். அது அவருக்குப் பெருத்த அவமானமாகவும் தொந்தரவாகவும் போய்விட்டது. ஒருநாளிரவு அவர் தன் கையாள் சிங்காரத்தை ஏவிவிட்டு என் தாயைப் படுகொலை செய்துவிட்டார்!......" அந்தப் பெண் இதற்குமேல் பேசமுடியாமல் விம்மி விம்மி அழுதாள்.

மரம்போல் சமைந்து நின்றுகொண்டிருந்த மாணிக்கம் அவளை உற்றுப் பார்த்தான்.

"என் திகைக்கிறாய்? உண்மையாகத்தான் சொல்கிறேன். காதலிப்பதாகச் சொல்லி ஒரு குழந்தையையும் கொடுத்த அசோக்லாலே என் தாயைக்கொன்று போட்டுவிட்டார். யாருடைய உதவியுமின்றி ஒரு ஏழைப் பெண்ணால் எப்படி இந்த உலகத்தில் வாழமுடியும்? நான் வெறும்தண்ணீரைக் குடித்துவிட்டுப் பசியோடு இரண்டு நாட்கள்கூடப் பட்டினி கிடந்திருக்கிறேன். என்னால் இந்த வேதனையை சகிக்க முடியவில்லை. என் விதவைத் தாயைப் பருவ வயசில் மயக்கி அவளை ஆசைநாயகியாக்கிக்கொண்டார். அவருக்காக மானத்தை விட்டு வாழ்ந்தவளை அநியாயமாகப் படுகொலை

செய்துவிட்டார். தனக்குப் பிறந்த மகளுக்காவது வாழ வழிசெய்து தர வேண்டாமா? அந்தக் கோபம் எனக்கு! அந்தக் காலததில் என் தாய்க்கும் அசோக்லாலுக்கும் நடந்த சில காதல் கடிதங்களும், நான் பிறந்ததும் எனக்கு அவர் வாங்கிக்கொடுத்த சில பொருட்களும் என் கைக்குக் கிடைத்தன. அவற்றை ஆதாரமாகக் கொண்டு, வருஷத்திற்கு ஐயாயிரம் ரூபாய் ஜீவனாம்சமாகத் தரவேண்டுமென, சேட்டுக்கு ஒரு வக்கீல் நோட்டீஸ் விட்டேன். என்சிநேகிதிகள் தான் அவ்வாறு தூண்டி விட்டனர். அப்படிச் செய்த ஐந்தாம் நாளாகிய இன்று காலை, ஐந்தாறு குண்டர்கள் வந்து என்னைப் பலாத்காரமாகத் தூக்கிக் கொண்டுபோய் சேட்டிடம் ஒப்படைத்தார்கள். அந்தக்குண்டர்களின் தலைவனாக வந்த சிங்காரந்தான் என்னை ரொம்பவும் துன்புறுத்திவிட்டான்! நான் அசோக்லால் மகள் எனக் கூறுவது அவருக்கு ரொம்பவும் அவமானமாக இருக்கிறதாம். அதனால் தான் என்னை அழைத்துவந்து கொல்லப் போவதாகக் கொஞ்சமும் இரக்கமின்றிக்கூறினார் சேட்! என் தாயின் கொலைபற்றிய ரகசியம் எனக்குத் தெரியுமாதலால் என்னைக் கொன்றுவிடும்படி சிங்காரந்தான் அவ்வாறு யோசனை சொல்லியிருக்கிறான். அந்தக் கொலைகாரனுக்கு என் அழகின்மீது என்னவோ ஒரு ஆசை! பயங்கரமான விழிகளால், என்னைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தான்......அவனை மணந்து கொண்டால் நான் உயிரோடு வாழலாம். இல்லையெனில் என்னைப் படுகொலை செய்துவிடுவதாக சிங்காரம் சொல்லி இரண்டிலொன்று பதில் கூறும்படி கேட்டான்......"

"அதற்கு நீ என்ன பதில் சொன்னாய்?"

"பருவ வயசுப்பெண் என்னபதில் சொல்லியிருப்பாள் என்று உனக்குத் தெரியாதா? அம்மைத் தழும்புள்ள அந்தக் கிராதகனை எந்தப் பெண்ணும் கண்ணால் காணவே கூசுவாளே! அவனோடு ஒரு இரவாவது உயிரோடு வாழ்வதைவிட, உயிர் இழந்து சாவதே மேல் என்று கருதமாட்டாளா?......நீ மட்டும் இன்னும் கொஞ்ச நேரம் தாமதித்து வந்திருந்தால், இந்நேரம் என் கதி என்னாகியிருக்குமோ தெரியாது! தவறான ஊகத்துடன் வந்த நீ தற்செயலாக என்னைக் காப்பாற்றிவிட்டாய்! ஆனால் இப்போது உன்பேச்சையும் குணத்தையும் பார்த்தால், அந்த அசோக்லால் சேட்டையும் சிங்காரத்தையும்விட, நீ பயங்கரமானவன் என்றே என்னால் கருத வேண்டியதாயிருக்கிறது!"

சுவரோரமாக நின்றிருந்தவள், அப்படியே தரையில்உட்கார்ந்து கொண்டு விக்கி விக்கி அழுதாள். மாணிக்கத்தின்முகம் இப்போது சொல்லொணாத் துயரத்தால் வெளுத்துப்போய் விட்டிருந்தது. ஆழ்ந்த அனுதாபத்துடனும், அன்புவழியும் தன்மையுடனும் அவளை பார்த்தான் அவன்.

"பெண்ணே! என்னை நீ தவறாக நினைக்கவேண்டாம். உன்னைப் போலவேதான் நான் இந்த உலகத்தில் வாழ முடியாதவனாக இருக்கிறேன். உன்னைப்போலவேதான் நான் இந்த உலகத்தில் யாருடைய துணையுமின்றி தனியனாக இருக்கிறேன். ஆனால், நீ பெண்ணாயிருக்கிறாய்; நான் ஆணாயிருக்கிறேன். இவ்வளவுதான் நமக்குள் இருக்கும் வித்தியாசம். வயிற்றுப் பிழைப்புக்காக ஒரு அயோக்கியனின் கூட்டுறவில் இருந்து, மனச்சாட்சியை விற்று வருகிறேன். ஆயினும், பல அயோக்கியர்களை, அந்த ஒரு அயோக்கியனின் துணையால், திருத்திவைக்க முடியும் என்ற நம்பிக்கையின் பேரில்தான் அந்த 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையில் தொடர்பு கொண்டிருக்கிறேன். உண்மையிலேயே நல்ல எண்ணத்துடன் தான் உனக்கு இந்த உதவி செய்தேன். இந்த விஷயம் ஆசிரியர் ராமகாந்தனுக்குத் தெரிந்தால் என் உயிரையே போக்கிவிடுவான்! அவனுக்கு வேண்டியது பணம்தானே யொழிய நீதியல்ல. அது கிடக்கட்டும். அசோக்லாலோ என் ஜன்ம வைரி! பெற்ற மகளுக்கும் அவன் பகையாளியாகி விட்டான்! நாமிருவரும் ஒரே முனையில் சேர்ந்து நிற்கிறோம்! இப்போது நீ என்ன சொல்கிறாயோ, அதன்படி நடக்க நான் தயாராக இருக்கிறேன்!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறிமுடித்தான் மாணிக்கம்.

அவள் அவனை வியப்புடன் பார்த்தாள். அந்தப் பார்வையில் தவிர்க்க முடியாத அன்பும் பரிவும் வழிந்து சொரிந்தன.

"பெண்ணே! உன் தாயின் படுகொலைக்கு நானும் பழிவாங்குவேன்! அந்த அசோக்லால், உன் தாயைப்போல எத்தனையோ விதவைகளைப் படுகொலை செய்திருக்கிறான். சில விதவைகளைச் சொத்துக்காகக் கொன்றிருக்கிறான்! சில விதவைகளைத் தன் காமப் பசிக்காகக் கொன்றிருக்கிறான்!" என்று சொல்லிவந்த மாணிக்கம் சட்டென்று ஏதோ சந்தேகம் கொண்டவனாய் அவளை நோக்கி, "உன் தாயின் பெயரென்ன?" என்று பரபரப்போடு கேட்டான்.

"அவள் பெயர் அன்னபூரணி!" என்று பொருமினாள் அவள்.

"ஹா! அன்ன பூரணியா?" என்று திகைப்பால் சிறிது உரக்கவே கூவிவிட்ட மாணிக்கம், "உன் பெயர் வாஸந்தியா...?" என்று ஆவலுடன் கேட்டான்.

"ஆமாம்! உங்களுக்கு என் அம்மாவைத் தெரியுமா?" என்று வாஸந்தி திகைப்புடன் கேட்டாள்

"ஆமாம். அன்னபூரணியம்மாள் என் அத்தை! பருவ வயதில் காணாமல்போன என் அத்தை அவள்! அவள் விதவையான சமயம் பார்த்ததுதான். பிறகு அவளை நான் பார்க்கவில்லை; ராணுவத்தில் சேர்ந்து வெளி நாட்டிற்குப் போய்விட்டேன்!"

“அப்படியானால் நீங்கள்...?” என்று கேட்ட வாஸந்தி, “என் அத்தானு?” என்று கூவிக்கொண்டே அவன் கால்களில் விழுந்தாள். அவளை அப்படியே வாரியெடுத்து அவளது கூந்தலை மிருதுவாகத் தடவிக் கொடுத்தவாறே கண்ணீர் வடித்தான் மாணிக்கம்.

“அத்தான்...அத்தான்...!” என்று வாஸந்தி அவன் மார்பில் துவண்டுகொண்டே, “அத்தான்! என்மீது அன்பு செலுத்த இந்த உலகில் யாருமே இல்லையென்று நினைத்திருந்தேன்...எனக்கு உறவினர் யாருமே கிடையாதா என்று உருகிக்கொண்டிருந்தேன்... நீங்கள் எனக்குக் கிடைத்துவிட்டீர்கள்...அம்மா உயிரோடிருந்த போது உங்களைப்பற்றி ஓயாமல் சொல்லுவாள்...அப்போதெல்லாம் உங்களையே கற்பனைசெய்து ஏங்கிக்கொண்டிருந்தேன். அசோக்லாலால், நாங்கள் கஷ்டப்பட்டபோது, நீங்கள் எப்போது யுத்தத்திலிருந்து திரும்பி வருவீர்கள் என்று அம்மா கிராமத்தில் காத்திருந்தாள். அதற்குள் அவள் உயிர் முடிந்துவிட்டது...ஐயோ அத்தான்!” என்று அழுது அரற்றினாள்.

“அழாதே வாஸந்தி!...இனி உனக்கு என்ன கவலை?”

“அத்தான்...நான் உங்கள் அத்தையின் மகளென்றாலும் உங்கள் அத்தையின் கணவருக்குப் பிறந்தவளல்ல. அவள் விதவையான பிறகு அவளுடைய ஆசை நாயகருக்குப் பிறந்தவள்! அந்த அசோக்லாலுக்குப் பிறந்தவள்! என்னை உங்கள் அத்தை மகளாக, உங்கள் சொந்தக்காரியாகக் கருதுவீர்களா..அத்தான்...?” என்று அவனைக் கட்டிப்பிடித்துக் கெஞ்சிக் கதறினாள் வாஸந்தி.

மாணிக்கம் அவளைத் தூக்கி நிறுத்தி, “வாஸந்தி! நீ என் சொந்தக்காரி! இந்த ஜன்மத்தில்மட்டுமல்ல; எந்த ஜன்மத்திலும்!” என்று அவளது கைகளோடு தன் கைகளை பரிவுடன் கோர்த்துக் கொண்டான்.

“அத்தான்!...என்னை அந்த அசோக்லால் அறிந்துகொள்ளாத ஒரு இடத்தில் கொண்டுபோய் வைத்துப் பாதுகாக்க உங்களால் முடியுமா?” என்றாள் வாஸந்தி பரிதாபமான குரலில்.

“அதை நான் செய்ய இனிக் கொஞ்சமும் பின்வாங்கமாட்டேன்! என் எதிர்கால வாழ்க்கையே இனிமேல் உன் வாழ்க்கையைப் பொறுத்துத்தான் இருக்கிறது! உனக்காக நான் எந்த மரண ஆபத்துக்கும் துணிவேன்! வாஸந்தி, இங்கேபார்! அசோக்லாலின் ஆட்களோ, சிங்காரத்தின் போதை விழிகளோ எட்டாத அமானுஷ்யமான ஒரு இடத்தில் கொண்டுபோய் உன்னை மறைத்து வைப்பேன்! என் லட்சியம் முடிந்ததும், பகைவரை வென்றதும், நீயும் நானும் சேர்ந்து வாழலாம் — நான் உயிரோடிருந்தால்!” என்று கம்மிய குரலில் சொன்னான் மாணிக்கம். வாஸந்தி ஆசைபொங்க அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். மாணிக்கம்

தனது வலது கரத்தை உயர்த்தி, அவளின் மெல்லிய கையை வளைத்துப் பிடித்து தன் மார்போடு சேர்த்து வைத்துக்கொண்டான். மறுகணம் இரண்டு தூய இதயங்கள் சொர்க்கத்தின்வாசலைத் திறந்து கொண்டிருந்தன!—மறுபடி இருவருக்கும் சுயநினைவு வரும்போது வாஸந்தியின் சங்கு மோதிரம் ஒன்று மாணிக்கத்தின் சுண்டுவிரலில் மாட்டப்பட்டிருந்தது!

மறுநாள்—

மாணிக்கம் வாஸந்தியைத் தன் அத்தியந்த நண்பனான விநாயகத்தின் கிழட்டு அத்தை யொருத்தியின் வீட்டில் கொண்டு போய் விட்டு, அவளைக் கண்ணுங் கருத்துமாக யாரும் அறியாதபடிக் காத்து வர வேண்டுமெனக் கட்டளையிட்டுவிட்டு, அன்றாடச் செலவுக்குப் போதிய பணமும் கொடுத்துவிட்டு வந்தான்.

விநாயகத்தின் கிழட்டு அத்தை ரங்கூனிலிருந்துப் புதிதாக இந்த ஊருக்கு வந்தவளாதலால், அவள் தன் மகளோடு மொட்டை மாடி வீட்டில் குடியிருப்பதாகச் சொன்னதை அந்தத் தெருவிலுள்ளோர் எவரும் சந்தேகிக்கவில்லை. பருவமடைந்த பெண்ணைப் பந்தோபஸ்து செய்வார்களாகையால் வாஸந்தியும் வீட்டைவிட்டு வெளியே தலைகாட்டுவதில்லை.

மாணிக்கம் வாஸந்தியை எங்கே மறைத்து வைத்திருக்கிறான் என்பது தெரியாவிட்டாலும் அவன்தான் அவளை கிளப்பிக்கொண்டு போய் இருக்கிறான் என்ற விஷயம் இரண்டொரு நாட்களுக்குள். அசோக்லாலுக்கும், அவன் கையாட்களுக்கும் எப்படியோ தெரிந்து விட்டது. அதுமட்டுமல்ல; பத்திரிகாசிரியர் ராமகாந்தனுக்கும், அவன் கையாளான ராகவனுக்குங்கூட இந்தவிவரம் எட்டிவிட்டது. தன் ஜன்மவைரியான அசோக்லாலின் மகளை மாணிக்கம் அழைத்து வந்து மறைத்து வைத்திருப்பது ராமகாந்தனுக்குப் பெருத்த பயத்தையும், சினத்தையும் உண்டுபண்ணி விட்டது. மாணிக்கத்தை அவசரமாக அழைத்து, வாஸந்தியை அசோக்லாலிடம் கொண்டு போய் விட்டுவிடும்படி, பயப்படுத்தியும் நயப்படுத்தியும் கூறிப் பார்த்தான் ஆசிரியர் ராமகாந்தன். மாணிக்கம் இது விஷயத்தில் ஒரே பிடிவாதமாக இருந்து, தன் சொந்தவிஷயத்தில் தலையிடவேண்டாமெனக் கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். இதனால், ராமகாந்தனுக்கும், மாணிக்கத்துக்கும் பலத்த மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டது. எனினும் தொழில் நிமித்தமாக அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. ராகவனும், டைப்பிஸ்ட் வில்லியும் சமயம் கிடைக்கும் போதெல்லாம், மாணிக்கத்தின் இந்தச் செயலை, ராமகாந்தனிடம் அவ்வப்போது மிகைப்படுத்திக்கூறி, இதனால் பலவகையிலும் வரக்கூடிய வருவாய் குறைந்து, ஆபத்துக்கள் அதிகம் சூழ ஏதுவாகியிருக்கிறது என்றெல்லாம் தூபம் போட்டனர்......

நீண்ட நேரமாகச் சிந்தனைக் குழியின் ஆழத்திலே விழுந்து கிடந்த மாணிக்கம் மெல்லத் தலை நிமிர்ந்து தன் அருகில் நின்று கொண்டிருந்த வாஸந்தியைப் பார்த்தான். அவள் அன்று போலவே இன்றும் சுத்த வெகுளிப் பெண்ணாக அவனுக்குக் காட்சியளித்தாள்.


"என்ன! ஒரேயடியாக என்னைக்கூட மறந்துவிட்டு யோசனையில் மூழ்கிவிட்டிருக்கிறீர்கள்?" என்றாள் வாஸந்தி வெகுளிக் குரலில், மாணிக்கத்தின் கழுத்தை ஆசையாகக் கட்டிக்கொண்டே.

"ஆமாம்; அந்த இரகசியக் கடிதப் பைலைத் தேடிக் கண்டுபிடிக்கும்வரை என் சிந்தனைக்கு ஓய்வென்பதே இராது வாஸந்தி! என் அத்தையும் உன் அன்னையுமான அன்னபூரணியம்மாளைக் கொலை செய்த அசோக்லாவின் இரகசியக் கடிதங்கள், மாண்டுபோன ஆசிரியர் ராமகாந்தனிடம் சிக்கிக்கொண்டிருந்தன. அவைகளை இப்போது எப்படியாவது கண்டுபிடித்துப் போலீஸாரிடம் ஒப்படைத்து அசோக்லாலைத் தூக்குமேடையில் நிறுத்தினால்தான் என் மனம் சாந்தியடையும்!" என்று வன்மக் குரலில் அழுத்தமாகச் சொன்னான் மாணிக்கம்.

வாஸந்தியின் முகத்தில் ஒரு துன்பத்தின் சாயைப் படர்ந்தது. "அவர் என் தந்தை!" என்று அவள் உதடுகள் அவளையறியாமல் முணுமுணுத்தன. ஆனால் அந்த வார்த்தைகள் மாணிக்கத்தின் காதில் விழவில்லை. அவனருகில் நின்ற விநாயகம் அவனை நோக்கி, "அப்படியானால் அந்த இரகசியக் கடிதங்களைக் கைப்பற்றவே நீங்கள் ஆசிரியர் ராமகாந்தனைக் கொலைசெய்தீர்கள்?—அப்படித்தான் ஆசிரியரின் மனைவி நளினி சொல்லிக்கொண்டிருக்கிறாள்!" என்றான்.

மாணிக்கம் இதற்குப் பதில் ஏதும் சொல்லவில்லை. அவன் பார்வை எங்கோ சூன்யவெளியில் போய்ச் சொருகிக்கொண்டது. விநாயகம் சொன்னதைக் கேட்ட வாஸந்தி பதறித் துடித்தாள்; "நீங்களா ஆசிரியரைக் கொன்றீர்கள்? ஐயோ! நிஜமாகவா?" என்று அலறினாள்.

சிறிது நேரங்கழித்து வாஸந்தியின் பக்கம் திரும்பி, ஆசிரியர் ராமகாந்தன் கொல்லப்பட்ட விவரங்களைச் சுருக்கமாகக் கூற ஆரம்பித்தான் மாணிக்கம்.



## 4
# இரகசியக் கடிதம்

கொலைக்கு முன் நடந்த 'அந்தச் சம்பவங்கள்—

அன்று மாலை நான்கு மணியிருக்கும். 'அபாய அறிவிப்பு' பத்திரிகாலயத்தில் ஆசிரியர் ராமகாந்தனும் உதவி ஆசிரியர்களான ராகவனும் மாணிக்கமும் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அந்த அறைக்குப் பக்கத்து அறையில்—வாசலுக்கு நேரே—லில்லி எனும் ஆங்கிலோ இந்தியப் பெண்ணொருத்தி, உயரமான முக்காலியில் அமர்ந்து 'டைப்' அடித்துக்கொண்டிருந்தாள். அவள் முகத்திலிருந்து பௌடர் வாசனையும், அவள் கைக்குட்டையிலிருந்து செண்டுவாசனையும் அந்த அறை முழுதும் கமகம வென்று வீசியது.

அவள் அந்தக் காரியாலயத்தில் பெயருக்குத்தான் லேடி டைப்பிஸ்டே ஒழிய, மற்றபடி ராமகாந்தன், ராகவன், மாணிக்கம், விநாயகம் ஆகியோர் செய்யும் வேலையையே அவளும் செய்துவந்தாள். அதாவது ரொம்பவும் சிக்கலான சில இரகசியங்களை அறிந்து சேகரிக்க இவளையே பெரிதும் பயன்படுத்தினான் ராமகாந்தன். அநியாய அக்கிரமங்களில் ஈடுபடுவோரை அண்டி, அவர்களைத் தன் காதல் வலையில் விழுத்தாட்டச் செய்து அவர்களிடம் சரஸ சல்லாபம் செய்துகொண்டே ரொம்பவும் சாதுர்யமாக அவர்களின் இரகசிய விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு வந்து ஆசிரியர் ராமகாந்தனிடம் சமர்ப்பித்துவிடுவாள்! மாணிக்கம், விநாயகம் ஆகியோரால் ஒரு விஷயத்தைத் துப்பறிய முடியவில்லையென்றால், ராமகாந்தன், தன் இறுதி முயற்சியாக லில்லியைத்தான் ஏவி விடுவான். அவளும் அந்த விஷயத்தை எப்படியும் முடித்துக்கொண்டு வந்துவிடுவாள்! ஆணைவிடப் பெண்ணுக்கே இந்த உலகம் அதிகமாக அடிமைப்பட்டுக்கிடக்கிறது என்பதை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நிரூபித்துக் காட்டினாள் லில்லி. இதனாலெல்லாம்

அவளுக்கு 'அபாய அறிவிப்பு'க் காரியாலயத்தில் பரிபூரண கௌரவம் அளிக்கப்பட்டிருந்தது. ஆசிரியர் ராமகாந்தனின் அத்தியந்த தோழிபோல் இருந்தாள் வில்லி—

டைப் அடித்துக்கொண்டிருந்த வில்லி, அவளுக்கு நேரே உட்கார்ந்துகொண்டிருந்த ராகவனின் இளமை பொங்கும் வாலிப முகத்தை ஆசையோடு அடிக்கொருதரம் பார்ப்பதும் பின்னர் தலை குனிந்துகொள்வதுமாக இருந்தாள். ராகவனைத் தன் கடைக்கண்களால் வில்லி பார்க்கும்போதெல்லாம் அவளது லிப்ஸ்டிக் சாயம் பூசிச் சிவந்திருந்த உதடுகளில் அவளையறியாமல் ஒரு புன்னகை பொங்கித் தவழ்ந்தது. அந்த ஆங்கிலோ இந்திய யுவதியைப்போலவே 'டிப்டாப்பாக' உடைதரித்துக்கொண்டிருந்தான் உதவி ஆசிரியன் ராகவன். எந்தப் பெண்ணுக்கும் அவனை ஒரு நிமிஷம் உற்றுப் பார்க்கத் தோன்றும். அவ்வளவு அழகாயிருந்தான் ராகவன். எப்போதும் அவன் சிரித்த முகமாய் எதற்கும் கவலைப்படாத உல்லாச புருஷனாகவே இருப்பான். ஆசிரியர் ராமகாந்தன், கையையும் காலையும் அகலமாகப் பரப்பிக்கொண்டு அழுத்தலாக உட்கார்ந்திருந்தான். மாணிக்கம் ஆழ்ந்த சிந்தனையுடன சிறிது அடக்கமாக அமர்ந்திருந்தான். வாசனை எண்ணெய் போட்டு மழுங்க மழுங்கச் சீவிய தலையுடன் அதி நவநாகரிக வாலிபனாய் உட்கார்ந்திருந்தான் ராகவன். அவன் முகத்தில் அன்று அலாதியான ஒரு குதூகலம் தவழ்ந்துகொண்டிருந்தது. குறுகுறுப்பான அவனுடைய கண்கள் பக்கத்தறையில் உட்கார்ந்து 'டைப்' அடித்துக்கொண்டிருந்த வில்லியை அவ்வப்போது அர்த்தபுஷ்டியுடன் கவனித்துக்கொண்டிருந்தன. அவனும் லேடி டைப்பிஸ்டு வில்லியும் ஒருவரை ஒருவர் ஜாடைமாடையாகப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருந்தனர்.

கடிதங்களை உடைக்கும் அழகிய சிறு கத்தியால், தன் நகங்களிலுள்ள அழுக்கைச் சுரண்டிக்கொண்டிருந்தான் ஆசிரியர் ராமகாந்தன். அவனுடைய கோட்டும் ஷர்ட்டும் பித்தானிடாமல் திறந்துகொண்டிருந்தன. அதனால் அவனுடைய பரந்த மார்பில் அடர்த்தியாக வளர்ந்திருந்த ரோமக்குவியல்கள், பார்ப்போரின் கவனத்தை வெட்டியிழுப்பதாயிருந்தன. மேஜைமீதிருந்த 'ஆஷ்ட்ரே'யின் விளிம்பில் சிகரெட்டொன்று புகைந்துகொண்டிருந்தது. அதையே உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தான் ஆசிரியர் ராமகாந்தன். இடையிடையே அவன் தன் இரு கரங்களையும் அழுத்தமாகத் தேய்த்துச் சூடேற்றிக்கொண்டிருந்தான். கரடுகட்டிய அவன் முகம் வியர்வையால் நனைந்து கன்றிச் சிவந்திருந்தது. கண்களின் வெள்ளை விழியில் இரத்த நரம்புகள் படர்ந்திருந்தன.

திடீரென எதையோ நினைத்துக்கொண்டவனாய் ராமகாந்தன் சிறிதே நிமிர்ந்து உட்கார்ந்து, முதலில் ராகவனைப் பார்த்து, பிறகு

மாணிக்கம் பக்கம் திரும்பி, "அவன் எங்கே போய்த்தொலைந்தான்?" என்றான் பொறுமை இழந்த குரலில்.

மாணிக்கமும் ராகவனும் இதற்கொன்றும் பதில் கூறவில்லை. பேசாமலிருந்தனர். இந்தச் சமயத்தில் பரபரப்புடன் உள்ளே வந்து நுழைந்தான் விநாயகம். இவனுடைய வரவுக்காகத்தான் அவர்கள் மூவரும் இவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருந்தனர்.

விநாயகம், வந்ததும் வராததுமாகத் தன் கோட்டுப் பாக்கட்டி லிருந்து ஒரு பெரிய கடிதக் கட்டை எடுத்து அலட்சியமாக மேஜை மீது வீசியெறிந்துவிட்டு ஒரு நாற்காலியை, இழுத்துப் போட்டுக் கொண்டு அதில் 'தொப்'பென அமர்ந்தான்.

இதுவரை விரக்தியால் கறுத்துவிட்டிருந்த ஆசிரியர் ராமகாந்த னின் முகம் அந்தக் கடிதக் கத்தையைக் கண்டதும் மலர்ச்சிபெற்று வெளுத்தது.

"இதிலிருக்கும் அசோக்லால் சேட்டின் ரகசியச் சதித் திட் டம் நிறைவேறினால், அதனால் ஐந்துபேருடைய உயிர் நமனுலகுக் குச் செல்லும்! பாவம், ஒரு பெண்ணின் உயிர்கூட இதில் சேர்ந் திருக்கிறது! பணக்கொழுப்பு அவனை இப்படிச் செய்யத் தூண்டி யிருக்கிறது" என்று ஆக்ரோஷமாகக் கூவினான் விநாயகம்.

"தம்பி விநாயகம்! ஏழைகளுக்காக நீலிக்கண்ணீர் வடிக்க நாம் இந்தத் தொழிலில் ஈடுபடவில்லை!" என்று ஆசிரியர் ராமகாந்தன் அலட்சியமாகச் சொல்லிவிட்டு, "யார் யாரைக் கொலைசெய்யத் திட்டமிட்டிருக்கிறான் தெரியுமா...?" என்றான்.

"ஆசிரியரான உங்கள் ஒருவரைத் தவிர, மற்ற எங்கள் எல் லோரையும் கொன்றுவிட அசோக்லால் தீர்மானித்திருக்கிறான்!" என்றான் விநாயகம் தடித்த குரலில்.

"என்னைமட்டும் ஏன் கொல்லத் துணியவில்லை தெரியுமா? நான் கொலைசெய்யப்பட்டால், அசோக்லால் அன்னபூரணியைக் கொலைசெய்த ஆதாரக் கடிதம் போலீசுக்கு உடனே சேரும்படி ஏற்பாடு செய்திருப்பேன் என்ற பயம்தான் காரணம்! ஆகையால் நான் உயிரோடிருக்கும்வரை அவன் உங்களைக் கொல்லமாட்டான்! அந்தக் கடிதக் கட்டுகளிலுள்ள அசோக்லால் சேட்டின் இரகசியச் சதித் திட்டத்தை நான் நம் பத்திரிகையில் பிரசுரிக்கப்போவதில்லை. இந்த தஸ்தாவேஜை வைத்துக்கொண்டு, இவற்றைப் பிரசுரித்து விடுவதாகவோ அல்லது போலீஸாரிடம் ஒப்படைத்து விடுவ தாகவோ அந்த அசோக்லாலை பயமுறுத்தி இன்னும் எவ்வளவு பணம் பறிக்கலாம் என்பதுதான் இப்போதைய நமது பிரச்னை! இதற்கென்ன வழி கூறுகிறாய்?...மிஸ்டர் மாணிக்கம்! நீங்களும் இதைக் குறித்துச் சிறிது சிந்தித்து ஒரு யோசனையைக் கூறுங்கள்!" என்றான் ஆசிரியர் ராமகாந்தன் நிதானமாக.

விநாயகத்தின் முகம் இதைக் கேட்டதும் வெறுப்பாலும் கோபத்தாலும் கறுத்தது.

"மிஸ்டர் ராமகாந்தன்! நீங்கள் நினைப்பது ரொம்பவும் தவறானது. பெரிய மனிதர்கள்போல் வேஷம்போடும் அயோக்கியர்களின் இரகசியங்களைப் பத்திரிகையில் பிரசுரித்து அம்பலப்படுத்துவதுதான் நம் லட்சியம் என்று கொண்டோம். உலுத்தர்களின் அக்கிரமங்களை ஊர் அறியச் செய்ய வேண்டுமென்பதற்காகவே அல்லும் பகலும் பாடுபட்டோம். மக்களின் நன்மைக்காகத்தான் நாம் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறோமே தவிர, இதைக்கொண்டு நம்மில் ஒருசிலர் குபேரர்களாவதற்கல்ல! சட்டத்தின் கண்ணிலும் போலீஸின் முகத்திலும் மண்ணை வாரிப் போட்டுவிட்டு, நடத்திவிட திட்டமிட்டிருக்கும் இந்தச் சதியை, நாம் பொதுமக்களுக்கு அம்பலப் படுத்தியே ஆகவேண்டும், நடக்கவிருக்கும் சதியில் நாம் கொலையாகாமல் தப்பித்துக்கொள்வதுமட்டும் போதாது! இன்னொரு பெண்ணின் உயிரையும் காப்பாற்ற வேண்டும்! இதற்காக நான் எடுத்துக்கொண்ட சிரமங்களுக்கும் அப்போதுதான் அர்த்தமிருக்கும்! ஆகையால் இந்தக் கடிதங்களிலுள்ள சதித் திட்டத்தைக் காரசாரமான நடையில் நாளையே நம் 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையில் பிரசுரித்து அம்பலமாக்க வேண்டும்!"

விநாயகத்தின் இந்தப் பேச்சைக் கேட்டு வெறுப்புடன் பலமாகத் தலையசைத்தான் ஆசிரியர் ராமகாந்தன்.

"இந்தச் சதியைப் பத்திரிகையில் பிரசுரித்துவிட்டால், அதனால் நமக்கு என்ன லாபம்? ஒரு ஆயிரம் பிரதிகள் அதிகமாக விற்கும்; அவ்வளவுதானே? இது போதுமா நம் உழைப்புக்கு? இந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டு அந்த அசோக்லாலைப் பயமுறுத்திக் குறைந்தபட்சம் முப்பதாயிரம் ரூபாயாவது பிடுங்கியாகவேண்டும்!" என்றான் ராமகாந்தன்.

இதைக்கேட்ட விநாயகத்தின் புஜங்கள் சினத்தால் விம்மின. மாணிக்கத்தின் கண்கள் நெருப்புபோல் சிவந்தன. அவர்களிருவரும் ஆசிரியர் ராமகாந்தனை எரித்துவிடுவதுபோலப் பார்த்தனர். ராமகாந்தனும் அவர்களை முள்ளம்பன்றியைப்போல் முறைத்துப் பார்த்தான். பின்னர், எதிலுமே கலந்துகொள்ளாமல் மாப்பிள்ளை மாதிரி உட்கார்ந்து கொண்டிருந்த ராகவனின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினான் அவன் சட்டெனத் தன் கண்ணிமைகளை அசைத்து ராமகாந்தனுக்கு ஏதோ சமிக்ஞை செய்தான்! இந்தச் சமிக்ஞையை ராமகாந்தன் உடனே புரிந்துகொண்டவனைப் போலத் தன் முகபாவத்தைத் தனுக்காக மாற்றிக்கொண்டான். உதவி ஆசிரியர் ராகவன் டைப்பிஸ்ட் லில்லியிருந்த அறையை நோக்கி மெல்லக் கனைத்தான்.

பக்கத்தறையில் 'டைப்' அடித்துக்கொண்டிருந்த வில்லி, உட்கார்ந்திருந்த முக்காலியைப் பின்புறமாக நகர்த்திவிட்டு எழுந்து வந்தாள்.

"ஆசிரியர் சார்! உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். அதை இங்கேயே....." என்று வாக்கியத்தை முடிக்காமல் தயங்கினுள் வில்லி.

"பரவாயில்லே. இங்கேயே சொல்லலாம். இவர்கள் உன்னைப்போலவே என் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள்!" என்று அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டு சொன்னுன் ஆசிரியர் ராமகாந்தன்.

"நேற்றிரவு அசோக்லாலின் கையாளான சிங்காரத்தின் வீட்டுக்குச் சென்று அவனிடம் பேசிக்கொண்டிருந்தேன்..." என்று வில்லி கூறி முடிப்பதற்குள் ராமகாந்தன் குறுக்கே விழுந்து, "சபாஷ் வில்லி! சிங்காரத்தையே உன் வலேயில் சிக்கவைத்துவிட்டாயா? பலே கெட்டிக்காரி!...ம்...அப்புறம்?" என்று அவசரப்படுத்தினுன்.

"இந்தச் சந்திப்பினுல் நமக்கு ஒரு முக்கியமான கடிதம் கிடைத்திருக்கிறது!" என்ருள் வில்லி உற்சாகத்துடன்.

"அது என்ன கடிதம்?" என்று பரபரத்தான் ராமகாந்தன்.

"சிங்காரம் அசோக்லாலுக்கு எழுதிவைத்திருந்த ஒரு கடிதம் அது! அக் கடிதம் மாணிக்கத்தையும், வாஸந்தியையும் பற்றியது!" என்றுகூறிக்கொண்டே திகைப்புடன் அமர்ந்திருந்த மாணிக்கத்தை ஓரக்கண்ணுல் பார்த்தாள் வில்லி.

இதைக் கேட்ட மாணிக்கத்துக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. அவன் வில்லியையும் ராமகாந்தனேயும் திருதிருவென மாறி மாறிப் பார்த்தான்.

"எங்கே அந்தக் கடிதம்? இப்படிக் கொடு!" என்று ஆவலுடன் தன் இரு கைகளேயும் நீட்டினுன் ஆசிரியர் ராமகாந்தன்.

"இதோ இருக்கிறது!" என்று கூறிக்கொண்டே தன் கவுன் உள்ளிருந்து ஒரு சிறு கடிதத்தை எடுத்து ராமகாந்தனிடம் கொடுத்தாள் லேடி டைப்பிஸ்ட் வில்லி.

"சரி, நீ போகலாம்!" என்று கூறிக்கொண்டே அக் கடிதத்தை அவசர அவசரமாகப் பிரித்து தன் மனத்திற்குள்ளேயே படிக்க ஆரம்பித்தான் ராமகாந்தன்.

திரும்பிப் போகும்போது மணமகனேப்போல அமர்ந்திருந்த ராகவனேத் தன் கொத்தும் விழிகளால் குறிவைத்துப் பார்த்தாள் வில்லி. அவனும் அவளே ஒரு தினுசாகப்பார்த்தான். வில்லி வெட்கத்துடன் தலேகுனிந்து கொண்டு அங்கிருந்து போய்விட்டாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் அறையிலிருந்து 'டைப்' அடிக்கும் சப்தம் கேட்டது.

கடிதத்தைத் தன் மனத்திற்குள்ளாகவே படித்து முடித்த ராம காந்தன், மெல்லத் தலைநிமிர்ந்து மாணிக்கத்தை அர்த்தபுஷ்டியுடன் பார்த்தான். மாணிக்கத்தின் உடலிலும் உள்ளத்திலும் எண்ணற்றக் கேள்விக் குறிகள் கொக்கியிட்டுக்கொண்டிருந்தன.

"அது என்ன கடிதம்?" என்று தன்னை அடக்க முடியாமல் கேட்டுவிட்டான் மாணிக்கம்.

"இதுதானே மிஸ்டர் மாணிக்கம்? படிக்கிறேன்; எல்லோரும் கேளுங்கள்! இது சிங்காரம் அசோக்லாலுக்கு எழுதிய கடிதம்" என்று கூறிக்கொண்டே சிறிதே நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான் ஆசிரியர் ராமகாந்தன்.

மாணிக்சமும், விநாயகமும், ராகவனும் ஆசிரியரையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தனர். லில்லி மென்முறுவல் பூத்தவாறே 'டைப்' அடிப்பதை சிறிது நேரம் நிறுத்தி வைத்தாள். ராமகாந்தன் கடிதத்தைப் படித்தான் :

"மகாகனம் பொருந்திய சேட்ஜி அவர்களுக்கு!

உங்கள் எதிர்கால மருமகன் நமஸ்காரம் செய்து எழுதுவது:—உங்கள் அருமை மகள் வாஸந்தியை, அந்த அயோக்கியப் பயல் மாணிக்கம் தூக்கிக் கொண்டுபோய் எங்கேயோ ஒளித்து வைத்திருக்கிறான். அவளை அவனிடம் விட்டு வைப்பது எவ்வளவு பெரிய ஆபத்து என்பதை நான் உமக்கு விளக்கத் தேவையில்லை. உமது கட்டளைப்படி, அந்தப் பெண்ணின் தாயாரும், உங்கள் மாஜி காதலியுமான அன்னபூரணியை நான் கொலைசெய்துவிட்ட இரகசியம் இதனால் அம்பலமாகி விடும். ஆதலால், நம் இருவரின் எதிர்கால நன்மையை உத்தேசித்து உடனடியாக, இரண்டு காரியங்களில் ஒன்றைச் செய்தாகவேண்டும். அதாவது உங்கள் மகள் வாஸந்தியை இரண்டொரு நாட்களுக்குள் மாணிக்கத்திடமிருந்து பறித்துக் கொண்டு வந்து ஒழித்துக் கட்டிவிடவேண்டும். அல்லது அவளை எனக்கு நீங்கள் மணம் முடித்துவைத்துவிடவேண்டும்! ஒரு மனைவி தன் சொந்த அம்மாவைக் கொன்றவனுயிருந்தாலும் தன் கணவனைக் காட்டிக்கொடுக்கமாட்டாள் என்பது உமக்குத் தெரியும்; இவை இரண்டிலொன்றை நீங்கள் செய்யாவிட்டால், நமக்குள் அநாவசியமாக மனக்கசப்பும் பாஸ்பர அவநம்பிக்கையும் ஏற்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். இதுநாள்வரை உமது வலது கரமாயிருந்து பணியாற்றி வந்த எனக்குப் பரிசாக உமது மகளை மணம்

செய்து கொடுப்பீரென முழுமனத்துடன் நம்புகிறேன். இதனால், காணுமற்போன நமது சதித் திட்டக் கடிதத்தையும் கண்டுபிடித்துக் கைப்பற்றிக் கொள்ளலாம். உங்கள் எண்ணத்தை உடனே தெரியபபடுத்துங்கள்.

இப்படிக்கு,

**சிங்காரம்.''**

கடிதத்தைப் படித்து முடித்ததும் ஆசிரியர் ராமகாந்தன் மாணிக்கத்தை அர்த்த புஷ்டியுடன் பார்த்தான். மாணிக்கத்தின் அழகிய முகம் விகாரமாகக் கறுத்துச் சிறுத்து விட்டிருந்தது.

"இப்போது நீங்கள் இந்தக் கடிதத்தை என்ன செய்யப் போகிறீர்கள்? இதையாவது நம் பத்திரிகையில் வெளியிட்டு உதவுவீர்களா?'' என்று நாக்குழறத் துடிப்புடன் கேட்டான் மாணிக்கம்.

ஆசிரியர் ராமகாந்தன் இதைக் கேட்டுப் பலக்கச் சிரித்தான். சிரித்துக்கொண்டே மாடியறையை நோக்கி "நளினி'' என்று கூவினன். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் மனைவி நளினி, மாடியிலிருந்து அழகு நடையுடன் இறங்கி வந்து அவனெதிரில் நின்ருள். தந்தப் பதுமைபோல் இருந்த அவள் மௌனமாகத் தலை குனிந்து கொண்டு அசைவற்றிருந்தாள்.

"நளினி! இந்தக் கடிதங்களை, 204-ல் கொண்டுபோய்ப் பத்திரமாக வைத்துப் பூட்டிவை. இன்னும் சில மாதங்கள்வரை இவற்றை மறுபடி எடுக்க நேரிடாது.'' என்று கூறிக்கொண்டே ஒருசிவப்புநிற 'பைலை' அவளிடம் கொடுத்தான் ஆசிரியர் ராமகாந்தன். அந்தப் 'பைலி'ல்தான் விநாயகம் கொண்டுவந்து கொடுத்த அசோக்லாலின் சதித் திட்டக் கடிதமும், வில்லி கொடுத்த சிங்காரத்தின் திருமணக் கோரிக்கைக் கடிதமும், மற்றும் பத்திரிகையில் வெளியிடாமல் வைத்துக் கொண்டிருக்கும் பல பெரிய மனிதர்களின் அந்தரங்க இரகசியக் கடிதங்களும் அடைக்கலமாகியிருந்தன.

ஆசிரியர் ராமகாந்தனின் இந்த நெஞ்சுரமான செயலைக்கண்டு மாணிக்கமும் விநாயகமும் குமுறிக் கொதித்தனர் ஆயினும் இந்தச் சமயத்தில் என்ன செய்வது என்று அவர்களுக்குப் புரியவில்லை.

நளினி, தன் கணவன் கொடுத்த அந்த சிவப்புநிற 'பைலை' எடுத்துக்கொண்டு திரும்பிப்போக எத்தனித்தாள். இதற்குள் ராமகாந்தன் என்ன நினைத்துக்கொண்டானே, சட்டெனத் திரும்பி "நளினி!'' என்று தன் மனைவியைக் கூப்பிட்டான். சிறிது தூரம் சென்றுவிட்டவள் திரும்பி வந்தாள்.

"அந்தப் 'பைலை' இப்படிக் கொடு. நானே அதை வேருேரிடத்தில் பத்திரமாகப் பூட்டி வைத்துக் கொள்கிறேன்!'' என்று கூறிக்

கொண்டே நளினியிடமிருந்து அதை 'வெடுக்'கெனப் பிடுங்கிக் கொண்டான் ராமகாந்தன்.

நளினியின் அழகிய முகம் இப்போதேனே பரிதாபமாக வெளிறிச் சிறுத்துவிட்டது. சொந்த மனைவியைக்கூட நம்பாத இப்படிப்பட்ட ஆசிரியர் இந்த பூலோகத்தில் உண்டா என்று நினைத்தாள். அவள் "நீங்கள் யாரையுந்தான் நம்புவதில்லை! தாலிகட்டியவளைக்கூடவா நம்பக்கூடாது? இந்தப் பையையும், கடிதங்களையும் தூக்கிக்கொண்டு போய் நான் யாரை மிரட்டிப் பணம் பறிக்கப் போகிறேன்! சேச்சே! எனக்கு இந்தப் பயங்கரமான தொழிலே பிடிக்கவில்லை! ஒவ்வொரு நிமிஷமும் விதவையாகி விடுவேனு என்று நான் நடுங்கிக்கொண்டிருக்கிறேன்! எந்தச் சமயத்தில் எத்தனை முரடர்கள் நம் வீட்டிற்குள் நுழைந்து நம்மை அடித்துப் போடுவார்களோ என்று கதிகலங்கிக்கொண்டிருக்கிறேன்! அதைப் பற்றி உங்களுக்குக் கவலையில்லை! மனைவியென ஒருத்தி இருக்கிருள் என்ற நினைவே உங்களுக்கு இல்லை! இந்தத் தொழிலை விட்டு விடுங்கள்! கூழோ கஞ்சியோ குடித்துக்கொண்டாவது மற்றவர்களைப்போல நிம்மதியாக ஒரு பயமும் இல்லாமல் வாழலாம்!" என்று ஆசிரியரின் மனைவி நளினி மனங் குமுறியவளாய் வார்த்தைகளைக் கொட்டிவிட்டாள். இத்தனை வருஷங்களாக எதையும் எதிர்த்துப் பேசாத ஊமைபோல் அடங்கி ஒடுங்கியிருந்தவள் இப்படிப் பேசுகிருளே என்று ஆசிரியர் ராமகாந்தன் அதிசயப்பட்டு நிலைகுத்தி உட்கார்ந்துவிட்டான்.

அவனை—தனக்கு வாய்த்த பயங்கரக் கணவனை—நளினி ஒருமுறை பரிதாபமாகவும் கோபமாகவும் பார்த்தாள். மறுகணம் அங்கிருந்து 'விர்'ரெனப் புறப்பட்டுச் சமையலறைக்குள் போய்விட்டாள். அவள் போகும் திசையையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான் அவள் கணவன், ராமகாந்தன்.

உதவி ஆசிரியர் ராகவனின் முகத்தில் இப்போதேனே பரிதாபக் குறிகளும் சிந்தனை ரேகைகளும் படர்ந்தன. மாணிக்கம், ஆசிரியரை நோக்கி "அப்படியானல் வாஸந்தியைக் கொலை செய்வது சம்பந்தமாயுள்ள அந்தச் சதித் திட்டத்தை நம் பத்திரிகையில் பிரசுரிக்கவோ அல்லது அக் கடிதத்தைப் போலீஸாரிடம் கொடுக்கவோ மாட்டீர்கள், இல்லையா?" என்று கோபமாகக் கேட்டான்.

"ஆமாம்! அதற்குக் காரணமும் உங்களுக்குப் புரிந்திருக்கும்!" என்றுன் ஆசிரியர் ராமகாந்தன் அழுத்தலாக.

"நன்ருகப் புரிகிறது! அசோக்லாவின் சதியால் அன்னபூரணியம்மாள் கொலையாளுள் என்பதற்கு ஒரு முக்கியமான ஆதாரம் உங்கள் கையில் மாட்டியிருக்கிறது. நீங்கள் நினைத்தாலொழிய அசோக்லாலை யாரும் கொலைகாரனுகக் காட்டிக்கொடுக்க முடியாத

படி செய்யவேண்டுமென்பது உங்கள் திட்டம்! அதற்காக அக் கொலையை வெளியில் சொல்லக்கூடிய வாஸந்தியும் இறந்து போவது நல்லது என்று நினைக்கிறீர்கள்! அப்போதுதான் நீங்கள் அசோக்லாலை நிரந்தரமாகப் பயமுறுத்திக்கொண்டே நெடுங்காலம் பணம் பறிக்கலாம்! உங்கள் பண ஆசைக்காக ஒரு பெண்ணின் உயிர் பலியாவதையும் தடுக்கமாட்டீர்கள்! ஆசை நாயகியைக் கொன்றவன், மகளையும் கொல்லட்டும்; இரட்டிப்புப் பணம் பறிக்கலாம் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்...! அப்படித்தானே?" என்று உரக்கக் கூவிக் கேட்டான் மாணிக்கம்.

"அப்படியே வைத்துக்கொள்ளுங்கள் மாணிக்கம்! நீங்கள் அவளைக் காதலிப்பதற்காக நான் லக்ஷக்கணக்கான ரூபாய் வருவாயை இழக்க முடியாது!" என்று தீர்மானமாகக் கூறிவிட்டான் ஆசிரியர் ராமகாந்தன்.

மாணிக்கமும் விநாயகமும் 'விருட்'டென அவ்விடத்தைவிட்டு எழுந்து வெளியேறி விட்டனர். அவர்கள் செல்லும் வேகத்தை, சிரித்தவாறே பார்த்துக்கொண்டிருந்தான் ஆசிரியர் ராமகாந்தன்.

சிறிது தூரம் மாணிக்கமும் விநாயகமும் தெருவில் மௌனமாகச் சென்றுகொண்டிருந்தனர். எதிரே ஒரு காபி ஹோட்டல் இருந்தது. அதனுள் அவ்விருவரும் நுழைந்து சூன்யமான ஒரு மூலையில் போய் உட்கார்ந்தனர்.

"மிஸ்டர் மாணிக்கம்! நான் எடுத்துவந்த தஸ்தாவேஜுக்களை ஆசிரியர் ராமகாந்தனிடம் கொடுக்காமலிருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்!" என்றான் விநாயகம்.

"நடந்ததைக் குறித்துப் பேசுவது எனக்கு எப்போதுமே பிடிப்பதில்லை!" என்று சுவாரஸ்யமில்லாமல் பதில் சொன்னான் மாணிக்கம்.

"உண்மைதான். ஆனால் ஒன்று செய்யலாமென எண்ணுகிறேன்!"

"என்ன?"

"அந்தக் 'கடிதக் கட்டுப் பைல்களை' அவனிடமிருந்து நாம் எப்படியாவது கிளப்பிக்கொண்டு வந்துவிடவேண்டும்!"

"இது நடக்கக்கூடிய விஷயமா? அவன் நம்மைவிடக் கெட்டிக்காரனாயிற்றே!"

"இருக்கலாம். எனினும் முயன்று பார்க்கவேண்டும். இதனால் ஒரு பெண்ணின் உயிர் தப்புவதோடல்லாமல், ஒரு அயோக்கியனின் சதித் திட்டமும் மக்களிடையே அம்பலமாகும். நமக்கும் அதனால் கணிசமான பலன் உண்டு!" என்று விநாயகம் மாணிக்கத்தின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

"நாம் அந்தப் 'பைலை' வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்?"

"மிஸ்டர் மாணிக்கம்! நாம் அவனின் 'அபாய அறிவிப்பு'க்கு எதிராக ஒரு பத்திரிகையை ஆரம்பித்து, அதில் இந்தச் சதித்திட்டத்தை முதன் முதலாகப் பிரசுரிக்கவேண்டும்!"

"இது நடக்கக்கூடிய காரியமா? அவனுக்கு எதிராக நாம் காரியம் செய்ய முடியுமா? அவன் நெஞ்சுத் துணிவுள்ளவன். எல்லாவற்றுக்கும் ஈடுகொடுப்பவன்!"

"தவறு! நம்மாலும் அப்படிச் செய்ய முடியும் நீங்கள் முயன்றால் நான் அதற்குத் துணையிருக்கிறேன்! முடியுமானால் உதவி ஆசிரியர் ராகவனையும் நம் பக்கம் இழுத்துக்கொண்டு அவனைப் பத்திரிகையின் ஆசிரியனுக்கிவிடுவோம்!"

"உண்மைதான். மற்றவர்களெல்லாம் எந்தெந்த வகையிலேயோ சமுதாயத்துக்குக் கேடு விளைவிக்கிறார்கள் இந்த ஆசிரியன் ராமகாந்தனோ சீர்திருத்தப் போர்வையில் ஒளிந்துகொண்டு, முழு உலகையுமே ஏமாற்றி, அரசுல் கொழுத்து வருகிறான். அவனுக்கு எதிர்ச் சக்தியாக நாம் கிளம்பித்தான் ஆகவேண்டும்! இது ஒருபுறமிருக்க, என் இதயமலர் வாஸந்தியை, அந்த முரட்டுப் பயல் சிங்காரத்தின் மனைவியாகாமல் தடுக்கவோ, அவள் கொலையாகாமல் நிம்மதியாக வாழச்செய்யவோ உடனே நான் அந்த இரகசியக் கடிதத்தை ஆசிரியர் ராமகாந்தனிடமிருந்து எப்படியாவது கிளப்பி வரவேண்டும்!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் சற்று உரக்கவே சொன்னான் மாணிக்கம். விநாயகத்தின் முகம், இதைக் கேட்டதும் சந்தோஷத்தால் மலர்ந்தது ஹோட்டலிலிருந்து இருவரும் வெளியே வந்தனர்.

"ஆசிரியர் ராமகாந்தன் இந்த ஊரில் இப்போது பக்காப் பணம் தின்னும் முதல் நம்பர் கழுகாயிருக்கிறான்!" என்று கறுவிக்கொண்டே எதிரில் வந்தான் உதவி ஆசிரியர் ராகவன்.

ராகவன் எதிர்பாராத விதமாக அங்குவந்து சேர்ந்தது மாணிக்கத்துக்கும் விநாயகத்துக்கும் பெருத்த ஆச்சரியமாக இருந்தது. மூவரும் மௌனமாகச் சிறிது தூரம் நடந்து சென்றனர்.

"மிஸ்டர் ராகவன்! உன்னை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. உன்னுடைய போக்கே இப்போது ஒரு தினுசாக மாறிவிட்டிருக்கிறது. என் நீண்டநாளைய நண்பன் என்ற காரணத்தால் நான் உன்னை 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையின் உதவி ஆசிரியனாக ஆக்கிவைத்தேன். ஆனால் அதையெல்லாம் மறந்து நீ இப்போது எனக்கு எதிராக ஆசிரியர் ராமகாந்தனுடன் சேர்ந்துகொண்டிருக்கிறாய். உன் ஒருவனின் சாதகத்தால், அவன் எங்கள் பேச்சைக் கொஞ்சங்கூட சட்டைசெய்யாமல், தன் இஷ்டம்போன

படி பல பைசாச காரியங்களைச் செய்து வருகிறான். இது நல்லதா என்று சிறிது யோசித்துப் பார்!" என்றான் மாணிக்கம் காகாத்தக் குரலில்.

"மாணிக்கம்! நீங்கள் என்னைத் தவறாகக் கருதிவிட்டிருக்கிறீர்கள். உண்மையில், உங்களைப் போலவே நானும் அந்த ஆசிரியர் ராமகாந்தனின் 'அடாபிடி'த் தனமானச் செயல்களை வெறுத்து வருகிறேன். உங்களிருவரையும் முன்னால் அனுப்பிவிட்டு நான் அங்கு என்ன செய்தேன் தெரியுமா? 'அந்தச் சிவப்பு பையில் உள்ள விஷயங்களையெல்லாம், அவசியம் பத்திரிகையில் வெளியிடவேண்டும்; அல்லது போலீஸாரிடம் தெரிவிக்க வேண்டும்' என்று எவ்வளவோ நயந்து சொல்லி ஆசிரியரிடம் மன்றாடிப் பார்த்தேன். அவன் அதற்குக் கொஞ்சங்கூட மசிந்து கொடுக்கவே இல்லை. அவனுடைய இந்த நெஞ்சிரமற்றச் செயலால், அவனுடைய உயிர்போகப் போவதுமல்லாமல், பாவம், அந்தப் பெண் நளினி, விதவைக் கோலம் பூண்டு வாழ்நாள் முழுதும் கண்ணீர் வடித்தக்கொண்டிருக்கப் போகிறாள்! அதை நினைக்கும்போது தான் என் நெஞ்சு பதைபதைக்கிறது. அந்த இரகசியக் கடிதங்கள் பிரசுரமாகாமலிருந்தால், உங்கள் காதலி வாஸந்தியின் உயிருக்கு ஆபத்து வருமே என்பதற்காக, நீங்கள் ஆசிரியர் ராமகாந்தனைக் கொலை செய்யக்கூடத் தயங்கமாட்டீர்கள் போலிருக்கிறது. ஆனால் நான் அப்படிச் செய்யப்போவதில்லை. அவனிடம் இருக்கும் அந்த இரகசியக் கடிதக் கட்டை எப்படியாவது கிளப்பிக்கொண்டு வந்து விட வழிதேடிக்கொண்டிருக்கிறேன்! இப்படிச் செய்துவிட்டால் அவன் பல்லுடைந்த பாம்பாகிவிடுவான். பத்திரிகைத் தொழிலையே விட்டுவிட்டுக் கௌரவமாகத் தன்மனைவியுடன் காலத்தைக் கடத்துவான். பாவம், ஆசிரியர் மனைவி அவனிடம் கிடந்து என்ன பாடு படுகிறாள் தெரியுமா? இரவில் ஆசிரியர் ராமகாந்தனுடன் இரண்டொரு தினங்கள் நான் இருந்தபோது இதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். இவன் பாட்டுக்குத் தன் அறையில் உட்கார்ந்து எதையாவது யாரையாவது பயமுறுத்தி எழுதிக்கொண்டோ அல்லது யாரைப் பயமுறுத்திப் பணம்பறிக்கலாம் என்று எண்ணமிட்டுக்கொண்டோ இருப்பான். அவள், இன்பக் கனவு காணவேண்டிய அவள், திடீரென எதாவது துர்க் கனவுகள் கண்டுவிட்டு எழுந்து இவனிடம் ஓடிவருவாள். தன் வீட்டிற்குள் யாராவது முரடர்கள் புகுந்து தன்னை அடித்துப் போட்டுவிட்டுத் தன் கணவனைக் கொன்றுவிட்டு ஓடிவிடுவார்களோ என்று பீதியுடன் துடித்துக்கொண்டே தன் கணவனிடம் குமுறுவாள். இந்தத் தொழிலும் பத்திரிகையும் வேண்டாமென்று கெஞ்சுவாள். அவளை அவன் கொஞ்சமும் கவனித்துக்கொள்ள மாட்டான். தன் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பான். அவள் அவன் காலடியி

லேயே படுத்துப் பயந்து நடுங்கிக்கொண்டே பரிதாபமாகத் தூங்கிவிடுவாள். 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையை ஆரம்பித்த மறுவாரம் தான் அவர்களுக்குத் திருமணம் நடந்தது அன்று முதல் இன்றுவரை அந்தப் பெண் நளினி இப்படியே நித்தியகண்டம் பூரண ஆயுசாய்க் கிடந்து தன் இளமைக்கனவுகளை ஈடேற்றிக் கொள்ளாமல் புழுங்கிப் புழுவாய்த் துடித்துக்கொண்டிருக்கிறாள். அவளின் நல்வாழ்வுக்கேனும் அந்த இரகசியக் கடிதக்கட்டை எப்படியாவது கிளப்பிக்கொண்டு வந்து உங்களிடம் கொடுத்து விடுகிறேன். அதை வைத்துக்கொண்டு நாம் ஒரு நேர்மையான புதுப் பத்திரிகையை ஆரம்பித்துவிடலாம். இம்மாதிரியான ஒரு பயமுறுத்தல் பத்திரிகையை ஒரு பிரம்மசாரிதான் நடத்தலாம்! என்ன சொல்கிறீர்கள் மாணிக்கம்?" என்று தன் நீண்ட பேச்சை ஒரு கேள்விக் குறியோடு நிறுத்தினான் ராகவன்.

"அந்த இரகசியக் கடிதங்களடங்கிய பைலை ஆசிரியர் ராமகாந்தன் எங்கே வைத்திருப்பான் என்பது பிரம்மாவுக்குக்கூடத் தெரியாதே..." என்றான் மாணிக்கம்.

"பெண்ணால் தெரிந்துகொள்ள முடியாதது ஏதாவதுண்டா?" என்று சிரித்தான் ராகவன்.

"லேடி டைப்பிஸ்ட் வில்லியைத்தானே சொல்லுகிறாய்! சொந்த மனைவியிடம் சொல்லாத இரகசியங்களைக்கூட அந்த வில்லியிடம் ஆசிரியர் சொல்லிவிடுவார்! வில்லிக்கோ, உன்மீது மயக்கம்!" என்றான் விநாயகம். ராகவன் வெறுமனே சிரித்தான்.

"எனக்கொரு முக்கியமானவேலை இருக்கிறது. முடியுமானால் இன்றிரவு உங்களை வந்து சந்திக்கிறேன்!" என்று கூறிக்கொண்டே வேறொரு பாதையில் திரும்பி வெகுவேகமாக நடந்துசென்று விட்டான் ராகவன்.

"மிஸ்டர் மாணிக்கம்! நீங்கள் இவன் பேச்சை நம்புகிறீர்களா?" என்றான் விநாயகம் நடந்துகொண்டே.

"என்னமோ, சொன்னான். கேட்டுக்கொண்டு வந்தேன்!" என்றான் மாணிக்கம் சுவாரஸ்யமில்லாமல்.

"எனக்கென்னவோ ராகவன் பேச்சில் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை! ஷோக்கான உடை உடுத்தி, சொகுசான உணவு உண்டு, ஜாலியாக நாட்களைப் போக்குவதிலே லயிப்புள்ளவன் இந்த ராகவன். இவனுக்கு லட்சியமாவது, மண்ணாங்கட்டியாவது! எல்லாம் வெறும் வேஷம். நம்மை ஏமாற்றுகிறான். இவனுக்கு வேண்டியது பணம்—எந்நேரமும் ஜாலியாக இருக்க! இதற்காகத் தான் இவன் அந்த இரகசியக் கடிதக் கட்டை ஆசிரியரிடமிருந்து கிளப்பிக்கொண்டு வர ஆசைப்படுகிறான்! அதைக்கொண்டு இவ

னும் ஏராளமாகப் பணம் சம்பாதிக்கலாம் அல்லவா?" என்று ஆத்திரமாகப் பேசிவிட்டு மாணிக்கத்திடம் விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டை நோக்கிப் போய்விட்டான் விநாயகம்.

★

இரவு ஏழு மணியிருக்கும். ஹோட்டலுக்குச் சென்ற மாணிக்கம் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய்த் தன் அறையைப்பூட்டிவிட்டு, ஒரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டு அவசர அவசரமாக ஆசிரியர் ராமகாந்தன் வீட்டிற்குச் சென்றான். ஆசிரியர் ராமகாந்தன் அனேகமாக இப்போது வீட்டில் இருக்கமாட்டான். இரவு நேரங்களில்தான் அவன் அச்சகத்த வேலைகளைக் கவனிப்பது வழக்கம். அல்லது பத்திரிகைக்கு எழுதவேண்டிய கட்டுரைகளை இந்தச் சமயத்தில் தான் எழுதுவான். அதுவும் தன் வீட்டிலிருந்துகொண்டு இந்த வேலையைச் செய்யமாட்டான். இதற்கென, ஊருக்கு வெளிப்புறமாயிருக்கும் ஒரு பாழடைந்த வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டிருந்தான். அந்த வீடு பகலெல்லாம் பூட்டியே கிடக்கும். இரவு நேரங்களில் தான் ஏதாவதொரு அறையில் எண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருக்கும். இந்த வீட்டின் சாவியைப் பெரும்பாலும் ஆசிரியர் ராமகாந்தனே வைத்துக்கொண்டிருப்பான். எப்போதாவது சில சமயம் அவன் மனைவி நளினியும் அங்கு சென்று வருவாள். அவளிடமும் அவ்வீட்டுக்கு ஒரு சாவி இருந்தது. மாணிக்கத்தையும் விநாயகத்தையும் அதிகமாக அங்கு வரச் செய்ய மாட்டான் ராமகாந்தன். இதுபற்றி அவர்களுக்கு ஆதிமுதலே சிறிது மனக் கசப்பாகத்தான் இருந்தது. இதுவரை அவ்விருவரும் அந்த வீட்டுக்கு ஐந்தாறு தடவைதான் போயிருப்பார்கள். ஆனால், ராகவன் இதற்கு விதிவிலக்காயிருந்தான். ஆசிரியர் ராமகாந்தனும் உதவி ஆசிரியர் ராகவனும் சந்தித்துப் பேசுவது அநேகமாக அந்த வீட்டில்தான் இருக்கும். ராகவனுக்கென அவ்வீட்டில் ஒரு தனி அறை கொடுக்கப்பட்டிருந்தது. அவன் பத்திரிகை சம்பந்தமான சில வேலைகளை அந்த அறையில் இருந்து கொண்டுதான் செய்வான்.

'அபாய அறிவிப்பு'க் காரியாலயத்தின் கிளைக் காரியாலயமாக ஊருக்கு ஒதுப்புறம் அந்தப்பாழடைந்த வீடு இருப்பது பொது மக்கள் யாருக்குமே தெரியாது. அசோக்லால் ஆட்களுக்குக்கூட இந்த விஷயம் தெரியாது. மனித வாசமற்ற ஒரு பாழடைந்த வீடு என்றே அது கருதப்பட்டு வந்தது. அத்தனை சாமர்த்தியமாக அவ்வீட்டைப் பயன் படுத்திக் கொண்டு வந்தான் ஆசிரியன் ராமகாந்தன்.......

மாணிக்கம் தீவிரமாகச் சிந்தித்தான். 'இப்போது இந்த இரவு நேரத்தில் அவன் கண்டிப்பாக அங்குதான் சென்று விட்டிருப்பான். அவன் வீட்டில்—அதாவது 'அபாய அறிவிப்பு'க் காரியாலயத்தில்—

அவனுடைய மனைவி நளினி மட்டுமே தனித்திருப்பாள். ஆசிரியர் ராமகாந்தனைப் பார்க்கப் போவதுபோல் போய், அந்த இரகசியக் கடிதக் கட்டுகளைக் கிளப்பிக்கொண்டு வந்து விட்டால் என்ன? அந்த ரகசியக் கடிதங்களைக் கிளப்பி வந்து, அசோக்லால் கோஷ்டியினரைச் சிறைக்கோ, தூக்கு மேடைக்கோ அனுப்பினுலொழிய வாஸந்தியோடு நிம்மதியாக, நிர்ப்பயமாக, பகிரங்கமாக வாழ்க்கை நடத்த முடியாது'.........

டாக்ஸி காரைத் தெருக் கோடியிலேயே நிறுத்தி இறங்கி வாடகையைக் கொடுத்துக் காரை அனுப்பிவிட்டு மெல்லத்தெருவின் மற்றொரு கோடிக்கு நடந்து வந்து ஆசிரியர் ராமகாந்தனின் வீட்டினுள் பதுங்கிப் பதுங்கி நுழைந்தான் மாணிக்கம். சாதாரணமாக எப்போதும் அந்த வீட்டின் பிரதான வாசற் கதவு உட்பக்கம் தாழ்ப்பாள் போட்டே இருக்கும். கதவைத் தட்டினுல்தான் யாராவது வந்து அதைத் திறப்பார்கள். அப்படி அந்தக் கதவைத் தட்டுவதிலும் ஒரு விசித்திரமான வழக்க மிருந்தது. நடுவிரலை மடக்கி, மெல்ல மூன்று முறை அக்கதவைத் தட்ட வேண்டும். அப்போது தான் அது திறக்கப்படும். இப்படிக்கில்லாமல், இஷ்டம்போல் ஒரு முறையோ பல முறையோ தட்டினுல் கதவு திறக்கப்படவே மாட்டாது! ஆசிரியர் ராமகாந்தனின் கையாட்களுக்கு மட்டுமே இந்த இரகசியம் தெரியும். புதிதாக யார் வந்தாலும் இது புரியாமல் கதவைத் தட்டித் தட்டிப் பார்த்து விட்டுத் திரும்பிப் போக வேண்டியதுதான்! பெரிய மனிதர்களின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டு ஆபத்தானச் சூழ் நிலையில் வாழ்ந்து வந்த ஆசிரியர் ராமகாந்தன் இத்தகைய இரகசிய ஏற்பாட்டைச் செய்து வைத்திருந்தான். இவ்வேற்பாட்டை அவன் மிகக் கடுமையாகக் கடைப் பிடித்தும் வந்தான்.

ஆனல் இன்று?—

என்றைக்கு மில்லாத புது வழக்கமாக அவ்வீட்டின் வெளிக் கதவு பரக்கத் திறந்தே கிடந்தது! இதைக் கண்ட மாணிக்கத்துக்கு உண்மையிலேயே வியப்பாகத்தான் இருந்தது. 'எப்பேர்ப்பட்ட மனிதனும் என்றைக்காவது ஒரு நாள் ஏமாந்து விடுவது இயல்பு' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

திறந்திருந்த வீட்டினுள் சாவதானமாக நுழைந்தான் மாணிக்கம்.

கூடத்து அறையில் விளக்குப் போடாமல், அது இருளடைந்து கிடந்தது. இதுவும் வழக்கத்துக்கு மாறுனதுதான். பல முறை அவ்வீட்டுக்கு அவன் வந்து போய் இருந்ததால், எலக்ட்ரிக் விளக்கின் 'ஸ்விட்ச்' இருக்கும் இடம் நினைவிலிருந்தது. இருண்டு கிடந்த அவ்வறையில் தட்டுத் தடுமாறிக்கொண்டு நடந்து போய்

விளக்குப் பொத்தானை அழுத்தினான். அடுத்த கணம் அவ்வறை முழுதும் நீலநிற ஒளி பரவிப் பதிந்தது.

ஒளியேறிய அவ்வறையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தான் மாணிக்கம். ஆசிரியர் ராமகாந்தன் அங்கு இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. ஒரு வேளை 'கிளைக் காரியாலய'த்துக்குப் போய் விட்டிருப்பானோ என்று நினைத்தான். அப்படியே இருந்தாலும் இவ்வளவு அஜாக்கிரதையாக இந்த வீட்டை விட்டுவைத்திருக்க மாட்டாளே அவன் மனைவி நளினி! அவள் அவனைவிட ரொம்பவும் முன் ஜாக்கிரதையானவள். இது போன்ற காரியங்களை அவன் மறந்தாலும் அவள் மறக்க மாட்டாள். ஆயினும் இன்று ?—

ஒரு வேளை, சமையல் வேலையின் மும்முரத்தில், வீட்டைக் கவனியாமல் இருக்கிறாளோ ? ராமகாந்தனும் அவன் மனைவியும் மாடியில் குடியிருந்தனர். கீழே பத்திரிகைக் காரியாலயம். இங்கு தான் பல பயங்கர இரகசிய தஸ்தாவேஜுக்களெல்லாம் வைக்கப் பட்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால், ஆசிரியர் ராமகாந்தனின் உயிரும், அவனைச் சார்ந்தவர்களின் உயிரும் இந்த அறையில் தான் இருக்கின்றன ! இத்தகைய ஒரு வீட்டை இவ்வளவு அஜாக்கிரதையாகவா திறந்து போட்டு வைத்திருப்பது ?—

மாணிக்கம் உண்மையிலேயே வியப்படைந்து விட்டான். பிரமை தட்டியவன் போல அந்த அறையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மின்னலென ஒரு எண்ணம் அவன் மூளையைத் துளைத்துக் கொண்டு சென்றது.

'ராமகாந்தன் நிச்சயமாக இங்கு இல்லை. அவன் மனைவி நளினி, மாடியில் ஏதோ வேலையாகஇருப்பாள்! அல்லது வீட்டைப் பார்த்துக்கொள்ளும்படித் தன் கணவரிடம் சொல்லி விட்டுக் கோயிலுக்குப் போயிருப்பாள். ஆசிரியர் ராமகாந்தனுக்கு ஞாபக மறதி அதிகமானபடியால், மனைவி வீட்டிலிருக்கிறாள் என்ற நினைவில் அவன் வீட்டை அப்படியே திறந்து போட்டு விட்டுப் போயிருப்பான்! இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, அந்த இரகசியக் கடிதக் கட்டுகளைக் கிளப்பிக்கொண்டு போய்விட்டால் என்ன ?'—

இப்படி நினைத்ததும் மாணிக்கத்தின் முகம் பயம் நிரம்பிய ஒரு வகைச் சந்தோஷத்தால் சிவந்து மலர ஆரம்பித்தது. 'இதுதான் சரியான யோசனை' என்று தனக்குத்தானே முனகிக்கொண்டு, அறையின் ஒரு மூலையில் நிறுத்தப்பட்டிருந்த அலமாரியை நோக்கிப் பரபரப்புடன் நடந்தான்.

என்ன ஆச்சரியம் !

அந்த அலமாரியின் கதவு பரக்கத் திறந்து கிடந்தது! அதில் வைக்கப்பட்டிருந்த அதிபத்திரமான தஸ்தாவேஜுக்களெல்லாம் அலங்கோலமாகக் கிளறிக் கலேக்கப்பட்டுக் கிடந்தன!

இதைக் கண்டு கற்சிலேபோல் ஸ்தம்பித்து நின்ற மாணிக்கம், தன்னேச் சடக்கெனச் சமாளித்துக்கொண்டு, அலமாரியின் அறைகளில் தன் இரு கரங்களேயும் விட்டு அவசர அவசரமாகத் துழாவினன். அவன் உடலும் உள்ளமும் வேகமாக உதறிக் கொண்டிருந்தன. கட்டவிழ்ந்து கிடந்த கடிதக் கட்டுக்களே மேலும் கீழுமாகப் புரட்டிப் பார்த்தான். அட கடவுளே! அந்த இரகசியக் கடிதக் கட்டு எங்கே போய்விட்டது? அது அந்த அலமாரியில் இல்லேயே! ஒரு வேளே, ஆசிரியர் வீட்டிலிருக்கும் போது அவன் எழுதுவதற்காக உபயோகப்படுத்தும் பக்கத்து அறையில் இருக்குமோ? அந்த அறையின் நடுவில் கிடக்கும் மேஜை டிராயரிலும் சில முக்கிய தஸ்தாவேஜுக்கள் இருப்பது வழக்கம். ராமகாந்தன் இந்த முக்கியமான கடிதக்கட்டை அதனுள் பத்திரமாக வைத்துப் பூட்டியிருந்தாலும் இருப்பான்!......

மாணிக்கம் சரேலெனப் பக்கத்து அறைப் பக்கம் தாவி ஓடினன். அந்த அறையின் விளக்கும் ஏற்றப்படாமல், அது இருண்டே கிடந்தது. நினேவைத் துணைக்கிழுத்து மின்சார விளக்கின் 'ஸ்விட்ச்' இருக்கும் பக்கத்தை அடைந்து விளக்கைப் போடலாமா வேண்டாமா என்று குழம்பிக் கொண்டே யிருந்தான். ஆசிரியர் அங்கே இருந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம்! பிறகு இருட்டில் அந்த அறையில் என்ன நடந்தது என்பதே தெரியவில்லே! சாமான்கள் தடுமாறித் தாறுமாருக விழும் சப்தம் மட்டும் கேட்டது.

அப்போது தெருக்கதவை யாரோ திறந்துகொண்டு வரும் காலடி ஓசைகள் கேட்டன.

ஆசிரியரின் மனேவி நளினிதான், கையில் புஷ்பம் தேங்காயுடன், நெற்றியில் ஒரு பெரிய குங்குமப்பொட்டுத் திகழ, பூப்போல நடந்துவந்தாள். அவள் கோவிலுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்திருந்தாள்.

வீட்டின் உட்புறக் கதவுகளெல்லாம் திறந்து கிடப்பதையும், உள்ளே ஒரு சந்தடியுமில்லாதிருப்பதையும் கண்ட அவளுக்குத் திக்கென்று நெஞ்சு அடித்துக்கொண்டது. ஆசிரியரின் தனியறையில் ஒரே இருட்டா யிருப்பதையும் ஏதோ சந்தடி கேட்பதையும் அறிந்து நளினி கலவர மடைந்தவளாய், வேகமாக அந்த அறைக்குள் நுழைந்து மின்சார விளக்கின் 'ஸ்விட்சைப்' போட்டாள்.

அடுத்த கணம்—

நளினியின் அடித் தொண்டையிலிருந்து 'ஹா' வென்ற அலறல் ஒலி அதிபயங்கரமாக எழுந்து அந்தக் கட்டிடத்தையே கிடு கிடுக்கச் செய்துவிட்டது!

இதற்குக் காரணம் வேறொன்றுமில்லை—

அவ்வறையின் மத்தியிலே, பத்திரிகாசிரியர் ராமகாந்தன் உயிரற்ற பிணமாய் இரத்த வெள்ளத்திலே மிதந்துகொண்டு கிடந்தான்! அவனுடைய நெஞ்சில் ஒரு குண்டும், கண்களை ஊடுருவி ஒரு குண்டும், கன்னங்களைப் பிளந்துகொண்டு ஒரு குண்டும் ஆக, மூன்று குண்டுகள் முழு ஆழத்துடன் பாய்ந்துவிட்டிருந்தன! பிரேதத்தின் பக்கத்தில் இரத்தக் கறையுடன் ஒரு உயர் ரகத் துப்பாக்கி கேட்பாரற்றுக் கிடந்தது! அது ஆசிரியரின் சொந்தத் துப்பாக்கி!

இரத்த வெள்ளத்தைப் பார்த்ததாலோ, அல்லது எதிர்பாராத இந்த எட்டிக் காட்சியைக் கண்டதாலோ, மாணிக்கம் மூர்ச்சித்தவன்போல அறைச் சுவரின்மேல் அப்படியே சாய்ந்தபடி ஆசிரியர் ராமகாந்தனின் பிரேதத்துக் கருகில் நின்றுகொண்டிருந்தான். அவன் காலடியில் வேட்டுப் பறிந்த அந்தத் துப்பாக்கி கிடந்தது.

இரண்டொரு விநாடிகள் இப்படிக் கழிந்திருக்கும்.

நளினி திக்பிரமை பிடித்தவளாய் பிரேதம்போல் வாயைப் பிளந்துகொண்டு நின்றாள்.

மறுவிநாடி—

"ஹா! கொலை!...கொலை!..." என குரல்வளை கிழிந்து போகும்வண்ணம் கூவிவிட்டாள் அவள்.

"கொலைகாரா! படுபாவி! என் கணவனைக் கொன்றுவிட்டாயேடா!" என்று மீண்டும் அலறிக்கொண்டே மயக்கமுற்றுத் 'தொப்'பெனக் கீழே சாய்ந்துவிட்டாள் நளினி.

மாணிக்கத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. தான் இந்த உலகத்தில்தான் இருக்கிறோமா? அல்லது வேறு எந்த லோகத்திலாவது சஞ்சரிக்கிறோமா? என்ற சந்தேகம் தட்டிவிட்டது அவனுக்கு! கொலை செய்துவிட்டுக் கையும் மெய்யுமாய் அகப்பட்டுக்கொண்டவனைப்போலப் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டிருந்தான் அவன்.

இதற்குள்—

கீழே மயங்கி வீழ்ந்து கிடந்த நளினி, சட்டெனத் துள்ளி எழுந்து டெலிபோன் இருக்கும் இடத்தண்டை ஓடி, ரிஸீவரைக் கையிலெடுத்து வைத்துக்கொண்டு, ஒன்பதாம் நம்பரையும், மூன்றாம் நம்பரையும் வேகமாகச் சுழற்றிவிட்டு "கொலை!...கொலை!... போலீஸ்!... போலீஸ்! ..கொலை!" என்று குடற்சொடி அறுந்து போவதுபோலக் கூவினாள்.

இது நடந்து ஐந்தாறு நிமிஷங்களுக்கெல்லாம், ஆசிரியர் ராம காந்தன் வீட்டுக்கெதிரே ஒரு போலீஸ் 'வான்' வந்து 'டக்'கென நின்றது!

மாணிக்கம் கொலைகாரன் எனச் சந்தேகிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டான்!

'அபாய அறிவிப்பு' ஆசிரியர் ராமகாந்தன் அவனது சொந்தத் துப்பாக்கியாலே கொலை செய்யப்பட்ட மூன்றும் நாள், மாலை—

மாணிக்கம், குழிந்த கண்களுடனும், அழுக்கேறிய உடையுடனும் தலைவிரிகோலமாகப் போலீஸ் 'லாக்கப்'பிலிருந்து விடுதலைப் பெற்று தன் அறைக்கு வந்து சேர்ந்தான்!

இதற்கு—

ராமகாந்தனைச் சுட்டு வீழ்த்திய துப்பாக்கியில் பதிந்திருந்த இரத்த ரேகையின் மாறுபாடும், நளினியின் சந்தேகாஸ்பதமான—ஆதாரமற்ற—வாக்கு மூலமும், விநாயகத்தின் சாதுர்யமான சாட்சியமும், மாணிக்கத்தை நிரபராதியெனத் தெளிவுபடுத்தின. கொலை நடந்த நேரம், இரவு எழேகால் மணி யென நளினியின் வாக்குமூலம் கூறியது. ராமகாந்தனின் பிரேதத்தைப் பரிசோதனை செய்த டாக்டர்கள், ஆறரைமணிக்கு முன் கொலை நடந்திருக்கிறதெனத் தீர்ப்புக் கூறியிருந்தனர். மாணிக்கத்திடமிருந்து டாக்ஸிகாரன் வாடகை பெற்றுக்கொண்டது, சரியாக எழுமணி பத்து நிமிஷம் என்று அவனின் வாக்குமூலம் தெளிவுபடுத்தியது. இதனுல், கொலை நடந்துவிட்ட பின்னரே மாணிக்கம் அங்கு வந்திருக்கிறுன் என்று போலீஸாருக்குத் தோன்றியது.

ஆசிரியர் ராமகாந்தனை மாணிக்கம் கொலை செய்தான் என்பதற்குப் போதிய சாட்சியங்களோ, சந்தர்ப்பங்களோ, காரணங்களோ இல்லையென்று போலீஸார் கருதினுர்கள். ஆதலால் கொலை வழக்கு ஒன்றை வெறுமனே பதிவு செய்துகொண்டு, மாணிக்கத்தை விடுதலை செய்துவிட்டனர். ஆனுல் அவன் வேறு யாரையாவது கையாளாக அமர்த்திக் கொலைசெய்திருக்கலாம் என்றும் சந்தேகித்தனர் அவனைச் சிறைக்குள் அடைக்காமல் வெளியே விட்டால், அவன் தன் சதியாட்களோடு தொடர்பு கொள்வானென்றும், அதன் மூலம் அவன் நடவடிக்கைகளைத் துப்பறிந்து, ரகசியமாக சி. ஐ. டி. க்களைக்கொண்டு பின் தொடரச் செய்து, அவன்தான் கொலை செய்தான் என்பதற்குப் போதிய ருசுக்கள் தேடலாம் என்றும் கருதினுர்கள் அதனுல் அவன் அந்த ஊரைவிட்டு எங்கும் போகக்கூடாது என்றும், பின்னுல் அவன் தேவைப்படலாம் என்றும் சொல்லி, மாணிக்கத்தை வெளியே விட்டார்கள்.

போலீஸ் துப்பறியும் இலாகா, இந்தக் கொலை சம்பந்தமான உண்மை விவரங்களை அறிய அன்று முதல் பகீரதப் பிரயத்தனம் செய்ய ஆரம்பித்துவிட்டிருந்தது......

## 5

# காதலுக்குக் காணிக்கை!




ஆசிரியர் ராமகாந்தனைக் கொலை செய்தது மாணிக்கம் அல்ல என அறிந்ததும் வாஸந்தி அளவிலா ஆனந்த மடைந்தாள். அவள் மாணிக்கத்தின் திரண்ட தோள்களை ஆசையோடு கட்டிப் பிடித்துக் கொண்டு, "நீங்கள் ஆசிரியரைக் கொன்றிருக்க மாட்டீர்கள் என்பது எனக்கு முன்பே தெரியும். எப்படி என்றால், ஒரு சிறு புழுவைக்கூட கொல்ல மனந் துணியாத மெல்லிய இதயங் கொண்ட தாங்கள் அப்படி ஒருக்காலும் செய்திருக்க மாட்டீர்கள்!" என்று கொஞ்சுங் குரலில் கூறினாள்.

"உண்மைதான். ஆனால் என்னை நிரபராதி என இன்னும் போலீஸார் நம்பிவிடவில்லை. அவர்கள் என்மீது ஒரு கண் வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த ஊரைவிட்டு நான் போகக்கூடாதெனவும் தடையுத்தர விட்டிருக்கிறார்கள். எந்த நிமிஷமும் அவர்கள் என்னை மீண்டும் கைது செய்யலாம்.

"மேலும், ஆசிரியர் ராமகாந்தனின் மனைவி நளினி, நான்தான் அவள் கணவனைக் கொலை செய்துவிட்டேன் என்று உறுதியாக எண்ணிக்கொண்டு என்னை என்னேரமும் சபித்துக்கொண்டிருக்கிறாள். ஒரு அபலைப் பெண்ணின் சாபத்துக்கு நான் எத்தனை காலம் ஆளாகிக்கொண்டிருப்பது? ஆதலால், இந்தச் சங்கடமானச் சூழ்நிலையிலிருந்து விடுபட உடனடியாக அந்த ஒரு காரியத்தைச் செய்தாகவேண்டும். ஆசிரியர் ராமகாந்தனைக் கொலை செய்தது யாரென நான் கண்டுபிடித்தாகவேண்டும்! அப்போதுதான் நான் சந்தேகமற நிரபராதியென நிரூபிக்க முடியும்! மேலும், வாஸந்தி! நீயும் நானும் தம்பதிகளாக முடியாமல் இப்படிப் பயந்து தலைமறைவாய்ச் சந்திக்கவேண்டியிருக்கிறது! அசோக்லாவின் கோஷ்டியினர் உன்னைத் தூக்கிக்கொண்டுபோய் சிங்காரத்திற்கு மணம் முடித்து விடுவார்களோ வென்றும் நீ ஒவ்வொரு கணமும் நடுநடுங்கிக்

கொண்டிருக்கிறாய்! என் அத்தை அன்னபூரணியம்மாளைக் கொன்றதற்கு அசோக்லாலைப் பழிவாங்க நான் துடிதுடித்துக் கொண்டிருக்கிறேன். அன்னபூரணியம்மாள் கொலைக்கு அசோக் லால்தான் காரணம் என்பதற்கு ஆதாரமாகவுள்ள அந்த இரகசியக் கடிதங்களடங்கிய 'பைலை' நான் உடனடியாகத் தேடிக் கண்டுபிடித்தாகவேண்டும்! அந்தப் 'பைலை'க் கண்டு பிடித்து அசோக்லால் கோஷ்டியினரைத் தூக்குமேடைக்கு அனுப்பவேண்டும். அப்போதுதான் நீயும் நானும் ஆனந்தத் தம்பதி களாய் நிர்ப்பயமாய், பகிரங்கமாய்ச் சேர்ந்து வாழமுடியும்! ஆசிரி யரைக் கொன்றவன், இரகசியப் பைல்—இவை இரண்டையும் கண்டுபிடிப்பதுதான் என்னுடைய இரண்டு முக்கிய வேலைகள்! அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு, முதலில் தலைமறைவாய்ப் பதுங்கி யிருக்கும் ராகவனின் கதி என்ன ஆயிற்று என்பதை நான் கண்டு பிடித்தாகவேண்டும்!'' என்றான் மாணிக்கம்.

"மாணிக்கம்! நீங்கள் நினைப்பதைப்போல அந்த இரகசியக் கடித'பைலை'த் தேடிக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. நான்கு நாட்களுக்கு முன்னால், நீங்கள் அந்தப் 'பைலை'க் கைப்பற்றி வரச் சென்றிருந்தபோது ஆசிரியர் ராமகாந்தன் கொல்லப்பட்டுக் கிடந் தான் அல்லவா? அவனை அப்படிக் கொன்று போட்டுவிட்டு அவ னிடமிருந்து அந்த இரகசியக் கடிதக் கட்டையும் எடுத்துக்கொண்டு ஓடி, தலைமறைவாக இருக்கிறான் ராகவன்!—இப்படித்தான் பல ருக்கும் தோன்றுகிறது!'' என்று கரகரத்தக் குரலில் சொன்னான் விநாயகம்.

"ஏன்? ஆசிரியர் ராமகாந்தனையும், ராகவனையும் அசோக்லா வின் ஆட்கள் கொன்று போட்டு விட்டு அந்த இரகசியக் கடிதப் 'பைலை'க் கிளப்பிக் கொண்டு போய்விட்டிருக்கலாம் அல்லவா?'' என்று கவலையோடு கேட்டான் மாணிக்கம்.

"இல்லை! ராகவன் உயிரோடுதான் எங்கோ தலைமறைவாய் இருக்கிறான். ஏனென்றால், ராகவனை அசோக்லாவின் ஆட்கள் இன் னும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்! அப்படி அவன் அகப்பட்டுக் கொண்டாலும் அவர்கள் அவனை உடனே கொல்லமாட்டார்கள்; உங்களையும் என்னையும்—வாஸந்தியையும் வேண்டுமானால் கொன்று போட்டுவிடுவார்கள். காரணம், அந்த இரகசியக் கடிதங்கள் தலை மறைவாய்த் திரியும் ராகவனிடம்தான் இருக்கின்றன!'' என்று தீர்க்கமான தொனியில் சொன்னான் விநாயகம்.

"ஆசிரியர் ராமகாந்தனை எதற்காக ராகவன் கொலை செய்ய வேண்டும்? எதற்காக அவன் இரகசியக் கடிதங்களைக் கிளப்பிக் கொண்டுபோகவேண்டும்?'' என்று கேட்டான் மாணிக்கம்.

"நீங்கள் எப்படி வாஸந்தி மீது கொண்டிருக்கும் காதலால், மரணபத்தைக்கூடப் பெரிதாகக் கருதாமல், ஆசிரியர் ராமகாந்தனைக் கொன்ற பேர்வழியையும், அந்த இரகசியக் கடிதங்களையும் கண்டு பிடிக்க வேண்டுமென்று துணிந்து விட்டீர்களோ, அதே போல ராகவனும் ஒருத்தியின் மீது கொண்ட பயங்கரக் காதலால் இந்த வேலையைத் துணிவுடன் செய்திருக்கிறான் என நான் சொல்லுகிறேன்!" என்றான் விநாயகம்.

"அப்படியானால்......"

"ராகவனை நீங்கள் தேடிக் கண்டு பிடிக்க முயல்வதாகத் தெரிந்தால் அசோக்லாலின் ஆட்கள் மட்டுமல்ல, ராகவனே உங்களைக் கொன்று தீர்த்துவிட நினைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!" என்றான் விநாயகம்.

மாணிக்கத்தின் மனம் எண்ணற்றப் புதிர்ச் சேற்றால் குழம்பி விட்டது. தான் ஏதோ ஒரு பயங்கரச் சூழ்நிலையில் சிக்கிக் கொண்டிருப்பது போன்ற மனப் பிராந்தியும் அவனுள் ஏற்பட்டு விட்டிருந்தது.

இதே குழப்பத்துடன் அன்றுபூராவும் அவன் அந்த மொட்டை மாடி வீட்டைவிட்டு வெளியே எங்குமே தலைகாட்டவில்லை. மாலை மாய்ந்து இரவு எட்டுமணியும் ஆகிவிட்டது.

மன ஊளைச்சலுடன் படுப்பதும் எழுந்திருப்பதுமாக இருந்த மாணிக்கம் திடீரென எதையோ நினைத்துக் கொண்டவனாய் விநாயகத்தை அழைத்தான்.

"விநாயகம்! நீ காலையில் கூறியபடி, அந்த இரகசியக் கடிதக் கட்டு ராகவனிடம் இருக்குமானால், முதல் வேலையாக நாம் இப்போது அவனைத் தேடிக் கண்டு பிடித்தாகவேண்டும். அவன் இந்த ஊரில், எங்கே, எந்த இடத்தில் இருப்பான்?" என்று கேட்டான் மாணிக்கம்.

"அதுதானே எனக்கும் புலப்படவில்லை!" என்று மெல்ல இழுத்து நிறுத்தினான் விநாயகம்.

"ராகவன் உயிரோடிருந்தால், அவன் நம்பிக்கையாய் தலை மறைந்திருப்பதற்கு ஒரே இடம்தான் இருக்கிறது! சரி; நான் இப்போதே அங்கு புறப்பட்டுப் போகிறேன்!" என்று கூறிக் கொண்டே தன் இருப்பிடத்தை விட்டுச் சடக்கென எழுந்து நின்று மேஜை டிராயரிலிருந்து ஒரு கைத்துப்பாக்கியை எடுத்துத் தன் கால் சட்டை ஜோபியில் திணித்துக் கொண்டான் மாணிக்கம். துஷ்ட மிருகங்கள் வாழும் வனாந்திரங்களின் மத்தியிலே அந்த ஊர் இருந்ததால், அநேகமாக எல்லோரும் ஒரு கைத்துப்பாக்கியைத் தங்கள் பாதுகாப்புக்காக வைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும்,

ஆசிரியர் ராமகாந்தனும், அவனைச் சார்ந்த ஆட்களும் ஆபத்தான ஒரு பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருந்ததால் அவர்கள் ஒவ்வொருவரும் சர்க்கார் லைசென்ஸ் பெற்று ஒரு கைத்துப்பாக்கியை வைத்துக் கொண்டிருந்தனர். அவ்வாறு வைத்திருந்த தன் துப்பாக்கியைத்தான் இப்போது மாணிக்கம் எடுத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமானான்.

"இந்த இருட்டிப்போன வேளையில், அதுவும் தனியாக, நீங்கள் எங்கே புறப்பட்டு விட்டீர்கள்? நானும் உங்கள் துணைக்கு வருகிறேனே!" என்று பீதியுடன் எழுந்தான் விநாயகம்.

"வேண்டாம். நீ இங்கேயே இருந்து வாஸந்தியைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். எனக்கு எந்தவித ஆபத்தும் நேராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்!" என்று அலட்சியமாகக் கூறிக் கொண்டே சரேலென வீட்டை விட்டு வெளியே போய்விட்டான் மாணிக்கம்.

அவன் போகும் திக்கையே, வாஸந்தி பயத்துடனும் பரிதாபமாகவும் பார்த்துக்கொண்டு நின்றாள். அவளது கருவிழிகளில் நீர் தளும்பியது.

ஜனநடமாட்டமின்றி இருண்டு கிடந்த அந்தத் தெருவழியே மாணிக்கம், திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் வெகு வேகமாக நடந்துகொண்டிருந்தான். முன்னிரவு காலமானதால், சிறிது முன்னுடியே தெரு விளக்குகள் எரிய ஆரம்பித்திருந்தன. வனந்திரங்களிலிருந்து வெளியேறி வரும் பலரக வண்ணப் பறவைகள் போல, தினுசுவாரியான உடைகளுடன் தெருக்களில் நடமாடிக் கொண்டிருந்தனர் ஜனங்கள்.

மாணிக்கம் வில்லியின் வீட்டண்டை நெருங்கினான். தெரு வாசலில் ஒரு புத்தம் புதிய மோட்டார் ஸைக்கிள் நின்றுகொண்டிருந்தது. இதைக் கண்ட மாணிக்கத்துக்கு வியப்பாக இருந்தது. வில்லிக்கு அறிமுகமானவர்களில் யார், மோட்டார் ஸைக்கிள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சிந்தித்துப் பார்த்தான். அப்படி யாரும் அவன் நினைவுக் குழியில் வந்து விழவில்லை. அநேகமாக இந்த மோட்டார் ஸைக்கிள், தலைமறைவாய்த் திரியும் ராகவனுடையதாயிருக்கலாம். அவன்தான், ஆசிரியர் ராமகாந்தன் கொல்லப்படுவதற்கு முன்னுலிருந்தே ஒரு மோட்டார் ஸைக்கிள் வாங்கவேண்டுமென்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான். ராகவன் தான் இப்போது வில்லியிடம் இரகசியமாய்க் காதல் சரஸமாடிக்கொண்டிருப்பான் என மாணிக்கம் நிச்சயித்தான். வில்லியின் வீட்டுவாசலை மிதிப்பதற்கு இன்னும் ஐம்பதுகஜ தூரமே இருந்தது. வேகமாக நடந்துகொண்டே அந்த மோட்டார் ஸைக்களின் பின்புறம் பொருத்தியிருந்த நம்பரை, ஒரு நெருப்புக் குச்சி

யைப் பற்றவைத்து அந்த வெளிச்சத்தில் கூர்ந்து கவனித்தான். MPZ 4032 என்று அதில் பொறிக்கப்பட்டிருந்தது. கால்சட்டைப் பையிலிருந்த கை-குட்டையை எடுத்து வியர்வையால் நனைந்துவிட்டிருந்த முகத்தைத் துடைத்துக்கொண்டு தாழ்வாரப் பக்கம் சென்று உள்ளே என்ன நடக்கிறதென்பதைக் கவனிக்க விரும்பினான். வீட்டினுள்ளே எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்கு குப்பென அணைந்து இரண்டொரு நிமிஷம் கழிந்து மீண்டும் எரிந்தது!

இந்த இரண்டொரு நிமிஷ நேரத்திற்குள், வில்லியின் வீட்டெதிரே நின்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வெகு வேகமாகக் கிளம்பிப்போகும் சப்தம் கேட்டது. துடித்துப் பதறி நிமிர்ந்து பார்த்தான் மாணிக்கம். அதற்குள் அந்த மோட்டார் சைக்கிள் வெகு தொலைவிற்குப் பேய் போலப் பறந்துபோய்விட்டிருந்தது! அந்த சைக்கிளில் போகும் நபர் இன்னாரென்பதை மாணிக்கத்தால் கண்டுபிடிக்க முடியவில்லை! எனினும் அவன் ராகவனாய்த்தான் இருப்பான் எனத் தீர்மானித்தான் மாணிக்கம். ராகவனின் இந்தப்போக்கு மாணிக்கத்துக்கு வியப்பாக இருந்தது. வியப்பு மட்டுமல்ல; பயமாகவும் இருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் புறப்பட்டிருந்தால் ராகவனை வில்லியின் வீட்டில் சந்தித்திருக்கலாமே என வருந்தினான் மாணிக்கம்.

நன்றாக இருட்டிவிட்டது. வில்லியின் வீட்டு வராந்தாவின் மேல் ஏறி நின்றான் மாணிக்கம். கதவு உள்ளுக்குத் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. மெதுவாகக் கதவைத் தட்டினான். தட்டிய இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் கதவு படீரெனத் திறக்கப் பட்டது. உள்ளே குதூகலமாக ஓர் ஆங்கிலப் பாட்டைப் பாடிக் கொண்டிருந்த டைப்பிஸ்ட் வில்லி ஓடிவந்து "அதற்குள்...வந்து விட்டீர்களே? மறுபடியுமா...?" என்று புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தாள்.

வாசலில் மாணிக்கம் வந்து நிற்பதைக் கண்டதும் சட்டெனத் தன் பாட்டை நிறுத்திவிட்டு கற்சிலைபோல் நின்றுவிட்டாள்! அவள் முகம் திடீரென வெளிற ஆரம்பித்தது.

வியப்புடன் மாணிக்கத்தைப் பார்த்தவாறே, "வாருங்கள் மிஸ்டர் மாணிக்கம்! நீங்கள் அநியாயமாகக் கைதாகி, ஆண்டவன் கிருபையால் விடுதலையானதைப் பற்றி எனக்கு ரொம்பவும் சந்தோஷம்!" என்றாள் வில்லி. அவள் குரலில் உண்மையான அனுதாபம் இழைந்திருப்பதுபோலிருந்தது.

பட்டும் படாததுமாகப் புன்முறுவல் பூத்தவாறே அவளுக்கு எதிரில் இருந்த ஒரு நாற்காலியில் வந்து அமர்ந்தான் மாணிக்கம். இருவரும் மௌனமாக நிமிர்ந்து ஒருவரையொருவர் ஊடுருவிப் பார்த்துக்கொண்டனர்.

"மிஸ் லில்லி! சென்ற மூன்று நாட்கள், உன் விஷயத்தில் எப்படிக் கழிந்திருக்கின்றன என்பதைத் தெரிந்து போகவே வந்தேன்!" என்று மெல்லச் சிரித்துக்கொண்டு பேச்சை ஆரம்பித்தான் மாணிக்கம்.

இதைக் கேட்ட லில்லி மெதுவாக முறுவலித்துக்கொண்டாள். "என்னைப் பொறுத்தவரை சென்ற மூன்று நாட்களும் மகா மர்மமாகச் சுழன்றோடி இருக்கிறது என்றே கருதுகிறேன்!" என்றாள்.

மாணிக்கம் மேற்கொண்டு பேச்சை எப்படித் தொடரலாம் எனச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போதே லில்லி மீண்டும் பேச ஆரம்பித்தாள்:

"மிஸ்டர் மாணிக்கம்! நமது ஆசிரியர் ராமகாந்தன் கொல்லப்பட்டதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று மிகவும் சிரத்தையான தொனியில் கேட்டாள். திடீரென அவள் இப்படிக் கேட்டது மாணிக்கத்துக்கு என்னவோ போலிருந்தது.

"அது உனக்குத்தானே நன்றாகத் தெரியும்? லில்லி!...ஆசிரியர் ராமகாந்தனை உதவி ஆசிரியர் ராகவன் கொலை செய்துவிட்டான்!" என்று சொல்லி விட்டு மாணிக்கம் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

லில்லியின் சிவந்த முகம் விகாரமடைந்தது.

"ஏன்? ஏன் ராகவன் அவரைக் கொல்லவேண்டும்?" என்று லில்லி ஆத்திரத்தோடும் அழுகையோடும் கேட்டாள்.

"ஆசிரியர் ராமகாந்தனிடமிருந்து அந்த இரகசியக் கடிதங்களின் பைலைத் திருடிக்கொள்ள விரும்பினான் ராகவன்! அந்த இரகசியக் கடிதங்களின் பைல் கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு அசோக்லால் கோஷ்டியினரை மிரட்டி லக்ஷக்கணக்கான ரூபாய்கள் சம்பாதிக்கலாமல்லவா?" என்றான் மாணிக்கம் அவள் முகத்தை ஊடுருவிப் பார்த்துக்கொண்டே.

"அவருக்கெதற்கு அவ்வளவு பணம்?" என்று லில்லி கோபத்தோடு பதறியவாறு கேட்டாள்.

"உன் காதலுக்குக் காணிக்கை செலுத்துவதற்காக!" என்ற அவனின் பதிலைக்கேட்டதும் லில்லியின் முகம் வாடியது. பொலபொலவென்று அழுதுவிட்டாள்.

"என் காதல் அவ்வளவு கேவலமானதல்ல! மிஸ்டர் மாணிக்கம்! நீங்கள் நினைப்பது தவறு! நான் ராகவனை உயிருக்குயிராய்க் காதலித்தேன் என்பது வாஸ்தவம்தான்! ஆனால்...அவர் குணந்தான் உங்களுக்குத்தெரியுமே! விலைப்பெண்ணிடம் கூடக் காசு வாங்கிச் செலவழிப்பாரே தவிர எந்தப்பெண்ணுக்கும் ஒரு தம்பிடி கொடுக்கமாட்டார்! அவ்வளவு அழகான உல்லாச வாலிபனிட

மிருந்து எந்தப்பெண்ணும் அவனுடைய மனங்கலந்த காதலை எதிர் பார்ப்பாளே தவிர, பணத்தை எதிர்பார்க்கமாட்டாள்! நானே என் மாதச் சம்பளத்திலிருந்து அவருடைய ஊதாரிச் செலவிற்கு எத்தனையோமுறை ஆசையோடு பணம் கொடுத்திருக்கிறேன்!" என்றாள் வில்லி துயரம் கலந்த குரலில். அவளுடைய கருவிழிகளின் கீழே கண்ணீர்க் கோடுகள் சுவடு கட்டியிருந்தன.

"வில்வி! ராகவன் இந்த ஊரில்தான் தலைமறைவாய் இருக்கிறான்! எப்படியும் அவனைக் கண்டு பிடித்து விடுவேன்!" என்றான் மாணிக்கம்.

"உங்களால் ராகவனைக் கண்டு பிடிக்கவே முடியாது!" என்று வெறிபிடித்தவள்போல் கத்திய வில்லி, மாணிக்கத்தை ஏறிட்டுப் பார்த்து, "ராகவன் செத்துப் போய்விட்டார்!" என்று உரத்த குரலில் அலறிவிட்டாள்! அவள் நாசுக்கான மேனி, வெட வெட வென்று நடுங்கியது.

"என்ன! ராகவன் செத்துவிட்டானா?" என்று வியப்பின் உச்சநிலைத் தொனியில் கூவியே விட்டான் மாணிக்கம்.

"ஏன்? இந்த விஷயம் உங்களுக்குத் தெரியாதா?" என்று ஆச்சரியத்துடன் தணிந்த குரலில் கேட்டாள் வில்லி.

"வில்லி! என் மூளைக் குழம்புகிறது. நீ என்ன சொல்கிறாய்?" என்று படபடப்புடன் கேட்டான் மாணிக்கம்.

"மிஸ்டர் மாணிக்கம்! ஆசிரியர் ராமகாந்தன் கொலை செய்யப்பட்ட நாளிலிருந்தே ராகவனைக் காணோம்! அவர் இந்த ஊரிலேயே இல்லையென்று கேள்விப்பட்டேன். ஆகையால் அவரும் கொல்லப்பட்டுத்தான் இருப்பார்......அசோக்லாவின் ஆட்கள் என் ராகவனைக் கொன்று விட்டார்கள்! ஆசிரியர் ராம காந்தனைவிட உதவி ஆசிரியர் ராகவனைத்தான் அவர்கள் அதிகம் வெறுத்தார்கள்! இரகசியக் கடிதங்களை உடனே போலீஸிடம் கொடுத்துத் தூக்குமேடைக்கு அனுப்பிவிடுவாரோ என்று பயந்தார்கள்! ஐயோ என் ராகவன்!..." என்று கதறினாள் வில்லி.

அவளுடைய அழுகையிலும் துயரத்திலும் அலாதியான ஒரு வெறுப்பும் ஆத்திரமும் கலந்திருந்தது.

"நிஜமாகவா சொல்லுகிறாய், வில்லி?"

"நான் சொல்லுகிறபடிதான் நடந்திருக்கும்! ராகவனை அவர்கள் உயிரோடு விட்டிருக்கமாட்டார்கள்! அவரை நீங்கள் தேடிக் கண்டு பிடிக்க முயன்றால் உங்களையும் கொலை செய்து விடுவார்கள்!" என்று வில்லி புழுப்போலத் துடித்தாள்.

"அப்படியானால் ஆசிரியர் ராமகாந்தனைக் கொன்றவன் ராகவனல்ல, அசோக்லாவின் ஆட்கள்தான் என்கிறாயா?"

"ஆமாம்!"

"என் அவர்கள் முன்பே, ஆசிரியர் ராமகாந்தனை கொலை செய்திருக்கக்கூடாது? இத்தனை வருஷங்களாக என் உயிரோடு விட்டிருந்தார்கள்?"

"ஆசிரியரின் தந்திரம் உங்களுக்குத் தெரியாதா? தான் கொலை செய்யப்பட்டால், சம்பந்தப்பட்டவர்களின் சதிகள் பற்றிய இரகசியக் கடிதங்கள் அடங்கிய பைல் மறு நிமிஷமே போலீஸுக்குப் போய்ச் சேரும்படி இரகசியமாக ஏற்பாடு செய்திருப்பதாக ஆசிரியர் ராமகாந்தன் எதிரிகளுக்கு எச்சரித்திருந்தார். அதனால் அசோக்லாவின் ஆட்கள் ஆசிரியரைக் கொலை செய்ய இத்தனை காலமும் பயந்துகொண்டிருந்தார்கள். ஆசிரியரைக் கொலை செய்துவிட்டால், ஆசிரியரின் ஏற்பாட்டின்படி அவரது நம்பிக்கையான ஆள் ஒருவன் இரகசியக் கடிதங்களின் பைலை எடுத்துக் கொண்டு போய் போலீஸிடம் கொடுத்துவிடுவான் என்று நடுங்கிக் கொண்டிருந்தார்கள்!"

"ஆசிரியரின் அந்த நம்பிக்கையான ஆள் ராகவன் என்கிறாய்?"

"ஆமாம்! அதனால்தான் ராகவனை எதிரிகள் அதிசமாக வெறுத்தார்கள்!"

"ஆசிரியரின் வீட்டிலிருந்து இரகசியக் கடிதங்களை ராகவன் திருடிக்கொண்டு போய்விட்டான்! அது தெரிந்ததும் அசோக்லாவின் ஆட்கள் நிர்ப்பயமாக ஆசிரியரை வீட்டினுள் கொலை செய்து போட்டுவிட்டு, ராகவனையும் பிடித்துக் கொன்றுவிட்டார்கள் என்கிறாய்?"

"ஆமாம்; அப்படித்தான் நடந்திருக்கவேண்டும்!"

"அப்படியானால் அசோக்லாவின் கோஷ்டியினர் இன்னும் ஏன் இரகசியக் கடிதங்களின் 'பைலை'த் தேடி அலைகிறார்கள்? அதைக் கண்டுபிடிக்க முயலும் என்னையும் தீர்த்துக்கட்டி விடுவதாக மிரட்டுகிறார்கள்? ராகவனைக் கொன்றிருந்தால் அவனிடமிருந்த அந்த ரகசியப் பைலையும் பறித்துக்கொண்டிருப்பார்களே!"

"ராகவனிடம் அந்த இரகசியப் பைல் இல்லாதிருந்திருக்கலாம்! அது எங்கிருக்கிறதென்று தெரிந்துகொள்ள ராகவனை எங்கோ தலைமறைவாய் அடைத்து வைத்துப் பயமுறுத்திச் சித்திரவதை செய்துகொண்டிருப்பார்கள்!" என்று லில்லி பரிதாபமாகக் கூவினாள்.

மாணிக்கத்தின் மூளை இதற்கு மேல் வேலை செய்ய மறுத்துவிட்டது. பயங்கரக் குழப்ப நிலையில் தவித்துக்கொண்டிருந்தான் அவன்.

"லில்லி, ஆசிரியர் ராமகாந்தன் கொலை நடந்த பிறகு உண்மையிலேயே நீ ராகவனைப் பார்க்கவில்லையா?" என்று சிறிது அழுத்தமான குரலில் கேட்டான் மாணிக்கம்.

"அப்படியானால் இவ்வளவுநேரம் நான் பொய் சொல்கிறேன் என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்றாள் வில்லி ஆத்திரத்துடன்.

மாணிக்கத்தின் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. சிறிது நேரத்துக்கு முன்னால் இவள் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் இரகசியமாகப் போனது யார்? அந்த நபர் யார்? அவன் ராகவன் இல்லையா?—வில்லியின் முகத்தைப் பார்க்கவே அவனுக்கு இப்போது பயமாக இருந்தது! அவள் ஒரு பயங்கர மர்மப் பெண்ணாக இப்போதவனுக்குக் காட்சியளித்தாள். ஆசிரியர் ராமகாந்தனை வில்லியும் ராகவனும் சேர்ந்துகொண்டுதான் கொலை செய்திருக்கிறார்களென மாணிக்கம் சந்தேகித்தான். அந்த இரகசியக் கடிதங்கள் அடங்கிய 'பைலை' ராகவன் அபகரிக்கவே இந்தத் துணிகரக் கொலையைச் செய்திருக்கிறான் என அவனுக்குப் பட்டது. இதனாலேயே அவன் இப்போது அந்தப் பைலுடன் தலைமறைவாகச் சுற்றிக்கொண்டிருக்கிறான் என்றும், இரகசியக் கடிதங்களைக் காட்டி அசோக்லாலை மிரட்டிப் பெரும் பணம் பறித்துக் கொண்டு வில்லியோடு அயல்நாட்டிற்குப் புறப்பட்டுப் போய்டுவானென்றும், அவசரப்பட்டு வில்லி அந்த ஊரை விட்டுப் போய்விட்டால் சந்தேகம் கிளம்பும் என்பதற்காகவே அந்த ஊரிலேயே தங்கிக் காலம் கடத்துகிறாள் என்றும் முடிவு செய்தான். இந்த இரகசியத்தை மறைப்பதற்காகவே, தான் ராகவனைத் தேடாமலிருப்பதற்காகவே, இப்போது வில்லி, ராகவன் இறந்துவிட்டான் என தன்னிடம் துணிந்து பொய் கூறுகிறாள் என்று மாணிக்கம் நிச்சயித்தான். இவை போன்ற இன்னும் பல பயங்கரச் சந்தேகங்கள் சூறாவளியாக எழுந்து அவன் மனத்தை அலைக்கழித்தன. தவிர்க்க முடியாத பயத்தால் வெடவெடத்துக் கொண்டிருந்த அவன் மனம் இப்போது கோபத்தால் எரிமலையைப்போலக் குமுற ஆரம்பித்தது.

சட்டெனத் தன் இருப்பிடத்தை விட்டுத் துள்ளியெழுந்து கால்சட்டை ஜேபியிலிருந்த ரிவால்வரைச் சரக்கென வெளியே எடுத்து வில்லியின் நெஞ்சுக்கு நேரே நீட்டிக்கொண்டே, "வில்லி! யாரிடம் உன் சாகஸத்தைக் காட்டுகிறாய்? மரியாதையாகக் கேட்கிறேன்—உண்மையைச் சொல்லிவிடு! ஆசிரியர் ராமகாந்தனை யார் கொன்றது? ராகவன் இப்போது எங்கே இருக்கிறான்? அந்த இரகசியக் கடிதங்கள் அடங்கிய 'பைல்' யாரிடமிருக்கிறது? உடனே இவற்றுக்கு ஒளிக்காமல் பதில் சொல்லிவிடு. என் மீதுள்ள சந்தேகத்தை மாற்றுவதற்காக ஆசிரியர் ராமகாந்தனைக் கொன்ற உண்மைக் கொலையாளியைக் கண்டு பிடித்தாகவேண்டும்! நான் வாஸந்தியுடன் நிர்ப்பயமாக வாழ அந்த இரகசிய கடிதப் பைலைக் கண்டு பிடித்தாகவேண்டும்! உம்; பதில் சொல்! இல்லையானால், இந்த ரிவால்வரில் இருக்கும் ஆறு குண்டுகள் உன்

ஹிருதய இலையை ருசி பார்த்துவிடும்!" என்று வெறிக் குரலில் கர்ஜித்தான் மாணிக்கம்.

லில்லி நிஜமாகவே மிரண்டு போனாள். அவளுடைய அழகிய முகம் விகாரமாகக் கறுத்துச் சுருங்கிவிட்டது. கண்ணையும் வாயையும் அகலமாகத் திறந்து அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். பிறகு துயரம் கலந்த ஒரு அலட்சியமான புன்னகையுடன் அவனை நோக்கிச் சொன்னாள்:

"மிஸ்டர் மாணிக்கம்! உங்களின் இந்தத் திடீர்ச் செய்கையைக் கண்டு நான் மிக மிக வருந்துகிறேன். என்னை நீங்கள் தாராளமாகச் சுட்டுத் தள்ளுங்கள். அதற்கு நான் எவ்விதத் தடையும் செய்யவில்லை. என் உயிருக்குயிரான ராகவன் போன பிறகு நான் மட்டும் என் உயிரோடிருக்கவேண்டும்?...ஆனால், இறப்பதற்கு முன்னால் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிடுகிறேன். அதைக் கேட்டுவிட்டு நீங்கள் என்னை எதுவேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். நீங்கள் உண்மையிலேயே ஆசிரியரைக் கொலை செய்யவில்லையென்றால், எந்த உயிரையும் கொலை செய்த பாவம் இல்லையென்றால், ஒரு நிரபராதியான பெண்ணை இப்போது கொல்லும் பாவம் ஆயுள் முழுதும் உங்கள் மனச்சாட்சியை வருத்த வேண்டாம் என்பதற்காகவே சொல்லுகிறேன். ஆசிரியர் ராமகாந்தன் கொல்லப்பட்டது சம்பந்தமாக எனக்கு உண்மையிலேயே ஒரு தகவலும் தெரியாது. அந்த இரகசியக் கடிதக் கட்டு யாரிடமிருக்கிறது என்பது குறித்தும் எனக்கு யாதொன்றும் தெரியாது. ராகவனை நான் என் மனப்பூர்வமாகக் காதலித்தேன். அவரை என் முழு முதற் தெய்வமாக வைத்துப் பூஜித்தேன். ஆனால் என் காதல் கைகூடாக் காதலாகிவிட்டது. காரணம், ஆசிரியர் ராமகாந்தன் கொல்லப்பட்ட தினத்திலிருந்து இன்றுவரை ராகவன் என்ன ஆனார் என்பதே எனக்குத் தெரியாமலிருக்கிறது. ஆசிரியர் ராமகாந்தனைக் கொலை செய்து அந்தக் கடிதக் கட்டை அவர் திருடியிருந்தால், அது எனக்காகவேதான் செய்யப்பட்டிருக்கும். ஆனால், அவர் அதுபற்றி என்னிடம் ஒரு வார்த்தைகூடக் கூறியதில்லை. சென்ற மூன்று நாட்களாக என்னை வந்து பார்க்கவும் இல்லை. என்னதான் தலைமறைவாய் இருந்தாலும் எனக்காக ஒரு ஜீவனைக் கொலை செய்தவர், என்னைப் பார்க்காமல் இருக்க முடியாது என்பது எனக்கு நன்கு தெரியும்! ஆதலால் ராகவன் உயிரோடிருக்க மாட்டார் என்றே நான் நிச்சயிக்கிறேன். ஆசிரியர் ராமகாந்தனைக் கொலை செய்தவர்களே அவரையும் கொன்றிருப்பார்கள் என்றே எனக்குப் படுகிறது! அதனால்தான் நேற்று முதல் ஒரு சபதத்தைச் செய்துகொண்டு, என் அன்புக் காதலர் ராகவனைக் கொன்ற பேர்வழியை எந்த விதத்திலும் கண்டு பிடித்து அவனை என் கையாலேயே குத்திக்கொல்ல முடிவு செய்திருக்

கிறேன். அந்த சபதத்தின் ஆரம்பச் செயலாக இன்று மாலை ஒரு நபரைச் சந்தித்து உளவறிந்திருக்கிறேன். இன்னும் எனக்குச் சரியான தகவல் கிடைக்கவில்லை. அது தெரிந்துவிட்டால்—அதாவது நீங்களே என் ராகவனைக் கொன்றிருந்தாலும்கூட—இதோ இந்தப் புத்தம் புதிய கத்திக்குப் புது விருந்து வைத்துவிடுவேன்!" என்று ஆக்ரோஷமாகக் கூவிக்கொண்டே ஈவிச்சேரின் அடியிலிருந்து பளபளவென மின்னும் ஒரு குத்துக் கத்தியை 'சரக்' கென எடுத்து மாணிக்கத்தின் முகத்துக்கு நேரே நீட்டினாள் வில்வி.

மாணிக்கத்தின் உடல் கிடுகிடுவென ஆட்டங்கொண்டது. ரிவால்வரை இறுகப்பற்றி நீட்டிக்கொண்டிருந்த அவன் வலது கரம் சோர்ந்து துவண்டு தொங்கிவிட்டது.

"வில்வி! என்னை மன்னித்து விடு. ஆத்திரத்தில் ஏதோ பேசிவிட்டேன்!" என்று தணிவானக் குரலில் தடுமாறிக் கூறிக்கொண்டே நாற்காலியில் போய் 'தொப்'பெனச் சாய்ந்தான் மாணிக்கம்.

வில்வி தலைகுனிந்த வண்ணம் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தாள். சிறிது நேரம் அவர்களிடையே மௌனம் நிலவியது.

"வில்வி! உன்னைப் பூரணமாக நம்புகிறேன். அந்த இரகசியக் கடிதங்கள் அடங்கிய 'பைல்' யாரிட மிருக்கிறதென நீ சந்தேகப்படுகிறாய் என்று சொல்ல முடியுமா?"—மாணிக்கம் தாழ்ந்த தொனியில் கேட்டான்.

"அது பற்றிய என் ஊகத்தைச் சொல்கிறேன்; ஆச்சரியப்படாமல் கேளுங்கள். அந்தக் கடிதக்கட்டு அநேகமாக இப்போது ஆசிரியரின் மனைவி நளினியின் கைவசம் தான் இருக்கிறதென நினைக்கிறேன்! ஏனென்றால் அதை அவள் அசோக்லாவிடம் பெரிய தொகையொன்றை வாங்கிக்கொண்டு கொடுத்துவிட முயன்றுகொண்டிருக்கிறாளாம்! பணத்திற்காக இல்லையென்றாலும், தன் கணவனுக்கு நேர்ந்த கதி தனக்கும் நேர்ந்துவிடக் கூடாதே என்று பயந்து அதை அவள் அசோக்லாவிடம் கொடுத்துவிடலாம்! கணவனின் கொலைக்குப் பிறகு அவள் ஒரே யடியாகப் பீதியடைந்திருக்கிறாள்! அசோக்லாவின் பகையை மாற்றி அவனைச் சமாதானப்படுத்த அவள் என்ன வேண்டுமானாலும், செய்வாள்!" என்றாள் வில்வி.

"ஹா! அப்படியா? இதோ, இந்த நிமிஷமே அவளைப் போய் என்ன செய்கிறேன் பார்!" என்று கூவிக்கொண்டே பாய்ந்தெழுந்து வெளியே ஓடினான் மாணிக்கம். அப்படி ஓடிய வேகத்தில், வலது கையில் வைத்துக்கொண்டிருந்த ரிவால்வர் நாற்காலியின் பின்புறம் நழுவி விழுந்துவிட்டதை அவன் கவனிக்கவில்லை!

## 6

# அவளிடமா? இவளிடமா?



**வா**யுவேகமாக நடந்துகொண்டிருந்தான் மாணிக்கம்.

இரவு மணி பத்தாகிவிட்டது. பணபலத்தைக் கொண்டு இரவுக் கால இன்பங்களை அனுபவிக்கக் கொடுத்துவைத்தவர்களைத் தவிர பாக்கிப்பேரெல்லாம் படுத்து உறங்கும் நேரம் அது. அவ்வப்போது அலறிக்கொண்டு போகும் கார்களைத் தவிர்த்து, அந்தப் பாதை வெறிச்சோடிப்போய்க் கிடந்தது. மயானத்தில் மண்டை ஓட்டைத் தோண்டி எடுக்கப்போகும் மந்திரக்காரனைப்போல வெகு வேகமாக நடந்துகொண்டிருந்தான் மாணிக்கம்.

ஆசிரியர் ராமகாந்தன் இறந்து இன்றோடு நான்கு நாட்களாகின்றன. அவன் வீட்டில் பாய்ந்த அவனுடைய பச்சை இரத்தம் இன்னுங்கூட காய்ந்திருக்காது. அப்படியிருக்க அவன் மனைவி நளினி, பணத்துக்கு ஆசைப்பட்டு அந்த இரகசியப் பைலை எதிரிகளிடம் விற்க முயன்றுகொண்டிருக்கிறாளாம்—இப்படிக் கூறுகிறாள் வில்லி! இதை எப்படி நம்புவது? ஏன் நம்பக்கூடாது? பணத்தைக் கண்டால் பிணமும் வாயைத் திறக்குமாமே! எனினும், வில்லியின் பேச்சில் மாணிக்கத்துக்குப் பூரண நம்பிக்கை ஏற்படவில்லை. அவள் கூறியதுபோல ராகவன் இறந்திருக்க மாட்டான் என்றே அவனுக்குப் பட்டது. இந்தத் தெளிவு இப்போதுதான் ஏற்படுகிறதே தவிர, சிறிது நேரத்திற்கு முன்னால் வில்லியின் வீட்டிலிருக்கும்போது அவனுக்கு உண்டாகவில்லை! இளகிய மனமும், இரக்கக் குணமும் உள்ள மாணிக்கம் இப்படித்தான் சில சமயங்களில் முட்டாள்தனமாக நடந்துகொள்வது வழக்கம். அதேபோலத்தான் இப்போதும் வில்லியின் உணர்ச்சிகரமான நடிப்புப் பேச்சை நம்பி ஏமாந்து வந்துவிட்டிருக்கிறான்! ஒருவேளை வில்லி சொன்னது அவ்வளவும் உண்மையாக இருந்துவிட்டால்?——

மாணிக்கம் வேகமாக நடந்தான். நளினியின் வீடு சமீபித்து விட்டது. அந்த வீட்டை நெருங்க நெருங்க அவன் கால்கள் பின்னுக்கு இழுத்தன. மனத்தில் இனந்தெரியாத ஒரு பயம் கவ்விப் பற்றிக்கொண்டது. சென்ற நான்கு நாட்களுக்கு முன்னால், அவன் இந்த வீட்டுக்கு வந்தபோது ஆசிரியர் ராமகாந்தன் சுடப்பட்டுக் கிடந்தான். இப்போது மீண்டும் அங்கு போகிறான். இன்று அந்த வீட்டில் அவனுக்காக எத்தகையப் பயங்கரக் காட்சி காத்துக்கொண்டிருக்கிறதோ! ஒருவேளை நளினியே அவனெதிரில் சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடக்கலாம்! அல்லது ராகவன் பிணமாய்க் கிடந்தாலும் கிடக்கலாம்!......இவ்வாறெல்லாம் எண்ணிய மாணிக்கத்தின் உடலும் உள்ளமும் பீதியால் நிலைகொள்ளாமல் ஆடின. வேகமாக ஓடும் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு பின்னவிடும் கால்களைப் பெயர்த்தெடுத்து ராமகாந்தன் வீட்டு வராந்தாவின் மேல் ஏறி நின்றான்.

வெளிக்கதவு சாத்தப்பட்டுக் கிடந்தது. மெதுவாகத் தட்டத் தன் வலக் கரத்தைத் தூக்கினான். திடீரென அவனுக்கொரு எண்ணம் உதித்தது. சடக்கெனக் குனிந்து தன் கால் சட்டைப் பையில் கையைவிட்டுத் துழாவினான். அவன் உயிர்போல இருந்த ரிவால்வரைக் காணோம்! லில்லியின் வீட்டில் அதை மறந்து வைத்துவிட்டு வந்தது இப்போது தான் அவனுக்கு நினைவு வந்தது. அந்த ரிவால்வர் இல்லாமல் அவ்வீட்டினுள் நுழைய அவனுக்குத் தைரியம் வரவில்லை. வந்த வழியே திரும்பிப் போய்விடலாமா என ஒரு கணம் சிந்தித்தான். அது அத்தனை உசிதமாக அவனுக்குப் படவில்லை. என்ன வந்தாலும் வரட்டுமென, வாசற்கதவை மெதுவாகத் தட்டினான்.

கதவு தட்டப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் விதவைக் கோலத்துடன் நளினி ஓடிவந்து கதவைத் திறந்தாள். அங்கு மாணிக்கம் நின்றுகொண்டிருப்பதைக் கண்ட நளினியின் முகம் பயங்கரமாக மாறிக் கறுத்தது. இதைக் கவனியாதவன்போல மெல்ல முறுவலித்துக்கொண்டே உள்ளே நுழைந்தான் மாணிக்கம்.

மறுகணம் நளினி கதவைப் படீரெனச் சாத்தித் தாழிட்டுவிட்டு சடக்கெனத் திரும்பி அந்தக் கதவின்மீதே சாய்ந்துகொண்டு "மிஸ்டர் மாணிக்கம்! அப்படியே அசையாமல் நில்லுங்கள்!" என உரக்கக் கூவினாள்.

அவளின் இந்தத் திடீர்க் கர்ஜனையைக் கேட்டுக் குலைநடுக்கம் கொண்டுவிட்ட மாணிக்கம், மளுக்கெனத் திரும்பிப் பார்த்தான். கோபாவேசக் கோலத்தில் கதவின்மேல் சாய்ந்து நின்றுகொண்டிருந்த நளினியின் வலக் கரத்தில் ஒரு கூர்மையான குத்துவாள் இருந்தது!

இதைக் கண்ட மாணிக்கம் உண்மையிலேயே நடுநடுங்கிவிட்டான். அவனுடைய களைபொருந்திய அழகிய முகம் பேயறைந்ததுபோல கன்றிக் கறுத்துவிட்டது.

"மிஸ்டர் கொலைகார மாணிக்கம்! என்னை விதவையாக்கிவிட்ட கிராதகா! சரியான நேரத்தில் வந்து என்னை நீ சந்தித்திருக்கிறாய்! குழந்தையைக் கொன்ற பாம்பு, பாம்பாட்டியிடம் வந்து பல்லைப் பிடுங்கிக்கொள்ளுமாமே, அதைப்போல இப்போது என்னிடம் வந்து அகப்பட்டுக்கொண்டாய்! மாலையிட்ட என் கணவனின் மார்பிலே குண்டுகளைப் பாய்ச்சி குருதி கொட்டக் கொட்டக் கொன்ற உன் கல் நெஞ்சை இதோ என் கையிலிருக்கும் குத்துவாளால், உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வதுபோல் ஆசிரியரையே கொன்ற உன்னை, அணு அணு வாகக் குத்திச் சாகடிக்கப் போகிறேன்! தூக்கு மேடையில் ஏறவேண்டிய நீ, போலீஸாரிடமிருந்து தப்பித்துக் கொண்டதாக இதுவரை மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம். அந்த எண்ணத்தை இந்த நிமிஷமே நீ மறந்துவிடவேண்டும். என் கணவனை எப்படிக் கருணை யில்லாமல் கொன்று என்னை விதவையாக்கி யிருக்கிறாயோ அதேபோல இப்போது உன் உயிரைப் பொசுக்கி, உன் காதலி வாஸந்தியை மாங்கல்யம் ஏற அமங்கலியாக ஆக்கப் போகிறேன்!" என்று பற்களை நறநறவெனக் கடித்துக் கூச்சலிட்டுக் கொண்டே நீட்டிய கத்தியுடன் அவன் எதிரே நடந்து வந்தாள் நளினி. அவளுடைய நீண்ட அளகபாரம் அதி கோரமாக அவிழ்ந்து உடம்பெல்லாம் புரண்டு கொண்டிருந்தது. கணவனை இழந்த ஆத்திரத்தில் மதுரையைச் சுட்டெரிக்க நின்ற கண்ணகி தெய்வம் போல் தலைவிரி கோலமாய் நின்றாள் அவள்!

இவ்வளவு நேரம் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்த மாணிக்கம், இப்போது சாவை நிச்சயப்படுத்திக் கொண்டவனைப்போல, நளினியைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்துவிட்டு, பக்கத்தில் கிடந்த ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அதில் உட்கார்ந்துகொண்டு, சாவதானமாகத் தலையை நிமிர்த்தி அவளைப் பட்டும் படாததுமாகப் பார்த்தான். அவனுடைய இரண்டு கைகளும் கோட்டுப் பித்தான்களை மளமளவெனக் கழற்றிக்கொண்டிருந்தன.

"என் மரியாதைக்குப் பாத்திரமான நளினி! இதோ, இந்த வெள்ளை உள்ளங்கொண்டவனின் தூய நெஞ்சைத் திறந்து காட்டுகிறேன்! உன் கோபந் தீர அதைத் துளைத்துப் பிளந்து சாந்தியடை! ஆனால் அந்த வேலையைச் செய்வதற்கு முன்னால், நான் கூறப் போகும் இரண்டொரு வார்த்தைகளை முழு கவனத்துடன் கேட்டு அவற்றை உன் இதயத்தில் பதித்துக்கொள்!......என் அன்புக்குரிய நண்பனான ஆசிரியர் ராமகாந்தனின் கொலைக்கு நான் கடுகளவும் சம்பந்தப்பட்டவனல்ல. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சேர்ந்து சதி

செய்து என்னை உன் கண்களுக்குக் கொலைகாரனுகக் காட்டி விட்டிருக்கிறது! ஆனுல் உண்மையில் நான் கொலைகாரனல்ல; இதை நீ முழு மனத்துடன் நம்பவேண்டும். சட்டமும் போலீசும் என் தூய உள்ளத்தை நம்பி விடுதலை அளித்து விட்டது. ஆனுல் பலகாலம் என்னை அறிந்த நீ அதைப் புரிந்து கொள்ளாமலிருப்பது பற்றித்தான் நான் பெரும் வேதனை யடைகிறேன். அன்புக் கணவனை அநியாயமாக இழந்த எந்தப் பெண்ணும் உன்னைப் போலத்தான் நிதான மிழப்பாள் என்பது எனக்குநன்ருகத்தெரியும். ஆயினும் அது அத்தனை உசிதமல்லவன்றே எனக்குத்தோன்றுகிறது. சென்ற மூன்று நாட்களாக நான் அனுபவித்த மனவேதனையைப் போல வேறு எவனுவது அனுபவித்திருந்தால் அவன் நிச்சயம் தன்னைத் தற்கொலை செய்து கொள்வான் ஆனுல் நான் அப்படிச் செய்து கொள்ள விரும்பவில்லை. காரணம், நான் இந்த உலகத்தில் வாழ்வது, கேவலம், உண்பதற்கும், உறங்குவதற்கும், சுகங்களை அனுபவிப்பதற்கும் மட்டுமல்ல; எனக்கென சில லட்சியங்களை வகுத்து வைத்திருக்கிறேன். அவற்றுக்காகவே நான் வாழ்ந்து வருகிறேன். அந்த லட்சியங்களில் ஒன்ருக, சமீபத்தில் சேர்த்துக் கொண்டிருப்பது, உன் கணவனைக் கொலை செய்த நபரை—ஆசிரியர் ராமகாந்தனைக் கொன்ற—கிராதகனை கண்டு பிடிக்க வேண்டும் என்பதுமாகும்! இவற்றுக்கெல்லாம் இடந்தராமல் என்னைக் கொன்றுவிட நீ நினைத்தால், தாராளமாக அதை இப்போதே செய்து விடு. காரணம், இப்போது நான் நிராயுதபாணியாயிருக் கிறேன்! இதுதான் உன் பழி தீர்க்கும் படலத்திற்குச் சரியான சந்தர்ப்பம்! என் நிற்கிருய்? உன் கையிலிருக்கும் கத்திக்கு உடனே வேலை கொடு. அது என் நெஞ்சுக் குழியிலிருக்கும் தூய இரத்தத் தில் குளித்து புனிதமடையட்டும்!"—மாணிக்கம் ரொம்பவும் நிதான மாக ஒவ்வொரு வார்த்தையாய் இப்படிச் சொல்லி நிறுத்தினுன்.

ஊழிக்கால மரண தேவதையைப்போல் ஓங்கார வெறியுடன் கதவின்மேல் சாய்ந்து நின்று கொண்டிருந்த நளினி, நீட்டிப் பிடித் துக் கொண்டிருந்த கத்தியைக் கீழே நழுவ விட்டுவிட்டு, சோர் வுடன் தலை குனிந்து தரையில் குந்திக் கொண்டாள்! அவளுடைய அழகிய அகன்ற விழிகளிலிருந்து ஆற்றுப்பெருக்கு போல் கண்ணீர் வழிந்தோடியது.

மாணிக்கம் மகாஞானியைப் போல அவளையே இமை புரட் டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த அறையில் பூரண நிசப்தம் நிலவியிருந்தது.

தலை குனிந்திருந்த நளினி மெல்லத் தலை நிமிர்ந்து, "மிஸ்டர் மாணிக்கம்! என்னை மன்னித்து விடுங்கள்!" என்று தழுதழுத்தக் குரலில் கூறினுள்.

"மன்னிக்கவேண்டியபெரிய குற்றமொன்றையும் நீ செய்து விடவில்லை. அக்கிரமமாகக் கணவன் கொலை செய்யப்பட்ட எந்த விதவைப் பெண்ணும் இப்படி ஆத்திரப் படுவது சகஜமே! நான் இதை முன்னமே எதிர்பார்த்துத்தான் இருந்தேன்!" என்றான் மாணிக்கம் அமைதியான குரலில்.

"இருந்தாலும் என்னுடைய இந்த வெறித் துடிப்பு வெட்கப் படவேண்டிய ஒன்றுதான்!" என்றாள் நளினி.

"அது போகட்டும். நான் இப்போது உன்னிடம் ஒரு முக்கிய விஷயம் பற்றி வந்தேன்!" என்று கூறிக்கொண்டே நாற்காலியி லிருந்து நிமிர்ந்து உட்கார்ந்தான் மாணிக்கம்.

"என்ன விஷயம்?" என்று சாதாரணமாகக் கேட்டாள் நளினி.

"ஆசிரியர் ராமகாந்தனை, என்னைத் தவிர, வேறு யார் கொலை செய்திருப்பார்கள் என்று நீ நினைக்கிறாய்?" என்றான் மாணிக்கம்.

இந்தக் கேள்விக்கு நளினி உடனே பதில் சொல்லாமல் சிறிது தயங்கினாள். அவள் முகம் கூட இப்போது ஒரு மாதிரியாக மாறி விட்டது. அளவற்ற துயரமும் குழப்பமும் அந்தப் பசுமையான யௌவன முகத்தில் திரண்டது. இந்தத் தடுமாற்றத்தைச் சடக் கென மாற்றிக்கொண்டு பேசினாள் நளினி.

"எனக்கு அப்படி யார் மீதும் இன்னும் நிச்சய சந்தேகம் விழவில்லை!"

"அசோக்லாவின் கையாட்கள் ஆசிரியர் ராமகாந்தனைக் கொன்றிருக்கலாம் அல்லவா?"

"இருக்கலாம்!"

"ஒருவேளை, அந்த இரகசியக் கடிதக் கட்டைக் கைப்பற்றிப் பணமாக்கும் நோக்கத்துடன் ராகவனும் இந்தக் கொலையில் ஈடுபட் டிருக்கலாம்! நீ என்ன சொல்கிறாய்?"

நளினி சிறிதுநேரம் மௌனம் சாதித்தாள். மாணிக்கம் அவ ளைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தான்.

"என் கணவரை ராகவன் கொலைசெய்திருப்பான் என நான் நம்பவில்லை!" என்றாள், ஆசிரியர் ராமகாந்தனின் விதவை மனைவி நளினி.

"எதைக்கொண்டு இந்த முடிவுக்கு வந்திருக்கிறாய்?"

"எனது இந்த எண்ணத்துக்கு எந்தவித ஆதாரமும் இல்லா விட்டாலும், ராகவன்மீது சந்தேகம் கொள்ள என்னால் இயல வில்லை! ஏனெனில் என் கணவருக்கும் ராகவனுக்கும் அந்நியோன் னிய நட்பு இருந்தது. ஒருவேளை தான் கொலை செய்யப்பட்டால்

அதற்கு ராகவன் பழிவாங்கவேண்டுமென்றும் 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தித் தனக்குப் பின் தன் லட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் தன் குடும்பத்தை அதாவது என்னைக் காப்பாற்ற வேண்டுமெனவும் என் கணவர் ஒருநாள் ராகவனிடம் சொன்னார்!"

"ஆசிரியர் ராமகாந்தன் கொலையுண்ட பிறகு ராகவனை நீ சந்தித்தாயா?"

"இல்லை."

"அவன்தான் ஆசிரியரைக் கொலை செய்துவிட்டு அந்தக் கடிதக்கட்டுடன் தலைமறைவாய் இருக்கிறான் என நான் நினைக்கிறேன். காரணம், நானும் சென்ற நான்கு நாட்களாக அவனைப் பார்க்கவில்லை."

நளினி மௌனமாக இருந்தாள். துன்பம் தோய்ந்து சாம்பி வாடிக்கிடந்த அவளது அழகிய முகத்தில் ஆயிரக் கணக்கான உணர்ச்சிகள் சுழித்தோடின.

"இன்று மாலை டைப்பிஸ்ட் வில்லியைச் சந்தித்தேன். அவள் ராகவன் இறந்துவிட்டான் என்று நிச்சயமாகச் சொல்கிறாள்!" என்றான் மாணிக்கம் கடைசியாக.

"ஹா! அப்படியா?" என்று திடீரெனக் கூவினாள் நளினி. அடுத்த கணம், "ராகவன் இறந்திருக்கமாட்டான்! ஆசிரியரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அவன் இறந்திருக்கமாட்டான்! ஆசிரியரின் கொலைக்குப் பழிவாங்காமல் அவன், இறந்தே யிருக்க மாட்டான்!" என்றாள்.

"ஆயினும் அவள் பேச்சை நான் நம்பவில்லை!" என்று தணிந்த குரலில் சொன்னான் மாணிக்கம்.

"அந்த ஆங்கிலோ இந்தியப் பெண் வில்லி, பலே பொய்க்காரி! அவள் பேச்சை நம்பாதீர்கள். ஒருகாலத்தில் அவள் ராகவனைக் காதலித்தாள். அவனோடு கொஞ்சிக் குழைந்து பேச வருவாள். ஆபீஸ் நேரத்தில்கூட அவனோடு விளையாட ஆசைப்படுவாள். ரோசமாக நடந்துகொள்வாள். நான் அதை ஆசிரியரிடம் கூறி இரண்டொருமுறை கண்டித்திருக்கிறேன். அந்தக் கோபம் வேறு என்மீது அவளுக்குண்டு. ராகவன் சமீப காலத்தில் அவள் காதலை உதறியெறிந்துவிட்டான். அதனால் ராகவனைக் கொலையாகியிருந்தால், வில்லிதான் அவனைக் கொலை செய்திருப்பாள்! மயங்கி வலியவந்து விழும் ஒரு பெண்ணை 'சீ' என்று ஒரு வாலிபன் அருவருப்போடு உதறித் தள்ளினால், அந்தப் பெண் லேசில் விடமாட்டாள்! ராகவன் நிச்சயம் இறந்திருக்கமாட்டான். அவள்தான் அவனை எங்காவது மறைத்து வைத்திருப்பாள்!" என்று சத்தம் போட்டாள் நளினி.

மாணிக்கத்துக்கு ஒரே குழப்பமாகிவிட்டது. அவன் நெற்றி நரம்புகள் புடைத்தெழுந்துகொண்டன.

"ராகவன் விஷயம் இருக்கட்டும். ஆசிரியரிடமிருந்த அந்த இரகசியக் கடிதப் பைல் இப்போது யாரிடமிருக்கிற தென்பதாவது உனக்குத் தெரியுமா?" என்ருன் மாணிக்கம் நயமான தொனியில்.

"எனக்கும் அதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. என் கணவர் கொலை செய்யப்பட்டதிலிருந்து நான் அந்தப் 'பைலை' இந்த வீட்டில் சல்லடைபோட்டுச் சலித்துத் தேடிப் பார்த்துவிட்டேன். கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் அதைப் போலீசிடம் கொடுத்து பழி தீர்த்திருப்பேன்! ஊருக்கு வெளியே இருக்கும் நமது கிளைக் காரியாலயத்திலும் அதைத் தேடினேன். அகப்படவில்லை!" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னுள் நளினி.

"ராகவன்தான் அதைக் கிளப்பிக்கொண்டு போயிருக்கிருன் என்று நான் நினைக்கிறேன்!" என்ருன் மாணிக்கம்.

"அதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. அந்த லேடி டைப்பிஸ்ட் வில்லிதான் அதைத் திருடிக்கொண்டுபோய் அசோக்லாவின் ஆட்களிடம் கொடுக்க முயற்சிக்கிருள் என எனக்குத் தோன்றுகிறது!" என்ருள் நளினி.

"அப்படியா?" என்று கூவினுன் மாணிக்கம்.

"அப்படித்தான் இருக்கும். ஏனென்ருல், என் கணவர் கொலையாவதற்கு முன்னுல் வில்லியிடம் ரொம்பவும் நெருங்கிப் பழகி வந்தார். பகல் நேரத்தில்தான் அவளுக்கு ஆபீஸில் வேலை இருக்கும்; ஆனுல் இரவு நேரத்தில் ஆசிரியரிடம் என்னவேலை? இதை நான் பல முறை கண்டித்தும் அவர் கேட்கவில்லை. அந்த கவுன்காரிமீது கொண்ட மோகத்தால், அக் கடிதக்கட்டை அவளிடமே அவர் நம்பி கொடுத்து வைத்திருக்கலாம். அவர் கொல்லப்பட்டதும் அது அவளிடமே சிக்கிக்கொண்டிருக்கிறது! ஆசிரியரின் விருப்பப்படி அதை அவள் போலீஸாரிடம் கொடுக்காமல், அசோக்லாவின் ஆட்களிடம் அதிகத் தொகையுள்ளப் பணத்திற்கு விற்க முயற்சிக்கிருள்!"

"இது நிச்சயந்தானு?"

"நிச்சயமில்லாவிட்டாலும் உண்மை அதுவாகத்தான் இருக்கும்."

"அப்படியானுல் ராகவன்?"

"அவன் எங்கோ தலைமறைவாகத் திரிகிருன்! அசோக்லாவின் ஆட்களுக்குப் பயந்து பதுங்கிக்கொண்டிருக்கிருன்! கையில் அந்த இரகசியக் கடிதங்களின் 'பைல்' இல்லாததால் அவன் போலீஸாரிடம் விஷயத்தைச் சொல்ல முடியவில்லை போலிருக்

கிறது. ஆசிரியரை அவன்தான் கொலை செய்துவிட்டுத் தலைமறைவாக இருக்கிறான் என்று போலீஸார் சந்தேகிப்பதால், ராகவன் பகிரங்கமாக வெளியே வர முடியவில்லை. வில்லியிடமிருந்து அந்த இரகசியக் கடிதப் பைலைக் கைப்பற்றியதும் அவன் நிச்சயமாகப் போலீஸுக்குத் தகவல் தெரிவித்துவிடுவான். அதுவரை நாம் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருந்துகொள்ள வேண்டும். இல்லையானால் நம் உயிருக்கே ஆபத்து வரும்!"

மாணிக்கம் சிந்தனையில் ஆழ்ந்தான். நளினி அவனையே ஊடுருவிப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"நளினி! எனக்கு நேரமாகிவிட்டது; நான் வருகிறேன். நாளை உயிருடன் இருந்தால் மீண்டும் வந்து சந்திக்கிறேன்!" என்று கூறிக்கொண்டே எழுந்து நின்றான் மாணிக்கம்.

"மிஸ்டர் மாணிக்கம்! நீங்கள் அநாவசியமாக ராகவனைத் தேடிக்கொண்டிருக்கவேண்டாம். என் கணவரைக் கொன்ற கொலையாளியைக் கண்டுபிடிக்கவும் முயலவேண்டாம். ஏனென்றால், இதையறியும் எதிரிகள் உங்கள் உயிரை எப்படியும் போக்கிவிடுவார்கள். அதனால் உங்களை நம்பியிருக்கும் வாஸந்தியும் அநாதையாக ஆக நேரிடும்! நீங்களும் உங்கள் காதலி வாஸந்தியும் இந்த ஊரைவிட்டு வெளியேறித் தலைமறைவாய் இருப்பதே நல்லது. ராகவன் அந்தப் 'பைலை' எப்படியும் வில்லியிடமிருந்து கைப்பற்றிக்கொண்டு வந்துவிடுவான். அந்த இரகசியப் பைல் கிடைத்துவிட்டால் எல்லா மர்மமும் தானாகவே வெளியாகிவிடும்! அப்புறம் நாம் ஆகவேண்டியதைப் பார்த்துக்கொள்ளலாம்!" என்று பேசிக்கொண்டே வாசல்வரை நடந்து வந்தாள் நளினி.

"நளினி! நான் உப்புச்சப்பற்ற வாழ்க்கையை வாழ்ந்துவிட்டு மறைய விரும்பவில்லை. எனக்கென சில லட்சியங்கள் இருக்கின்றன. அவை நிறைவேறும்வரை ஓய்ந்திருக்கமாட்டேன்!" என்று கூறிக்கொண்டே அவள் பதிலையும் எதிர்பார்க்காமல், 'விர்'ரென வெளியேறிப் போய்விட்டான் மாணிக்கம்.



## 7

# பாழடைந்த பங்களாவில்?

நளினியின் வீட்டை விட்டு மாணிக்கம் வெளியே வரும்போது இரவு மணி பத்தே முக்காலாகிவிட்டது. கால் போன போக்கில் நடந்து கொண்டிருந்த மாணிக்கத்துக்கு, இப்போது எங்கே போவது, என்ன செய்வது என்று ஒன்றும் தெரியவில்லை. டைப்பிஸ்ட் லில்லியின் வீட்டுக்கு மறுபடியும் ஒருமுறை போகலாமா என நினைத்தான். இந்த நேரத்தில் அங்கு செல்வது உயிருக்கே ஆபத்து வரும் என அவன் மனம் பயமுறுத்தியது. ஆருயிர்க் காதலி வாஸந்தியையாவது போய் பார்க்கலாமென்றாலும் அதற்கும் இந்த நேரம் சரியில்லை என அவன் நினைத்தான். சட்டென ஒரு எண்ணம் அவன் மனத்தில் முளைத்தது. நளினி கூறியத் தகவலைக் கொண்டு லில்லியிடம் போய் உளவறிவதற்கு முன்னால், ராகவனின் வீட்டுக்குப் போய் பார்த்து வருவது நல்லது என்று நினைத்தான். ராகவன் வீட்டில், அவன் வயதான தாய் ஒருத்தி இருக்கிறாள். அவளைக் கண்டு பேசினால் அவனைப் பற்றிய விவரம் எதாவது கிடைக்கலாம் அல்லவா?

மாணிக்கம், இந்த எண்ணத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு, ராகவன் வீட்டை நோக்கி வெகு வேகமாக நடந்தான். பத்து நிமிஷ நேர நடைக்குப் பின் ராகவன் வீடு வந்தது. சர்வ சுதந்திரத்துடன் வீட்டினுள் நுழைந்தான்.

கூடத்தறையில் சுருண்டு படுத்துக் கிடந்த ராகவனின் தாய், “ஆ, ராகவா...மகனே! வந்துவிட்டாயா?...” என்று துடித்துப் பதறி எழுந்து உட்கார்ந்தாள். வந்திருப்பது மாணிக்கம் என

கண்டு கொண்டதும் ஏமாற்றமடைந்தவளாய், 'ஓ' வென அழ ஆரம்பித்துவிட்டாள் அவள்.

மாணிக்கத்தின் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. அவன் அவ ளுக்கெதிரில் போய் தரையில் உட்கார்ந்துகொண்டான்.

"அழாதே'ம்மா! நான்கூட உன் மகனின் மறைவுக்காக துக்கப்பட்டுக்கொண்டிருப்பவன்தான்" என்று அனுதாபக் குரலில் அந்தக் கிழவிக்குத் தேறுதல் சொன்னான் மாணிக்கம்.

"தம்பீ! அவ்ன், எனக்கு ஒரே பிள்ளை. தந்தையிழந்த பையன். என் சக்திக்கு அதிகமாகவே அவனை நல்லபடி வளர்த் தேன். வயதான காலத்தில் எனக்குப் பாதுகாப்பாய் இருப்பான் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தேன். கடைசியில் எனது அந்த எண்ணத்தில் மண்ணை வாரிப் போட்டு விட்டுப் போய் விட்டான். என் கண்ணுக் கெதிரே அவன் செத்து விட்டிருந் தாலும், ஒருவாறு மனம் தேறிவிடுவேன். ஆனால் அவன் உயி ருடன் இருக்கிறானா? இறந்துவிட்டானா? என்ற தகவலே தெரியா மல் அல்லவா இருக்கிறது! இதுதான் எனக்கு இந்தத் தளர்ந்த வயதில் மரணத் துன்பமாயிருக்கிறது!" என்று பிலாக்கணக் குரலில் கூறி முடித்தாள் அந்தக் கிழவி.

"வருத்தப்படாதே, அம்மா! அவனைக் கண்டு பிடிக்க வேண்டு மென்றுதான் நான் இத்தனை ஆபத்துக்களின் மத்தியிலும் இந்த ஊரில் இருக்கிறேன்! அது இருக்கட்டும். ராகவன், கடைசியாக இங்கிருந்து என்றைக்கு, எந்த நேரத்தில் போனான் என்பது உனக் குத் தெரியுமா?" என்றான் மாணிக்கம்.

"தெரியாமலென்ன? என் மகனைப் பிரிந்து இன்றுடன் ஆறு நாட்களாகின்றன!"

"ஆறு நாட்களா? அவன் மறைந்து ஐந்து நாட்கள்தானே ஆகின்றன!"

"அது என்னமோ! நான் அவனைப் பார்த்து இன்றுடன் ஆறு நாட்களாகின்றன. அந்தப் படுபாவிப் பயல் ராமகாந்தன் கொலைசெய்யப்பட்ட அன்று காலை ஏழு மணிக்கு இங்கிருந்து புறப் பட்டுப் போனான். அப்போது போனவன்தான்; இன்னும் திரும்பி வரவில்லை!" என்று சொல்லி முடிப்பதற்குள் கிழவிக்கு அழுகைப் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

மாணிக்கம், மோவாயைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு, வீட்டுக் கூரையைப் பார்த்தவாறே ஆழ்ந்த யோசனையில் அமிழ்ந் துப் போனான்.

ஆசிரியரைக் கொலை செய்து விட்டு ஓடிவந்த மகனைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்பதற்காக இவ்வாறு அழுது நடிக்கிறாளோ,

அல்லது எங்காவது தன் மகனை மறைத்து வைத்திருப்பாளோ என்று மாணிக்கம் சந்தேகித்தான்.

கிழவி, இதையொன்றையும் கவனியாமல் தன் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டே அங்கிருந்து எழுந்து சமையற் கட்டை நோக்கி நடந்தாள்.

தரையில் உட்கார்ந்திருந்த மாணிக்கம் மெல்ல எழுந்து நின்றான். அந்த அறையைச் சுற்றி வளைத்துப் பார்த்தான். கூடத் தறைக்குப் பக்கத்தில் மற்றுமொரு அறை இருந்தது. அவ்வறையின் கதவு திறந்தே இருந்தது. மாணிக்கம் மெல்ல அந்த அறையினுள் நுழைந்தான்.

அது ராகவனின் படுக்கை அறை. அந்த அறையில், ஒரு சிறிய கட்டில், ஒருமேஜை, ஒரு நாற்காலி, இரண்டு மூன்று பெட்டிகள், ஒரு கண்ணாடி பீரோ, மற்றும் சில சில்லரைச் சாமான்கள் ஆகியவை கிடந்தன. மாணிக்கம் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அதில் உட்கார்ந்து கொண்டு, அவ்வறையிலுள்ள ஒவ்வொரு பொருளையும் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வந்தான். காதலர்களின் மோக லீலைகளை அட்டைப் படங்களாகக் கொண்ட ஆங்கிலக் காதல் நாவல் புத்தகங்கள் இரண்டொன்று மேஜை மீது கிடந்தன. ஒரு துப்பறியும் கதைப் புத்தகமும் இருந்தது. 'அபாய அறிவிப்பு' பிரதிகள் இரண்டொன்று, ஏடுகள் கிழிந்து கிடந்தன. முகம் பார்க்கும் பழைய கண்ணாடி ஒன்றும், புதிய பிளாஸ்டிக் சீப் ஒன்றும் புத்தகங்களுக்கடியில் இருந்தன. அந்தப் புத்தகங்களில் ஒன்றை எடுத்துப் புரட்டிப் பார்த்தான். நாவலில், கதா நாயகியை வர்ணிக்கும் இடங்களும், காதலைப் பற்றிய உபமான, உபமேயங்களும் சிவப்பு மையால் கோடிடப் பட்டிருந்தன. 'மோக வெறியனின் காதல் அனுபவங்கள்' என்ற ஒரு நாவலிலிருந்த கீழ்க்கண்ட வரிகள் சிவப்பு பென்சிலால் இரண்டு முறை அடிக் கோடிடப்பட்டிருந்தன.

"பலவிதமான வர்ணக் கோப்பைகளிலும் ஒரே விதமான சர்பத்தைக் குடிப்பதைப் போன்றதுதான், பலவிதமான பெண்களிடமும் அனுபவிக்கும் காதல்! ஒருவனும் ஒருத்தியும் ஒருவருக்கொருவராக ஆயுள் முழுதும் சேர்ந்து வாழ்வதில்தான் உண்மையான ஆனந்தம் இருக்கிறது. அதவும் வாழ்வில் துன்பப்படுபவளை—இனி வாழ்வு இல்லையென்று இடிந்துபோயிருப்பளைக் காதலித்து அவளோடு வாழ்ந்தால் அதற்கு அலாதியான ஒரு இன்பம் உண்டு. அவள் அவனுக்காகவே தன் சகலத்தையும் தியாகம் செய்து விடுவாள். அதுதான் உண்மையான காதல்! மற்ற பெண்களிடம் காண்பதெல்லாம் வெறும் மோகம்! வெறும் போலி இன்பம்!"

அப் புத்தகத்திலிருந்த இந்த வரிகளைக் கோடிட்டு வைத்திருந்தான் ராகவன். மாணிக்கம் சுற்று முற்றும் பார்த்தான். சமீபத்

தில் அவ்வறை வெள்ளையடிக்கப்பட்டிருந்தது. மேஜையும் நாற்காலியும் சுவரோரம் போடப்பட்டிருந்தன. அந்த அறையிலிருந்த சாமான்களெல்லாம் ஏறக்குறைய சுவரோரமே வைக்கப்பட்டிருந்தன.

மாணிக்கம் ஒவ்வொரு பொருளாகப் பார்த்துக் கொண்டே மேலே நிமிர்ந்தான். மேஜை யோரமிருந்த சுவரில், காகிதப் பென்சிலால் ஏதோ எழுதப் பட்டிருந்தது. மாணிக்கம் எழுந்து நின்று கொண்டு, அங்கு என்ன எழுதப்பட்டிருக்கிற தென்பதைக் கூர்ந்து கவனித்தான்.

ஐந்தாறு இடங்களில், பலதொழில் ஸ்தாபனங்களின் 'போன்' நம்பர்கள் குறிக்கப்பட்டிருந்தன. ரூபாய், அணா, பை இலக்கமிட்டு நூற்றுக் கணக்கான தொகைகளைக் கூட்டியும், பெருக்கியும், வகுத்தும், கழித்தும் இருந்தது. மற்றும் சில இடங்களில், தேதிகளை எழுதி அவற்றை 'டிக் மார்க்' செய்யப்பட்டிருந்தது. இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டு வந்த மாணிக்கம், சட்டெனத் தன் பார்வையை ஓரிடத்தில் கொண்டு போய் அழுத்தினான்! கண்களை நிமிண்டிக் கொண்டு சுவரில் எழுதப் பட்டிருந்த ஐந்தாறு வார்த்தைகளை உன்னிப்பாகப் படித்தான்.

'வில்வி—என் வில்வி—எனது அருமை வில்வி' என்று ஒன்றின் கீழ் ஒன்றாக மூன்று வரிகள் எழுதப்பட்டிருந்தன! அந்த மூன்று வரிகளும் ஒரு நீளக் கோட்டால் அடிக்கப்பட்டிருந்தது!

மாணிக்கம், இந்த ஆறு வார்த்தைகளையும் பலமுறை படித்துப் படித்துப் பார்த்தான். மற்ற இடங்களில் இன்னும் ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா என்று உற்று உற்றுக் கவனித்தான். அந்த வார்த்தைகளைத் தவிர வேறொன்றும் அதில் இருக்கவில்லை.

ராகவன்தான் அந்த வார்த்தைகளை அங்கு எழுதி யிருப்பான். வில்வியின் பெயரை அங்கு அவன் எழுதியிருப்பது பற்றி அதிகமாக ஆச்சரியப்பட வேண்டியதில்லை. காரணம், அவன் அவளைக் காதலித்து வந்தான் என்பது மாணிக்கத்துக்கும் மற்றும் சிலருக்கும் தெரிந்த விஷயமே! காதலர்கள் இப்படிக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் தங்கள் காதலி, காதலன் பெயரை கிறுக்கி வைப்பது சகஜம். மனத்தத்துவ ரீதிப்படி ஆராய்ந்தால், இது அத்தனை அதிசயமான விஷயமுமல்ல! ஆனால் எழுதப்பட்ட சில வார்த்தைகளை எதற்காக அடித்து அழிக்க முயற்சிக்க வேண்டும்? இந்த அடித்தல் அழித்தல் வேலையையும் ராகவனேதான் செய்திருப்பான். அப்படியானால் வில்வியும் ராகவனும் சமீபத்தில் தங்கள் காதல் நூலை அறுத்துக் கொண்டார்களா? அல்லது சின்னஞ் சிறு இன்பப் பிணக்குகளால் அவசரப்பட்டு இப்படி அடித்து விட்டானா?—

மாணிக்கத்தால் எந்த ஒரு நிச்சய முடிவுக்கும் வர முடியவில்லை. மேலும் அந்த அறையை ஆராய்வதில் முனைந்தான் அவன்.

சுவரில் எழுதப் பட்டிருந்த டெலிபோன் நம்பர்களை மீண்டும் ஒரு முறை உற்றுக் கவனித்தான். அவற்றிலே ஒரு நம்பர், ரெயில்வே ஸ்டேஷன் விசாரணை இலாகாவினுடையதா யிருந்தது. ஒருவித குழப்ப நிலையுடன் அவசர அவசரமாக மேஜை டிராயரைத் திறந்தான். அதில் 'அபாய அறிவிப்பு' இதழ்களும், பல துண்டுக் காகிதங்களும் குப்பையாகக் குழம்பிக் கிடந்தன. மேலும் கிண்டிக் கிளறிப் பார்த்தான்.

என்ன ஆச்சரியம்!

இரண்டு புத்தம் புதிய ரெயில்வே முதல் வகுப்பு டிக்கட்டுகள் ஒரு மூலையில் மடங்கிக் கிடந்தன! அவற்றை வெடுக்கென எடுத்து விளக்கு வெளிச்சத்தில் நன்றாகப் பார்த்தான். அவனுடைய அதிர்ஷ்டம், அந்த இரண்டு டிக்கட்டுகளிலும் ஊர் பெயர் அச்சாகி யிருந்த இடத்தில் 'இங்க்' ஊற்றப்பட்டு காகிதம் பிய்ந்து போயிருந் தது! ஆசலால், அந்த டிக்கட், எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்கு வாங்கப்பட்டிருக்கிறதென்பதை அறிய முடியவில்லை. டிக்கட் விநியோகம் செய்யப்பட்ட தேதியையும், மைல் கணக்கையும் ஊன்றிக் கவனித்தான். முன்னூற்றிருபத்தேழு மைல்களுக்கு அப்பாலுள்ள ஏதோ ஒரு ஊருக்கு அவை வாங்கப் பட்டிருந்தன! அப்படியானால் ராகவன் அந்த டிக்கட்டுகளை, அவன் மறைவதற்கு முந்தின நாள் வாங்கியிருக்கிறான்; இந்த முதல் வகுப்பு டிக்கட்டுகளை 'புக்' செய்யவே புக்கிங் ஆபீஸ் போன் நம்பரைச் சுவரில் குறித்து வைத்திருக்கிறான் என்று ஊகித்துக் கொண்டான் மாணிக்கம்.

ஆனால், அந்த டிக்கட்டுகள் உபயோகப் படாமல் போனதன் காரணம்? இரண்டு டிக்கட்டுகள் வாங்க வேண்டிய அவசியம்? ஆசிரியர் ராமகாந்தனைக் கொலை செய்து விட்டு—அல்லது அவன் கொலையுண்டபின்—அந்த இரகசியக் கடிதக் கட்டை கைப்பற்றிக் கொண்டு, தன்னுடைய தாயையும் வெளியூருக்கு அழைத்துப் போய்விடத் திட்டம் போட்டிருந்தானா? இந்த ஊகம் சரியல்ல வென்றே அவனுக்குப் பட்டது. ஏனெனில், ஆபத்தான ஒரு சூழ் நிலையிலிருந்து கொண்டு கண் பார்வை மங்கியிருக்கும் தன் கிழத் தாயாரை உடன் அழைத்துச் செல்வதென்றால் அது சங்கடமான காரியமாயிற்றே! அவ்வாறானால் இரண்டு டிக்கட்டுகள் வாங்க வேண்டிய காரணம்?—

ஒரு வேளை, தன் காதலி லில்லியுடன் வெளியூர் ஓடிவிடத் திட்டம் போட்டிருப்பானோ என்றும் கருதினான். அப்படி எண்ணி யிருந்தால் அது சுலபமாக முடிந்திருக்குமே! பின் என் இந்த டிக் கட்டுகள் உபயோகப் படுத்தாமல் இங்கு கிடக்கின்றன? ஒரு வேளை அந்தக் கடிதக் கட்டை அவன் இன்னும் கைப்பற்றி யிருக்க மாட்டானோ? அல்லது புறப்பட்டுப் போவதற்குள் கொலை செய்யப் பட்டிருப்பானோ?—

அளவுக்கு மீறின சிந்தனையால் மாணிக்கத்தின் மூளை சூடேறி மந்தித்துக் கொண்டது. பேசாமல் அந்த டிக்கட்டுகளைத் தன் கோட் பாக்கட்டுக்குள் வைத்துக்கொண்டு;கூடத்தறைக்கு வந்தான். அந்த டிக்கட்டுகளின் மூலம், ராமகாந்தனைக் கொன்ற பேர்வழியையும், ராகவனின் மர்ம மறைவையும், காணாமற் போயிருக்கும் அந்த இரகசியக் கடிதக் கட்டையும் கண்டு பிடித்து விடலாம் என மாணிக்கம் நம்பினன்!

இந்தச் சமயத்தில், சமயலறையிலிருந்து கையில் காபி டம்ளருடன்;கூடத்தறைக்கு வந்தாள் கிழவி.

"தம்பீ! ரொம்பவும் சோர்ந்து போயிருக்கிறே! இந்தா, இந்தக் காபியைக் குடி!" என்று டம்ளரை நீட்டினாள் கிழவி. மாணிக்கம் காபி டம்ளரைக் கையில் வாங்கி வைத்துக்கொண்டான். தாகம் அவன் தொண்டையை வறட்டியது. எனினும் கிழவி கொடுத்த காபியைக் குடிக்க அவனுக்குத் தைரியம் வரவில்லை. எந்தப் புற்றில் என்ன பாம்பு இருக்குமோ! யார் கண்டார்கள்? மாணிக்கம் இங்கு வரலாம் என முன் கூட்டியே அறிந்து, ராகவன், காபியில் விஷம் கலந்து கொடுத்து விடும்படி தன் தாய்க்குக் கட்டளை யிட்டு விட்டிருந்தால்?—

மாணிக்கம், தன் கையிலிருந்த காபி டம்ளரைப் பக்கத்திலிருந்த ஒரு மேஜை மீது வைத்து விட்டு, "பெரியம்மா! எனக்கு நேரமாகிறது. நான் வருகிறேன். உன் மகன் ராகவனுக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்திருக்காது. தைரியமாயிரு!" என்று கூறிக் கொண்டே சரேலென வெளியே போய்விட்டான்.

அவன், கொடுத்த காபியைக் குடிக்காமல் வைத்து விட்டுப் போனது அந்தக் கிழவியம்மாளுக்குப் பெருத்த ஆச்சரியமாயிருந்தது!

தொட்டால் ஒட்டிக்கொள்ளும்படியான கரிபிருளில் உலகம் புதைந்து கிடந்தது. ரேடியம் பதித்த தன் கை கடியாரத்தில் மணி பார்த்தான் மாணிக்கம். சரியாகப் பன்னிரண்டு மணி. நாய்களும் பேய்களும்கூட நடுங்கும்படியான பயங்கர மௌனச் சூழ்நிலை. பனிக் காலமானதால் குளிர் அளவுக்கு மீறி இருந்தது. தெளிவற்றத் தனமாகத் தயங்கித் தயங்கி நடந்துகொண்டிருந்தான் மாணிக்கம். இந்த நடுச்சாம வேளையில் எங்கே போவதென்றே அவனுக்கு விளங்கவில்லை. அவன் தங்கியிருக்கும் ஹோட்டல் இங்கிருந்து சுமார் மூன்று மைல் தூரத்திலிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை டாக்ஸி ஸ்டாண்டோ ரிக்ஷா ஸ்டாண்டோ ஒன்றுமே கிடையாது. ஹோட்டல் அறைக்குப் போவதென்றால் மூன்று மைல் தூரத்தையும் நடந்தேதான் கடக்கவேண்டும். மாணிக்கம் இருக்கும் நிலையில் இது எவ்வளவு பெரிய ஆபத்தானது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒருபுறம் போலீஸாரின் பலத்த கண்

காணிப்பு; மறுபுறம் அசோக்லாலின் கையாட்கள் அவனைக் கொன்றுபோட்டுவிட எடுத்துக்கொண்டிருக்கும் தீவிர முயற்சி. இவையல்லாமல், தலைமறைவாயிருக்கும் ராகவன்கூட ஒருவேளை மாணிக்கத்தை ஒழித்துக்கட்ட திட்டமிட்டிருக்கலாம். இத்தகைய ஆபத்தான சூழ்நிலையிலிருந்துகொண்டு, கால்நடையாக எப்படி மூன்று மைலைக் கடப்பது? மேலும், இன்று மாலை, அவனிடமிருந்த ஒரே தற்காப்பு ஆயுதமான ரிவால்வரை லில்லியின் வீட்டில் மறந்து வைத்துவிட்டு வந்திருக்கிறான்! அந்த ரிவால்வர் மட்டும் அவன் கையில் இருந்திருந்தால், இந்நேரம் ஒரு கொலை நடந்திருக்கும். ஆமாம்; மடத்தனமாகக் கத்தியைக் காட்டி பயமுறுத்திய நளினியை, கொக்கைச் சுடுவதைப்போலச் சுட்டு வீழ்த்திவிட்டிருப்பான்! நல்ல வேளையாக, அந்த ரிவால்வர் அவனிடம் இல்லாததால் ஒரு பயங்கரக்கொலை தவிர்க்கப்பட்டது! ஆனால் இப்போது மாணிக்கத்தின் நிலை சங்கடமாக அல்லவா ஆய்விட்டிருக்கிறது?......

முன்னும் பின்னும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே மெதுவாக நடந்தான் மாணிக்கம். பூட்ஸ் காலின் நடை ஓசைகூட அந்த நள்ளிரவை மிகைப்படுத்துவதாயிருந்தது.

சிறிதுதூரம் சென்றிருப்பான். சட்டென அவனுக்கொரு எண்ணம் உதித்தது. ராகவன், இந்த ஊரிலேயே தலைமறைவாக இருந்தால், நடுச்சாமமான இவ்வேளையில் அநேகமாக அந்தப் பாழடைந்த கிளைக் காரியாலய கட்டிடத்தில்தான் இருப்பான். இப்போது அங்கு சென்றால், அவன் அங்கு இருந்தாலும் இருப்பான். அப்படி அவனில்லாவிட்டாலும், அந்த வீட்டை, மனம் திருப்தியடையும்வரை சோதனைப்போட்டு, இரகசியக் கடிதப் பைலைத் தேடிப் பார்க்கலாம். அதுமட்டும் கிடைத்துவிட்டால், எல்லா பயங்கரச் சிக்கல்களும் தீர்ந்துவிடும்......

மாணிக்கத்தின் மனத்தில் இப்போது ஒரு அமானுஷ்ய வெறி தைரியம் குடிபுகுந்துகொண்டது. வாயுவேகத்தில் அந்தப் பாழ் அடைந்த பங்களாவை நோக்கி நடந்தான்!

ஊரின் எல்லையைத் தாண்டி, அந்தக் கட்டிடம் இருந்தது. அதனருகில் ஒரு சிறு ஏரியும், அதன் பக்கத்தில் ஒரு சுடுகாடுமிருந்தது. இன்று மாலை கொண்டுவந்து கொளுத்தப்பட்ட ஒரு பிணச் சிதை இப்போது பெருத்த அளவில் எரிந்துகொண்டிருந்தது. ஏரிக்கரைப் புறமிருந்து பிணந்தின்னும் நரிகள் கும்பல் கும்பலாக ஊளையிட்டுக் கொண்டு சுடுகாட்டை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தன. இவையெல்லாம் சேர்ந்து அந்தச் சூன்யமான இருண்ட பகுதியைப் பயங்கரமாக்கின.

மாணிக்கம், அந்தப் பாழடைந்த வீட்டின் பின்புற மதில் சுவரின்மேல் ஏறி உள்ளே குதித்தான். வீட்டின் இடப்புற மிருந்த

ஒரு கதவு செல்லரித்து லொடலொடத்துக்கொண்டிருந்தது. அந்தக் கதவைத் தன் பலங்கொண்டமட்டும் ஆட்டி அசைத்தான். அது மளுக்கென முறிந்து சாய்ந்துவிட்டது. கால் ஓசைகூடக் கேட்காதபடி மெல்ல வீட்டினுள் நுழைந்தான். வீட்டின் உட்புறம் நரகக் குழிபோல இருண்டு கிடந்தது. எலியோ, பூனையோ செத்துக் கிடந்ததால், நாசித்தோல் அறும்படியான துர்நாற்றம் குப் குப் பென வீசியது. வௌவால்களும், திரிஞ்சல்களும் விர் விர்ரெனப் பறந்துகொண்டிருந்தன. சுவர்க்கோழிகள் 'ஙொய்ய்' என்ற பயங்கர ஒலியை இடைவிடாமல் எழுப்பிக்கொண்டிருந்தன.

வேதாந்த இரகசியங்களைத் துருவித் துழாவும் தத்துவஞானியைப்போல, இருட்டில் தட்டுத் தடுமாறி உள்ளே நடந்துசென்றான் மாணிக்கம். அவன் பாதங்களும், முட்டியும், வாசற்படிகளின் மீதும், மேஜை நாற்காலிகளின்மீதும் அவ்வப்போது முட்டி மோதிக்கொண்டன. கைகளிரண்டையும் பரக்க விரித்து இருளைத் துழாவிக்கொண்டே, ஆசிரியர் ராமகாந்தனின் அந்தரங்க அறையினுள் புகுந்தான் மாணிக்கம்.

இந்தச் சமயத்தில்—

வீட்டின் வலப்புறமிருந்த ஒரு அறையில் லொட்டுலொட்டென்று எதையோ தட்டும் சப்தம் கேட்டது! ஐயோ கொலையுண்ட ஆசிரியனின் ஆவியா...? அதைத்தொடர்ந்து கண்ணாடிச் சாமான்களும், மரச்சாமான்களும் பளீர் படாரென உடையும் ஒலியும் எழுந்தது! தட்டுத் தடுமாறி நடந்துகொண்டிருந்த மாணிக்கம் சட்டென நின்றான். அவனுடல் பயத்தால் கிடுகிடுவென ஆடியது. கையும் காலும் நிலைகொள்ளாமல் நடுங்கின. ஹிருதயம் வேகமாக அடித்துக்கொண்டது. மந்தித்துப்போன செவியைக் கூர்மையாக்கி ஒலிவரும் திசைப்பக்கம் திரும்பினான்.

யாரோ இரண்டு மூன்றுபேர் சேர்ந்து கசமசவெனப் பேசுங் குரல் கேட்டது. அதைத்தொடர்ந்து பீரோக்களையும் மேஜைகளையும் அசைத்து இழுத்து நகர்த்தும் சப்தம் வந்தது. பீதியால் மாணிக்கத்தின் உயிரே போய்விடுவதுபோல் தோன்றியது. சரேலெனப் பாய்ந்து சுவரோரம் போய் ஒரு ஒட்டை அலமாரிக்குப் பின்னால் பதுங்கி முடங்கி உட்கார்ந்துகொண்டான்.

சிறிது நேரம் கழித்து இரும்புப்பெட்டியொன்றை உடைக்கும் சப்தம் கேட்டது. "இந்த இரும்புப் பெட்டியில்தான் அந்த ரகசிய பைலை ஆசிரியர் மறைத்துவைத்திருப்பான்! இதிலும் இல்லையென்றால் அந்த ஒட்டை அலமாரிக்குள் இருக்கும்" என்று ஒரு முரடனின் குரல் கேட்டது. அந்த ஒட்டை அலமாரிக்குப் பின்னால் மறைந்திருந்த மாணிக்கத்துக்கு வாய்திறந்து கூச்சலிட வேண்டும் போலிருந்தது. ஆனால் அப்படிச் செய்யவில்லை. நெஞ்சை அழுத்

திப் பிடித்துக்கொண்டு மூச்சைக்கூட வெளியே விடாமல் முடங்கிக் கொண்டிருந்தான். இந்தச் சமயத்தில் மாணிக்கத்திடம் அந்த ரிவால்வர் இருந்திருந்தால்?...அதுதான் வில்வியின் வீட்டில் கிடக்கிறதே! சிந்திக்கும் திறனை இழந்துவிட்டப் பிறகுங்கூட சிந்திக்க முயன்றான் மாணிக்கம்.

யார் இந்தப் பேர்வழிகள் இந்த நேரத்தில் இங்கு வந்து அட்டகாசம் செய்வது? ஒருவேளை ராகவனும் வில்வியுமாக இருக்குமோ! அல்லது அசோக்லாவின் கையாட்கள் இந்தக் கட்டிடத்தைக் கண்டு பிடித்து வந்திருக்கிறார்களோ! அவர்களிடம் இந்த இரகசியக் கடிதக் கட்டு கிடைத்துவிட்டால்?—

மாணிக்கம் மெதுவாகத் தலையைத் தூக்கினான். அவன் தலைக்கு மேலிருந்த மாடித் தளத்தில் யாரோ கிடுகிடுவென இறங்கி ஓடிவரும் சப்தம் கேட்டது. தலையைத் தூக்கிய மாணிக்கம் சடக்கெனத் தரையோடு தரையாகப் படுத்துக்கொண்டான்.

"டேய்! அந்த ஓட்டை அலமாரிக்குப் பின்னால் யாரோ உட்கார்ந்திருக்கிற மாதிரி நிழல் அசையுதே!" என்று ஒரு முரடன் சொல்லிக்கொண்டே கையில் இருந்த நெருப்புக் குச்சியைக் கிழித்துக்கொண்டு மாணிக்கம் இருந்த அலமாரியின் பக்கம் வேகமாய் வந்தான்! அப்போது மாடிப் படிகளின் மத்தியிலிருந்து 'டுமீல்' என்ற துப்பாக்கியின் வேட்டுச் சப்தம் எழுந்து அந்தக் கட்டிடத்தையே கிடுகிடுக்க வைத்தது!

வேட்டுச் சப்தம் எழுந்த மறுகணம், வலப்புறமிருந்த அறையிலிருந்து இரண்டு மூன்றுபேர் திமு திமுவென வெளியே ஓடும் ஒலி கேட்டது! கொஞ்ச நேரத்திற்கெல்லாம், வாசற்புறமிருந்து ஒரு கார் கிளம்பிப் போகும் சப்தம் எழுந்தது! அதி கோரமான பயத்தால் மாணிக்கம் மரண அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தான்.

இப்போது அந்த வீட்டில் பூரண நிசப்தம் நிலவியது. தரையோடு தரையாகப் படுத்துக்கிடந்த மாணிக்கம் மெல்லத் தலையைத் தூக்கி எழுந்து நின்றான். ஆனால் 'டுமீல் டுமீல்' என்று துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே ஒரு மனித உருவம் வேகமாக அவன் முன் வந்து நின்றது! அதன் ஒரு கையில் 'டார்ச்சு லைட்' டிருந்தது!

மறுகணம், மாணிக்கத்தின் முகத்தில் பளிச்சென 'டார்ச் லைட்'டின் வெளிச்சம் வந்து கப்பிப் படிந்தது! பதறித் துடித்தவனாய் நிமிர்ந்து பார்த்தான் மாணிக்கம்.

அவன் எதிரிலே வலது கையில் துப்பாக்கியுடனும் இடது கையில் 'டார்ச் லைட்'டுமாக நின்றுகொண்டிருந்தாள் நளினி! ஆமாம்; கொலையுண்ட ஆசிரியரின் விதவை மனைவி நளினி தான் அங்கு நின்றுகொண்டிருந்தாள்!

# 8

# பெண் நாகம்!



"யாரது அங்கே!" என்று அதட்டினுள் நளினி.

"நான்தான்! மாணிக்கம்..." என்று குழறினான்.

"ஹா! மாணிக்கமா?" என்று ஆச்சரியக் குரலில் கேட்டுக் கொண்டே கலகலவென்று கோபமாகச் சிரித்தாள் நளினி. "நான் நினைத்து வந்தது சரியாகிவிட்டது!" என்று தனக்குத்தானே முணகிக் கொண்டாள்.

மாணிக்கத்தின் மனப்பிராந்தி இன்னும் மட்டுப்படவில்லை. நளினியைப் பரக்கப் பரக்க விழித்துப் பார்த்தான்.

"இந்த நேரத்தில் நீங்கள் என் இங்கு வந்தீர்கள்?" என்று படபடத்தாள் நளினி. அந்த வீடு அவள் கணவனுக்குச் சொந்தமானது. அங்கு அவள் எந்த நேரத்திலும் வரலாம். ஆனல் மாணிக்கம்?...

"இன்றிரவு உன்னிடம் பேசிக்கொண்டிருந்து விட்டு வெளியே வந்ததும் திடீரென ஒரு எண்ணம் தோன்றியது. அந்த இரகசியக் கடிதக் கட்டை இந்த வீட்டில் தேடிப்பார்க்கலாமே என்று வந்தேன். அதோடு, ராகவனும் ஒருவேளை இங்கு இருக்கலாம் என எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஆனல்?..." என்று மேல்மூச்சு வாங்கக் கூறினான் மாணிக்கம்.

"நீங்கள் இப்படிச் சந்தேகப்பட்டு இங்கு வருவீர்கள் என்று தெரிந்துதான் நானும் உடனே புறப்பட்டு வந்தேன். நான் நினைத்தது சரியாகிவிட்டது!" என்று மெல்லச் சிரித்தாள் நளினி.

"இப்போது இந்த வீட்டிலிருந்து யாரோ இரண்டு மூன்று பேர் திமுதிமுவென ஓடியதையும் அதைத்தொடர்ந்து வேட்டுச் சப்

தம் எழுந்ததையும் நீ கவனித்தாயல்லவா?" என்று கேட்டான் மாணிக்கம்.

"கவனிக்காமலென்ன? நான்தான் அந்த வேட்டுச் சப்தத்தைக் கிளப்பினேன்! நான் இந்த வீட்டில் வந்து நுழைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தப் பேர்வழிகளும் புகுந்தார்கள். நான் மாடி அறையில் ஒளிந்திருந்து அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த முரடர்கள், ஆசிரியரின் அறையில் புகுந்து எதையோ உருட்டிக் கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில்தான் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். நிலைமை மோசமாகு முன்னே, அதைத் தடுக்க, வெறுமனே துப்பாக்கியிலிருந்து ஒரு வேட்டுச் சப்தத்தைக் கிளப்பினேன். அந்த முரடர்கள் பயந்து ஓடிவிட்டார்கள்!" என்று கூறி நிறுத்தினுள் நளினி.

"அவர்கள் யாராய் இருக்கும்?" என்று துடிப்புடன் கேட்டான் மாணிக்கம்.

"இதிலென்ன சந்தேகம்? அவர்கள் நிச்சயமாக அசோக்லாவின் கையாட்களாய்த்தான் இருப்பார்கள்!" என்ருள் நளினி.

"ஏன்? ராகவனும் வில்லியும்கூட இப்போது இங்கு வந்திருக்கலாமல்லவா?" என்று அவசரமாகக் கேட்டான் மாணிக்கம்.

நளினி இந்தக் கேள்விக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு மீண்டும் பேசினுள்:

"எனக்கு அப்படித் தோன்றவில்லை. ராகவன் அனேகமாக இந்த ஊரிலேயே இல்லைபோலிருக்கிறது!"

"அப்படியானுல் அந்த இரகசியக் கடிதங்கள் இந்த வீட்டில் கூட இருக்க முடியாதா?"

"நான் இந்த வீட்டில் அதை முன்னமேயே தேடிப்பார்த்து விட்டேன்; கிடைக்கவில்லை. அப்புறம்தான் அது டைப்பிஸ்ட் வில்லியிடம் இருக்குமென நிச்சயித்தேன். நீங்கள் என் பேச்சை நம்பவில்லையா?"

"நம்பாமலென்ன? நிச்சயமாக நம்புகிறேன்!"

"பின் ஏன் இப்போது இந்த இருட்டு நேரத்தில் இங்கு வந்தீர்கள்? வில்லியிடம் அந்தக் கடிதக்கட்டு இருக்காதென்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"அதெப்படி நினைப்பது? அவள் பேரிலும் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. போகிற போக்கில் இந்த வீட்டையும் ஆராய்ந்து கொண்டு போகலாமே என வந்தேன். வந்த இடத்தில்......"

"நான்மட்டும் உங்களுக்கு முன்னுல் இங்கு வாராமலிருந்தால் நீங்கள் இந்நேரம் அந்த முரடர்களிடம் உங்கள் உயிரை ஒப்படைத்து விட்டிருப்பீர்கள் இல்லையா?"

"ஆமாம். அதற்காக உனக்கு என் இதயபூர்வமான நன்றி கூறுகிறேன்."

"சரி ; நீங்கள் கிளம்புங்கள். எனக்குத் தூக்கம் வருகிறது. இன்றிரவு இந்த வீட்டிலேயே படுத்துக்கொண்டிருந்துவிட்டு, விடிந்ததும் தான் என் வீட்டுக்குப் போகப் போகிறேன்."

"இந்த வீட்டிலேயா படுத்துக்கொள்ளப் போகிறாய்?...அதுவும் தனியாக!" என்று ஆச்சரியப்பட்டான் மாணிக்கம்.

"படுத்தால் என்ன? இது நான் பழகிய வீடுதானே! சரி; நேரமாகிறது. நீங்கள் போய்வாருங்கள்!" என்று துரிதப்படுத்தினாள் நளினி. மாணிக்கம் புறப்பட ஆயத்தமானான்.

"இந்த வீட்டில் என் இப்படி ஒரே பிண நாற்றம் வீசுகிறது? எலி, பூனை செத்திருந்தால்கூட இப்பேர்ப்பட்ட துர்நாற்றம் எடுக்காதே!" என்று போகிற போக்கில் கேட்டான் மாணிக்கம்!

"இந்த நாற்றம், வீட்டிலிருந்து வருவதல்ல; பக்கத்திலிருக்கும் சுடுகாட்டில் நரிகள் பிணத்தைக் குழியிலிருந்து வெளியே இழுத்துத் தின்றுகொண்டிருக்கும்! அந்த நாற்றம் தான் இப்படிக் குடலைப் பிழிகிறது!" என்று கூறிக்கொண்டே மெத்தைப்படிகளிலேறினாள் நளினி.

மாணிக்கம் மூக்கில் தன் கைக்குட்டையை வைத்து அடைத்துக்கொண்டே அவ்வீட்டை விட்டு வெளியேறினான்.

★

காலையில் மாணிக்கம் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது மணி ஒன்பதாகிவிட்டது. அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துக்கொண்டான். சிற்றுண்டி அருந்திவிட்டுத் தன் அறையில் வந்து அமர்ந்தான்.

நேற்றிரவு வில்லியின் வீட்டிலேயும், நளினியின் வீட்டிலேயும், ராகவன் வீட்டிலேயும், பாழடைந்த அந்தக் கிளைக் காரியாலயக் கட்டிடத்திலும் நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும் தன் மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தான். அந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நினைக்கும்போது, அவனுக்கு எல்லையற்ற பயமும், குழப்பமும் உண்டாகியது. டைப்பிஸ்ட் வில்லி, 'ராகவன் இறந்துவிட்டான்; அந்த இரகசியக் கடிதங்கள் நளினியிடம் இருக்கின்றன' என்றாள். நளினியோ 'ராகவன் இறக்கவில்லை. அவன் உயிரோடுதான் இருக்கிறான். இரகசியக் கடிதக் கட்டு வில்லியிடம்தான் இருக்கிறது' என்கிறாள். இந்த இருவரின் கூற்றில் எது உண்மை என்பது மாணிக்கத்துக்குப் புலனாகவில்லை. மேலும், ராகவன் வீட்டில் கிடைத்த ரெயில்வே டிக்கட்டுகளும், அந்தரங்க பங்களாவில்—அதாவது 'அபாய அறிவிப்பு' கிளைக்

காரியாலயமான பாழடைந்த பங்களாவில்—நடுசியில் நடந்த சம்ப வங்களும் புதிருக்குமேல் புதிராக இருந்தன. எதற்கும் டைப்பிஸ்ட் லில்லியை மீண்டும் ஒருமுறை போய்ப் பார்ப்பது நல்லது என நினைத்தான் மாணிக்கம். இப்போது அவளை, இந்த ரெயில்வே டிக்கட்டுகளை வைத்துக்கொண்டு பயமுறுத்தி எதாவது விஷயத்தைக் கிரகிக்கலாம் என்று அவனுக்குப்பட்டது. இருட்டும் நேரம் வரை காத்திருந்தான். நன்ருக இருட்டியதும் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே புறப்பட்டு விட்டான்.

ஹிமாலயா ஹோட்டலை விட்டுச் சிறிது தூரம் சென்றிருப்பான் மாணிக்கம். இந்தச் சமயத்தில், குறுகலான ஒரு சந்தின் பக்க மிருந்து ஓடி வந்த 'லிப்ட்' பையன் பொன்னன், மாணிக்கத்திடம் ஒரு சிறு கடிதத்தைக் கொடுத்தான்! கலவரத்துடன் அதை வாங்கித் தெரு விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் பிரித்துப் பார்த்து விட்டு நிமிரவதற்குள், அந்தப் பையன் பொன்னன், அங்கிருந்து இருளில் மாயமாய் மறைந்து விட்டிருந்தான்!

மாணிக்கத்துக்குச் சொல்லொணு கலவரமாகிவிட்டது. நடுங் கும் விரல்களால் அந்தச் சிறு கடிதத்தைப் பிரித்துப் படித்தான்:

"உன் நன்மைக்காகக் கூறுகிறேன். உடனே இந்த ஊரை விட்டுப் புறப்பட்டு வேறு எங்காவது போய்விடு!"

இப்படிக்கு,
**மாமனுர்."**

கடிதத்தைப் படித்து முடித்ததும், மாணிக்கத்தின் இதழ்களில் பயம் நிரம்பிய ஒரு புன்னகை வெடித்துச் சிதறியது. 'இந்தக் கடிதத்தை எழுதியிருப்பவன் அந்த அயோக்கிய சிகாமணியான அசோக்லாலாகத்தான் இருக்கமுடியும்' என்று தனக்குத்தானே முணகிக் கொண்டான் மாணிக்கம்.

'எனிப்படி அவன் எழுதியிருக்கிருன்? உண்மையான அனு தாபத்தோடா இதை எழுதியிருப்பான்? இருக்காது. இதில் ஏதோ சூது இருக்கிறது'—மாணிக்கம் அந்தக் கடிதத்தை மடித்துத் தன் ஜேபியில் திணித்துக்கொண்டு, டைப்பிஸ்ட் லில்லியின் வீடு நோக்கி இருளைக் கிழித்துக்கொண்டு வெகு வேகமாக நடந்தான்.

மாணிக்கம் லில்லியின் வீட்டண்டை நெருங்கும்போது இரவு மணி பத்தாகிவிட்டது.

தங்கத்திலும் வைரத்திலும் பணத்தைக் கொண்டு போய் புதைத்து விட்டு, கால் வயிறும் அரை வயிறுமாகக் கிடந்து தவிக்கும் தமிழ்க் குடும்பங்களைப் போலல்லாமல், வீட்டலங்காரத்திலும், விதம் விதமான ஆடை அலங்காரத்திலும், இனிய சுவையுள்ள உணவு வகைகளிலும், சம்பாதிக்கும் பணத்தைச் செலவு செய்து, வாழ்க்

கையை அணுவணுவாக ரசித்து அனுபவிக்கக் கற்றுக்கொண்டிருக்கும் ஆங்கிலோ இந்தியக் குடும்பங்களில் லில்லியும் ஒருத்தி யாகையால், அவள் குடி இருக்கும் அந்தச் சிறிய வீடு, ஒரு அழகிய மணவறைபோல நாசூக்காக அலங்கரிக்கப்பட்டிருந்தது! வீட்டுக்கெதிரே, வகை வகையான குரோட்டன்ஸ் செடிகள் தொட்டிகளிலும் தரையிலுமாகப் பதியம் போட்டு வளர்த்து விடப்பட்டிருந்தன. பரக்கத் திறந்திருந்த ஜன்னல்களில் பாதியளவுக்கு, ரம்மியமான நிறங்கள் கொண்ட திரைச் சீலைகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அற்புதமான தையல் வேலைப்பாடுள்ள அழகிய நீண்ட திரைகள், வாசல் நிலைகளில் கோர்த்து விடப்பட்டிருந்தன. வீட்டின் இடப்புறமிருந்த ஜன்னல்கள் ஓரத்தில், அவரைப பந்தலும், வலப்புறமிருந்த ஜன்னல்கள் பக்கம், கோழிக் கூண்டுகளும், புறாக்கூண்டுகளும் ஒழுங்கான முறையில் இருந்தன. மொத்தத்தில், அந்த வீட்டின் வெளிப்புறமும் உட்புறமும் பார்த்து ரசிக்கக்கூடிய வகையில் இருந்தது. கேவலம், தன்னொருத்தியின் சம்பாத்தியத்தைக்கொண்டு, ஆண் துணையின்றி காலட்சேபம் செய்துவரும் லில்லி, உண்மையிலேயே ரொம்பவும் சாமர்த்தியசாலியாகத்தான் இருக்கவேண்டும்! ஐந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் தமிழனொருவனின் வீடுகூட இப்படி இருந்துவிட முடியாது!—

வீட்டின், முன் வாசலைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான் மாணிக்கம். வராந்தா படிகளின் ஓரமாக ஒரு மோட்டார் ஸைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த ஸைக்கிளின் நம்பரைக் கூர்ந்து கவனித்தான் மாணிக்கம். MPZ 4032; நேற்று அந்தி இருட்டில் இதே இடத்தில் பார்த்த அதே மோட்டார் ஸைக்கிள்! ராகவனுடைய ஸைக்கிளா...?

இப்போது என்ன செய்யவேண்டுமென்பதைக் குறித்து அதி தீவிரமாகச் சிந்தித்தான் மாணிக்கம். உயிர் போனாலும் இன்றைக்கு இந்த மோட்டார் ஸைக்கிளை விட்டுவிடககூடாது என்று உறுதி செய்துகொண்டு சந்தடி செய்யாமல் வீட்டின் வராந்தாமேல் ஏறினான்.

கதவு உட்பக்கம் தாழ்ப்பாளிடப்பட்டிருந்தது. மெதுவாக நடந்து அந்தக் கதவின் ஓரம்போய் நின்றான். வீட்டின் இடப்புறமிருந்த ஒரு அறையிலிருந்து யாரோ ஒரு ஆடவன் அடித் தொண்டையில் பேசிக்கொண்டிருப்பது மாணிக்கத்தின் செவிகளில் நன்றாக விழுந்தது. இன்னும் அருகில் நெருங்கி உற்றுக் கவனித்தான். தெளிவற்றக் குரலில் சிணுங்கிச் சிணுங்கிக் கொஞ்சிப் பேசிக்கொண்டிருந்தாள் லில்லி! மாணிக்கம் சிறிதுநேரம் நிதானமாகச் சிந்தித்தான். பளிச்சென அவனுக்கொரு எண்ணம் தோன்றியது. உள்ளே பேசிக்கொண்டிருப்பவன் நிச்சயம் ராகவனாகத்தான் இருப்

பான் எனத் தீர்மானித்தான். இந்தச் சமயத்தில் மாணிக்கம் வந்திருப்பது அவனுக்குத் தெரிந்துவிட்டால், வீட்டின் உட்புறம் சென்று ஒளிந்துகொள்வான்; அல்லது புறக்கடைப்பக்கம் ஓடி வெளியேறிவிடுவான். முதலில், அவன் லில்லியிடம் என்ன பேசுகிறான், என்ன திட்டமிடுகிறான் என்பதைக் கவனிக்கவேண்டும். அவர்கள் பேசிக்கொள்ளும் விதத்திலிருந்து அவர்கள் உண்மையான காதலர்கள் தானா, அல்லது ராகவன் அந்த அபலை லில்லியைக் காதலிப்பதாக நடித்துக் கடிதங்களின் ரகசியப் பைலை அபகரிக்க முயல்கிறானா என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்!......

அடிமேல் அடியெடுத்து வைத்துச் சந்தடி செய்யாமல் வராந்தா படிகளை விட்டுக் கீழே இறங்கி, தரையோடு தரையாகக் குனிந்து நகர்ந்து சென்று, வீட்டின் இடப்புறமிருந்த அவரைப் பந்தலுக் கடியில் போய் உட்கார்ந்துகொண்டான் மாணிக்கம். இப்போது, அவ்வறையில் பேசிக்கொண்டிருப்பவர்களின் பேச்சு அவன் செவிகளில் நன்றாக விழுந்தது. உன்னிப்பாகக் கவனித்தான்.

"லில்லி! உன்னை நான் முழு மனத்துடன் நம்புகிறேன்; என்னை நீ நம்ப மறுக்கிறாயே!" என்ற ஆடவனின் குரல்.

"நானா நம்பவில்லை? உங்களை நம்பாமல் வேறு யாரைத்தான் நான் நம்பப் போகிறேன்!" என்ற லில்லியின் அன்பு தோய்ந்த குரல்.

"அப்படியானால் 'அதை' ஏன் மறைத்துப் பேசுகிறாய்?"

"உங்களிடம் எதையுமே நான் மறைக்கவில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன். 'அது' விஷயம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது."

"லில்லி! நீ பொய் சொல்கிறாய். இருதய பூர்வமாகக் காதலிக்கும் என்னையும், என் மூலமாக உனக்குக் கிடைக்கப் போகும் ஆயிரக்கணக்கான ரூபாயையும், இந்தப் பொய்யால் நீ அநியாயமாக இழக்கப் போகிறாய்!"

"ஐயையோ! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். உங்களைப் பிரிந்து ஒரு கணமும் என்னால் உயிர் வாழ முடியாது! ஆயிரக்கணக்கான ரூபாய்க்காக உங்களைக் காதலிக்கவில்லை! உங்கள் உள்ளத்தைத்தான் நான் காதலிக்கிறேன்......"

"நீ என்னதான் பசப்பினாலும் அதை நான் நம்பப்போவதில்லை. அவனிடமிருந்த 'அது', இப்போது உன்னிடம்தான் இருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்! அவனைக் காதலிப்பதுபோல் நடித்து அவனிடமிருந்து அந்த இரகசியக் கடிதங்களின் பைலைத் தந்திரமாக வாங்கி வைத்திருக்கிறாய்! உனக்கு எது வேண்டுமானாலும் தருகிறேன், அதைக் கொடுத்துவிடு லில்லி!"

"என்னிடம் அது இல்லை! அந்த இரகசியக் கடிதப் பைலுக்காகத்தான் ஆசிரியர் ராமகாந்தன் சுட்டுக் கொல்லப்பட்டான்! நான் அதற்காகத் துளிக்கூடத் துக்கப்படவில்லை. அந்த சுயநலக்காரன் கொலை செய்யப்பட்டதற்காக அவனுடைய மனைவி நளினியைத் தவிர வேறு யாருமே துக்கப்படமாட்டார்கள்!"—

இதுவரை இந்தப் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்த மாணிக்கத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால், பேசப்படும் விஷயம், அந்த இரகசியக் கடிதக் கட்டு யாரிடமிருக்கிறது என்பது பற்றியதுதான் என்பதை மட்டும் அவன் ஒருவாறு ஊகித்துக் கொண்டான். உள்ளேயிருந்து பேசிக்கொண்டிருப்பவன் நிச்சயமாக ராகவனாய்த்தான் இருக்கமுடியுமென அவன் தீர்மானித்தான். அப்படி எண்ணிய மாத்திரத்தில் அவனுடல் ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது. கோபத்தால் கண்கள் சிவந்து, நெஞ்சு விம்மிப் புடைத்தது. அவரைப் பந்தலுக் கடியிலிருந்து மெல்ல நகர்ந்து போய், ஜன்னல் சுவரோரம் உட்கார்ந்து கொண்டான். தரை மட்டத்துக்கு மேல், சுமார் ஒன்றரை அடி உயரத்துக்குச் சுவரின் குறுக்கு வாட்டத்தில், கைப்பிடியளவுக்குக் கரை கட்டி விடப்பட்டிருந்தது. அந்த கரை மேட்டின் விளிம்பைத் தன் இரு கரங்களாலும் இறுகப் பற்றிக் கொண்டு, மெதுவாக எம்பி, ஜன்னல் வழியே, தன் பார்வையைச் செலுத்தினான் மாணிக்கம். மறுகணம், அவன் சொல்லொணு வியப்பாலும், பயத்தாலும் குன்றிக் குறுகி அப்படியே கீழே குந்திக் கொண்டான்! அவ்வறையில் இவ்வளவு நேரம் லில்லியுடன் பேசிக் கொண்டிருந்தவன் ராகவனல்ல; அசோக்லாலின் பிரதம கையாளான கொலைகாரன் சிங்காரம்தான் அங்கு அமுத்தலாக உட்கார்ந்திருந்தான்! அவன் மடிமீது லில்லி தலைவைத்துப் படுத்து அவன் கழுத்தை ஆசையோடு கட்டிக் கொண்டு கொடி போலத் துவண்ட வண்ண மிருந்தாள்! தன் மிருதுவான விரல்களால், எருமைக் கொம்புபோல வளைத்து வளர்த்து விடப்பட்டிருந்த அவனுடைய அடர்த்தியான மீசையை ஆசை பொங்க முறுக்கி விட்டுக் கொண்டிருந்தாள் அவள்!

சுவரோடு சுவராய் ஒண்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த மாணிக்கத்திற்கு மெய் சிலிர்த்தது. 'வஞ்சகி! வேசி! கிராதகி!' என்று அவன் உள்ளம் சீறியது; 'ராகவனை உயிருக்குயிராய்க் காதலிப்பதாக அன்று சொல்லி நடித்தாளே!' என்று மனசுக்குள் உறுமினான். பிறகு ஆத்திரத்தோடு சிந்தித்தான். தான் ஒரு பெரிய ஆபத்தில் வந்து வலிய சிக்கிக் கொண்டிருப்பதாக நினைத்து நடுங்கினான். எனினும் இதற்குப் பயந்து இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டால், மேலும் பல சிக்கல்கள் ஏற்பட வழியாகி விடும். தன்னிடமிருந்த தைரியத்தை யெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு, அவரைப்பந்தலுக்கடியிலிருந்து மெல்ல எழுந்து வராந்தாவண்டைப்

போனான். படிகளின் கீழே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் ஸைக்கிளின் இரு சக்கரங்களிலுமுள்ள காற்றுக் குழாயைத் தளர்த்தி அவற்றிலுள்ள காற்றை வெளியேற்றி விட்டு விட்டு மளமள வென ஓடிவந்து கதவைப் பலமாகத் தட்டினான் மாணிக்கம்.

தட்டிய சில விநாடி நேரத்திற்கெல்லாம் கதவு தானாகவே திறந்து கொண்டது. அம்புபோல் பாய்ந்து உள்ளே ஓடினான் மாணிக்கம். எதிர்பாராமல் மாணிக்கம் அங்கு வந்ததை அறிந்த சிங்காரம் முதலில் திகைத்து விட்டான். மறுகணம் அவனுடைய முகமும் கண்களும் நெருப்பாகச் சிவந்து பழுத்தன. அவன் மடிமீது மையலுடன் படுத்துக்கொண்டிருந்த லில்லி, மளுக்கென எழுந்து நின்று கொண்டாள். அவள் உடல் பயத்தால் வெட வெடத்துக் கொண்டிருந்தது.

"தேடிப்போன கழுதை குறுக்கே வந்து படுத்துக் கொண்ட கதையாக, நீயே வந்து சிக்கிக் கொண்டாயாடா, நாயே! இதோ, இந்த நிமிஷமே மூச்சு விட மறந்து போய்விடு!" என்று கர்ஜித்துக் கொண்டே மதம் கொண்ட யானைபோல் மாணிக்கத்தை நோக்கி ஓடி வந்தான் சிங்காரம்.

மாணிக்கம் சட்டென ஓரடிப் பின்னால் நகர்ந்து, அதே வேகத்துடன் சிங்காரத்தை நோக்கி முன்னே பாய்ந்தான். இருவரும் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு கீழே சாய்ந்தனர். மாணிக்கம் அடியிலும் சிங்காரம் மேலேயுமாகக் கிடந்து சிறிதுநேரம் முரண்டிக்கொண்டிருந்தனர். அறையின் மத்தியில் கிடந்த ஒரு கனத்த மேஜையை உதைத்து கெம்பிக்கொண்டு சடாரெனப் புரண்டுத் திரும்பினான் மாணிக்கம். இப்போது சிங்காரம் இவனுக்குக் கீழே எலிக் குஞ்சைப்போல அகப்பட்டு நசுங்கிக் கொண்டிருந்தான்! மாணிக்கம், சிங்காரத்தின் மென்னியை இடது கையில் அழுத்தி நெரித்துக்கொண்டே வலதுகை முஷ்டியை மடக்கி ஓங்கி அவன் முகத்தில் ஒரு குத்துவிட்டான். சிங்காரத்தின் சில்லி மூக்கு உடைந்து 'பொள பொள'வென இரத்தம் பெருக்கெடுத்தது. கண் மூக்கு வாய் நெஞ்சு-சரமாரியாகக் குத்திக்கொண்டே இருந்தான் மாணிக்கம். 'முன்னது ஆசிரியர் ராமகாந்தனைக் கொன்றதற்கு! இதோ, இந்தக் குத்து ராகவனைக் கொன்றதற்கு! இந்தக் குத்து என் அத்தை அன்னபூரணி அம்மாளைக் கொன்றதற்கு!' என்று முக்கலும் முணகலுமாகக் கூறி, முகத்திலும் வயிற்றிலும் மாறிமாறிக் குத்தினான். அவனுடைய ஒவ்வொரு குத்தும் இரும்பு உலக்கையால் இடிப்பதுபோன்ற வேகத்துடன் சிங்காரத்தின் உடலில்போய் பதிந்தது. சிங்காரம், அடி தாள மாட்டாமல் மூர்ச்சையாகிவிட்டான். மலைபோன்ற அவன் சரீரத்தின்மீது பாறைபோல் உட்கார்ந்திருந்த மாணிக்கம் வில்லெனத் துள்ளியெழுந்து தன் பூட்ஸ் காலால் ஓங்கி ஒரு உதை விட்டான் சிங்கா

ரத்தை! அவன் 'ஹா' வெனப் பன்றியைப்போல் அலறிக்கொண்டே உருண்டுகொண்டுபோய் சுவரைக் கடித்தாற்போல ஒட்டிக்கொண்டான்! அந்த இடத்திலேயே சிங்காரம் சுயநினைவு இழந்து அசையாமல் கிடந்தான்!

முகத்தில் வந்து விழுந்திருந்த தலைமயிரை, கழுத்தை ஒரு வெட்டு வெட்டி மேலே தூக்கிப் போட்டுக்கொண்டு நிமிர்ந்தான் மாணிக்கம். அறையின் ஒரு மூலையில் இரு கைகளையும் பிசைந்து கொண்டு நடுநடுங்கி நின்றுகொண்டிருந்தாள் லில்லி.

மாணிக்கம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தோடிப்போய், அவள் தோளைப் பிடித்துப் பலமாக உலுக்கி, "லில்லி! இனிமேல் உன் சாகஸமொன்றும் என்னிடம் சாயாது! எனக்கு எல்லாம் தெரியும். மரியாதையாகச் சொல்லிவிடு. ராகவன் எங்கே? கிராதகி, அவனை என்ன செய்தாய்? அவன்மீது உயிருக்குயிரான காதல் வைத்திருந்தேன் என்றுயே அவனை உயிரோடு சமாதி வைத்துவிட்டாயா? ஆசிரியரைக் கொன்றவன் யார்? எங்கே அந்த இரகசியக் கடிதக் கட்டு? உடனே சொல்லி விடு. இல்லையானல் உன் உயிரை இப்போது எடுத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்!" என்று கர்ஜித்தான். அவனது கைப்பிடியில் லில்லியின் மெல்லிய கழுத்து நெரிந்துகொண்டு இருந்தது.

உடல் நடுங்க நாக்குழறப் பேசினுள் லில்லி:

"மிஸ்டர் மாணிக்கம், ஐயோ...எல்லாவற்றையும் கெடுத்து விட்டீர்களே!...நீங்கள் எல்லா விஷயத்திலும் ரொம்பவும் அவசரப் படுகிறீர்கள். கொஞ்சம் பொறுமையாயிருந்து என்னை நம்புங்கள். நான் எல்லாவற்றையும் கண்டுபிடித்து உங்களிடம் சொல்கிறேன். இதோ, எருமைபோல் அடிபட்டுக்கிடக்கும் இந்த அயோக்கியனேடு நான் கொஞ்ச நேரத்துக்கு முன்னுல் கொஞ்சிக்கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு மட்டும் நீங்கள் எந்த அவசர முடிவுக்கும் வந்துவிடாதீர்கள்! உங்களுக்காகவும், என் அன்புக் காதலன் ராகவனைக் கொன்றவர்கள் யார் என்பதை அறிவதற்காகவுமே நான் இந்த வெட்கங்கெட்ட சாகஸங்களையெல்லாம் செய்து வருகிறேன்! ஆனல், இன்னும் எனக்குச் சரியான தகவல் கிடைக்கவில்லை. அனேகமாக இந்த சிங்காரம்தான் என் ராகவனைக் கொன்றிருப்பான். ராகவனை இவன் கொன்றிருந்தால், ஆசிரியர் ராமகாந்தனையும் இவனேதான் கொன்றிருப்பான்! அதைத்தான் இப்போது அவனிடம் உளவறியப் பேச்சுக் கொடுத்துக்கொண்டிருந்தேன். அதற்குள் நீங்கள் வந்து காரியத்தைக் கெடுத்துவிட்டீர்கள்!" என்று லில்லி பேசி முடிப்பதற்குள், அடிபட்டுக் கிடந்த சிங்காரம் மெதுவாகப் புரண்டு எழுந்திருக்கப் பிரயத்தனப்பட்டான். இதையறிந்த மாணிக்கம், சரேலெனத் துள்ளியோடி, சிங்காரத்தின் இடுப்பில் மீண்டும் ஒரு உதை விட்டான். 'அம்மா' என்ற முனகலுடன்

குப்புறக் கவிழ்ந்தான் சிங்காரம்.

மாணிக்கம் மீண்டும் வில்லியிடம் வந்து, "நீ சொல்வதெல்லாம் உண்மைதானு? அல்லது சிங்காரத்தை ஏமாற்றுவதாகச் சொல்வதைப்போல என்னையும் ஏமாற்றுகிருயா?" என்று கடுமையான குரலில் கேட்டான்.

"இதோ பாருங்கள், மிஸ்டர் மாணிக்கம்! என் ராகவனை இவன்தான் கொன்ருன் என எந்த நிமிஷம் எனக்குத் தெரிகிறதோ, அதே நிமிஷம் அவன் நெஞ்சைத் துளைக்க இதை முன்னேற்பாடாகவே வைத்திருக்கிறேன். இப்போதாவது என்னை நம்புகிறீர்களா?" என்று சொல்லிக்கொண்டே தன் நெஞ்சுப்புற கவுனின் உள்ளிருந்து சரக்கென ஒரு குத்துக் கத்தியை இழுத்து மாணிக்கத்தின் முகத்துக்கு நேரே நீட்டிக் காட்டினுள் வில்லி!

மாணிக்கம் இதைக் கண்டு மலைத்துவிட்டான். வில்லியின்மீது உண்மையிலேயே அவனுக்கு இப்போது ஓரளவு நம்பிக்கை விழ ஆரம்பித்தது. ஆச்சரியத்துடன் அவளை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

இந்தச் சமயத்தில், சிங்காரம் மீண்டும் எழுந்திருக்க முக்கி முரண்டிக்கொண்டிருந்தான்......

"வில்லி! அந்த இரகசியக் கடிதக் கட்டைப்பற்றி நீ ஒன்றுமே சொல்லவில்லையே!" என்று துரிதப்பட்டான் மாணிக்கம்.

"நான்தான் நேற்றே சொன்னேனே! அந்த 'பைல்' இப்போது நிச்சயமாக அசோக்லாலுக்குக் கிடைக்கவில்லை. ராகவனைக் கொன்றுவிட்டிருப்பதால் அவனிடமும் அது இருந்திருக்காது! எல்லா மர்மத்தையும் கண்டுபிடிப்பதற்காகவே இந்தக் கிராதகனேடு கொஞ்சிக் குலாவினேன். சாவதற்கு முன் என் காதலன் ராகவனைக் கொன்றவன் யாரெனத் தெரிந்து அவனை என் கையாலேயே கொன்றுவிட்டுச் சாகத் துடிக்கிறேன்! அதற்காகவே இந்த நாடகம். அந்த இரகசியப் 'பைல்' நிச்சயமாக நளினியிடம்தான் இருக்கவேண்டும்! நீங்கள் அதை அவளிடம் இன்னும் ஐந்தாறு மணிநேரம் விட்டு வைத்தால்கூட, கண்டிப்பாக அது அசோக்லாலின் கைக்குக் கிடைத்துவிடும்!" என்று படபடத்தாள் வில்லி.

"அப்படியா?" என்று கூவினுன் மாணிக்கம்.


"என்னை நம்புங்கள்!" என்று அழுத்தமாகச் சொன்னுள் வில்லி.

மாணிக்கத்துக்கு ஒரே குழப்பமாகிவிட்டது. நளினியின் வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

ஓட்டமும் நடையுமாகச் சென்றுகொண்டிருந்த மாணிக்கத்தின் அருகே திடீரென ஒரு டாக்ஸி 'டக்'கென வந்து நின்றது.

சட்டெனத் திரும்பிக் காரினுள் பார்த்தான் மாணிக்கம்.

டாக்ஸியின் பின் 'ஸீட்'டில் ஜம்மென்று சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள் நளினி! அவள் முகத்தில் அலாதியான ஒரு பரபரப்பு இருந்தது!



## 9
## குத்தப்பட்டாள்!

நளினி இப்படித் திடீரென இருட்டு நேரத்தில் காரில் வந்து அவனருகில் நின்றதைக் கண்ட மாணிக்கம் திகைத்துவிட்டான். அவன் உடலும் உள்ளமும் செயலற்றுப் போயின. பேந்தப் பேந்த அவளைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான்.

"என்ன, இப்படி அதிசயப்பட்டுக்கொண்டு நிற்கிறீர்கள்? உங்களைத் தேடிக்கொண்டுதான் இப்போது நான் புறப்பட்டு வந்தேன்!" என்றாள் நளினி, சன்னமான குரலில்.

"என்னைத் தேடிக்கொண்டா? நானும் இப்போது உன்னைப் பார்க்கவேண்டுமென்றுதான் புறப்பட்டு வந்தேன்!" என்று குழறினான் மாணிக்கம்.

"நல்லதாகப் போய்விட்டது. காரில் ஏறி உட்காருங்கள், போகலாம்" என்று கூறிக்கொண்டே காரின் பின்புறக் கதவைத் திறந்துவிட்டாள் நளினி.

மாணிக்கம் மௌனமாகக் காரில் ஏறி, நளினியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான். கார் வெகுவேகமாகப் புறப்பட்டுப் பறக்க ஆரம்பித்தது.

மாணிக்கத்தின் பிரமை இன்னும் நீங்கவில்லை. பக்கவாட்டில் திரும்பி நளினியின் முகத்தை எறிட்டு நோக்கினான். அவள் காரைச் செலுத்திக்கொண்டு போகும் டிரைவரையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடையணிகளில் அத்தனை தடபுடல் இருக்கவில்லை. சாதாரணக் கறுப்பு நூல்புடவையொன்றைக் கட்டியிருந்தாள். காதில் ஒரு வெள்ளைக் கம்மலைத் தவிர வேறு நகைகளேதும் அவளணிந்துகொண்டிருக்கவில்லை. முகம் சிறிதே வாட்டமுற்றிருந்தது. கண்களைச் சுற்றிக் கருவளையம் பதிந்திருந்தது. அதரங்கள் காய்ந்து ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டிருந்தன. அவை அடிக்கொருதரம் பல பல கோணங்களில் நெளிந்து கொண்டிருந்தன. உடல் மினுமினுப்பற்று சோர்ந்து வற்றியிருந்தது. எண்ணெய்ப் பசையற்றிருந்த கூந்தல் காற்றில் பறந்துகொண்டிருந்தது.

மாணிக்கம் மௌனச் சிலைபோல் அமர்ந்து அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இந்நேரம் வரை எங்கோ தன் பார்வையைச்செலுத்திக்கொண்டிருந்த நளினி சட்டெனத் திரும்பி, மாணிக்கத்தை ஊடுருவிப் பார்த்துக்கொண்டே, "மிஸ்டர் மாணிக்கம்! நான் இப்போது உங்களைக் காண வந்தது வியப்பாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டுவிட்டு சுவாரஸ்யமற்றச் சிரிப்பொன்றைச் சிரித்தாள்.

"அப்படி யொன்றுமில்லை!......நேற்றிரவுதானே சந்தித்துப் பேசிக்கொண்டிருந்துவிட்டு வந்தேன். அதற்குள் மறுபடியும் இந்த இரவில்..." என்று பேச்சை முடிக்காமல் நிறுத்தினான் மாணிக்கம்.

"பார்க்கவேண்டிய அவசிய மேற்பட்டது. உடனே புறப்பட்டு வந்தேன்!" என்று கூறித் தன் முகத்தைவேறுபுறம் திருப்பிக்கொண்டாள் நளினி.

அவளின் இந்தப் புதிர்ப் பேச்சைக் கேட்டு மாணிக்கத்தின் மனம் மேலும் குழம்பியது.

"வந்த விஷயம் என்ன என்று சொல்லலாமே!" என்றான் மாணிக்கம் பசையற்ற தொனியில்.

"ஏன் இப்படி என்னைக் கண்டு பயந்து சாகிறீர்கள்? நான் அப்படி யொன்றும் உங்களைத் தூக்கிக்கொண்டு ஓடிவிடமாட்டேன்!" என்று கூறிவிட்டு விநயமாகச் சிரித்தாள் நளினி.

இப்படி அவள் விநயமாகப் பேசியதைக் கேட்டு, மாணிக்கத்துக்கு வெட்கமாகப் போய்விட்டது. தான் ஒரு ஆண் பிள்ளையாய் இருந்துகொண்டு, கேவலம் ஓர் பெண்ணைக் கண்டு கலங்குவது வெட்கக்கேடான விஷயம் என்று அவனுக்குப் பட்டது. பார்வையை முரட்டுத்தனமாக ஆக்கிக்கொண்டு அவளை எறிட்டுப் பார்த்தான் மாணிக்கம்.

"மிஸ்டர் மாணிக்கம்! இப்போது மணி என்ன இருக்கும்?" என்று முகத்தைத் திருப்பாமல் கேட்டாள் நளினி.

மாணிக்கம் டாக்ஸியின் உள்புறமிருந்த சிறுவிளக்கைப் போட்டுத் தன் இடது கையை மடக்கி உயர்த்தி மணி பார்த்தான்.

"பதினொன்ருக இன்னும் ஐந்து நிமிஷமிருக்கிறது!"

வக்கிரமாகத் தன் உதட்டை மடித்துக் கடித்துக்கொண்டாள் நளினி. "டிரைவர்! இன்னும் அரைமணி நேரம்தான் இருக்கிறது. சீக்கிரமாகக் காரை ஓட்டு!" என்று அடித்தொண்டையில் கட்டளையிட்டாள்.

கார் முன்னிலும் பன்மடங்கு வேகத்துடன் பறக்க ஆரம்பித்தது.

"ஏன் இவ்வளவு வேகமாகப் போகவேண்டும்? பசி ரொம்பவும் எடுக்கிறதோ?" என்ருன் மாணிக்கம் சிரித்துக்கொண்டே.

"பசியா? இப்போது நாம் வீட்டுக்குப் போகவில்லையே!" என்ருள் நளினி சிறிது கம்மிய குரலில்.

மாணிக்கம் இதைக் கேட்டு சடக்கென நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். "வீட்டுக்குப் போகாமல் வேறு எங்கே போகிருய்?" என்ருன் அவசரத்துடன்.

"இன்னும் அரைமணி நேரத்திற்குள் நாமிருவரும் அந்த இடத்தைப் போய் அடைந்துவிடவேண்டும்!" என்று ஆடாமல் அசையாமல் சொன்ஞள் நளினி.

"எந்த இடத்துக்கு?" என்று ஒன்றும் புரியாதவனுய்த் தடுமாறிஞன் மாணிக்கம்.

இந்தக் கேள்வியைக் கவனியாதவளைப்போல, "டிரைவர்! நேரமாகிறது. கார் இன்னும் வேகமாகப் போகவேண்டும்!" என்று கட்டளையிட்டாள். மறுவிநாடி கார் காற்றெனப் பறக்க ஆரம்பித்தது.

"நளினி! உன்னைத்தான் கேட்கிறேன். நாம் இப்போது எந்த இடத்துக்குப் போகிறேம்?" என்று சிறிது தடித்த குரலில் கலவரத்துடன் கேட்டான் மாணிக்கம்.

"தயவுசெய்து கொஞ்சநேரம் பொறுமையாக வாருங்கள். இன்னும் இருபது நிமிஷத்தில் எல்லாம் விளங்கிவிடும்!" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு காரின் வெளியே தன் பார்வையைச் செலுத்திஞள் நளினி.

அவளின் இந்த அலட்சியமானப் பதில் அவனுக்குக் கோபத்தையும் அவமானத்தையும் பயத்தையும் உண்டு பண்ணியது. கார் எந்தப்புறம் போகிறதெனஅறிய வெளியே தன் பார்வையை வீசி,

ஞன். அசோக்லால் வீடு இருக்கும் பக்கம் டாக்ஸி வெகுவேகமாகப் பறந்து கொண்டிருப்பதை அப்போதுதான் அவன் கவனித்தான்! இதை யறிந்த அவன் திடுக்கிட்டுக் குழம்பிவிட்டான்.

ஒருவேளை நளினி?...

மாணிக்கம் விழித்துக்கொண்டான்! பக்கத்திலிருந்த நளினி யின் முகத்தை ஊடுருவிப் பார்த்தான். அவள் அவனைப் பார்க்கவே இல்லை! கார், பேய்போலப் பாய்ந்து சென்றுகொண்டிருந்தது.

தான் ஏதோ ஒரு பெரிய சதியில் சிக்கிக்கொண்டிருப்பதாக மாணிக்கம் உணர்ந்தான். கொஞ்ச நேரத்திற்கு முன்னுல் வில்லி சொன்னது முற்றிலும் உண்மையென அவனுக்கு இப்போது பட்டது. அந்த இரகசியக் கடிதக்கட்டை அசோக்லாவிடம் கொடுக்கப் போவதுமல்லாமல், தன்னையும் அவன் வசம் ஒப்படைக் கப் போகிருள் நளினி என்றே மாணிக்கம் தீர்மானித்தான். எதிரி களினுல் தான் கொலை செய்யப்படாமல் தப்பிக்கவே, இந்தத் தந் திரம் செய்கிருள் என்று நினைத்தான். இப்படி நினைத்த மாத்திரத் தில் அவனுடல் ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது என்ன செய்வ தென்றே அவனுக்குத் தோன்றவில்லை டாக்ஸி, விநாடிக்கு விநாடி தன் வேகத்தை அதிகப் படுத்திக்கொண்டே சென்றது. மாணிக்கம் திடீரென எதையோ நினைத்துக் கொண்டவனுய், தன் கால்சட்டை ஜேபியில் வலது கையை நுழைத்துத் துழாவிப் பார்த்தான். மறு கணம் அவன் மனம் பகீரென உதைத்துக் கொண்டது நேற்றிரவு வில்லியின் வீட்டில் மறந்து வைத்து விட்டத் துப்பாக்கியை இன் றைக்கும் ஞாபகமாக எடுத்து வராமல் மறந்து விட்டு வந்திருக் கிருன்! மாணிக்கத்தின் மண்டை ஓட்டின் மீது சுற்றிக் கொண் டிருக்கும் இரத்த நாளங்கள் தீவிரமான சிந்தனைச் சூட்டால் முறுக் கேறிப் பளீர் பளீரென அறுந்து விடும்போல் தோன்றின.

"ஏய், டிரைவர்! காரை நிறுத்து!" என்று யாரும் எதிர்பாரா வண்ணம் திடீரென உரத்தக் குரலில் கூவினுன் மாணிக்கம். அவ னுடைய இந்த வெறிக் கூச்சலைக் கேட்டு டிரைவர் கதி கலங்கிப் போய் விட்டான். அவனையறியாமலே அவன் கால்கள் 'பிரேக்'கை மிதித்து அழுத்தின. அடுத்த கணம் கார் 'கிரீச்'சென்ற பேரொலி யுடன் 'டக்'கென நின்றது. நின்ற அதே விநாடி காரின் கதவை 'மளுக்'கெனத் திறந்து பந்துபோல் வெளியே துள்ளிக் குதித்தான் மாணிக்கம். இவ்வளவும் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடந்து விட்டது.

நளினி திக்பிரமை கொண்டவளாய் மாணிக்கத்தையும் டிரை வரையும் திரு திருவென மாறி மாறிப் பார்த்தாள். அவள் முகம் இந்த ஒரே விநாடியில் விகாரமாக மாறி வெளிறிப் போய்விட்டது.

“ஏன் இறங்கி விட்டீர்கள்?” என்று வியப்புக் குரலில் தடுமாற்றத்துடன் கேட்டாள் நளினி.

“மன்னிக்கவும். எனக்கு இந்த நேரத்தில் ஒரு அதி முக்கிய வேலை இருக்கிறது. அதை மறந்து விட்டு உன்னுடன் புறப்பட்டு விட்டேன். இப்போதுதான் அது நினைவுக்கு வந்தது!...நளினி! நீ போக வேண்டிய இடத்துக்குப் போய் விட்டு வந்து விடு. நான் நாளை காலை உன்னை உன் வீட்டில் வந்து சந்திக்கிறேன்!” என்று கூறிக் கொண்டே அவள் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் அங்கிருந்து ‘விர்’ ரெனப் புறப்பட்டுப்போய் விட்டான் மாணிக்கம்.

நளினி, நினைவிழந்தவளைப் போல அவன் சென்ற திக்கையே விரைக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். ‘பைத்தியக்...காரன்’ என்ற வார்த்தை அவள் வாயிலிருந்து உடைந்து நொறுங்கி வெளி வந்தது.

டாக்ஸி மீண்டும் புறப்பட்டுப் பறந்தது...

நிசி வேளை. பனிநீர் கட்டி குளிர் கவ்விக் கொண்டிருந்தது. வியர்வை நீர் ஆறுகப் பெருக வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தான் மாணிக்கம். நளினியின் போக்கை நினைத்துப் பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது. அவள் ஒரு அதி பயங்கர மர்மப் பெண்ணாக அவனுக்கு உருவகமானாள். தலைமறைவாயிருக்கும் ராகவனும் நளினியும் சேர்ந்து கொண்டு ஏதோ ஒரு பெரிய சதியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றே அவனுக்குத் தோன்றியது. இவர்களுக்கு வில்லியும் உடந்தையாயிருக்கிறாள் என்றும் அவன் எண்ணினான். இப்படியெல்லாம் நினைத்துப் பார்த்த மாணிக்கத்துக்கு இந்த உலகமே ஒரு மர்மக் குகையாகக் காட்சியளித்தது. இப்போது எங்கே போவது, என்ன செய்வது என்றே அவனுக்குத் தெரியவில்லை. ஆருயிர்க் காதலி வாஸந்தியைச் சந்தித்து பல மணி நேரமாகி விட்டது. அவள் எப்படியிருக்கிறாள்? என்ன கதியானாள் என்பதும் ஒன்றும் தெரியவில்லை. நேற்று காலை விநாயகம் வந்து சந்தித்துப்போனதிலிருந்து இன்னும் அவன் வரவில்லை. தான் எங்கு போனாலும், தன்னைச் சுற்றி ஒரு மாய மர்மத் திரை தொங்குவது போன்றிருந்தது மாணிக்கத்துக்கு. இப்போது நேரே வாஸந்தியைப் போய் பார்த்துவிட்டு வந்தால்தான் மனம் நிம்மதியடையும் என அவனுக்குத் தோன்றியது. ஏனென்றால் விநாயகத்தையும் அவனால் பூரணமாக நம்ப முடியவில்லை. எப்பேற்பட்ட நேர்மையாளனாயிருந்தாலும், பெண்ணும் பணமும் அவனைத் தடுமாற வைத்து விடுமல்லவா? மேலும், விநாயகம், மாணிக்கத்தை அந்த மொட்டை மாடி வீட்டுக்கு அடிக்கடி வர வேண்டாமென அத்தனைக் கண்டிப்புடன் சொன்னதை இப்போது நினைத்துப் பார்த்தால் அதில் ஏதோ

சூது இருக்கிறதென்றே அவனுக்குப் பட்டது! ஒரு வேளை விநாயகமும் அந்தப் பயங்கர மர்மக் கூட்டத்தாருடன் சேர்ந்து கொண்டு; வாஸந்தியை?.........

இதற்குமேல் அவனுல் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. பேடையைப் பிரிந்த சகோரப் பறவையைப் போல, வாஸந்தி இருக்கும் அந்த மொட்டை மாடி வீட்டை நோக்கி வெகு வேகமாக நடந்தான் மாணிக்கம்.

வாஸந்தியை அழைத்துப்போய் மறைத்து வைத்திருக்கும் அந்த வீடு, வில்லியின் வீடு இருந்த வீதிக்கு மறுபுற மிருந்தது. வில்லியின் வீட்டைத் தாண்டித்தான் அந்தத் தெருவை அடைய வேண்டும். மாணிக்கத்தின் கால்கள் இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தன.

வில்லியின் வீடு சமீபிக்க இன்னும் கால் பர்லாங்கு தூர மிருந்தது. பார்வைப் புலனை மறந்து சிந்தனையிலீடுபட்டு வந்த மாணிக்கம் மெதுவாக நிமிர்ந்து தன் கண்ணெளிக்கு உணர்வு கொடுத்தான். இரண்டு பர்லாங் தூரத்துக்கு நேர் எதிரே, 'பஞ்ச'ராகி விட்ட மோட்டார் ஸைக்கிளை வெகு வேகமாகத் தள்ளிக் கொண்டு ஒரு குறுகிய சந்துப் பக்கம் திரும்பிக் கொண்டிருந்தான் சிங்காரம்! இதைக் கண்ட மாணிக்கத்துக்கு மீண்டும் குழப்பமாகி விட்டது. அடிபட்டுக் கிடந்த சிங்காரம் இப்போதுதான் தெளிவு பெற்று வில்லியின் வீட்டிலிருந்து புறப்பட்டிருக்கிருன் என ஒருவாறு ஊகித்தறிந்து கொண்டான். வில்லியின் வீட்டில் இப்போது என்ன நடந்திருக்கும்...? இந்தக் கேள்வி எழுந்ததும் திடீரென அவன் திட்டம் தலைகீழாக மாறிவிட்டது. வில்லியைப் போய் பார்த்து விட்டு, பிறகுதான் வாஸந்தியிடம் செல்ல வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டான்.

ஜேபியிலிருந்த கைக்குட்டையை எடுத்து முகத்தை நன்ருகத் துடைத்துக் கொண்டு, வில்லியின் வீட்டினுள் நுழைந்தான் மாணிக்கம்.

வீட்டின் பிரதான வாசல் பரக்கத் திறந்து கிடந்தது. தவிர்க்க முடியாத தயக்கத்துடன் கூடத்தறையில் புகுந்தான். மயான பூமி போல வெறிச் சோடிக் கிடந்தது அந்த வீடு. வீட்டின் உட்புறம் சிவப்பு மின்சார விளக்கின் லேசான செந்நிற ஒளி சூழ்ந்து கொண்டிருந்தது. கூடத்தின் மத்திக்குப்போய் சுற்று முற்றும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். இடது புறமிருந்த அறைக் கதவும் திறந்தே கிடந்தது. "வில்லி!" என மெல்ல அழைத்துக் கொண்டே அவ்வறையினுள் நுழைந்தான்.

மறுகணம் 'ஹா' என்ற அலறல் மாணிக்கத்தின் கண்டத்திலிருந்து வெடித்து வெளியேறியது!

"வில்லி!" என உரக்கக் கூவிக் கொண்டே சுவரோரமாய்க் கிடந்த கட்டிலருகில் ஓடினன் மாணிக்கம்.

கட்டிலின்மீது வில்லி அலங்கோலமாக ஒருக்களித்து விழுந்து கிடந்தாள்! அவளுடைய இளமை பொங்கும் நெஞ்சுப் பள்ளத்தின் மத்தியில் மூன்று கத்திக் குத்துகள் புகுந்து குழிபறித்துவிட்டிருந்தன!! இரத்த வெள்ளத்தில் பிரக்ஞைபற்றுக் கிடந்தாள் வில்லி!!!

இதைக் கண்ட மாணிக்கத்தின் உடலும் உள்ளமும் வெலவெலத்து விட்டன. வில்லியின் இரத்தக் கறை படிந்த தோளைப் பிடித்து உலுக்கி "வில்லி!...வில்லி!..." என அழைத்தான். இமைகளை இழுத்து மூடிக்கொண்டிருந்த வில்லி மெதுவாகக் கண் விழித்துப் பார்த்தாள். மாணிக்கம்தான் அங்கு நிற்கிறான் என அறிந்ததும் அவளுடைய முகம் அமைதியான ஒளி பெற்று மலர்ந்தது. "சிங்காரம்...என்னை..." என்று முணகிவிட்டு மேலே பேசமுடியாமல் அனுதாபத்துடனும், ஆழ்ந்த அன்புடனும் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள்.

அந்தப் பார்வையில்—'அன்புள்ள அண்ணு!...சரியான நேரத்தில்தான் இங்கு வந்திருக்கிறீர்கள். சிங்காரம் என்னைப் பழி தீர்த்துக்கொண்டான். என் லட்சியத்தை நிறைவேற்ற நான் அவனிடம் செய்த சாகஸமெல்லாம் பயனற்றுப் போயின. நான் உங்களுக்கு உளவுக்காரியாய் இருக்கிறேன் என அவன் சந்தேகித்து, என்னை ஒழித்துக்கட்டிவிட்டுப் போய்விட்டான். நீங்கள் அவனை என் எதிரே அடித்துத் துன்புறுத்தியிராவிட்டால், இந்த சந்தேகம் அவனுக்கு எழுந்திருக்காது. நடந்தது நடந்துவிட்டது. என் அன்புக் காதலன் ராகவனைக் கொன்ற கொலையாளியைக் கண்டு பிடித்து வஞ்சம் தீர்த்துக்கொள்வதற்கு முன், என் நெஞ்சைப் பிளந்துவிட்டுப் போய்விட்டான் சிங்காரம், என்று எவ்வளவோ விஷயங்களைச் சொல்லின அவள் பார்வை. இன்னும் இரண்டொரு விநாடி நேரத்துக்குள் அவள் இறந்துவிடுவாள். அதைப் புரிந்துகொண்டவள் போல் அவள், "நீங்கள் வாக்குறுதி கொடுக்க வேண்டும்!......" என்று கூறிக்கொண்டே முகத்தை வக்கிரமாக வளைத்து 'ஹா!' என அலறிக் குருதி வழியும் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டாள் வில்லி.

இந்தக் கோரக் காட்சியைக் காணச் சகியாமல் கண்கலங்கி நின்று கொண்டிருந்தான் மாணிக்கம்.

"மாணிக்கம்! என் காதலன் ராகவனைக் கொன்றவனை எப்படியும் பழிக்குப்பழி வாங்குவேன் என்று...வாக்குறுதி கொடுங்கள்..." என்று ஈனஸ்வரத்தில் தடுமாறினுள் வில்லி.

"வில்லி! நிச்சயமாக உன் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பேன். உன் காதலன் ராகவனைக் கொன்றவனைக் கண்டு பிடித்துப்

பழி தீர்ப்பேன்! இதோ வாக்குறுதி! ஆனால், இதை ஒன்றை மட்டும் நீ எனக்குச் சொல்லி விடு!......ஆசிரியர் ராமகாந்தனிடமிருந்த அந்த இரகசியக் கடிதக் கட்டு இப்போது யாரிடமிருக்கிறது?" என்று படபடப்புடன் கேட்டான் மாணிக்கம்.

வில்வி, மூடிக்கொண்டிருந்த கண்களை மெல்லத் திறந்து "அதுவா?......அது......அது......" என்று வாக்கியத்தை முடிப்பதற்குள் அவளுடைய விரிந்த கண்கள் நிலைகுத்தத் தொடங்கின.

மாணிக்கம் பிரமை தட்டி நின்று கொண்டிருந்தான். இன்னும் ஒரு விநாடி நேரம் வில்வியின் உடலில் பிராணன் ஒட்டிக் கொண்டிருக்குமானால் அந்த இரகசியக் கடிதக்கட்டு இருக்குமிடத்தைத் தெரிந்துகொள்ளலாமே என ஏங்கினான். வில்விக்குத் தெரிந்த யாரோ ஒரு நபரிடம்தான் அந்த இரகசியப் 'பைல்' இருக்கிறதெனத் தீர்மானித்துக் கொண்டான். அதை இனி எப்படிக் கண்டு பிடிப்பது?

மாணிக்கம் அவளைக் குலுக்கி, "வில்வி, வில்வி, என் கடைசிக் கேள்விக்குப் பதில் சொல்!...யாரிடம் அது இருக்கிறது...?" என்று கேட்டான். அவளுக்கு அது காதில் விழுந்ததா இல்லையா என்று தெரியவில்லை. ஸ்மரணை தப்பும் நிலையில் அவள், "வாஸந்தி..."என்று என்னவோ சொல்ல முயன்றவள் ஸ்மரணை தப்பிவிட்டாள். அவள் ஆவி என்னும் பறவை உடல் கூட்டிலிருந்து விடுதலைப் பெற்று பறந்தோடிவிட்டது!

"வாஸந்தியா......அவளிடமா இருக்கிறது...?" என்று பயங்கரமாய் வினவினான் மாணிக்கம். வில்வியின் நெஞ்சிலிருந்து வழிந்துகொண்டிருந்த இரத்த வெள்ளத்தையே பார்த்துக்கொண்டிருந்த மாணிக்கத்துக்குச் சட்டென ஆசிரியர் ராமகாந்தனின் நினைவு வந்துவிட்டது. ஆறுநாட்களுக்கு முன்னால் அவனும் இப்படித்தானே குருதி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தான்! அப்போதும் அங்கே மாணிக்கம்தான் நின்றுகொண்டிருந்தான்! அதனால்தான் போலீஸ் 'லாக்கப்பில்' மூன்று நாள் வரை அவன் அடைபட்டுக் கிடக்க வேண்டியிருந்தது! அதே போல, இன்றும் இதோ வில்வி செத்துக் கிடக்கிறாள்; அவள் சாவுக்கு மாணிக்கம்தான் காரணமெனச் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சதி செய்து காட்டிக் கொடுத்தால்?......

மாணிக்கத்துக்குச் சமாளித்துக் கொள்ள முடியாத பீதியாகி விட்டது. வெறிபிடித்தவனைப்போல வில்வியின் உடலை அப்படியே போட்டுவிட்டு அவ்வறையிலிருந்து வெளியே ஓடினான்.

வாசலைக் கடந்து தெருவில் இறங்கி ஐந்தாறு கெஜ தூரம் நடந்திருப்பான். கொஞ்ச நேரத்துக்கு முன்னால், நளினி சென்று கொண்டிருந்த அதே டாக்ஸி, அவன் அருகில் வந்து 'டக்'கென

நின்றது! திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் மாணிக்கம். அதற்குள் நளினி காரை விட்டுக் கீழே இறங்கி அவன் பக்கத்தில் வந்து நின்ருள்!

"ஏதோ அவசர வேலையாகப் போகிறேன் என்று சொல்லி விட்டு, என்ன இங்கே வந்து சுற்றிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று வெறுப்புடன் கேட்டாள் நளினி.

"இல்லை......வந்து......போகிற போக்கில் வில்லியைப் பார்த்துவிட்டுப் போகலாமே என் நினைத்தேன். அதற்குள்......" என்று குழறினன் மாணிக்கம்.

"வில்லியைப் பார்த்தீர்களா?" என்ருள் நளினி சட்டென்று.

மாணிக்கம், பதிலொன்றும் சொல்லத் தெரியாமல் திகைத்தான். வில்லியைப் பார்த்தேன் என்ருல் அவள் கொலையுண்ட விஷயத்தையும் சொல்லியாகவேண்டும். அப்படிச் சொன்னல் அவள் என்ன நினைப்பாளோ? ஒருவேளை, ராமகாந்தனைக் கொன்றதாகப் பழி சுமத்தியது போல, வில்லி கொலையையும் அவன்மீது அவள் சுமத்திவிட்டால்?......

மாணிக்கம், தனக்கு ஏற்பட்ட திகைப்பை ரொம்பவும் சாமர்த்தியமாகச் சமாளித்துக்கொண்டு, "அவள் வீட்டுக்குப் போனேன். கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் வில்லி எங்கேயோ கண்காணுத இடத்துக்குப் போய் விட்டதாகத் தெரிந்தது!" என்ருன் அடைத்த குரலில்.

"அப்படியா?......சரி; இப்போது நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள் நளினி.

"என் அறைக்குப் போகலாமென நினைக்கிறேன்!"

"வாஸந்தியைப் போய்ப் பார்க்கவில்லையா?"

"ஏன்? வாஸந்தியை எதற்காக நான் பார்க்கவேண்டும்?..." என்று கேட்டான் மாணிக்கம்.

"அவள் இப்போது ரொம்பவும் ஆபத்தான நிலையிலிருக்கிருள்!"

"என்ன!" என்று கூவினன் மாணிக்கம்.

"உண்மைதான். அவளுக்கு நேரவிருக்கும் ஆபத்திலிருந்து மீட்கவே உம்மை டாக்ஸியில் அழைத்துச் சென்றேன். அதற்குள் நீங்கள்தான் இறங்கி ஓடிவிட்டீர்களே!" என்று அலட்சியமாகச் சொன்னுள் நளினி.

"இதை என்னிடம் முதலிலேயே சொல்லியிருக்கலாமே!... இப்போது அவளுக்கு என்ன ஆபத்து?" என்று துடித்துக் கேட்டான் மாணிக்கம்.

"ஆண் பிள்ளைகளுக்கு எப்போதுமே அவசர புத்தி அதிகம் என்பதை நீங்கள் நன்ருக நிரூபிக்கிறீர்கள். அசோக்லாலின் கையாளான சிங்காரம், வாஸந்தியைத் தூக்கிக்கொண்டு போக முயற்சிக்கிருன்! வில்லியை இம்சித்து வாஸந்தியை மறைத்து வைத்திருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு விட்டானும்! இதை ஒரு நம்பிக்கையான ஆள் மூலம் அறிந்தே, உங்களிடம் ஓடி வந்தேன்! நீங்கள்தான் பைத்தியக்காரனைப்போல என்மீது சந்தேகப் பட்டு, காரிலிருந்து இறங்கி ஓடி விட்டீர்களே!" என்று குத்தலாகச் சொன்னுள் நளினி.

"வாஸந்திக்கு இந்நேரம் ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டிருக்குமா?" என்று அலறினுன் மாணிக்கம்.

"நான் அந்த விஷயத்தைக் கேள்விப்படும்போது, அதற்கு இன்னும் அரைமணி நேரமே பாக்கி இருந்தது. ஒருவேளை இந்நேரம்......" என்று இழுத்தாள் நளினி.

மாணிக்கம் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. மூளை கலங்கிய பித்தனைப் போல, வாஸந்தி இருக்கும் அந்த மொட்டை மாடி வீட்டை நோக்கித் தலை தெறிக்க ஓடினுன்.


ஓடினுன். ஓடினுன். ஓடிக் கொண்டே இருந்தான். வாஸந்தி இருந்த வீடு சமீபித்து விட்டது. தன் நடை வேகத்தை மட்டுப் படுத்தி நிதானமாக நிமிர்ந்து அந்த வீட்டை ஏறிட்டுப் பார்த்தான்.

அங்கே?—

அசோக்லால் சேட் அப்போதுதான் வாஸந்தி யிருந்த வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்தான்!

## 10

# அகப்பட்டுக் கொண்டார்கள்!



அறிவு மழுங்கிப் போகும் அளவுக்குக் கோபக் கனல் கொப்பளித்தது மாணிக்கத்தின் மனத்தில். அக்னி அஸ்திரம் போல மொட்டை மாடி வீட்டினுள் நுழைந்தான்.

அங்கே அவன் கண்ட காட்சி?—

கூடத்தறையில் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியில் தலையைத்தாங்கிப் பிடித்து உட்கார்ந்துகொண்டிருந்தான் அசோக்லால்! அவனுக்குச் சற்று அப்பால், சிமிண்டுத் தரையில் அமர்ந்திருந்தாள் வாஸந்தி!

மாணிக்கத்தின் கண்கள் சினத்தால் சிவந்து இரத்தமாகப் பழுத்தன. அவ்விருவரையும் திரு திருவென மாறி மாறிப் பார்த்தான். ராணுவப் பயிற்சி பெற்றிருந்த அவனுடைய திண்மையான உடல், கரளை கரளையாக முறுக்கேறி உப்பி நின்றது. சிங்கம்போல் சிலிர்த்துக் கொண்டே அசோக்லாவின்மேல் பாய்ந்தான் மாணிக்கம். அசோக்லால் சடக்கென எழுந்து மற்றொரு நாற்காலியில் போய் அமர்ந்து கொண்டான்.

“பழிபாவத்துக்கு அஞ்சாத பதரே! இப்போது என் இங்கு வந்தாய்?” என்று கர்ஜித்தான் மாணிக்கம்.

அசோக்லால், அவனுடைய இந்த ஆர்ப்பாட்ட வெறிப் பேச்சைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தான்! இந்நேரம் வரை தரையில் உட்கார்ந்திருந்த வாஸந்தி சடக்கென எழுந்து நின்று கொண்டு, “அவரை ஒன்றும் செய்யாதீர்கள்! நான் தான் என் அப்பாவை இங்கே வரும்படி அழைத்தேன்!” என்று சிறிது படபடப்பான குரலில் சொன்னாள் வாஸந்தி.

இதைக் கேட்ட மாணிக்கம் கோடை இடியால் தாக்குண்டவன் போல் குலை நடுக்கம் கொண்டு கலகலத்து நின்று விட்டான். 'வாஸந்தியா அசோக்லாலை வரவழைத்தாள்? ஏன் அழைத்தாள்? இவளும் எனக்கு விரோதிதானா? இவள் என்னை உண்மையாகக் காதலிக்க வில்லையா? நான்தான் அவள் சாகஸத்தில் மயங்கி ஏமாந்து விட்டேனா? என்னை ஒழித்துக் கட்ட வாஸந்தியும் திட்ட மிட்டிருக்கிறாளா?'—மாணிக்கத்தின் தலை வெடித்து விடுவது போலாகி விட்டது. வாஸந்தியைச் சுட்டெரித்து விடுவதுபோலத் திரும்பிப் பார்த்து "நீ என்ன சொல்கிறாய்?" என்று அடித் தொண்டையில் கர்ஜித்தான் மாணிக்கம்.

"கொஞ்ச நேரம் அமைதியாக இப்படி உட்காருங்கள். எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன்!" என்று தழுதழுத்தாள் வாஸந்தி.

மாணிக்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை. ஆயினும் அவன் கோபம் இன்னும் தணியவில்லை. "வாஸந்தி! என்னை ஏமாற்றி விடலாம் என நீ உன் கனவிலும் கருதாதே! எதற்காக இங்கே இவனை அழைத்தாய் என்பதை உடனே சொல்லி விடு. இல்லையானால், அவனுடன் உன்னையும் சேர்த்து நமனுலகுக்கு அனுப்பி விடுவேன்!" என்று பற்களைக் கடித்துக் கொண்டு கூவினான் மாணிக்கம். இதைக் கேட்டு வாஸந்தியின் உடல் பயத்தால் கிடு கிடுக்க ஆரம்பித்தது.

"தம்பீ, மாணிக்கம்! கொஞ்சநேரம் பொறுமையுடன் இப்படி வந்து உட்கார். நான் சொல்லவேண்டிய விஷயங்களைச் சுருக்கமாக உன்னிடம் கூறிவிடுகிறேன். பிறகு வேண்டுமானால், எங்களையோ அல்லது என்னையோ நமனுலகுக்கு அனுப்பி வைக்கலாம்!" என்று ரொம்பவும் நிதானமாகச் சொன்னான் அசோக்லால்.

சேட்டின் இந்தப் பணிவானப் பேச்சு மாணிக்கத்துக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. எனினும் தன் வெறி நிலைமையை அவனால் தணித்துக்கொள்ள முடியவில்லை.

"நீ என்னசொல்ல விரும்புகிறாய்?" என்று அசோக்லாலைப் பார்த்து அதட்டினான் மாணிக்கம்.

"இன்றிரவுக்குள், நீயும் என் மகள் வாஸந்தியும், இந்த ஊரை விட்டு வேறு எங்காவது புறப்பட்டுப் போய்விடவேண்டும்! இதை உண்மையான உள்ளத்துடன், உங்களிருவரின் எதிர்கால நல் வாழ்வுக்காகக் கூறுகிறேன்!" என்றான் அசோக்லால் கனிவான குரலில்.

மாணிக்கம் இதைக் கேட்டுச் சிரித்தான்; பேய்ச் சிரிப்புச் சிரித்தான்.

"சேட்ஜீ! என்னை முழு முட்டாள் எனக் கருதிவிட்டிருக்கிறுயா என்ன? உனது இந்தக் குள்ளநரித்தனமானப் பேச்சுக்கெல்லாம் நான் குழைந்து விடமாட்டேன் என்பதை நீ நன்கு அறிந்து கொள்ளவேண்டும்!" என்று உறுமினுன் மாணிக்கம்.

"மாணிக்கம்! என்னை நீ பழைய அசோக்லாலாகவே இன்னும் கருதிக்கொண்டிருக்கிறுய்! அந்த அசோக்லால் இறந்து ஐந்து நாட்களாகிவிட்டன. இப்போது உன் எதிரில் உட்கார்ந்திருக்கும் அசோக்லால், முற்றிலும் புது மனிதன். இதை நீ பரிபூரணமாக நம்பவேண்டும்! என் சொற்படி இன்றிரவே என் மகளை அழைத்துக்கொண்டு போய் விடு. இதையேதான், மாமனுர் என்று கையெழுத்திட்டு ஒரு சிறு கடிதத்தின் மூலம் உனக்குத் தெரிவித்திருந்தேன்!" என்று தொண்டையடைக்கக் கூறினுன் அசோக்லால்.

அசோக்லால் எவ்வளவுக் கெவ்வளவு பணிவாகப் பேசினுனே அவ்வளவுக் கவ்வளவு மாணிக்கம் குமுறிக் கொந்தளித்தான். சேட்டின் ஒவ்வொரு வார்த்தையிலும் ஒரு குரூரமான சதி அடங்கியிருக்கிறதென்றே மாணிக்கத்துக்குப் பட்டது.

"அசோக்லால்! உனது திறமையான நடிப்பையும், பேச்சையும் கண்டு நான் சந்தோஷப்படுகிறேன்! ஆனுல் அந்த நடிப்பைக் கொண்டு என்னை ஏமாற்றிவிடலாம் என்று மட்டும் மனப்பால் குடித்துவிடாதே! மரியாதையாக இங்கிருந்து எழுந்து போய்விடு; இல்லையானுல், என் அத்தை அன்னபூரணியம்மாளைக் கொன்றதற்காக இன்னும் கொஞ்ச நாளில் சட்டம் உனக்கு அளிக்கப்போகும் மரண தண்டனையை நானே இப்போது அளித்து, அதை என் கையாலேயே நிறைவேற்றி விடுவேன்!" என்று கூச்சல் போட்டான் மாணிக்கம்.

"தம்பீ! நீ இப்படிக் குமுறிக் கொந்தளிப்பது நியாயமானதே! என்னையும் என் பேச்சையும் நீ அத்தனை விரைவில் நம்பத்தான் மாட்டாய். அத்தகைய அநியாயச் செயல்களை அளவில்லாமல் என் ஆயுள் காலத்தில் செய்துவிட்டிருக்கிறேன். நான் கொலை செய்த அந்த அன்னபூரணியம்மாள் உன் விதவை அத்தைமட்டுமல்ல, என்னுேடு பல வருஷங்கள் வாழ்ந்த என் ஆசை நாயகி! என் மகள் வாஸந்தியின் தாய்! இதைவிடக் கொடும்கொலை நான் செய்திருக்கவே மாட்டேன்! அவற்றுக்கெல்லாம் சரியான தண்டனையை விரைவில் அனுபவிக்கவும் போகிறேன். ஆனுல் இப்போது உன் விஷயத்திலும், என் மகள் விஷயத்திலும் நான் கொண்டிருக்கும் சிரத்தை தூய்மையானது. இதை நீ நம்பவேண்டும். என் வார்த்தையை அலட்சியப் படுத்தாமல் இப்போதே புறப்பட ஆயத்தம் செய்!" என்று அடைக்கும் குரலில் சொன்னுன் அசோக்லால்.

"கடிக்க வரும் நல்ல பாம்பு முதலில் அழகாகப் படம் எடுத்து ஆடுவதைப்போல, உன் இறுதிச் சதியை முடித்துக்கொள்ள இத்தனை அற்புதமாக நடித்துப் பேசுகிறாய் என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது! அது சரி; நானும் வாஸந்தியும் வெளியூர் போக வேண்டிய அவசியம் இப்போது என் நேர்ந்தது? அதைச் சொல்லவில்லையே! உன்னைத் தூக்கு மேடைக்கு அனுப்ப இரகசியக் கடிதங்களைத் தேடித் திரியும் என்னை, உன் மகளோடு இந்த ஊரை விட்டு அனுப்பிவிட இப்படிப் பேசுகிறாயா என்ன?" என்று கிண்டலும் கோபமும் கலந்த குரலில் கேட்டான் மாணிக்கம்.

"சொல்லாமலிருப்பேனா? சொல்கிறேன் கேள்! இத்தனைக் காலம் என் உப்பைத் தின்று உடல் வளர்த்த சிங்காரம், எனக்காகப் பல கொலைகளைச் செய்த சிங்காரம், இப்போது என்னுடைய ஜன்மப் பகையாளியாக மாறி விட்டிருக்கிறான்!" என்று அசோக்லால் கூறி முடிப்பதற்குள் மாணிக்கம் குறுக்கிட்டு, "என்ன! சிங்காரம் உன் விரோதியா?" எனக் கூவினான்.

"ஆமாம். அவன் என் ஜன்ம வைரியாக இப்போது மாறி விட்டிருக்கிறான்! அதற்குக் காரணம், என் மகள் வாஸந்தி உன்மீது கொண்ட காதல்தான்!" என்றான் அசோக்லால் அமைதியாக.

"புதிர் பலமாக இருக்கிறதே!......ம்......அப்புறம்?" என்று கேலியாகக் கேட்டான் மாணிக்கம்.

"உண்மையிலேயே இது புதிரான விஷயம்தான். இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. கொலை, கொள்ளை, விபசாரம் எதையுமே செய்யக் கொஞ்சமும் அஞ்சாத அந்தக் கொரேன் சிங்காரம், என் மகள் வாஸந்தியைத் தனக்கு மணம் முடித்துத் தர வேண்டுமென என்னிடம் கேட்டிருக்கிறான்! இதற்குக் காரணம், வாஸந்தியின் அழகும், என்னிடம் இருக்கும் ஏராளமான சொத்தும்தான்! என் ஒரே மகளான வாஸந்தியைச் சட்ட பூர்வமாக மணந்து கொண்டால், என் சொத்துக்களனைத்திலும் பங்குபெறலாம் என்பது அவனுடைய திட்டம்! என் மகளை மணம் புரிந்த மறுநாளே அவன் என்னைத் தந்திரமாகக் கொலை செய்து விடுவான். தான் தற்கொலை செய்து கொண்டு விடுவதாக என்னைப் பயமுறுத்திச் சித்திரவதை செய்து என் கைப்படவே கடிதம் எழுதச் செய்து விடுவான்! இதற்கு நான் எப்படி சம்மதிப்பேன்? என்னுடைய பாபகரமான செயல்களை வெற்றிகரமாக முடித்துக் கொள்வதற்காக, அந்தச் சிங்காரத்தை ஒரு அப்பட்டமான அயோக்கியனாக உருவாக்கி விட்டேன்! இறுதியில் பிறரைக் கொல்வதற்காக நான் படைத்த பூதம், என் தலை மேலேயே வந்து உட்கார்ந்து கொண்டது! நான் கொள்ளைக்காரன் தான்; பல கொலைகளைச் செய்த கொடியவன் தான்; கன்னியரின் கற்பைச் சூறையாடிய கயவன் தான்! ஆனால் எனக்கும் மனித இதயம் உண்டல்லவா? என் இரத்தத்தில் உரு

வாகிப் பிறந்த என் மகளை, எனக்கு நன்கு தெரிந்த ஒரு அயோக்கியக் கொலைகாரனுக்கு எப்படி மனமார மணம் முடித்து வைப்பேன்? கொஞ்ச நாட்களுக்கு முன்னால், என் மகளை நானே கொன்று போட்டுவிடத் தீர்மானித்திருந்தேன். ஆனால் அந்த அரக்க மனத்திட்டம் இப்போது அடியோடு மாறிப்போய் விட்டது. என்னையறியாமல் என்னுள்ளே எங்கிருந்தோ பிள்ளைப் பாசம் வந்து புகுந்து கொண்டது. என் வாழ்க்கைதான் மிருக வாழ்க்கையாக இருந்து விட்டது. அதன் பலனை விரைவில் நான் அனுபவிக்கவும் போகிறேன்! இந்த நிலையில்லாமல், என் மகளாவது சுக வாழ்க்கை வாழ வேண்டுமென்பது இப்போதைய என் லட்சியமாகிவிட்டது! அதனால்தான் ஒரு கடைந்தெடுத்த ரௌடிப் பயலிடம் என் மகளை ஒப்படைக்க என் மனம் ஒருப்படவில்லை. உன்னைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். உன் நேரிய உள்ளத்தையும் நெறியான நடத்தையையும் நான் நன்கு அறிவேன். சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட நீ, அந்த அயோக்கியப் பத்திரிகை ஆசிரியனான ராமகாந்தனுடன் சேர்ந்து எத்தனைக் கஷ்டப்பட்டிருக்கிறாய் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். இந்த உலகத்திலேயே நான் உன் ஒருவனுக்குத்தான் பயந்து கொண்டிருந்தேன்! அப்பேர்ப்பட்ட நீ, என் மகளைக் காதலிக்கிறாய் என அறிந்ததும் உண்மையிலேயே நான் மகிழ்ச்சி கொண்டேன்! என் இதய பூர்வமாக உங்கள் காதலை ஆசீர்வதித்தேன். இந்தப் படுபாதக அசோக்லால், இன்று இந்த ஞானப் பேச்சு பேசுவதற்கு உங்களிருவரின் காதல்தான் காரணம் என்றால் அது மிகையானதல்ல! ஆதலால் மாணிக்கம்! இன்றிரவே, என் மகளை அழைத்துக்கொண்டு இந்த ஊரை விட்டே எங்காவது போய் விடு. கடல் தாண்டி அயல்நாட்டிற்குப் போய் விடு! உங்களிருவரின் முழு வாழ்க்கைக்கும் போதிய பணத்தை நான் எந்த விதத்திலும் அனுப்பி வைக்கிறேன். எனது இந்தப் பேச்சை நீ நிராகரித்தால், இன்றிரவு நிச்சயமாக வாஸந்தியைச் சிங்காரம் தூக்கிக்கொண்டு போய் விடுவான். அப்புறம் அவன் அவளை என் கண்ணெதிரிலேயே கற்பழித்துக் கொலை செய்து விட்டு, என்னையும் கொன்று போட்டு விடுவான்! உன்னையும் கொலை செய்து விடுவான்! இவற்றையெல்லாம் நீ நன்றாகச் சிந்தித்துப் பார்த்து உடனே ஒரு நல்ல முடிவுக்கு வா!'' என்று கூறி நிறுத்தினான் அசோக்லால். அவன் முழு உடலும் வியர்வையால் தெப்பமாக நனைந்து விட்டிருந்தது.

நாற்காலியொன்றின்மேல் தன் ஒரு காலைத் தூக்கிவைத்து ஒருக்களித்துச் சாய்ந்து குனிந்து நின்றுகொண்டிருந்த மாணிக்கம், அசோக்லால் பேசி முடித்ததும் அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டு அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவினான்.

"மிஸ்டர் சேட்ஜீ! உனது அற்புதமான நீண்ட பிரசங்கத்தை அணு அணுவாக ரசித்து அனுபவித்தேன்! உன் பேச்சுத் திறமையையும் நடிப்புத் திறமையையும் என்னல் பாராட்டாமலிருக்க முடியவில்லை! ஆனால் அந்தப் பேச்சில் நான் கொஞ்சங்கூட மயங்கி விடவில்லை என்பதை அனுதாபத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்!" என்று கூறிவிட்டு மீண்டும் வன்மச் சிரிப்புச் சிரித்தான் மாணிக்கம்.

இந்நேரம் வரை மௌனமாக உட்கார்ந்துகொண்டிருந்த வாஸந்தி ஆத்திரத்துடன் மாணிக்கத்தைப் பார்த்து, "என் அப்பா சொல்வது அத்தனையும் உண்மை! நீங்கள் இன்றிரவு என்னைக் கண்டிப்பாக எங்காவது அழைத்துக்கொண்டு போய்விட வேண்டும்!" என்று பொருமிக் கூவினாள்.

சட்டென அவள் பக்கம் திரும்பினான் மாணிக்கம்.

"வாஸந்தி! பெண்புத்தி பின்புத்தி என்கிறார்களே. அதைச் சரியாக நிரூபிக்கிறாய் உன் தந்தை என்பதற்காக அவனுடைய சதிக்கு நான் பலியாகிவிட வேண்டுமா என்ன? காலமெல்லாம் பாபக் கிருத்தியங்களிலேயே படுத்துப் புரண்டுகொண்டிருந்த இவன், இப்போது மகா ஞானியைப்போல வேஷம் போடுவதை அத்தனை சீக்கிரம் நம்பிவிட முடியுமா? உன் அருமை அம்மாவைத் துடிக்கத் துடிக்கக் கொலை செய்த இந்தக் கிராதகனை உன் வாயால் அப்பா என்று கூற உனக்கு வெட்கமாக இல்லையா? எதற்காக நீயும் நானும் இந்த ஊரைவிட்டுப் போகவேண்டும்? அந்த அயோக்கியப் பயல் சிங்காரத்தின் கொட்டத்தை அடக்க எனக்குத் தெரியும். பாபக் கறை படிந்த இந்த அசோக்லாலின் பணத்தைக்கொண்டு நாம் வெளியூர் போய் வாழ்வதா? என்னால் அது முடியாது. எனக்கென சில லட்சியங்கள் இருக்கின்றன. அவற்றுக்காகவே நான் உயிர் வாழ்கிறேன். முதலாவது ஆசிரியர் ராமகாந்தனைக் கொன்ற பேர்வழியைக் கண்டுபிடித்தாகவேண்டும். இரண்டாவது தலைமறைவாகவோ அல்லது இறந்தோ விட்டிருக்கும் ராகவனின் மர்மத்தைத் துப்பறிந்தாக வேண்டும். மூன்றாவது காணமற்போய் இருக்கும் அந்த இரகசியக் கடிதக் கட்டைக் கண்டுபிடித்து, இந்த அசோக்லாலையும், இவனைச் சேர்ந்த மற்ற சமூகத் துரோகிகளையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றியாகவேண்டும்! பிறகுதான் உனக்கும் எனக்கும் உள்ள காதல், கல்யாணத்தில் வந்து முடியும். அதுவரை நான் இந்த ஊரைவிட்டு ஒரு நிமிஷமும் பிரிந்திருக்கமாட்டேன். இப்போது இவன் நம்மை 'வெளியூருக்குப் போ' என்று கூறுவதே மகா பெரிய சூது! இதில் ஏதோ பயங்கரச் சதி அடங்கி இருக்கிறது. இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல், உன் அப்பனுடன் சேர்ந்துகொண்டு சிறுபிள்ளைத்தனமாகப் பேசுவது அத்தனைப் புத்திசாலித்தனமல்ல!" என்று கோடைமழைபோல்

பொழிந்து தள்ளி நிறுத்தினான் மாணிக்கம். வாஸந்தி அவனை நோக்கி, "என் அப்பா என் அம்மாவைக் கொலைசெய்தவர்தான்! அவரை நான் வெறுக்கவும் பழி வாங்கவும் எவ்வளவோ முயன்றேன்!...ஆனால் உள்ளூர ஏதோ ஒரு பாசம்...அப்பா என்ற ஆசை. அதனால் அவரை வெறுக்க முடியவில்லை. அம்மாதான் போய் விட்டாள்; அப்பாவாவது எனக்கு மிஞ்சட்டும்!" என்றாள்.

"வாஸந்தி! அவள் உன் அம்மாமட்டு மல்ல! என் விதவை அத்தை! அதற்குப் பழி வாங்காமல் இவனை விடமாட்டேன்!" என்று கூவினான் மாணிக்கம்.

மாணிக்கத்தின் இந்தப் பேச்சைக் கேட்ட அசோக்லாலின் அதரங்களில் ஒரு சோகப் புன்னகை தவழ்ந்து மறைந்தது. அவன் கண்கள் கலங்கி, நீரைக் கக்கிக் கொண்டிருந்தன.

"மாணிக்கம்! இனிமேல் உன் பிரியம் எதுவோ அதைச் செய்து கொள்!......வாஸந்தி! உன் பாதகத் தந்தையை இதய பூர்வமாக மன்னித்து, முடியுமானால் மாணிக்கத்துடன் இனிது வாழ்ந்து கொண்டிரு. நான் வருகிறேன்!" என்று கூறிக் கொண்டே தட்டுத் தடுமாறி எழுந்து வெளியே போய் விட்டான் அசோக்லால்.

"அப்பா!" என்று அலறிக்கொண்டே சுவரின்மேல் சாய்ந்தாள் வாஸந்தி.

மாணிக்கம் கற்சிலையாகச் சமைந்து நின்று கொண்டிருந்தான். அவனால் எதையும் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை; சோர்வுடன் ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு அதில் உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரம் அந்த அறையில் பூரண மௌனம் நிலவியிருந்தது.

"வாஸந்தி! என் மீது கோபமா?" என்று கேட்டான் மாணிக்கம் நீண்டநேர மௌனத்துக்குப் பின்.

"இல்லை! நீங்கள் நியாயத்தைத்தானே சொல்கிறீர்கள்! என்னயிருந்தாலும் அவர் என் தந்தையாக இருக்கிறார்! உங்கள் இருவருக்குள் யாரைப் பலி கொடுக்கச் சம்மதிப்பேன்? சரி; இனி விதி காட்டுகிற வழியைத் தவிர எனக்கு வேறு கதியில்லை!" என்று வாஸந்தி ஒரு முடிவிற்கு வந்தவளாய்க் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

"வாஸந்தி! விநாயகம் எங்கே போனான்?" என்று கேட்டான் மாணிக்கம்.

"மத்தியானம் போனவர். இன்னும் திரும்பி வரவில்லை!" என்று கம்மிய குரலில் சொன்னாள் வாஸந்தி.

"அவனும் ஒருவேளை சிங்காரத்தின் கையாளாக மாறி விட்டானோ என்னவோ! லீஸர்கள் உள்ள இடங்களில் அந்

தோனியோக்களும் இருக்கத்தானே செய்வார்கள்?...சரி; நீ புறப்படு, மணி எட்டாகி விட்டது. சிங்காரத்தின் ஆட்கள் வருவதற்கு முன் என் ஹோட்டல் அறைக்குப் போய் விடலாம்!" என்று கூறி எழுந்தான் மாணிக்கம். வாஸந்தி பதிலேதும் சொல்லாமல் முகத்தைத் துடைத்துக் கொண்டு அவன் பின்னால் வந்து நின்றாள். இருவரும் வெளியே வந்து கதவைச் சாத்திக்கொண்டு தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தனர்.

அஷ்டமி இரவு. கிழக்குத் திசையிலே இப்பொழுதுதான் சந்திரன் தலை காட்ட ஆரம்பித்திருந்தான். அவனுடைய ஒளி பூமியெங்கும் பரவ இன்னும் கொஞ்ச நேரமாகும். எங்கோ தொலை தூரத்தில் ஒரு ஆந்தை விட்டு விட்டு அலறிக் கொண்டிருப்பதைத் தவிர, எங்கும் நிசப்தம் நிலவி யிருந்தது. அந்த இருட்டு அமைதியிலே, மாணிக்கமும், வாஸந்தியும் ஒருவர் கையை ஒருவர் பற்றி வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தார்கள்.

"என்னால்தானே உங்களுக்கு இவ்வளவு கஷ்டமும்?" என்று குழைந்தாள் வாஸந்தி.

"கிடைத்தற்கரிய மாணிக்கம் கிடைக்கப் பெறுவதென்றால் கஷ்டப்பட்டுத்தானே ஆக வேண்டும்?" என்று மெல்லச் சிரித்துக் கொண்டே கூறி, அவள் உள்ளங் கையை லேசாகக் கிள்ளினான் மாணிக்கம்.

"என்ன இருந்தாலும், இன்பம் என்பதை, இத்தனைத் துன்பங்களின் மத்தியிலே கொண்டு போய்ப் புதைத்து வைக்கக்கூடாது அந்த ஆண்டவன்!" என்று சலித்துக் கொண்டாள் வாஸந்தி.

"இல்லை; இல்லை. துன்பங்களின் மத்தியிலே யிருந்து எடுக்கப்படும் இன்பம்தான், நிரந்தரமுள்ளதா யிருக்கும்!" என்றான் மாணிக்கம உறுதியான குரலில்.

ஜன நடமாட்டமும், வாகனாதிகளின் ஓட்டமும் அற்றிருந்த அந்தப் பாதையின் பின்புறக் கோடியிலிருந்து ஒரு கார் பளிச்சென்ற வெளிச்சத்துடன் வெகு வேகமாக வந்து கொண்டிருந்தது.

"என் தந்தை சொன்னபடி நாம் இருவரும் இன்றிரவே வெளியூருக்குப் போய்விட்டால் என்ன?" என்று மெல்லப் பழைய பேச்சை ஆரம்பித்தாள் வாஸந்தி.

"உன் தந்தையைப் பூரணமாக நம்பிவிட என்னால் முடியவில்லையே!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினான் மாணிக்கம்.

பின்னால் வந்து கொண்டிருந்த கார் மிக மிகச் சமீபித்துக் கொண்டிருந்தது.

"இந்தச் சிக்கலான பிரச்னைகளுக்கெல்லாம் ஒரு இறுதி முடிவு ஏற்பட்டு விட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்!" என்றாள் வாஸந்தி உணர்ச்சி ப்பெருக்குடன்.

"நம் வாழ்க்கைக்கு நல்லதொரு முடிவு நெருங்கி வந்துகொண்டிருக்கிறது!" என்று கூறிக்கொண்டே, வாஸந்தியின் செம்பவள உதடுகளில் ஒரு முத்தமிட்டான் மாணிக்கம்.

மறுகணம்—

'கிரீச்' சென்ற பேரொலியுடன், பின்னால் வந்துகொண்டிருந்த கார் அவர்கள் பக்கத்திலே வந்து நின்றது!

மாணிக்கமும், வாஸந்தியும் துடித்துப் பதறி நின்று, திரும்பிப் பார்த்தனர்.

அங்கே—

நின்றுகொண்டிருந்த காரிலிருந்து இரண்டு குண்டர்கள் திமுதிமுவென இறங்கி ஓடி வந்தனர்! அவ்விருவரில் ஒருவன் சிங்காரம்; மற்றவன் ஹிமாலயா ஹோட்டலில் 'லிப்ட்' வேலைப் பார்த்து வந்த பொன்னன் என்ற பையன். நடுநடுங்கிப்போய் ஒருவரையொருவர் அணைத்துக் கட்டிக்கொண்டு நின்றிருந்த மாணிக்கத்தையும், வாஸந்தியையும் கண்மூடிக் கண் திறப்பதற்குள், அவ்விரண்டு குண்டர்களும் வளைத்துக்கொண்டு, அவர்களை அப்படியே அலாக்காகத் தூக்கிக்கொண்டுபோய்,காரின் பின் 'சீட்' டில் தொபீரெனப் போட்டனர்! பொறிகலங்கிப்போன மாணிக்கமும், வாஸந்தியும், நெம்பி நிமிர்ந்து எழுந்திருப்பதற்குள், பொன்னன் காரின் பின்பக்கக் கதவைத் திறந்த 'டபக்' கென உட்கார்ந்துகொண்டு, கூரிய கத்தியொன்றை நீட்டி "அப்படியே கிடங்கள்! எழுந்தீர்களோ, உங்கள் நெஞ்சைக் கிழித்துவிடுவேன்!" என்று வக்கிர தொனியில் கர்ஜித்தான்.

இதற்குள் சிங்காரம், காரை 'ஸ்டார்ட்' செய்து வெறிவேகத்தில் ஓட்ட ஆரம்பித்தான்!

கார், வாயுகதியில் பறந்து கொண்டிருந்தது. மூச்சுக்கூட விட முடியாமல், திணறிக் குப்புறக் கவிழ்ந்து கிடந்தனர் மாணிக்கமும், வாஸந்தியும்.

பத்து நிமிஷங்கள் பறந்து தீர்ந்திருக்கும். ராக்ஷஸனைப் போல் ஓடிக் கொண்டிருந்த கார், ஒரு பெரிய பங்களாவின் 'போர்டிகோ' வண்டைப் போய் 'டக்'கென நின்றது. அது அசோக்லாவின் பங்களா!

அடுத்த கணம், காரிலிருந்த அவ்விரு குண்டர்களும் சடக்கெனக் கீழே குதித்து, வாஸந்தியை ஒருவனும், மாணிக்கத்தை ஒருவனுமாகப் பரபரவென இழுத்துக்கொண்டு போய், இருண்டு கிடந்த ஒரு அறையில் தள்ளிப் படீரெனக் கதவைச் சாத்தினர்!

இப்படி இரண்டொரு நொடிகள் கழிந்திருக்கும். அவ்வறையின் ஒரு மூலையிலிருந்து 'பளிச்' சென்ற சப்தம் கேட்டது. மறு கணம் அந்த அறையின் நடுவே தொங்கிக் கொண்டிருந்த ஒரு பெரிய மின்சார விளக்குப் பிரகாசமாக எரிய ஆரம்பித்தது.

அங்கே—

அசோக்லால், கையும் காலும் கட்டப்பட்டு ஒரு மூலையில் உருட்டி விடப்பட்டிருந்தான்!

## 11

## எதிரியின் வலையில்!



"அமரக் காதலர்களே! இப்போது எந்த லோகத்தில் இருக்கிறீர்கள் என்பது தெரிகிறதல்லவா?" என்று கேட்டுவிட்டு எளனமாகச் சிரித்துக்கொண்டே முன்னே நடந்து வந்தான் சிங்காரம்..

மாணிக்கமும், வாஸந்தியும் அவமானம் தாளமாட்டாமல் அவலச் சிலைகளாய்த் தலை குனிந்த வண்ணம் இருந்தனர்.

"செத்துக் கிடக்கும் சட்டத்துக்கு உயிரூட்டி, நீதியை நிலை நாட்ட சபதமேற்றுக் கொண்டிருக்கும் ஸ்ரீமான் மாணிக்கம், கேவலம் ஒரு பெண்ணின் காதலுக்காக, இப்படி இஞ்சி தின்ற குரங்கைப் போல—இல்லை, இல்லை; ஆப்பைப் பிடுங்கிய மந்தியைப் போல—அகப்பட்டுக்கொண்டு விழிப்பது அனுதாபப் படவேண்டிய விஷயமாகத்தான் இருக்கிறது!" என்று கூறிவிட்டு கெக்கலிக் கொட்டிச் சிரித்தான் சிங்காரம்.

மாணிக்கத்தின் குருதி, உருக்கிய இரும்புக் குழம்பாகச் சூடேறிக் கொதித்தது. நாளங்கள் முறுக்கேறிச் சுருண்டன. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தோடிப் போய் சிங்காரத்தின் மென்னியைப் பிடித்துத் திருகிப் போட்டு விடலாமாவெனத் துடித்தான். அவ

னுடைய இந்தச் சினத்துடிப்பை அறிந்துகொண்ட சிங்காரம், பலக்கச் சிரித்துக்கொண்டே ஓடி வந்து, விலா எலும்புகள் நொறுங்கிப் போகும் வண்ணம், விட்டான் ஒரு உதை! 'ஹா' வென்ற அலறலுடன் மல்லாக்கச் சாய்ந்து விட்டான் மாணிக்கம். வாஸந்தி இந்தக் கோரக் காட்சியைக் காணச் சகிக்காமல் கழுத்தறு பட்ட கோழிக் குஞ்சைப் போல 'வீல்' எனக் கத்திக் கூச்சலிட்டு விட்டாள்! அவள் இப்படிக் கூவியதைக் கேட்ட சிங்காரத்துக்கு பிரமாதமானக் கோபம் வந்து விட்டது.

"எய், வேசிப் பிண்டமே! என்ன, வேடிக்கையா செய்கிருய்?" என்று கத்திக்கொண்டே ஒரே தாவாகத் தாவி அவளுடைய தலைமயிரைக் கொத்தாகப் பற்றிக் குலுக்கி இழுத்துக் கொண்டு போய்ச் சுவரோரம் சுழற்றி எறிந்தான் சிங்காரம். விலாவைப் பிடித்துக்கொண்டு படுத்துக் கிடந்த மாணிக்கம் இதைக் கண்டு துடித்துப் பதறி விட்டான். எனினும் அந்த நிலைமையில் அவனால் ஏதும் செய்ய முடியாமலிருந்தது.

கையும் காலும் கட்டுண்டு மூலையில் முடங்கிக் கிடந்த அசோக்லால், சிங்காரத்தின் இந்த அட்டகாசத்தைத் தாளமாட்டாமல் குண்டுக் கட்டாக அப்படியே புரண்டு திரும்பி "டேய் சிங்காரம்! என் வீட்டிலேயே இருந்துகொண்டு, எங்களை இந்த ஹிம்ஸைப் படுத்த உனக்கு என்ன தைரியமடா!" என்று கறுவினுன்.

இதைக் கேட்ட சிங்காரம், கழுதையைப்போலக் கனைத்துச் சிரித்தான்.

"எல்லாம் நீ கற்றுக்கொடுத்தப் பாடத்தால் வந்த தைரியந் தான் நைனு!" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்து முழங்கினுன்.

"சேட்ஜீ! இப்போதாவது இந்தச் சிங்காரத்தின் திறமையை நீ நன்கு தெரிந்துகொண்டிருப்பாய். மரியாதையாக உன் மகளை எனக்கு மணம் முடித்து, இருக்கும் சொத்தில் பாதியை என் பெயருக்கு எழுதிக் கொடுத்து விடுவதாக வாக்குக் கொடு! வாக்குக் கொடுத்தால் மட்டும் போதாது; இன்று அதிகாலை நாலரை மணிக்கு முகூர்த்தமிருக்கிறது. அந்தச் சுபவேளையிலே எனக்கும் வாஸந்திக்கும் ரகசியமாகத் திருமணம் நடத்த ஏற்பாடு செய். அப்படிச் செய்தால், இந்த நிமிஷம் முதல் உன் வீட்டு நாயைப்போல உனக்குப் பணிந்து நடக்க வாக்களிக்கிறேன். இல்லையேல், உன் எதிரேயும், அந்தப் பயல் மாணிக்கத்தின் எதிரேயும் வாஸந்தியை மானபங்கப்படுத்துவேன்! பெற்ற தந்தையின் கண் முன்னுலேயே மகளை மானபங்கப்படுத்தும் காட்சி, காதலன் கண் முன்னுலேயே காதலியின் கற்பைச் சூறையாடும் காட்சி, அற்புத நாடகமாக, இப்போதே, இங்கே ஆரம்பமாகும். எனது எந்த முகத்தை அவலட்சணம் என்ருளோ அந்த முகத்தால் அவள் அழகைப் பருகுவேன்!

என்னுடைய எந்த உதடுகளைக் குஷ்டம் பிடித்த வெள்ளை உதடுகள் என்றுளோ அந்த உதடுகளால் அவளின் மிருதுவான உதடுகளை முத்தமிடுவேன்! என்னுடைய எந்தக் கைகளை முரட்டுக் கைகள் என்றுளோ அந்தக் கைகளால் அவளை வளைத்துப் பிடிப்பேன்! என்னை வெறிநாய் என்று எப்படித் திட்டினுளோ அந்த வெறிநாயைப் போலவே அவளைக் கடித்துக் குதறி மானபங்கப் படுத்துவேன்! எவனுல் மானம் பறிக்கப்படுகிருளோ, அவனுக்கு அவள் மனைவி யாவதைத் தவிர வேறு வழியில்லை! அப்புறமும் அவள் மறுத்தால், அவளை இங்குள்ள அத்தனை முரடர்களின் யானைப் பசிக்கும் இரை யாக்கி அவளை மானங்கெட்ட வேசியாக்கி விடுவேன்! இறுதியில் உங்கள் மூன்று பேரையுமே கொன்றுபோட்டு விடுவேன்! என்ன சொல்லுகிருய், அசோக்லால் சேட்?" என்று புயல்போல் சீறிக் கேட்டான் சிங்காரம்.

அசோக்லால் அலட்சியமாகச் சிரித்துக்கொண்டான்: "உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் உலுத்தனே! உன் எண்ணம் ஒருக் காலும் நிறைவேருது என்பதை உறுதியாக உணர்ந்துகொள்!" என்று கண்டம் வெடித்துவிடுவதுபோன்று கத்தினுன் அசோக்லால்.

"அப்படியா விஷயம்? இதோ காட்டுகிறேன்!" என்று கூவிக்கொண்டே அசோக்லாலை நோக்கி ஓடி வந்தான் சிங்காரம்.

இந்தச் சமயத்தில் —

லிப்ட் பையன் பொன்னன் "சிங்காரம் அண்ணுச்சி!" என்று கத்திக்கொண்டே உள்ளே ஓடி வந்தான்.

"என்னடா சங்கதி?" என்று சடக்கெனத் திரும்பிக் கேட்டான் சிங்காரம்.

"வெளியே வா அண்ணுச்சி. விஷயத்தைச் சொல்றேன்!" என்று சிங்காரத்தின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வராந்தாவுக்கு ஓடினுன். சிங்காரம் அறைக் கதவை இழுத்து வெளிப்புறம் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு "என்னடா சேதி?" என்று இரகசியக் குரலில் கேட்டான்.

"மாண்டுபோன ஆசிரியர் ராமகாந்தனின் மனைவி நளினி, சதிக் கடிதங்களையெல்லாம் போலீஸாரிடம் ஒப்படைக்கப் போகிருளாம்!" என்று குழறினுன் பொன்னன்.

"இது எப்படியடா உனக்குத் தெரியும்?" என்று படபடத்தான் சிங்காரம்.

"நான் பங்களா வாசலில் நின்று கொண்டிருக்கும் காரைத் துடைத்துக் கொண்டிருந்தேன். பிச்சைக்காரனைப் போலிருந்த யாரோ ஒருவன் திமுதிமுவென ஓடி வந்து இந்த விஷயத்தை என்னிடம் சொல்லி விட்டு, மேலும் தெரிந்துகொண்டு வருவதாய்க்

கூறி, சிட்டாய்ப் பறந்து விட்டான்!" என்று நாக்குழறக் கூறினன் பொன்னன்.

"அவன் யாரென்று உனக்குத் தெரியவில்லையா?" என்று அதட்டினன் சிங்காரம்.

"தெரிந்துகொள்வதற்குள் அவன் ஓடிவிட்டான் அண்ணாச்சி! அவன் நம்முடைய ஆட்களில் ஒருவன்தான் என்பதில் சந்தேகமில்லை! ஏனெனில், அதற்குப் பிரதியாக ஆயிரம் ரூபாய் வாங்கித் தர வேண்டுமென்றான்!" என்று சிணுங்கினன் பையன்.

சிங்காரத்தின் உடல் பயத்தால் நடுங்கியது. பீடி யொன்றை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு ஆழ்ந்து சிந்திப்பதில் மூழ்கினன்.

இதற்குள், உள்ளே —

மூலையில் முடங்கிக் கிடந்த அசோக்லால் மெல்லத் திரும்பி மாணிக்கத்தைப் பரிதாபமாகப் பார்த்து "மாணிக்கம்! இப்போதாவது என்னை நீ நம்புகிறாய் அல்லவா? இன்று மாலை நான் சொன்னதை நம்பி என் மகளை அழைத்துக்கொண்டு வெளியூருக்குப் புறப்பட்டு விட்டிருந்தால், இப்போது இந்த அவல நிலை ஏற்பட்டிருக்குமா? போனது போகட்டும். இப்போதாவது என் பேச்சை நம்பி செய்ய வேண்டியதைச் செய். இன்னுங்கூட உங்களிருவரின் நல்வாழ்வுக்குச் சந்தர்ப்பம் இருக்கிறது!......அதோ அந்த அலமாரியை நகர்த்திப் பார். அதன் பின்புறம் ஒரு சிறு ரகசியப் பாதையிருக்கும். அதன் வழியாக நீங்களிருவரும் இங்கிருந்து வெளியேறித் தோட்டத்துப் பக்கமாகப் போய்த் தப்பித்துக் கொள்ளுங்கள்!......ம்......சீக்கிரம்! அவன் வந்து விடுவான்!" என்று மிகத் தணிந்த குரலில் துரிதப்படுத்தினன் அசோக்லால். அதற்குள் சிங்காரம் வெளியே புறப்பட்டுப் போகும் சப்தமும், அதற்குப் பதில் நாலைந்து குண்டர்கள் அந்த அறைக்குள் நுழைய கதவின் தாழ்ப்பாளைத் திறக்கும் சப்தமும் கேட்டது!

மாணிக்கம், முதன் முறையாக அசோக்லாலை அன்பு வழியப் பார்த்தான். கலங்கியறியாத அவன் கண்கள்கூட இப்போது கலங்கி நீரைக் கொப்பளிக்கவிட்டுக் கொண்டிருந்தன.

"அப்பா! நீங்களும் எங்களுடன் வந்து விடுங்களேன்!" என்று மெல்லிய குரலில் பொருமினள் வாஸந்தி.

"மகளே! என்னைப் பற்றி நீ கவலைப்படாதே! சிங்காரத்தின் ஆட்களிடமிருந்து இப்போது தப்பித்துக்கொண்டாலும், இனி போலீஸாரிடமிருந்து என்னால் தப்பிக்க முடியாது. நான் செய்த பாவங்களெல்லாம் ஒரே சமயத்தில் இப்போது திரண்டு வந்து என் உயிரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றன! ஆதலால் இங்கிருந்து நான் தப்பிச் செல்ல விரும்பவில்லை. அதோ சிங்காரத்தின் ஆட்கள்

கதவைத் திறந்துகொண்டு வரப்போகிறார்கள். கையில் துப்பாக்கிகளுடனும் கத்திகளுடனும் வருவார்கள். அவர்கள் உங்களைப் பின் தொடராதபடி நான் வழி மறைத்துக் கொள்கிறேன். நீங்கள் போகும் அந்தச் சிறு ரகசியப் பாதையை, நீங்கள் போனதும் என் பெரும் தேகத்தால் மறைத்துக்கொண்டு விடுகிறேன்... உம்...! நீங்கள் உடனே அந்த அறையை விட்டு வெளியேறுங்கள். அது ஒன்றே எனக்குப் பூரண நிம்மதியைக் கொடுத்துவிடும்!" என்று தழுதழுத்தான் அசோக்லால்.

வாஸந்தி குந்திய இடத்தைவிட்டு எழுந்திருக்கமறுத்து "அப்பா! அப்பா!! நீங்கள் இல்லாமல் நான் எங்கும் போகமாட்டேன்!" என அரற்றிக்கொண்டிருந்தாள். அசோக்லால் கண்ஜாடை காட்டவே மாணிக்கம் சரேலெனப் பாய்ந்தோடிப் போய் மூலையில் கிடந்த ஒரு குறுந்தடியை எடுத்து வாஸந்தியின் தலைமீது ஓங்கி ஒரு அடி வைத்தான்! அடுத்த கணம் 'ஐயோ! அப்பா!' என்று அலறிக் கொண்டே பிரக்ஞையற்றுக் கீழே சாய்ந்தாள் வாஸந்தி. அப்படிச் சாய்ந்த அவளைக் குண்டுக் கட்டாகத் தூக்கித் தன் தோள்மீது போட்டுக்கொண்டு அலமாரியின் பின்புறமிருந்த சிறு ரகசியப்பாதை வழியாகப் புறக்கடைப் பக்கம் புகுந்து ஓடினான் மாணிக்கம். அவர்கள் போனதும் அசோக்லால் கட்டுண்ட உடலோடு தரையில் உருண்டு வந்து அந்த இரகசியப் பாதையின் வழியை அடைத்துக் கொண்டான்.

அதே சமயம் சிங்காரத்தின் ஆட்கள் அறைக் கதவைத் திறந்து கொண்டு துப்பாக்கிகள், கத்திகள் சகிதம் ஓடி வந்தார்கள். மதில் சுவரின்மேல் ஏறி தெருவில் மாணிக்கம் வாஸந்தியோடு குதிக்கும் போது, பங்களாவினுள்ளிருந்து இரண்டு வேட்டுச் சப்தங்கள் படு பயங்கரமாக எழுந்து எங்கும் எதிரொலித்தன! அதைத் தொடர்ந்து 'ஹா' வென்ற அசோக்லாலின் அலறல் குரலும் மாணிக்கத்தின் செவியில் நன்றாகக் கேட்டது! சிங்காரத்தின் ஆட்கள் அசோக்லாலைச் சுட்டு விட்டார்கள் என நிச்சயப்படுத்திக் கொண்டான் மாணிக்கம்.

வாஸந்தியைத் தூக்கிக்கொண்டு மாணிக்கம் சிறிது தூரம் தெருவில் ஓடியிருப்பான். எங்கிருந்தோ தடதடவென ஒரு முரட்டு உருவம் ஓடி வந்து மாணிக்கத்தின் எதிரில் நின்றது!

அது வேறு யாருமல்ல; விநாயகம்தான்! அவன் இப்போது பிச்சைக்கார வேஷம் போட்டுக்கொண்டிருந்தான்!!

"மாணிக்கம், ரொம்பவும் ஆபத்தான விஷயம்! உங்களிருவரையும் சிங்காரம் பிடித்துக்கொண்டு போனதை தற்செயலாகப் பார்த்து விட்ட நான், உடனே ஒரு குயுக்தி வேலை செய்தேன். பிச்சைக்காரனைப்போல இந்தக் கிழிந்த கோட்டைப் போட்டுக்

கொண்டு வந்து, காரைத் துடைத்துக்கொண்டிருந்த பொன்னனிடம், 'நளினி இரகசியக் கடிதங்களைப் போலீஸாரிடம் கொடுக்கப் போகிறாள்' எனக் கூறிவிட்டு ஓடிவிட்டேன். ஏன் அப்படிப் பொய் சொன்னேன் என்றால், சிங்காரத்தின் உயிர் அந்தக் கடிதங்களில்தான் இருக்கிறது. அவை மட்டும் போலீஸாரிடம் அகப்பட்டுக்கொண்டால், சிங்காரமும் மாட்டிக்கொள்வான். ஆதலால் நளினியிடமிருந்து அந்தக் கடிதங்களைக் கைப்பற்றிக்கொள்ள, உங்களை எல்லோரையும் மறந்துவிட்டு அங்கு ஓடிவிடுவான் என்றெல்லாம் யோசனை செய்தே இந்தக் குயுக்தி வேலையைச் செய்தேன். சிங்காரம், அதோ நளினியின் வீட்டுக்கு ஓடுகிறான். நீங்களும் அவனைப் பின்தொடர்ந்து ஓடிப்போய், நளினியின் உயிரைக் காப்பாற்ற வேண்டும்!" என்று தொண்டை அடைத்துக்கொள்ள அவசர அவசரமாகக் கூறி முடித்தான் விநாயகம்.

"அப்படியா?......சரி; இதோ வாஸந்தி! இவளைக் கொண்டு போய் வீட்டில் படுக்க வைத்துப் பத்திரமாகப் பார்த்துக்கொள். அவள் மூர்ச்சையாகி விட்டிருக்கிறாள். மெதுவாகத்தான் தெளிவு ஏற்படும். அதற்குள் நான் நளினியின் வீட்டுக்குச்சென்று என்னால் ஆனதைப் பார்த்துச் செய்து விட்டு வருகிறேன்!" என்று கூறிக் கொண்டே தோள் மீது துவண்டு கிடந்த வாஸந்தியை, விநாயகத்தின் தோள் மீது சாய்த்துவிட்டு, நளினியின் வீட்டை நோக்கித் தலை தெறிக்க ஓடினான் மாணிக்கம்.





## 12

# இரட்டைக் கொலை மர்மம்!

**மா**ணிக்கம், நளினியின் வீட்டு வாசற்படியின் மேல் காலெடுத்து வைக்கும்போது, இரவு மணி சுமார் மூன்றிருக்கும்.

வீட்டின் பிரதான வாசல், உட்பக்கம் தாழ்ப்பாளிடப்பட்டிருந்தது. இதைக் கண்ட மாணிக்கம், சிங்காரம் வருவதற்கு முன்னால், தான் வந்து விட்டோமோ என நினைத்துத் தயங்கி நின்றான்! நளினி இந்த வீட்டிலிருப்பாளா? அல்லது பாழடைந்த பங்களாவான அந்தக் கிளைக் காரியாலயத்துக்குப் போய்விட்டிருப்பாளா? இரவு நேரங்களில் அனேகமாக அவள் இந்த வீட்டில் தங்குவதில்லை. ஆனால், இவ் வீட்டின் கதவு உட்பக்கமல்லவா தாழிடப்பட்டிருக்கிறது! நளினி நிச்சயமாக இங்குதான் இருப்பாள். மாடி யறையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கலாம்! சிங்காரம் வந்திருந்தால் இந்த வீடு இந்நேரம் ஒரே களேபாரமாக அல்லவா இருக்கும்!...... கதவைத் தட்டி நளினியை எழுப்பி விஷயத்தைச் சொல்லி, சிங்காரம் வருவதற்குள் அவளை இங்கிருந்து வெளியேறச் சொல்லிவிடலாம்!...

நீண்ட நேர சிந்தனைக்குப் பின் மெதுவாகக் கதவைத் தட்டினான் மாணிக்கம். தட்டிய சிறிது நேரத்திற்கெல்லாம், ஒரு கதவு மட்டும் மெல்லத் திறக்கப்பட்டது. வெளியே இருந்தபடியே உள்ளே தன் பார்வையைச் செலுத்தினான். கூடத் தரையின் ஒரு மூலையில் சின்னஞ்சிறு சிவப்பு விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது அது அந்த வீட்டின் விடிவிளக்கு. எப்போதும் அவ்விளக்கு எரிந்துகொண்டே தான் இருக்கும். அறையில் யாரும் இருப்பதாக மாணிக்கத்துக்குத் தெரியவில்லை கதவை யார் வந்து திறந்தது என்றும் அவனுக்குப் புரியவில்லை பீதிக் குரலில் "நளினி!" என அழைத்துக்கொண்டே தன் வலது காலைத் தூக்கி உள்ளே வைத்தான்.

அடுத்த கணம்!—

சாத்தப்பட்டிருந்த ஒரு கதவின் மறைவிலிருந்து யாரோ ஒரு முரடன் குபீரெனப பாய்ந்து, மாணிக்கத்தின் கழுத்தைப் பிடித்து இழுத்து உள்ளே நெட்டித் தள்ளினான்! மாணிக்கம் இந்தத் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்கமாட்டாமல் தட்டுத் தடுமாறிக்கொண்டே போய்த் தொப்பெனக் குப்புற வீழ்ந்து விட்டான்! மறுவிநாடி, அவ்வறையின் நடுவில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு பெரிய மின்சார விளக்குப் பளிச்சென எரிய ஆரம்பித்தது! குப்புறக் கவிழ்ந்த மாணிக்கம் சடக்கெனத் துள்ளி எழுந்து உட்கார்ந்தான்.

அங்கே—

குரூரத் தோற்றத்துடன் நின்றுகொண்டிருந்தான் சிங்காரம்! அவனுக்குச் சிறிது அப்பால்—அறையின் ஒரு மூலையில்—நாற்காலியோடு நாற்காலியாக நளினி கட்டப்பட்டுக் கடந்தாள்!!

கதவைத் தாழிட்டுவிட்டுத் திரும்பிய சிங்காரம், மாணிக்கம் எழுந்திருப்பதை அறிந்து "டேய் பொடிப் பயலே! அந்த இடத்தை விட்டு ஒரு அங்குலம் நகர்ந்தாலும் உன் விலா எலும்பை நொறுக்கி விடுவேன்!" என்று கர்ஜித்தான்.

மாணிக்கம், சிங்கனைப்போல் நின்று கொண்டிருந்த சிங்காரத்தையும், கட்டுண்டு கிடந்த நளினியையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்னிடமிருந்து தப்பித்துச் செல்ல உனக்கு என்ன தைரியமடா இருக்கும்! வெளியே போய்த் திரும்பி வருவதற்குள் அந்த வேசிப பெண் வாஸந்தியை அழைத்துக்கொண்டு தப்பி ஓடி வந்து விட்டாயோ? உயிர் தப்பிவிட்டோம் என்ற நினைப்பில், இந்தக் கிராதகி நளினியிடம் கொஞ்சிக் குலாவ ஓடி வந்தாயா என்ன? இனிமேல் நீ என்னிடமிருந்து தப்பிக்க முடியாது! வாஸந்தியை நான் அடைய சுலபமான வழி வகுத்துக் கொடுத்து விட்டாய்! எத்தனையோ கொலைகள் செய்துவிட்ட இந்தத் துப்பாக்கியை எடுத்து உங்களிருவரின் நெஞ்சையும் துளைத்தால்தான் அது சாந்தியடையும்!" என்று ஆக்ரோஷமாகக் கூவினான் சிங்காரம்.

முடிவுகாலம் நெருங்கிவிட்ட தென்ற முழு நிச்சயத்துடன் மாணிக்கமும் நளினியும் மௌனமாகத் தலைகுனிந்து கொண்டிருந்தனர்.

கட்டுண்டு கிடந்த நளினியின் எதிரிலே சிங்காரம் வந்து நின்றான். "எய், நளினி! எங்கே அந்த இரகசியக் கடிதக் கட்டை வைத்திருக்கிறாய்? மரியாதையாகச் சொல்லி விடு. இல்லையென்றால்?......" எனக் கறுவிக்கொண்டே அவள் அழகிய சுருள் சுருளான தலைமயிரைப் பிடித்துக் குலுக்கி ஆட்டினான்.

"உண்மையாகச் சொல்கிறேன். எனக்கு அந்தப் 'பைல்' இருக்குமிடம் தெரியாது!" என்று கத்தினாள் நளினி.

"என்னடி டசப்புகிறாய்? 'பைல்' இருக்கும் இடத்தைச் சொல்கிறாயா? அல்லது உன் பெண்மையைச் சூறையாடவா?" என்று பற்களை நறநற வெனக் கடித்த சிங்காரம், நளினியின் வெல்வட் போன்ற மிருதுவான கன்னங்களில் பளீரென்று அறைந்தான். சிவந்த கன்னங்களில் ரத்தம் வழிந்தது.

"நீ என்னை எதுவேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். ஆனால் அந்த இரகசியக் கடிதங்களின் 'பைல்' இருக்குமிடத்தைச் சொல்லமாட்டேன்! இருக்குமிடத்தைச் சொன்னாலும் என்னைக் கொன்றுவிடுவாய்! சொல்லாவிட்டாலும் கொல்லப்போகிறாய்! எப்படியும் எனக்குச் சாவு நிச்சயம்! நான் சொல்லமாட்டேன்!" என்று வன்மையான குரலில் சொன்னாள் நளினி.

"என்ன! முதலில் 'பைல்' இருக்குமிடம் தெரியாதென்று சொன்னாய்; இப்போது அது இருக்குமிடத்தைச் சொல்லமாட்டேன் என்கிறாய்! உன் வாயாலேயே உண்மை வெளியாகிவிட்டதே! மரியாதையாகச் சொல்லிவிடு; தாமதித்தால் உன்னைச் சித்திரவதை செய்து உண்மையைக் கக்கவைப்பேன்!" என்று கர்ஜித்தான் சிங்காரம்.

நளினி மௌனமாக இருந்தாள். மரணத்தை வரவேற்றுக் கொண்டிருந்த மாணிக்கம், நளினியிடம்தான் 'பைல்' இருக்கிறதென அவள் வாய் மூலமாகவே அறிந்ததும் திடுக்கிட்டுத் திகைத்துவிட்டான்!

சிங்காரம் திடீரென எதையோ நினைத்துக்கொண்டவனாய், மாணிக்கத்திடம் பாய்ந்து வந்து அவனை இழுத்துத் தூக்கி ஒரு நாற்காலியில் உட்கார வைத்து, தன் இடுப்பில் சுற்றிக்கொண்டிருந்த கயிறொன்றை அவிழ்த்து அவனை இறுக்கிக் கட்டி விட்டு, கிடுகிடுவென மாடியறைக்கு ஓடினான்! மாடியில்தான் அந்த இரகசியக் கடிதக் கட்டு இருக்குமென நிச்சயித்தே அவன் அப்படி ஓடினான்!...

கட்டுண்டு கிடந்த மாணிக்கமும், நளினியும் ஒருவரையொருவர் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டனர்.

"மாணிக்கம்! நீங்கள் ஏன் இப்போது இங்கு வந்து வலிய ஆபத்தில் சிக்கிக் கொண்டீர்கள்? பாவம், வாஸந்தி உங்கள் முடிவை அறிந்தால் தற்கொலை செய்துகொண்டு விடுவாளே!" என்று அனுதாபக் குரலில் கேட்டாள் நளினி.

"வாஸந்தியும் நானும், சிங்காரத்தின் ஆட்களது மரணப் பிடியிலிருந்து தப்பி ஓடி வரும்போது, உனக்கு ஆபத்து எனக் கேள்விப்பட்டேன். உடனே புறப்பட்டு வந்தேன். வந்த இடத்

தில் இப்படி மாட்டிக் கொண்டேன்!" என்று விரக்தியுடன் பதில் சொன்னான் மாணிக்கம்.

"இப்போது நாமிருவரும் நிச்சயமாகச் சிங்காரத்திடமிருந்து தப்பிக்க முடியாதல்லவா?"

"முடியாது. நம்மிருவரின் வாழ்க்கையும் இன்றோடு முடிந்து விட்டது. கிராதகன் சிங்காரம் வில்லியைக் குத்திக் கொன்றான்! இரவு அசோக்லாலைச் சுடச் செய்தான்! இப்போது நம்மிருவரை யும் சுட்டுக் கொல்லாமல் விடமாட்டான்!"

"என்ன! வில்லியும், அசோக்லாலும் கொல்லப்பட்டார்களா?" என்று ஆச்சரியத்துடன் நடுங்கிக் கேட்டாள் நளினி.

"ஆம்; அவர்கள் சிங்காரத்தினால் மரண ஓலையைப் பெற்றுக் கொண்டார்கள்!" என்று தொண்டையடைக்கக் கூறினான் மாணிக்கம்.

சிறிது நேரம் அவர்களிடையே மௌனம் நிலவியது. மாணிக்கம் மீண்டும் பேசினான்:

"டெலிபோன் எந்த அறையிலிருக்கிறது?"

"ஏன்? போலீசுக்குப் 'போன்' பண்ணவா? நாம்தான் கட்டிப்போடப்பட்டிருக்கிறோமே! மேலும், டெலிபோன் மூன்றாவது அறையிலிருக்கிறது."

மாணிக்கமும் நளினியும் மீண்டும் சிறிதுநேரம் மௌனமாயிருந்தனர்

"மாணிக்கம்! இத்தனைக் கொலைகளுக்கும், துன்பங்களுக்கும் நான்தான் காரணம் என நினைக்கும்போது என் மனம் ரொம்பவும் வேதனையடைகிறது!" என்று கரகரத்த குரலில் கூறினாள் நளினி.

இதைக்கேட்ட மாணிக்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை. "நளினி! இவற்றுக்கெல்லாம் நீ ஏன் காரணமாவாய்?" என்று வியப்போடு கேட்டான்.

இதற்கு நளினி ஏதும் பதில் சொல்லவில்லை. பேசாமலிருந்தாள்.

மாணிக்கத்துக்கு இப்போதுதான் நினைவு வந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்னால் சிங்காரத்திடம், அந்த இரகசியக் கடிதக்கட்டு இருக்குமிடத்தைச் சொல்லமாட்டேன் என்றாளல்லவா? சொல்ல மாட்டேன் என்றால், அதை வைத்துக் கொண்டிருப்பவள் இவளாகத்தானே இருக்க முடியும்?......

மாடியிலே சிங்காரம் மேஜை, நாற்காலி, தட்டுமுட்டுச் சாமான்களையெல்லாம் உருட்டிக் கொண்டிருக்கும் சப்தம், கீழே நன்றாகக் கேட்டது!

" நளினி! நாமிருவரும் இன்னும் கொஞ்சநேரத்தில் இறந்து விடுவது நிச்சயம்! இப்போதாகிலும் உன் மனத்தில் மறைந்து கிடக்கும் இரகசியங்களை என்னிடம் சொல்லி விடு. அதன் மூல மாவது உனக்கு இந்தக் கடைசி காலத்தில் கொஞ்சம் சாந்தி எற் படும். எனக்கும் அது நிம்மதியைத் தரும். நான் எத்தனையோ கொலைகளைக் கண்ணால் பார்த்து விட்டேன்! அவ்வளவுக்கும் சிங்காரம்தான் கொலைகாரன் என்று தெளிவாகி விட்டது! ஆனால் உன் கணவர் ஆசிரியர் ராமகாந்தனின் கொலை?...ராகவனின் மறைவு? இவற்றின் மர்ம மென்ன?" என்று மிக உருக்கமாகக் கேட்டான் மாணிக்கம்.

தலைகுனிந்திருந்த நளினி, மெல்ல நிமிர்ந்து மாணிக்தை ஊடுருவிப் பார்த்தாள். சிறிதுநேரம் பார்த்துக்கொண்டே இருந்து விட்டு சட்டெனத் தன் கண்களை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

" மாணிக்கம்! நீங்கள் சொல்வது உண்மைதான். நாமிரு வரும் இன்னுங் கொஞ்சநேரத்தில் சாகத்தான் போகிறோம்!...... ஆதலால்......" என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தி விட்டு மாணிக்கத்தைப் பார்த்தாள், நளினி. இப்போதவள் கண்கள் லேசாகக் கலங்கிவிட்டிருந்தன.

மாணிக்கத்துக்கு நளினியின் பேச்சும் செய்கையும் பெருத்த ஆச்சரியத்தை விளைவித்தன. இப்போதவள் அவனுக்கு ஒரு பயங் கர மர்மப் பெண்ணாகவே காட்சியளித்தாள்.

மாடியில் சிங்காரத்தின் உருட்டலும் புரட்டலும் பலப்பட்டுக் கொண்டே போயிற்று.

" நளினி! ராகவன் எங்கே இருக்கிறான்? உயிரோடிருக் கிறானா? கொலை செய்யப்பட்டானா? அதையாவது சொல்லேன்!" என்று பரிதாபமாகக் கேட்டான் மாணிக்கம்.

" அவன் இப்போது, அந்தப் பாழடைந்த பங்களாவில் இருக் கிறான்!" என்று விழிகளைப் புரட்டாமல் கரகரத்தக் குரலில் கூறி னாள் நளினி.

இதைக் கேட்ட மாணிக்கம் "ஹா! அவன் அங்கேயா இருக் கிறான்!" என்று அலறியே விட்டான்.

" ஆமாம். அவன் அங்கேதான் இருக்கிறான். உயிரோடு அல்ல; அழுகி நாற்ற மெடுத்துப் போன பிணமாகக் கிடக் கிறான்!" என்று கொஞ்சமும் ஆடாமல் அசையாமல் சொன்னாள் நளினி. ஆனால் அடுத்த கணம் பொலபொலவென்று அழுது விட்டாள்.

மாணிக்கத்தின் உடலும் உள்ளமும் ஒரு குலுங்குக் குலுங்கி நின்றன.

"பிணமாகவா? அவன் இறந்து விட்டானா? எப்படி இறந்தான்? யார் அவனைக் கொன்றது?" என்று துடி துடித்துக் கேட்டான் மாணிக்கம்.

அழுது கொண்டிருந்த நளினி ஆக்ரோஷத்துடன் தலை நிமிர்ந்து பார்த்தாள். அவளது கருவிழிகளில் விஷ்ரோமும் அளவற்ற துயரமும் அலாதியான ஒரு அருவருப்பும் பொங்கி நின்றன.

"ராகவனைக் கொன்றது என் கணவர்தான்!" என்று ரொம்பவும் நிதானமாகவும் அழுத்தந் திருத்தமாகவும் சொன்னாள் நளினி.

மாணிக்கத்தின் வாயும் விழிகளும் அகலத் திறந்து விரிந்தன.

"ஆசிரியர் ராமகாந்தனா ராகவனைக் கொன்றார் என்கிறாய்?"

"ஆமாம்!"

"அப்படியானால் ஆசிரியர் ராமகாந்தனைக் கொலை செய்தது யார்?" என்று பட படப்புடன் கேட்டான் மாணிக்கம்.

நளினி மௌனம் சாதித்தாள். அவள் முகம் இப்போது சுடுகாட்டுப் பேயைப்போலக் கறுத்துச் சுருங்கிவிட்டது.

"நளினி! ஆசிரியரைக் கொன்றது யார்?" என மீண்டும் துரிதப்படுத்தினான் மாணிக்கம்.

"பாம்பை அடித்துக் கொல்பவன் யாராயிருந்தாலென்ன?" என்று அலட்சியமாகப் பதில் சொன்னாள்.

"புதிர் போடாமல் சொல், நளினி! ஆசிரியர் ராமகாந்தனை யார் அவ்வளவு கோரமாக மூன்று குண்டுகள் பாயும்படி சுட்டுக் கொன்றது?" என்று கேட்டான் மாணிக்கம்.

"ஆசிரியர் ராமகாந்தனை நான்தான் மூன்று குண்டுகள் பாயும்படி அவ்வளவு கோரமாகச் சுட்டுக் கொன்றேன்! மாலையிட்ட கணவனை, இதோ இந்தக் கைதான் சுட்டு வீழ்த்தியது!!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூச்சலிட்டாள் நளினி.

மாணிக்கத்துக்கு மயக்கம் வருவது போலிருந்தது. அவனிருக்கும் வீடும், அதைத் தாங்கி நிற்கும் பூமியும் விர்ரெனச் சுழல்வது போலிருந்தன. பித்தனைப்போல நளினியை மிரள மிரளப் பார்த்தான்.

சிங்காரம், மாடியறையில் அட்டகாசம் செய்து கொண்டிருப்பது நன்றாகக் கேட்டது.

"நளினி! நேரமாகிறது. சிங்காரம் இறங்கி வந்து விடுவான். விவரங்களை விரைவாகச் சொல்லி, உயிர் போவதற்குள் என் உள்ளத்துக்குச் சாந்தி கொடுத்து விடேன்!" என்று தழு தழுத்தான் மாணிக்கம்.

"ஆமாம். அந்த விவரங்களைச் சொல்லத்தான் போகிறேன். இனிமேல் யாருக்காக, எதற்காக அவற்றை மறைத்து வைக்க வேண்டும்? சொல்கிறேன்; கேளுங்கள்.

"நான் ராகவனைக் கொல்லவில்லை! அவனைக் காதலித்தேன்! எனக்கு மணமாகு முன்பே அவனைச் சிறு வயசில் காதலித்தேன்! பிறகு எனக்கு மணமாகி ராகவன் உதவி ஆசிரியராக என் கணவரிடம் வேலைக்கு வந்தமர்ந்த போதும் அவனை உள்ளூரக் காதலித்தேன். ஆனால் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை! என் ஹிருதயத்தில் ஓடும் ஒவ்வொரு நரம்பும் அவனைக் காதலித்தது! அவன் என்ன நினைத்தானோ, லேடி டைப்பிஸ்ட் வில்லியைக் காதலித்தான்! இது எனக்குத் தெரியும். இருந்தாலும், அவனைக் காதலிக்க வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. இதற்குக் காரணம்?—

"நான் மணமானவள். ஊரெல்லாம் கண்டு மிரளும் ஒரு பயங்கர பத்திரிகாசிரியரின் மனைவி! என் கணவரை உள்ளன்போடு நேசித்து வந்தேன். அவர் மீது என் முழு அன்பையும் பொழிந்தேன். இது 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகையை அவர் ஆரம்பிப்பதற்கு முன்னால்! அவர் இந்தப் பத்திரிகையை ஆரம்பித்ததும், என்னை—என் அன்பை—என் இளமைத் துடிப்பை—அவ்வளவாக லட்சியம் செய்ய வில்லை. பணம் ஒன்றையே குறிக்கோளாக வைத்துப் பல பைசாச கருமங்களில், பயங்கர மிரட்டல்களில் ஈடுபட்டார். இது எனக்குப் பிடிக்கவில்லை. அவர் பணம் சம்பாதிப்பதா பிடிக்கவில்லை? அல்ல; பணத்தின் மீதுள்ள பற்றால் அவர் என் இளமைத் தாபங்களை அலட்சியப் படுத்தியதுதான் எனக்குப் பிடிக்கவில்லை! ஒரு பெண்ணானவள், ஓர் ஆணின் அன்பாலேயே வாழக் கூடியவள். அதை யார் தர மறுக்கிறானோ அவனை வெறுத்து, யார் தர விரும்புகிறானோ அவனை வரவேற்றுக் கொள்ளத் துணிந்து விடும் அளவுக்குப் போய்விடக் கூடியவள்! நான் மட்டும் இதற்கு எப்படி விதிவிலக்காவேன்?

"ராகவன், எந்தப் பெண்ணும் காதலிக்கக் கூடிய ஓர் அழகிய ஆண் மகனாய் இருந்தான்! எப்போதும் சிரித்த முகமாய்க் காட்சியளிக்கும் உல்லாச புருஷனா யிருந்தான். இளவயசு வாலிபனாகவுமிருந்தான்! ஆதலால் என் கணவன் தர மறுத்த அன்பை அவனிடம் பெறத் துணிந்தேன்! எனது இந்தத் துணிவை ராகவன் ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு இரண்டு காரணங்களிருந்தன. ஒன்று, என் கணவன் மீது அவனுக்கு அதிகமான பயமும், பக்தியும் இருந்தன. இரண்டாவது லேடி டைப்பிஸ்ட் வில்லியை அவன் காதலித்து வந்தான். இவ்விரு காரணங்களால் என்னை அவன் ஏற்றுக்கொள்ளப் பின்னடைந்தான். என் முழு சாமர்த்தியத்தையும் பிரயோகிக்க முற்பட்டேன். நாளாவட்டத்தில், கொஞ்சங் கொஞ்சமாக அவன் எனக்கு அடிமையாகித்

கொண்டு வந்தான். நான் லில்லியை விட அழகி என்பதை அவன் அறிந்துகொண்டான். இறுதியில், அவனே என்னை முழுமூச்சுடன் காதலிக்க முன் வந்தான்!......

"இந்த விஷயம், என் கணவர் ராமகாந்தனுக்கு எப்படியோ கடைசி காலத்தில் தெரிந்துவிட்டது. ஊராரின் இரகசியங்களை, உலகத்திலுள்ள பெண்களின் சோரங்களை உளவறியும் அவருக்கு, வீட்டில் நடப்பது விளங்காமல் போய்விடுமா? அவர் உண்மையிலேயே புத்திசாலிதான். எங்களிருவரின் நடவடிக்கைகளையும் ரொம்பவும் உன்னிப்பாக அவர் கவனித்து வரலானர். நாங்களும் ரொம்ப ஜாக்கிரதையாகவே நடந்து வந்தோம்!......

"இந்தச் சமயத்தில்தான் அசோக்லாலின் பயங்கரச் சதித் திட்டக் கடிதங்கள், என் கணவரிடம் வந்து சிக்கிக் கொண்டன. அந்தக் கடிதங்களை யார் பயன்படுத்திக் கொள்கிறார்களோ அந்தக் கடிதங்களை வைத்துக்கொண்டு யார் அசோக்லாலை மிரட்டுகிறார்களோ அவர்களுக்கு லக்ஷக்கணக்கான ரூபாய் இலஞ்சம் கிடைக்கும் என்பது எனக்கு நன்கு தெரிந்தே இருந்தது!......

"அந்த தஸ்தாவேஜு என் கணவரிடம் வந்து சேர்ந்த பிறகு, ஒருநாள் மாலை—

"ராகவன் என்னைச் சந்தித்து, எனக்கு அதிகமான கனவுகளை ஊட்டி, குதூகல போதையில் ஆழச்செய்து விட்டு, ராமகாந்தன் வைத்திருக்கும் அந்த இரகசியக் கடிதக் கட்டைக் கிளப்பிக்கொண்டு வந்து தன்னிடம் கொடுத்து விடும்படி கெஞ்சினன்! ஆரம்பத்தில் இதற்கு நான் ஒப்பவில்லை. அந்தக் கடிதங்களின் மூலம் ஆயிரக்கணக்கில் பணம் சம்பாதித்துக்கொண்டு, அவ்வூரை விட்டு ஓடி, வேறெங்காவது இருந்து கொண்டு சுகமாகவும் நிம்மதியாகவும் ஆனந்தத் தம்பதிகளைப் போல வாழலாம் என்றெல்லாம் எனக்கு ஆசை வார்த்தைகள் காட்டினன். நான் அவன் பேச்சில் மயங்கி விட்டேன். அவன் திட்டத்தை ஏற்றுக் கொண்டேன். ஏன் தெரியுமா? கொஞ்ச காலமாக என் கணவர் ராமகாந்தன் டைப்பிஸ்ட் லில்லியைக் காதலிக்க ஆரம்பித்திருந்தார்! இதை என்னல் சகிக்க முடியவில்லை. ஊரிலிருக்கும் பெரிய மனிதர்கள் செய்யும் விபசாரங்களையெல்லாம் பத்திரிகையில் அம்பலப்படுத்தி வந்த இவர், இரகசியத்தில், ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண்ணின் கற்பைச் சூறையாடுவது எனக்குச் சொல்லொணு வேதனையை அளித்தது. ஊருக்கு உபதேசம் செய்து, சொந்த வாழ்க்கையில் தவறிப் போகும் என் கணவனின் மனைவியான நான் மட்டும், ஏன் நேர்மையுள்ளவளாக நடந்து கொள்ளவேண்டும்? என் காதலன் ராகவனுடன் இந்த ஊரை விட்டே ஓடி, ஆசிரியர் ராமகாந்தனுக்குப் பெருத்த அவமானத்தை உண்டுபண்ணி வைக்கவேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டேன்!

"என் சம்மதத்தை அறிந்த ராகவன் உடனே, வெகு தொலைவி லுள்ள ஊர் ஒன்றுக்கு, இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகளை 'புக்' செய்து விட்டான்!

"அன்று மாலை, ராகவனும் நானும் அந்தப் பாழடைந்த பங் களாவில்—அதாவது 'அபாய அறிவிப்புக் கிளை'க் காரியாலயத்தில்—சந்தித்து, இரகசியக் கடிதங்கள் அடங்கிய 'பைலை' எடுத்துக்கொண்டு ஓடி விடுவது என்று திட்டம் போட்டிருந்தோம். அதன்படி, முன்னதாகவே ராகவன் அங்கு போயிருந்தான். நான் என் நகைகள் எல்லாவற்றையும் எடுத்துப் பூட்டி 'ஜில்'லெனச் சிங்காரித்துக்கொண்டு அந்தப் பழைய கட்டிடத்துக்குக் கிளம்பிப் போனேன். அங்கேதான் அந்த இரகசியக் கடிதக்கட்டை ஆசிரியர் ராமகாந்தன் வைத்திருந்தார்!

"ராகவனும் நானும் சிறிதுநேரம் உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்தோம். சரஸ சல்லாபங்கள் பல செய்து மகிழ்ந்தோம். மாலை மணி ஐந்தரையாகிவிட்டது. ராகவன் ஸ்டேஷனுக்குப் புறப்பட துரிதப்படுத்தினான். நான் இடுப்பில் சொருகிக் கொண் டிருந்த சாவியை எடுத்துக்கொண்டு மாடியறைக்கு ஓடினேன். அங்கிருந்த ஒரு அலமாரியைத் திறந்து அந்த இரசியக் கடிதக் கட்டை எடுத்துக்கொண்டு கீழே இறங்கி ஓடிவந்தேன்.

"அங்கே —

"ராகவன் ஒரு தூணில் கட்டப்பட்டுக் கிடந்தான்! அவனுக் குப் பக்கத்தில் கையில் ஒரு துப்பாக்கியுடன் அலட்சியமாகச் சிரித் துக்கொண்டே, மாடிப் படிப்பக்கம் திரும்பி நின்றுகொண்டிருந் தார் என் கணவர் ராமகாந்தன்!!

"இந்தக் காட்சியைக் கண்ட நான் நிலை குலைந்து கற்சிலையாக சமைந்து நின்றுவிட்டேன்.

"'கற்பரசி நளினியம்மாளே! இந்தக் கள்ளக் காதல் நாடகம் எத்தனை நாட்களாய் நடந்து வருகிறது!' என்று எகத்தாளமாகச் சிரித்துக் கேட்டுக்கொண்டே என்னை நோக்கி நடந்து வந்தார் ஆசிரியர் ராமகாந்தன். நான் நடுநடுங்கியவாறு அவரையே பார்த் துக்கொண்டிருந்தேன்.

"'நளினி! இன்று உன் அலங்காரம் ரொம்பவும் அற்புதம்! இந்த அற்புத அலங்காரத் திறமைக்காக, இதோ கட்டுண்டு கிடக்கும் உன் காதலன், எத்தனைக் கன்னல் முத்தங்கள் கொடுத்தான்?' என்று கேட்டுவிட்டுப் பலக்கச் சிரித்தார் ராமகாந்தன்...

"அவமானத்தாலும் பயத்தாலும் என் உயிர் அந்த இடத் திலேயே போய்விடுவது போலிருந்தது. மிரள மிரள அவரைப் பார்த்துக்கொண்டிருந்தேன்...

"'திடமான திட்டம் போட்டுக்கொண்டுதான் காதலர்கள் கிளம்பிவந்திருக்கிறார்கள்! பலே! காதலர்கள் என்றால் இப்படி யல்லவா இருக்கவேண்டும்? எங்கே, உன் கையிலிருக்கும் அந்தக் கடிதக் கட்டை இப்படிக் கொடு பார்க்கலாம்!' என்று ஏளனமாகச் சிரித்துக்கொண்டே என் கையிலிருந்த 'பைலை' 'வெடுக்' கெனப் பிடுங்கினார் ராமகாந்தன்.

"'அதுதானே பார்த்தேன்! இந்தப் 'பைலை'தானே நீங்கள் கிளப்பிக்கொண்டு போகவேண்டும்? ஏனென்றால், இதில் லட்சக் கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்கக்கூடிய சரக்கு இருக்கிறதென் பது உங்களுக்குத் தெரியாதா என்ன?' என்று உரக்கச் சிரித்துக் கொண்டே அதைத் தன் கோட்டுப் பாக்கட்டுக்குள் திணித்துக் கொண்டார்.

"சிறிது நேரம் அந்த அறையிலேயே மேலுங் கீழுமாக உலா விக்கொண்டிருந்தார். அவர் வலது கையில் அந்தப் பெரிய துப் பாக்கிச் சுழன்றுகொண்டே இருந்தது. பிறகு சட்டென என் பக் கம் திரும்பி, 'நளினி! உனக்கு நேரமாகிற தல்லவா? இதோ என் வேலையை முடித்துக் கொண்டுபோய் விடுகிறேன். பிறகு எவ் வளவு நேரமானாலும் உன் காதலனுடன் இருந்து கொஞ்சிக்கொண் டிரு!' என்று கூறிக்கொண்டே, தூணில் கட்டப்பட்டிருந்த ராகவ னின் கன்னத்தை நோக்கித் துப்பாக்கியால் குறிவைத்துச் சுட் டார்! குண்டு வலது கன்னத்தில் புகுந்து இடது கன்னப் பக்கம் வெளிவந்தவிட்டது! ராகவன் மரண ஓலமிட்டார். நான் 'வீல்' எனக் கத்திக் கூவினேன். என் கணவர் ராமகாந்தன் உரக்கச் சிரித்தார்.

"'நளினி! ஏனிப்படி ஊளையிடுகிறாய்? உன் காதலனின் அழ கிய கன்னங்கள் பொத்தலாகிவிட்டதே என்று அங்கலாய்க்கிறாயா? இனிமேல் அந்தக் கன்னங்களில் உன்னால் முத்தமிட முடியாதே என அழுகிறாயா? ஐயோ, பாவம்!...சரி; இதையும் பார்! ராகவ னின் இந்தக் கண்கள்தானே உனக்குப்போதையூட்டின? அவற்றை இப்போது நன்றாகப் பார்!' என்று அட்டகாசமாகச் சிரித்துக் கூறிக்கொண்டே, ராகவனின் இரு அழகிய கண்களையும் குறிவைத் துப் பக்கவாட்டில் சுட்டார் ராமகாந்தன். விழியுருண்டைகள் சித றிச் சிந்த சப்தமிட்டுப் புழுபோலத் துடித்தார் ராகவன்.

"'நளினி! இதையும் பார். இந்த ஹிருதயத்தில்தானே, ராக வன் உன் உருவை பிரதிஷ்டை செய்துவைத்து அதைப் பூஜித்து வந்தான்? அதற்குக் கிடைக்கும் பரிசும் என்ன ஆகிறதென உன் கண்குளிரப் பார்த்துவிடு!' என்று கூறிக்கொண்டே, மூன்றாவது முறையாக ராகவனின் நெஞ்சைக் குறிவைத்துச் சுட்டார் ராம காந்தன்.

"மூன்று குண்டுகள் பாய்ந்த ராகவனின் உயிர், அந்தக் கணமே அவன் உடலிலிருந்து பிரிந்து போய்விட்டது! பிண கனத்தைத் தாளமாட்டாமல் கயிறு அறுந்துகொண்டதால், ராகவனின் உயிரற்ற உடல் தடாலெனக் கீழே சாய்ந்தது.

" ஆசிரியர் ராமகாந்தன் இன்னும் சிரிப்பை அடக்கவில்லை! என் கொரேக் கணவர் சிரித்துக்கொண்டேதான் இருந்தார். பிறகு என் பக்கம் திரும்பி 'நளினி! இதோ இந்தத் துப்பாக்கியில் இன்னும் மூன்று குண்டுகள் பாக்கி இருக்கின்றன. இவற்றை உன் இஷ்டம்போல் அவன் உடலில் செலுத்திச் சாந்தியடை! ஏன் தெரியுமா? மணமான ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்து அவளை வஞ்சித்துவிட்டு, அதற்கு எதும் வழிசெய்யாமல் இறந்துவிட்டான் அல்லவா? அதற்காக, அவன் மீது உன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்! அல்லது உன் அருமைக் காதலனோடு நீயும் சொர்க்கத்திற்குப் போகவேண்டு மானாலும் உனக்கு இந்தத் துப்பாக்கி உபயோகப்படும்! அதற்காகத்தான் உன்காதலனுக்கு உபயோகப்படுத்தியதுபோல் இன்னும் மூன்று குண்டுகளை உனக்காக வைத்திருக்கிறேன்!' என்று கூறிக்கொண்டே அவர் கையிலிருந்த துப்பாக்கியைச் செத்துக்கிடந்த ராகவனின் உடல்மேல் அலட்சியமாகத் தூக்கியெறிந்துவிட்டு விர்ரென வெளியேறிப் போய்விட்டார் ஆசிரியர் ராமகாந்தன்!

" என் முழு மனத்துடன் காதலித்த ராகவன், குப்புறக் கவிழ்ந்து இரத்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தான். அவனின் இரத்தத்தைக் கண்டதும் என் பெண்ணுள்ளம் பெருத்த அளவில் அகண்டாகாரமாகச் சீறிக் கனன்றது. ராகவனின் பிணத்தின்மீது கிடந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்டு நேரே என் வீட்டுக்கு ஓடினேன்!"—

நளினி பேச்சை இதோடு நிறுத்தினுள். அவளுக்கு மேல் மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது. கண்கள், வெள்ளமாக நீரை வடித்துக்கொண்டிருந்தன. மாடி அறைகளில் சிங்காரம் இன்னும் சாமான்களை உருட்டிப் புரட்டிக் கொண்டுதான் இருந்தான்!...

மாணிக்கம் பிரமை தட்டியவன்போல ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து நளினியையே விறைக்கப் பார்த்துக்கொண்டிருந்தான். சிறிது நேரங்கழித்து "உடனே வீட்டிற்கு ஓடி உன் கணவர் ஆசிரியர் ராமகாந்தனைச் சுட்டுவிட்டாய்!" என்றான் மாணிக்கம் படபடப்புடன்.

நளினி மீண்டும் பேச ஆரம்பித்தாள்:

"துப்பாக்கியுடன் நான் என் வீட்டை அடையும்போது இரவு மணி ஏழாகி விட்டது. என் கணவர் ராமகாந்தன், தனது ஆபீஸ் அறையில் தனியாக உட்கார்ந்து, அந்த வார 'அபாய அறிவிப்பு'ப் பத்திரிகைக்கு வழக்கம்போல் கட்டுரை எழுதிக்கொண்டிருந்தார்!

ஊரிலிருக்கும் எவனோ ஒரு பெரிய மனிதன் செய்த கொலையையும், எவளோ ஒருவனின் மனைவி செய்த விபசாரத்தையும் பற்றி அவர் காரசாரமான நடையில் கட்டுரை எழுதிக்கொண்டு இருந்திருக்க லாம்! ஆனால், இவர் இப்போது செய்து விட்டு வந்த கொலையை யும், இவர் வீட்டில் நடந்த விபசாரத்தையும் யார், எந்தப் பத்திரி கையில் எழுதுவது?...

"வெறி பிடித்தவளைப்போல நான் அவர் எதிரில் போய் நின் றேன். என்னை அவர் நிமிர்ந்து பார்த்தார். என் கையில் துப்பாக்கி இருப்பதையும் பார்த்தார். எந்தத் துப்பாக்கியால் என் காதலன் ராகவனை அந்தப் பாழடைந்த பங்களாவில் சுட்டு விட்டு வந்தாரோ அதே துப்பாக்கி என் கையில் இருப்பதைப் பார்த்தார். ஆனால் அதைக் கண்டு அவர் கொஞ்சமும் பொருட் படுத்தவில்லை. அலட்சியமாகச் சிரித்துக்கொண்டே மீண்டும் குனிந்து எழுதுவதில் முனைந்தார்.

"அவர் எழுதிக்கொண்டே யிருந்தார். நான் அவர் எதிரில் துப்பாக்கியுடன் நின்றுகொண்டே யிருந்தேன்...நான் அவரைக் கொல்லப் போவதாக மெல்லிய குரலில் சொன்னேன். அவர் அலட்சியமாக ஒருமுறை என்னை ஏறிட்டுப் பார்த்து விட்டு மறுபடி குனிந்து, ஒரு புன்முறுவலுடன் எழுதலானார்! தாலி கட்டிய மனைவி கணவனைக் கொல்லமாட்டாள் என்பது அவரின் தைரியம் போலும்! கணவனைக் கொன்று நான் விதவையாகி, பூ இழந்து, மஞ்சள் இழந்து, குங்குமம் இழந்து வாழ விரும்பமாட்டேன் என்று அவர் கருதித்தான் அப்படி அலட்சியமாக இருந்தார் போலும்! ஊர் சிரிக்கச் சிறைக்குச் செல்ல விரும்பமாட்டேன் என்று நினைத் தார் போலும்! இதையறிந்த எனக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. அவரை நோக்கி மெல்லச் சொன்னேன்:

"'பெண்ணென்றால் கோழை யென்று நினைக்காதீர்கள்! உங்களை இப்போது சுட்டுக் கொல்லப்போகிறேன்! நீங்கள் உயிர் வாழ்வதால் பலருக்கும் துன்பம்தான்!' என்று துப்பாக்கியை அவர் நெஞ்சுக்கு நேரே நீட்டினேன்.

"அவர் என்னை நிமிர்ந்துகூட பார்க்கவில்லை. முன்னிலும் அதி அலட்சியமாக மெல்லச் சிரித்துக்கொண்டே, 'என்னைச் சுடப் போகிறாயா?' என்று கேட்டு விட்டு மறுபடி எழுதுவதில் முனைந்து விட்டார்.

"எனக்கு வெறிபிடித்துவிட்டது. சுட்டேன்! சுட்டேன்! சுட்டேன்! மூன்றுமுறை சுட்டேன்! முதலில் அவர் கன்னங்களைக் குறிவைத்துச் சுட்டேன். என் காதலன் கன்னங்களைப்போலவே அவரின் கன்னங்களிலும் குண்டு பாய்ந்தது. பிறகு அவர் கண் களைக் குறிபார்த்துச் சுட்டேன். அப்புறம் அவர் நெஞ்சு சிதறிப்

போகும் வண்ணம் சுட்டேன்! என் காதலன் ராகவனை எப்படி மூன்று இடத்தில் சுட்டாரோ அதேபோல அதே துப்பாக்கியால் நான் அவரை அதே மூன்று இடங்களில் சுட்டேன்! என் கணவர் இரத்தக் குளத்தில் மிதந்து பிணமானர்! ஆனல் நான் விதவையாகவில்லை! என் கணவர் இருந்தபோதும் என் இளமை, விதவையாக இருந்தது; கணவன் இறந்தபோதும் நான் எதையும் இழந்துவிடவில்லை! பட்டுப்புடவை, குங்குமம், பூ எதையுந்தான்! ஆனல் அவர் பிணமாகி விழுந்த பிறகுதான் என்னல் என் நிலைமையை உணர முடிந்தது. தவிர்க்க முடியாத பயம் என்னைப் பிடித்துக்கொண்டது. துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு அங்கு மிங்குமாக அலைந்துகொண்டிருந்தேன். இந்தச் சமயத்தில்தான் நீங்கள் வந்து கதவைத் தட்டினீர்கள்! உடனே, அறையின் இடப்புறமிருந்த கதவு ஒன்றைத் திறந்துகொண்டு வெளியே தெருவுக்கு ஓடிவிட்டேன். ஓடின அதே வேகத்தில் மீண்டும் திரும்பி ஓடிவந்தேன்; கோவிலுக்குப் போய்விட்டுத் திரும்பி வருவதுபோல் கையில் பூ, தேங்காய் சகிதங்களுடன்! நீங்கள் என் கணவரின் பிணத்தருகே நின்றுகொண்டிருந்தீர்கள்! என் மூளை தீவிரமாக வேலை செய்தது. உடனே போலீஸுக்கு டெலிபோன் செய்தேன், அப்பாவியான உங்கள் மீது பழி சுமத்த! பிறகு நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே!...'' என்று கூறிவிட்டு 'ஓ' வென அழுதாள் நளினி.

வியப்பாலும் பயத்தாலும் வெலவெலத்து விட்டிருந்த மாணிக்கம், நளினியை நோக்கி, ''அந்த இரகசியக் கடிதங்களின் பைல் எங்கே இருக்கிறது? அதைச் சொல்லவில்லையே!'' என்று துடிதுடிப்புடன் கேட்டான்.

''அதுவா? அந்தக் கடிதப் 'பைல்' இருக்குமிடம் இந்தத் துண்டுக் காகிதத்தில் குறிப்பிட்டிருக்கிறது!'' என்று கூறிக்கொண்டே தன் ஜாக்கட்டிற்குள்ளிருந்து ஒரு சிறு கடிதத் துணுக்கை வெளியே எடுத்தாள் நளினி.

இந்தச் சமயத்தில்—

சிங்காரம், அறைக் கதவைத் தடாலெனத் திறந்துகொண்டு உள்ளே ஓடிவந்து ''அதை என்னிடம் கொடு! உன்னைக் கொன்று போட்டுவிடுவேன்!'' என்று வக்கிரமான தொனியில் கர்ஜித்துக்கொண்டே அவளருகில் தாவினன். அப்படித் தாவிய வேகத்தில் அவன் கையிலிருந்த துப்பாக்கி அவள் கையருகில் விழுந்தது.

நளினி, சேர்த்துக் கட்டப்பட்ட நிலையிலேயே கையை நீட்டி அந்தத் துப்பாக்கியை சரக்கென இழுத்து, தன் பலங்கொண்ட மட்டும் சுழற்றி அவன் மண்டையில் ஓங்கி அடித்துத் தள்ளிவிட்டு அந்தத் துப்பாக்கியினல் அவன் நெஞ்சுக்கு நேரே குறிவைத்துச் சுட்டாள்.

துப்பாக்கியின் குண்டு 'கிர்'ரெனச் சுழன்றுகொண்டே போய் சிங்காரத்தின் நெஞ்சருகில் 'சதக்'கென இறங்கிப் பதிந்தது! 'ஹா'என அலறிக்கொண்டே கீழே சாய்ந்தவன், தன் நெஞ்சைப் பலமாக அழுத்திப் பிடித்துக்கொண்டே வந்து நளினியின் கையிலிருந்து துப்பாக்கியைப் பறித்து அவளைச் சுட்டான்! மறுகணம் துப்பாக்கியிலிருந்து பீறிக்கொண்டு வெளியேறிய குண்டு, நாற்காலியில் கட்டுண்டு கிடந்த நளினியின் மிருதுவான மார்பில் புகுந்து துளைத்து விட்டது!

சிங்காரத்தின் உயிர் அவன் உடலிலிருந்து பிரிந்து மறைந்தது.

மாணிக்கம் நெம்பி உதைத்துக் கொண்டான். அந்த வேகத்தில் அவனைக் கட்டியிருந்த கயிறு படீரென அறுந்து கொண்டது.

அதே சமயம், வாசலில், விநாயகமும், வாஸந்தியும் வந்து நின்றனர்!

மாணிக்கம் ஓடிப் போய் நளினியின் கையிலிருந்த அந்தத் துண்டுக் கடிதத்தை எடுத்து, விநாயகத்திடம் கொடுத்துப் படிக்கச் சொன்னான்:

அதை அவன் படித்துவிட்டு உதட்டைப் பிதுக்கிக்கொண்டே சொன்னான் :

"இரகசியக் கடிதக் கட்டு 20 4-ல் இருக்கிறது'—மிஸ்டர் மாணிக்கம்! இந்த 204-ம் நம்பர் பொருள் என்ன தெரியுமா? டீ அல்லது காபி தயாரிக்கும் 'ஸ்டவ்'! அந்த 'ஸ்டவ்' வில்தான் நாம் இத்தனை நாட்களாக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தேடிய இரகசியக் கடிதக் கட்டு இருக்கிறதாம்! அதாவது 'ஸ்டவ்' வில் அந்த இரகசியக் கடிதப் 'பைல்' எரிந்துபோய் சாம்பலாக இருக்கிறது என்று அர்த்தம்!" என்றான் விநாயகம்.

இந்தச் சமயத்தில்—

நெஞ்சில் குண்டு பாய்ந்து இரத்த வெள்ளத்தில் கிடந்த நளினியின் முகத்தில் ஒரு நிம்மதியான புன்னகைப் படர்ந்தது.

அவளது பஞ்சுபோன்ற நெஞ்சிலிருந்து பீறிட்டு வழியும் இரத்தத்தை மாணிக்கம் தன் கையால் அடைத்துத் தடுக்க முயன்றான். ஆனால் விரல் இடுக்குகளின் நடுவே இரத்தம் வெள்ளமாக வழிந்து கொண்டிருந்தது.

சாவின் கடைசி முனையில், பிரக்ஞை தடுமாறும் நிலையில் இருந்த அவள், "ராகவா!...இரண்டு டிக்கட்...கடைசியில் நாம் ஒன்றாக.. இந்த ஊரை விட்டே ஆனந்தமாகப் போகி...றோ...ம்!" என்று ஈனஸ்வரத்தில் முணகி மாணிக்கத்தின் கழுத்தைக் கெட்டியாக அணைத்துக் கொண்டாள்.

மாணிக்கம், கண்களில் நீர்வழிய அவள் கன்னங்களை மிருதுவாகத் தடவிக் கொடுத்தான். அவன் கழுத்தைக் கெட்டியாக அணைத்துக்கொண்டே நளினி உயிர் விட்டாள்!

“கடைசி கணத்தில் பிரக்ஞை தடுமாறும்போது, நளினி என்னை ராகவன் என நினைத்துக் கொண்டாள்!” என்றான் மாணிக்கம் கம்மிய குரலில்.

சிலைபோல் நின்று அந்த அவலக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த வாஸந்திக்கு இப்போதுதான் உயிர் வந்தது.

“நல்லவேளை!” என்று பெருமூச்சு விட்டு முகம் மலர்ந்தாள் அவள்.

நளினிக்கு உயிர் போன பிறகும் அவளது கைகள் மாணிக்கத்தின் கழுத்திலிருந்து விடுபடவில்லை. வாஸந்தி அவளருகில் ஓடி, நளினியின் விறைத்திருந்த கைகளை மாணிக்கத்தின் கழுத்திலிருந்து பிரித்து விட்டு, அந்தக் கழுத்தைத் தன் பூங்கரங்களால் ஆசையோடு கட்டிக் கொண்டாள்!

“இனிமேல் உங்கள் கழுத்தை விடப்போவதில்லை! ஏனென்றால் உங்கள் கழுத்துக்கு இனி ஆபத்து இல்லை அல்லவா?” என்று வாஸந்தி, மாணிக்கத்தின் கழுத்தைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டே மயக்கச் சிரிப்பொன்றைச் சிந்தினாள்.

மாணிக்கம் அவளை அன்போடு அணைத்துக் கொண்டு ஒரு தியான பெருமூச்சு விட்டான்!

முற்றும்.

## பிரேமா பிரசுரத்தின்
## இதர வெளியீடுகள்!

1. **மர்மக் கொலை**

'சிரஞ்சீவி' எழுதிய புதுமுறையான
துப்பறியும் பயங்கர நாவல்

**விலை ரூ. 1—0—0**

2. **நீதி மயக்கம்**

(ராமதுரை கொலை வழக்கு)
'சிரஞ்சீவி' எழுதிய நூதனமான
துப்பறியும் பயங்கர நாவல்

**விலை ரூ. 1—0—0**

3. **புதுமணத் தம்பதிகளுக்கு**

மணமானவர்களும், விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் மட்டுமே வாங்கிப் படித்துப் பயன் பெற வேண்டிய அருமையான ஒரு உடல் நல—மன நல ஆராய்ச்சி நூல்

**விலை ரூ. 2—4—0**

## பிரேமா பிரசுரம்